
இழக்க எதுவும்
இல்லாதவர்கள்
தமிழறிஞர்- கே.வி.குணசேகரம்


கவிதைச் சரம்

# என்னுரை

இந் நாவல் போராளிகளைப் பற்றியது.தினமும் செய்தித் தாள்களிலும் ஊடகங்களிலும் போராளிகளின் வாழ்க்கைப் பிரச்சனைகள் பற்றிக் கேட்க மிகவும் துக்கமாக உள்ளது. அவர்களை ஊக்கப்படுத்தி , உற்சாகப்படுத்தி, உங்களுக்கு உறுதுணையாக இருப்போம் என்று கூறியவர்கள் இன்று அவர்களைப் பற்றிச் சிறிதளவும் எண்ணிப் பார்ப்பதில்லை. நூற்றுக்குத் தொன்னூற்றைந்து சதவீதமானோர் தமது கல்வியைக் குழப்பிவிட்டே இயக்கத்திற்குச் சென்றனர். அதனால் அவர்களால் ஒரு மதிப்பான தொழிலைப் பெற முடியவில்லை. அன்றன்று உணவுக்கே மிகுந்த சிரமப்படுவதாகப் பத்திரிகைகள் கூறுகின்றன. அதனால் நான் கேள்விப்பட்ட விடயங்களை நாவலாக்கியுள்ளேன்.

இரண்டாயிரம் ஆண்டில் எனக்கு வேண்டிய ஒருவர் தனது காதல் கதையைக் கவிதையாக்கித் தந்தால் தான் வெளியிடுவேன் என்றார். அதனால் நூற்றுக் கணக்கான கவிதைகளை எழுதினேன். சம்பவங்களையும் சம்பந்தப்பட்டவர்களையும் நேரில் கண்டு கலந்துரையாடியமையால் கவிதைகள் உயிர்ப்புள்ளவையாக இருந்தன. ரசித்துச் சுவைத்து

எழுதப்பட்ட கவிதைகள் அவை. பின்பு சம்பந்தப்பட்டவர் அதை வெளியிட விரும்பாமையால் அது நூலுருப் பெறவில்லை. இப்போ அவற்றில் சில கவிதைகளை இந் நாவலில் சேர்த்துள்ளேன். மிகுதியாக உள்ளவற்றை எனது இணையத்தில் இணைக்கலாம் என்றிருக்கிறேன்.கவிதைகள் நான் எழுதுவதில்லை. கவிதைகள் எழுத வேண்டிய தேவையும் இருக்கவில்லை.எதிர்பாராது நடந்த நிகழ்வு அது.

அதுபோலத் திருக்குறள் காமத்துப் பால் கதைகளும் நினைவில் வந்த கதைகள். ஓர் உண்மையான காதல், வள்ளுவன் சொல்ல நினைத்த காதல் அதில் உள்ளது.அதுவும் ரசித்துச் சுவைத்து எழுதியது. பொதுவாக நல்ல விடயங்கள், அதிர்ச்சி தரும் விடயங்கள், அபூர்வமான விடயங்கள், மனதிற்குப் பிடித்த விடயங்கள், தீமையான விடயங்களைப் பற்றிக் கேள்விப்பட்டால் எனது நூல்களில் எழுதுவேன்.அதற்காகப் பயப்பட்டதுமில்லை. கவலைப்பட்டதுமில்லை நம் முன்னோர் அப்படி எழுதியமையால் தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சம்பவங்களை நாம் அறியக் கூடியதாக உள்ளது.இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கல்வி,சமூக நிலை, அரசர்களின் போர்,

அரசனை அண்டிப் பிழைத்தோரின் நடைமுறைகள், காதல், விபச்சாரம் என்பவற்றை அறியக் கூடியதாக உள்ளது. அதுபோல இருக்க வேண்டும் என்பதற்காகவே நான் அவ்வாறு எழுதி வருகிறேன்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சில காலம் வாழ்வதற்காகப் பெரியவர்கள் என்று மதிக்கப்பட்டவர்கள் செய்த ஊழல்கள், திருகுதாளங்கள் இப்போது வெளிப்படுவது போல இப்போது நடைபெறும் சம்பவங்கள் பின்பு வெளிப்படும் என்ற நம்பிக்கையுடன் எழுதி வருகிறேன். எனது நூல்கள் எல்லாவற்றிலும் அநியாயங்கள் செய்து சமூகத்தைக் கெடுத்துத் தாமும் தமது குடும்பத்தினரும் நண்பர்களும் உறவினர்களும் வாழ்ந்த வரலாறு முழுவதையும் எழுதியுள்ளேன்.

இதனால் எனக்குப் பல பாதிப்புக்கள் ஏற்பட்டன. தரம் மூன்று பாடசாலையான கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலத்தில் தரம் ஒன்று அதிபரான நான் பதினைந்து வருடங்கள் கடமையாற்றினேன். அப்போது கடமையில் இருந்த அதிகாரிகள் அதைப் பெரிதாக எண்ணித் தமது நண்பர்களுடன் கூடிக் கதைத்து மகிழ்ந்தனர். ஆனால் இனிவரும் காலங்களிலும் அவர்களது செயல்கள் பேசப்படும்.ஒருமுறை பாடசாலையில் உள்ள ஆசிரியர் ஒருவர் இரகசியமாகக்

கல்விப் பகுதிக்கு என்னைப் பற்றி புகாரிட்டார். அதை விசாரிக்க வந்த உயர் அதிகாரி எனது பாடசாலையின் கல்வித் தரத்தையும் கோப்புகளையும் கண்டு என்னைப் பாராட்டியதோடு கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவியையும் தந்தார்.ஒருவனது முயற்சி ,ஒழுக்கம் என்பன உயர்வைத் தரும் என்பதைப் பலரும் உணர்ந்து கொண்டனர். அது எனக்குப் போதும் .

நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்ட அனுபவம் இந் நாவலை எழுதத் தூண்டியது. எனது நூல்களை WWW. GUNASEGARAM.COM என்ற இணையத் தள முகவரியில் வாசிக்கலாம். இந் நாவலை கணணி மயப்படுத்தித் தந்த திருமதி. தபஷ்வினி சந்திரகாந்தனுக்கு நன்றி.

கே.வி.குணசேகரம்

குணம் பிரசுரம்.

கோப்பாய் மத்தி,

கோப்பாய்.

# இழப்பதற்கு எதுவும் இல்லாதவர்கள்

## 1

அன்று பௌர்ணமி நாள். வானத்தில் பூரணச் சந்திரன் உலாவிக் கொண்டிருந்தான்.மேகக் கூட்டங்கள் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. இரவு பத்து மணிக்கு மேலிருக்கும். கார்த்திகா வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். காலையில் பக்கத்து வீட்டு மாமி வந்து, “கார்த்தி , உன்னுடைய அத்தான் வெளிநாட்டாலை வந்து நிற்கிறார் தெரியுமோ?” என்று கேட்டாள்.

“இல்லை” என்று தலையாட்டினாளே தவிர வாய் திறந்து எதுவும் பேசவில்லை.

“முந்தியென்றால் நீதான் உலகமென்று உன்னையே சுற்றிக் கொண்டிருந்தவன். அத்துடன் நீ தனது மாமன் மகளென்றும், நீ தனக்கு நிட்சயிக்கப்பட்டவளென்றும் ஊர் முழுக்கச் சொல்லிக் கொண்டு திரிந்தவன். உன்ரை மடை வேலையால வாழ்க்கையையும் இழந்து வலது காலையும் இழந்து வழி தெரியாமல் தவிக்கிறாய்.நீ அதிகாரத்திலை

இருந்த போது நீ தான் கடவுள் என்று கூறிக் கும்பிட்டுக் கொண்டு திரிந்தவையெல்லாம் இப்ப எங்கை போட்டினை?”

பக்கத்து வீட்டில் இருக்கும் கமலா சொல்லிக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பிள்ளைகள் இல்லை. கணவன் விவசாயி. ஒரு நாள் தோட்டத்தில் வேலை செய்யும் போது கெலி கெப்ரர் வந்து சுட்ட போது அவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டு விட்டார். மறுநாள் வயலில் நின்ற புலிகள் கெலியைத் தாக்கியதால் கெலியில் வந்த இராணுவம் திருப்பித் தாக்கியதில் ஐந்து பேர் பலி என்று தொலைக்காட்சியும் வானொலியும் செய்தி வெளியிட்டன. அதன் பின் கமலா தோட்டங்களில் கூலி வேலை செய்து தனது வாழ்க்கையை நடாத்தி வருகின்றாள்.

“வாலிப மிடுக்கும் இளமைத் துடிப்பும் உள்ள வயதில் காதல் தோன்றும். பின் வயது செல்லச் செல்ல அந்த நிலை மாறி பொருளாதார நிலை தோன்றி விடும்.ஆனால் உன்ரை மச்சான் அப்படியானவனில்லை. உன்னிலை உயிரையே வைத்திருந்தான். ஆனால் நீ பள்ளிக்கூடத்திற்குப் போறதென்டிட்டு இயக்கத்திற்குப் போனனி. அதால என்னத்தைக் கண்டாய்.? சனமெல்லாம் இயக்கத்தை

மறந்து போச்சு. இயக்கம் என்று இருந்ததாய்க் கூட இப்ப நினைப்பாரில்லை. சரி, நான் சமைக்கப் போறன்'' என்று கூறி விட்டுக் கமலா மாமி சென்று விட்டாள்.

பிள்ளைகள் இல்லாததால் கமலா கார்த்திகா மீது அளவுக்கதிகமான அன்பைச் செலுத்தி வந்தாள். அடிக்கடி அவளை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவு கொடுப்பாள். நல்ல உணவு சமைக்கும் நாட்களில் முன்கூட்டியே சொல்லி விடுவாள். கார்த்திகாவின் தந்தை சின்னத்துரை வசதியானவர். இருந்த போதும் மூன்று பெண் பிள்ளைகள் அவருக்கிருந்தமையால் நல்ல நாள், பெருநாள் காலங்களில் மட்டும் இறைச்சி வாங்கிக் கொடுப்பார். ஆனால் கமலாவின் கணவன் பிள்ளைகள் இல்லாமையால் அந்தக் கவலை தீரக் குடிப்பார். குடித்து விட்டு கார்த்திகாவைக் காணும் போதெல்லாம் எனக்குப் பிள்ளை இல்லாக் கவலையை நீதானம்மா தீர்த்து வைத்திருக்கிறாய். உன்னை என்னோடை வைத்திருக்க எனக்கு விருப்பம். ஆனால் கொப்பர் விடாராம். பரவாயில்லை நீ பக்கத்திலை இருக்கிறாய். பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். இப்ப பிள்ளைகளைப் பெற்றாலும் கரைச்சல். பெற்றார் ஆசையோட வளர்க்க அதுகள் அவர்களை மறந்து இயக்கத்துக்கு ஓடுகுதுகள். பொன்னுச்சாமின்ரை மோள்

எவ்வளவு வசதியானவள். ஒரே ஒரு பிள்ளை. பொன்னுச்சாமி எப்படியெல்லாம் வளர்த்தது. அதை மறந்து அவள் இயக்கத்துக்குப் போட்டாள். அந்த துயரைத் தாங்காமல் நோய் வாய்ப்பட்டு அவர் செத்தவர். அவள் போய் ஆறு மாதத்துக்குள்ள அவளைப் பிணமாய்க் கொண்டந்தால் எப்படி அந்தாள் தாங்கும், நீ மட்டும் போயிடாதை கார்த்தி''என்று மணியம் சொன்னது கார்த்திகாவின் காதில் ஒலித்தது.

சிறிது தூரம் சென்று திரும்பி வந்த கமலா திரும்பி வந்து, ''பிள்ளை முட்டையிடாத கோழி ஒன்றை உரிச்சுக் காய்ச்சப் போறன். மத்தியானம் வந்து விடு'' என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

மைத்துனனான வளவன் வந்து நிற்கிறான் என்று கேள்விப்பட்ட கார்த்திகாவின் மனம் இனம் புரியாத உணர்வுகளால் அல்லற்பட்டது. அவன் வந்து பார்க்க மாட்டானா என்ற ஏக்கம் கடுகாகத் தோன்றி மலையாக வளர்ந்து அவளைத் துன்பத்துக்குள்ளாக்கியது. அவன் அவளது தாய் மாமனின் மகன். அவள் பிறந்த அன்றே இரு வீட்டாராலும் நிட்சயிக்கப்பட்டவன். சிறுவயதில் இருந்தே இருவரும் கூடி விளையாடுவார்கள். அவளுக்கு வயது வந்த பின்பு அடிக்கடி வீட்டுக்கு வந்தாலும் பேச மாட்டான். பார்த்துக் கொண்டிருப்பான்.

அதற்குக் காரணம் இரு வீட்டுப் பெற்றோர் தான் . இருவரும் நன்றாகப் படித்து நல்ல உத்தியோகம் தேடிய பின் சுதந்திரமாகக் கதைக்கலாம் எனக் கட்டளையிட்டிருந்தனர். அத்துடன் காவல் காத்தனர்.

சந்தர்ப்ப வசத்தால் இருவரும் கதைக்க நேர்ந்தால் வளவன் கவிதை பாடுவான். ஒருநாள் இரு வீட்டுப் பெற்றோரும் அயலூரில் உள்ள திருமண வீட்டுக்குச் சென்று விட்டனர். அதைக் கார்த்திகா தனது தம்பி மூலம் சொல்லியனுப்பினாள். கார்த்திகாவுக்கு அவன் தான் காவல் காரன். அவனை வளைத்து வைத்திருந்தான் வளவன்.

அன்று அவளைக் கண்டதும் கார்த்திகா மகிழ்வின் உச்சியில் இருந்தாள். அந்த நிலையைப் பற்றி வளவன் கவிதை பாடினான்.

**"கண்டவுடன் வதனம் பூப்பூக்கும்**

**என் மனம் கனவுகள் காணும்**

**அருகில் சென்றால்**

**எள்ளும் கொள்ளும் வெடிக்கும்."**

அவள் அவனை அருகில் வர அனுமதிக்க மாட்டாள்.காதலில் அவளுக்கு நம்பிக்கை இல்லை. அவளது மாமன் ஒரு பெண்ணைக் காதலித்தான்.

பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் திருமணம் செய்தார். மூன்று பிள்ளைகள் பிறந்த பின்பு இடம் பெயர்ந்து வந்து கணவனை இழந்த ஒரு பெண்ணுடன் குடும்பம் நடாத்துகிறார். அவர் வீட்டுக்கு வருவதேயில்லை.

இன்னொரு பெண் ஆடவனொருவனைப் பத்து வருடங்களாகக் காதலித்தாள். பின் வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவனை விரும்பி அவனுடன் கொழும்புக்குச் சென்றாள். அவனுடன் ஆறு மாதங்கள் வாழ்ந்தாள். திடீரென அவன் சொல்லாமல் கொள்ளாமல் வெளிநாடு சென்று விட்டான். ஊர் திரும்பிய அவள் கைக்குழந்தையுடன் கஸ்ரப்படுகிறாள்.

அவன் அருகில் வரும் போது இவை தான் கார்த்திகாவுக்கு நினைவில் வரும். அதை அவள் அடிக்கடி வளவனுக்குச் சொல்லிச் சொல்லி அவனை வேதனைப்படுத்துவாள்.

‘‘எல்லோரும் அப்படியானவர்களில்லை. காதலுக்காக உயிரைக் கொடுத்த பலர் இருக்கிறார்கள். காதலைப் போற்றுபவர்களும் இருக்கிறார்கள். எமது திருமணம் காதல் திருமணம் அல்ல இரு வீட்டாராலும் நிட்சயிக்கப்பட்டது’’ என்பான் வளவன்.

எனினும் அவள் சமாதானப்பட மாட்டாள். அதற்காக அவன் கவலைப்பட்டதில்லை

**“கல்யாணம் முடியட்டும்**

**வலிய வருவாய் வரும் போது**

**சாட்டுக்கள் சொல்வேன்**

**ஏறெடுத்தும் பார்க்கேன்**

**தலைக்கனம் தானாய் அகலும்**

**கெஞ்சுவாய் மிஞ்சுவேன்**

**கேட்டது எதுவும்**

**வாங்கித் தரமாட்டேன்”**

என்பான். அவனது வார்த்தைகள் எல்லாம் கவிதை வடிவினதாக இருக்கும்.

அவனைப் பார்த்தால் பாவமாக இருக்கும். அவளுடன் படிக்கும் பகிரதி இளங்குமரனைக் காதலிக்கிறாள். அவர்கள் இருவரும் சினிமாவுக்குச் செல்வார்கள். மறுநாள் அந்த அனுபவத்தைப் பகீரதி

சிரித்துச் சிரித்துக் கூறுவாள். அப்போது தனது இரண்டு கைகளாலும் கார்த்திகா காதைப் பொத்துவாள்.

எமக்குச் சந்திக்க இடமில்லை. அதனால் யாழ்ப்பாணத்திற்கு ரியூசனுக்குச் செல்கிறோம் என்று கூறி விட்டுப் படத்திற்குப் போவம். உனக்கு லைசன்ஸ் இருக்கு. வீட்டிலேயே எல்லாம் நடக்கும்'' என்பாள் பகீரதி.

பகீரதி வாய்க்காரி, சண்டைக்காரி, எதையும் வெட்கமில்லாமல் கதைப்பாள். அதனால் கார்த்திகா எதையும் பேசாள்.

''பேசாமல் இருப்பதில் இருந்து எல்லாம் எனக்குப் புரிகிறது'' என்று சிரித்தாள் பகீரதி.

கார்த்திகா அதற்கும் எதுவும் சொல்ல மாட்டாள்.

சில வருடங்கள் செல்ல இளங்குமரன் பிரான்சுக்குச் சென்று விட்டான். மேலும் இரண்டு வருடங்கள் செல்ல இளங்குமரன் இந்தியாவுக்கு வந்து பகீரதியைத் திருமணம் செய்தான். மறுவருடம் பகீரதி பிரான்சுக்குச் சென்று விட்டாள். சென்றவருடம் அவர்கள் இருவரும் பிரான்சால் வந்த போது கார்த்திகாவைச் சந்தித்தனர்.

“நான் எல்லாம் கேள்விப்பட்டனான். வளவனுக்கு இரண்டு பிள்ளைகள். அடிக்கடி நாம் சந்திப்போம். நான் உன்னைப் பற்றிச் சொன்னால் எரிந்து விழுவான். இருந்தாலும் நான் சொல்வேன்.”

வளவன் பாவம். பெற்றோரும் ,ஊரவர்களும் சொன்னதை நம்பிக் கோபப்படுகிறான். மற்றும்படி அவனிலை குற்றமில்லை” என்றாள் கார்த்திகா.

“நீ சொல்வதை நான் ஏற்கிறேன். அவனது தந்தைக்கு நடந்த சம்பவத்தை நினைத்துப் பார்த்தால் அவனைக் கோவிக்க மனம் வராது” என்றாள் பகீரதி.

நீ இயக்கத்திற்குச் செல்லாமல் இருந்திருந்தால் என்னைப் போல வெளிநாடொன்றிலை சந்தோசமாய் பிள்ளை குட்டிகளோட வாழ்ந்திருப்பாய். இயக்கத்திற்குப் போய் என்னத்தைச் சாதித்தனி. இயக்கக் காரக் குடும்பம் என்று ஆமி உன்னோட அப்பாவைக் கூட்டிக் கொண்டு போனது, உனது கால் போனதும் தான் கண்டது.”

நாய்கள் ஓயாது குரைத்துக் கொண்டிருந்தன. பின் ஊளையிட்டன; “இப்போ ஊரில் கள்வர்களின் தொல்லைகளைத் தாங்கவே முடியாது. தெருவால் பெண்கள் தனித்துப் போக முடியாது. இரவில்

நிம்மதியாகத் தூங்க முடியாது. இயக்கம் இயக்கம் என்று போய் சமூகத்தில் மனிதர் நிம்மதியாக வாழ முடியாதது தான் மிச்சம்''

கார்த்திகா பெருமூச்சு விட்டாள். மணிக்கூடு ஒரு முறை அடித்து ஒலித்தது. இரவு ஒரு மணியாகியும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. வளவனது நினைவுகள் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தன. அவள் இயக்கத்திற்குச் செல்ல முன் ஒருநாள் வளவன் வீட்டுக்கு வந்தான். அப்போது வீட்டில் யாரும் இல்லை. முதல் நாள் பகீரதி இளங்குமரனைச் சந்தித்த போது நடந்தவற்றை வெட்கமில்லாமல் கூறியிருந்தாள். அவள் கூறும் போது காதைப் பொத்திய கார்த்திகாவால் இப்போது புலன்களைப் பொத்த முடியவில்லை, குமரனின் தோள் எனது தோள்களை உரசிய போது விபரிக்க முடியாத இன்பம் கிடைத்தது''

அந்த வார்த்தைகள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன. அதன் தாக்கம் அவளது மனதைத் தாக்கிப் பின் உடலையும் தாக்கியது.

**"தவம் செய்யும் தாமரையே**
**தக்க சமயம் அறிந்து வந்தேன்**
**தவத்தைக் கலைத்து**

**மோகினியாய் மாறிவிடு”**

அவன் அப்படிக் கூறிய பின்பு தான் அவன் வந்தது அவளுக்குத் தெரிந்தது.திடுக்கிட்டுத் திரும்பினாள். வளவன் எதிரே நின்றான்.அவளால் அவனைப் பர்ாக்க முடியவில்லை.

பகீரதி பலமாகக் கத்திக் கொண்டிருந்தாள். அவளது சொற்களில் உ ள்ள உ ணர்வுகளும் முகபாவமும் அவளின் மனக் கண்ணில் தெரிந்தன.

**“முனிவராயிருந்த முனி**

**மோகம் தலைக்கேறி**

**தன் நினைவு இழந்து**

**பேயாய் மாறியதாம்”**

சிரித்தான் வளவன். கார்த்திகா தலை நிமிர்த்தவில்லை.

**“அச்சம் மடம் நாணம், பயிர்ப்பு**

**எனும் நான்கும் உண்டானதோ**

**இந்நிலையில் நான் பார்த்ததில்லை**

**பாட்டுப் பாடினால்**

**கிளர்ந்தெழும் பாவையே**

**மௌனத்தின் அடையாளம்**

**சம்மதம் என்பார்கள்”**

அருகில் வந்தான் வளவன். அப்போதும் கார்த்திகா தலையை நிமிர்த்தவில்லை.

“வளவா, காதலி துன்பப்பட்டு வருந்தும் போது அவளைத் தொட்டு அணைத்து தேற்ற வேண்டும். அதை எதிர்பார்த்துத் தான் அவர்கள் அழுவார்கள்” வளவனின் நண்பன் ரவீந்திரன் சொன்னது அவனுக்கு நினைவில் வந்தது. அதனால், “கார்த்திகா என்ன பிரச்சனை? இப்படி நான் உம்மை ஒருபோதும் கண்டதில்லை” என்றவாறு அவளது கையைப் பிடித்தான். அவள் எதிர்ப்புத் தெரிவிக்காதது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அப்போது கார்த்திகா என அழைத்தவாறு கமலா மாமி உள்ளே வந்தாள். கார்த்திகா விடுவித்து விட்டு வெளியே வந்தாள்.

# 2

காலையில் வந்ததில் இருந்து வளவன் பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்கவில்லை.காலையும் மத்தியானமும் வளவனின் தாய் பார்வதி சுவையாகச் சமைத்து விட்டு உணவு வகைகளைக் கொண்டு வந்து சாப்பாட்டு மேசையில் வைத்து விட்டு பலமுறை உண்ணுமாறு கேட்டும் அவன் உண்ணவில்லை. கனடாவில் இருந்து கொண்டு வந்த சாராயத்தைக் குடித்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்திற்கு முன்பு வந்த கமலா மாமி சொன்ன கதைகளைக் கேட்டு அவனால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

‘‘தம்பி, எப்படி வாழ்ந்தவள் கார்த்திகா. எனக்குப் பிள்ளையில்லாத குறைகளை நீக்கியவள். உணர்ச்சிவசப்பட்டுத் தெரியாமல் நான் இயக்கத்திற்குச் சென்றுவிட்டேன். போர் முடியும் வரை எனக்கு இயக்கத்தில் வெறுப்பேற்படவில்லை. உணர்வுபூர்வமாகத் தான் எல்லோரும் போராடினோம். போராட்டத்தில் வெற்றியும் உண்டாகும். தோல்வியும் உண்டாகும். வெற்றியைப் பூரிப்புடன் ஏற்கும் நாம் தோல்வியை மனத்திடத்துடன் ஏற்போம். தோல்வி வெற்றியின் படிக்கட்டு. எமது போராட்ட வாழ்வில்

தோல்விகளுக்குப் பின்பு தான் பெரும் பெரும் வெற்றிகள் ஏற்பட்டன.அதனால் தோல்வியைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அதன் பிறகு நடைபெறும் சம்பவங்களைப் பற்றித் தான் சிந்திக்கிறேன். கவலையாக இருக்கு. மக்களை நம்பி அவர்களின் நல் வாழ்வுக்காகப் போராடினோம். மக்கள் எமக்குத் துணையாகக் கடைசி வரையும் இருப்பார்கள் என்று நம்பினோம். ஆனால் அவர்களில் பலர் மனிதத் தன்மையின்றி நடக்கிறார்கள். அது தான் கவலையாக இருக்கு. யாரும் உதவி செய்ய வேண்டாம். அவர்கள் எமக்காகப் போராடினார்கள் என்ற எண்ணம் கூட யாருக்கும் இல்லை. பாவம் இப்போது மிகவும் கஷ்டப்படுகிறார்கள்'' என்ற வார்த்தைகள் அவனைச் சித்திரவதை செய்தன.

கடைசியாக அவளைச் சந்தித்த நிகழ்வு கருங்கல்லில் பதிவு செய்த கல்வெட்டைப் போல அவனது மனதில் பதிந்திருந்தது.

அவன் கார்த்திகாவைச் சந்திக்கும் போதெல்லாம் கவிதை சொல்வான். அவளது அழகைத் தினமும் ரசித்துக் கவிதைகள் எழுதுவான். அவன் தினமும் எழுதிய கவிதைகள் யாவும் டையரிலேயே எழுதினான். பின் அவள் இயக்கத்திற்குச் சென்ற பின்பு கவிதை எழுதுவதை நிறுத்தி விட்டு டையரியை அலுமாரியில்

வைத்தான்.சில நாட்களின் பின் அதை எரிக்க எடுத்தான். மனம் வரவில்லை. அதனால் அதை அலுமாரியில் வைத்தான். அதன் பின் சில மாதங்களின் பின் கனடாவுக்குச் சென்று விட்டான். கனடாவில் கார்த்திகாவை நினைத்தால் ஆத்திரம் தான் வரும். பரிவு, பாசம், காதல் எதுவும் வராது. அவள் இயக்கத்திற்குச் சென்ற பின் என்ன ஆனாள் .எங்கு வாழ்கின்றாள் என்று யாரும் விசாரிக்கவில்லை. அதை விசாரிப்பதை இராணுவம் அறிந்தால் பெரும் பிரச்சனைகள் உருவாகும் என்பதால் பெற்றோரே விசாரிக்கவில்லை.

கனடாவில் அவன் இருக்கும் போது பல விடயங்களைக் கேள்விப்பட்டான். அதில் ஒன்று கார்த்திகா பூநகரி இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணம் அடைந்து விட்டாளென்று அதன் பின் உலக வாழ்வில் வெறுப்புற்றிருந்த அவனை அவனது நண்பன் ரவீந்திரன் தான் தேற்றினான், ‘‘வளவா, உன்னில் உண்மையான அன்பிருந்தால் அவள் இயக்கத்திற்குச் சென்றிருக்க மாட்டாள். நாட்டுக்காகத் தன்னை அர்ப்பணித்த ஒருத்திக்காக நீ உனது வாழ்வைச் சீரழிக்காதே. உன்னை விரும்பியவள் உனக்காக வாழும் போது இயற்கையாக மரணித்திருந்தால் நீ அவளுக்காகத் தியாகம்

செய்திருப்பாயானால் நான் உனக்கு ஆதவளித்திருப்பேன். நாட்டுக்காகப் போராடவென்று சென்ற அவள் உயிரோடு இருந்தாலும் திரும்பி வந்து உன்னைத் திருமணம் செய்ய மாட்டாள். ஏனெனில் இயக்கத்தின் பயிற்சி அப்படியானது.அதனால் உன்னை மறந்த அவளை நீயும் மறப்பது தான் நல்லது.அது துரோகமாகாது”

ரவீந்திரன் சொல்வது அவனுக்கு நியாயமாகத் தோன்றியது. அவள் திட்டமிட்டுத் தான் இயக்கத்திற்குச் சென்றாள். கடைசியாக அவளைச் சந்தித்த போது நிகழ்ந்த நிகழ்வுகள் அவனது மனத்திரையில் அழியாமல் இருக்கின்றன.

அன்று கார்த்திகாவின் வீட்டில் யாரும் இல்லை. கார்த்திகாவின் தம்பி கஜேந்திரன் வந்து “அக்கா உங்களை வரச் சொன்னவா” என்று கூறியவுடன் வளவன் மகிழ்வுடன் சென்றான். அன்று கார்த்திகா சேலை உடுத்திருந்தாள். வளவன் அவளது அழகை ரசித்துக் கொண்டிருந்தான். வெகு நேரமாகியும் அவள் அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. அது அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவளை அவன் சேலையுடன் பார்த்தது மிகக் குறைவு. பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழாவன்று சேலை கட்டுவாள். அன்று

சேலையுடன் அவளைப் பார்த்து ரசித்த அவன் ஒரு கவிதையை எழுதிக் கொடுத்தான்.

**“கண்களில் கரிய தோடும்**
**உதட்டிலே சிவப்புப் பூச்சும்**
**கழுத்தினில் தங்கக் கலனும்**
**கரத்தினில் வளையலோடு**
**மஞ்சள்ப் பூ பூத்த சேலை**
**மரகதச் சிவப்பில் சட்டை**
**மேனியின அழகை மெல்ல**
**மெருகுடன் கூட்டி வைக்க**
**சந்தன நிறத்தினாளின்**
**சடையிலே குஞ்சம் தொங்க**
**கஜமுகனின் தேரின் முன்னால்**
**தென்றலாய் நடந்து சென்றாள்”**

அதை நினைக்க அவனுக்குச் சிரிப்பு வந்தது. எழுந்து சென்று அலுமாரியைத் திறந்தான். அதற்குள் டயரிகள் பத்திரமாக இருந்தன. அவற்றை எடுத்துக்

கொண்டு வந்தான். அவன் கடைசியாக அவளைச் சந்தித்த போது எழுதிய கவிதையைப் படித்தான்.

அன்று அவன் வந்ததைக் கவனிக்காதது போல இருந்தாள்.

**“தவம் செய்யும் தாமரையே**

**தக்க சமயம் அறிந்து வந்தேன்**

**தவத்தைக் கலைத்து**

**மோகினியாய் மாறிவிடு”**

அதற்கும் அவள் பேசாததால் அவன் அவளை நெருங்கி வந்தான்.

‘‘இன்று நீர் சேலையில் அற்புதமாக இருக்கிறீர்.’’

**‘‘பச்சையொடு மண்ணிறமும்**

**பக்குவமாய்க் கலந்துடுத்து**

**கருங்கொத்துக் கூந்தல் தன்னில்**

**செவ்விதழ் ரோஜா சூடி நிற்கும்**

**பாவை உன்னைக் கண்ட போது**

**கண்மலரும் மனதினிக்கும்**

**உடல் சிலிர்க்கும்- அது**

**அது புரியுமா உனக்கு?''**

அதன் பின்பும் அவள் பேசவில்லை. சில சமயங்களில் தாங்க முடியாதளவிற்கு அலட்டும் அவள் மௌனியாக இருந்தது அவனுக்கு எரிச்சலாக இருந்தது.வரச் சொல்லி விட்டு மௌனமாக இருந்தால் என்ன செய்வது?

‘‘நண்பா, பெண்கள் தாம் நினைத்ததை அடையவும் மௌனமாக இருப்பார்கன். மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி அதனால் நீ விரும்பியபடி நட’’ என்று அவனது நண்பன் கூறியது நினைவுக்கு வந்த போதும் அவளின் அருகே செல்ல அவனுக்குப் பயமாக இருந்தது.

**“நீ தான் எனது உலகம்**

**நீ தான் எனது கவிதை**

**உன்னைப் பார்த்தால்**

**ஆயிரம் கவிதைகள் மலரும்**

**எனக்குள் உன்னால்**

**ஆயிரமாயிரம் மாற்றம்**

**வெட்ட வெட்டத் தழைக்கும்**

**செடியைப் போல**

**உன்னை மறக்க மறக்க**

**தளிர்க்கிறாய் மனதில்**

**மௌனம் சம்மதமென்று**

**பலரும் சொல்வார்கள்**

**அதனால் உன்னை..”**

மேலே வார்த்தைகள் வராமையினால் அவளது கையைப் பிடித்தான்.

அவள் எதுவும் சொல்லாததால் அணைத்தான். அப்போதும் மாற்றமில்லை. அவளது உடல் வியர்வையால் நனைந்திருந்தது.

‘‘என்னை விடுங்கள்’’ முதன் முதலாகப் பேசினாள் கார்த்திகா.

பயத்துடன் அணைத்தவன். அவளை விட்டு விட்டு எதிரே நின்றான்.

‘‘இதற்கு மேல் அனுமதிக்க முடியாது. இதையே நினைத்திருங்கள்’’ என்றாள். அவனின் அருகில் சென்று இறுக்கமாகக் கட்டியணைத்து அவனது கன்னத்தில் முத்தமிட்டாள். அப்போது தான் கமலா மாமி உள்ளே வந்தாள்.

அதை நினைக்க இப்போதும் கமலா மாமி மீது கோபங் கோபமாக வந்தது.

‘‘வா சாப்பிடு, வெறு வயிற்றில் குடிக்கக் கூடாது. வா சாப்பிடு’’ தாயின் கண்கள் குளமாயின. விக்கலும் விசும்பலும் எழுந்தது.

‘‘அழாதைங்கோ, சாப்பாட்டைப் போடுங்கோ, வாறன்’’ பார்வதி மகிழ்வுடன் சென்று உணவைத் தட்டில்

எடுத்து வைத்தாள். வளவன் சாப்பாட்டு மேசையில் இருந்து உண்ணத் தொடங்கினான்.

‘‘ஊர்ச்சாவல் ,கமலா கொண்டு வந்து தந்தவள். காசும் வாங்க மாட்டாள். உன்னில் அவளுக்கு அளவுக்கதிகமான பாசம். நேரம் வரும் போது அங்கை போ. சரியாய்க் கஸ்ரப்படுகிறாள். ஆடு ,மாடு, கோழிகள் வளர்த்து வாழ்க்கையைப் போக்கிறாள். பார்த்துப் பாராமல் காசு குடு’’

‘‘ஊர்ச் சாவல் இறைச்சி நல்லாய் இருக்கு. அதோடு உங்கள் கைப் பக்குவம் யாருக்கும் வராது. அப்பாவைக் கூட்டிக் என்னோடை வாங்கோ என்று கேட்டாலும் வாறியளில்லை. இஞ்சை தனியாய் இருந்து என்ன செய்யப் போறியள்.?

‘‘எனக்கு கார்த்தி....என்றவள் பேச்சை மாற்றி கமலா இருக்கிறாள். எனக்கு இயலாமல் வந்தாள் அவள் இஞ்சை வந்து தங்கியிருந்து கவனிப்பாள்’’ என்றாள் பார்வதி.

‘‘இருந்தாலும் மற்றவர்களுக்கு ஏன் கஸ்டத்தைக் கொடுப்பான். இந்த முறை போய் நான் உங்களைக் கூப்பிர்ற அலுவல்களைப் பார்க்க வேணும்’’

பார்வதி எதுவும் பேசவில்லை. ஏதாவது பேசி அது அவனுக்கு பிடிக்காவிட்டால் சாப்பிடாமல் எழுந்து விடுவான் என்பது அவளுக்குத் தெரியும்.

சாப்பிட்டு முடிந்ததும் ‘‘மத்தியானம் எங்கை அம்மா போனனீங்கள். பிரணவன் வந்தவன்.தேநீர் கொடுப்பதற்காகத் தேடினேன். உங்களைக் காணவில்லை. ‘‘என்றான் வளவன்.

கமலா கோழிச் சாவலைத் தந்தவள். காசும் வாங்கேல்ல. விற்கிறதானால் 1500 ரூபாவுக்கு மேல விற்கலாம். கொஞ்சக் கறி கொண்டு போய்க் குடுத்தனான். அதையும் அவள் வாங்கவில்லை.’’ என்றாள் பார்வதி.

‘‘ஏன்?’’ என்று கேட்டான் வளவன்.

‘‘பிள்ளை மாதிரி வளர்த்தவளாம். வளர்த்ததைத் தான் தின்பதில்லை’’ என்றாள்.

‘‘ம்.. இப்பவும் இப்படியான ஆட்கள் இருக்கினை என்றான் வளவன். வீட்டில் நல்லவற்றைச் சமைத்தால் கார்த்திகா வீட்டாருக்குக் கொடுக்கும் வழக்கம் தனது வீட்டில் இருப்பது அவனுக்குத் தெரியும். இருந்த

போதும் அவன் கேட்கவில்லை. பார்வதியும் சொல்லவில்லை.

அன்று காலை சாவலைக் கொடுக்கும் போது கமலா சொன்னாள். “இன்று மார்கழி இருபதாம் திகதி. கார்த்திகாவின் பிறந்த நாள். நான் கோழிக்கறி சமைச்சுக் கொடுத்தால் அவள் வாங்கிச் சாப்பிட மாட்டாள். அத்துடன் தனது பிறந்த நாள்க் கொண்டாட்டத்திற்குச் சமைத்ததாகச் சொல்வாள். அதனால் நீ சமைச்சு விட்டுக் கொஞ்சக் கறி குடு.அதை அவள் தனக்காகச் சமைத்ததாய் நினைக்க மாட்டாள்.

“எப்போ, நல்ல உணவு தயாரிக்கிறேனோ அப்போ அவளுக்கும் சேர்த்துத் தான் சமைப்பேன் என்று உனக்குத் தெரியாதா? அவள் என்னுடைய மருமகள் .எனது அண்ணனின் மகள். இப்போதும் அண்ணா சொல்லிச் சொல்லி அழுகுறவர். எல்லாம் விதி. அவள் இயக்கத்திற்குப் போகாமல் இருந்திருந்தால் எப்படி வாழ்ந்திருப்பாள். மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவான வளவன் மேற்க்கொண்டு படியாமல் கனடாவுக்குச் சென்றதும் இவளாலை தானே. எல்லாம் விதி. நாம் என்னவோ எல்லாம் நினைக்கிறம் அதில் எத்தனை நடைபெறுகிறது. கடவுளைக் கும்பிட்டாலென்ன, தான

தருமங்கள் செய்தாலென்ன நடப்பது தான் நடக்கும் .நடக்காதது நடக்காது'' என்று கலங்கினாள் பார்வதி.

இயக்கத்திற்குச் சென்று சரணடைந்து புனர் வாழ்வு பெற்று வந்த பின் கார்த்திகா முற்றாக மாறி விட்டாள். எதையும் நம்புவதில்லை. யாரையும் மதிப்பதில்லை. வேண்டா வெறுப்பாகத் தான் எதையும் செய்யுறாள். அதை நினைக்கக் கவலையாக இருக்கு. எப்படி வாழ்ந்தவள். இன்று அவளின்ரை பிறந்த நாள். முன்பு மார்கழி பத்தாம் திகதியே வீடு களை கட்டி விடும். பூசைகள் என்ன? அர்ச்சனைகள் என்ன? அபிசேகம் என்ன? எத்தனை கோவில்களில் செய்வார்கள். இப்ப கோவில் பக்கமே போகிறாளில்லை.''கலங்கினாள் பார்வதி.

''என்னம்மா யோசிக்கிறியள்?

திடுக்கிட்டுச் சுயநினைவுக்கு வந்த பார்வதி. ''ஒன்றுமில்லை'' என்று தடுமாறியபடி உள்ளே சென்றாள். அவளது தடுமாற்றம் வளவனுக்கு வேதனையைக் கொடுத்தது

# 3

இரவு பத்து மணிக்கு மேலாகி விட்டது .காலையில் வந்த நேரத்தில் இருந்து வளவனுக்குக் கார்த்திகாவின் நினைவாகவே இருந்தது. அவளைப் பார்க்க வேண்டுமென்ற துடிப்பு அடிக்கடி மனதில் எழுந்து கொண்டிருந்தது.

கார்த்திகாவைக் கடைசியாகச் சந்தித்தன்று அவள் அளவுக்கதிகமான அன்புடன் நெருங்கிப் பழகிய போது வளவனுக்கு ஆச்சரியத்தை விடப் பயம் தான் அதிகரித்தது. அவள் தான் வகுப்பில் முதல் மாணவி. அதிபரும் ஆசிரியர்களும் அவள் மருத்துவக் கல்லூரிக்குச் செல்வாள் என்று நம்பியிருந்தனர். அது ஒரு கிராமம். அப் பாடசாலையில் இருந்து இதுவரை யாரும் மருத்துவத் துறைக்குச் செல்லவில்லை. கார்த்திகாவின் தந்தை ஓரளவு வசதியானவர். கார்த்திகா தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் சித்தியடைந்ததும் அவளைப் பட்டணத்தில் உள்ள பெரிய பாடசாலையில் சேர்ப்பார் என்று அதிபர் நம்பினார். ஆனால் அவர் வந்து அதிபருக்குச் சொன்னார், ‘‘இப்போ பெரும் போர் நடைபெறுகிறது. அவள் பொம்பிளைப் பிள்ளை. வீதியால் போக முடியாது. பட்டணத்திற்குச் செல்ல முடியாது.

அத்துடன் பட்டணத்துப் பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் அப்படியே இயக்கத்திற்குச் சென்று விட்டார்கள். அதனால் அவள் இங்கேயே படிக்கட்டும்'' என்று கூறி விட்டுச் சென்று விட்டார்.

அன்று கார்த்திகா பாடசாலைக்குச் சென்ற பின் வீட்டுக்கு வரவில்லை. அவளுடன் ஏழு பெண்கள் சென்றிருந்தனர்.மாலையாகியும் கார்த்திகா வீட்டுக்கு வராமையால் வளவனும் கார்த்திகாவின் தந்தை சின்னத்துரையும் பாடசாலைக்குச் சென்றிருந்தனர். பாடசாலையில் அதிபரும் சில ஆசிரியர்களும் ,பெற்றோர் சிலரும் நின்றிருந்தனர்.

''சின்னத்துரை வருவதைப் பார்த்தால் கார்த்திகாவும் இயக்கத்திற்குச் சென்று விட்டாள் போலத் தெரிகிறது'' என்றார் அதிபர்.

சின்னத்துரையால் பேச முடியவில்லை. கண்களால் கண்ணீர் பெருகியது. இது வரை ஏழு மாணவிகளின் பெற்றோர் தமது மகள்களைக் காணவில்லை என்று வந்து விட்டனர். நீ எட்டாவதாள்'' என்றார் அதிபர். சின்னத்துரை துக்கத்தைத் தாங்கிக் கொள்ள முடியாது விம்மி விம்மி அழுதார்.

“நான் எல்லாக் காம்புக்கும் போய்ப் பாத்திட்டன். அவர்கள் தங்களுக்குத் தெரியாது” என்று கூறுகிறார்கள்.உள்ளுக்கு வைத்துக் கொண்டு அப்படிச் சொல்வார்கள். இனி அதுகள் எங்கடை பிள்ளையள் இல்லை” என்றார் ஒரு பெற்றார்.

வளவன் இடிந்து போனான். அவனால் துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எப்படியெல்லாம் வாழ வேண்டுமென்று கற்பனை செய்திருந்தான். அதன் பின் அவனால் இயங்க முடியவில்லை. தன்னை விட அவள் யாரின் மீதும் அன்பு வைக்க மாட்டாள் என எண்ணியிருந்த அவனால் உணவு உண்ணக் கூட முடியவில்லை. அவனுடைய நண்பன் பூபாலனின் தங்கை மாலதியும் கார்த்திகாவுடன் சென்றிருந்தாள். அவள் சென்று ஒரு வருடம் கழிந்த பின் தற்செயலாக ஒரு நாள் பூபாலன் கார்த்திகாவை வவுனியாவில் சந்தித்தான். அப்போது அவன் சொன்னான். “அண்ணா, நான் நாட்டுக்காக என்னை அர்ப்பணித்து விட்டேன். அதனால் எனது உயிரைப் பற்றி நான் கவலைப்படவில்லை. எனது கவலை வளவனைப் பற்றித் தான் . அவரையும் இயக்கத்தில் சேரச் சொல்லுங்கோ. நாங்கள் அடிமையாக இருந்து பட்ட துயரம் எதையும் எமது இளம் சமுதாயம் படக்கூடாது” என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

தான் என்னை விட்டுப் பிரியப் போகிறேன் என்பதற்காகத் தான்.அவள் அப்படி நடந்திருக்கிறாள். அது அவள் சென்ற பின்பு தான் அவனுக்குத் தெரிய வந்தது.

“வளவா, வளவா, ..” யாரோ கூப்பிடும் ஓசை கேட்டது. அன்று வழமையை விட அதிகமாகக் குடித்திருந்தாலும் அவனுக்கு நித்திரை வரவில்லை. நேரம் பத்து மணிக்கு மேலிருக்கும்.இந்நேரம் யார் வந்திருப்பார்கள் என்ற நினைவுடன் வெளியே வந்த போது பூபாலன் வெளியே தள்ளாடியபடி நின்றான்.

“என்னடா. இப்ப தானே போனனீ.. பிறகும் தேவைப்படுதோ. இண்டைக்குப் போதும். போ. .இல்லாவிட்டால் உள்ளை வந்து படு” என்றான் வளவன்.

“நான் படுக்க வரவில்லை. இண்டைக்கு ஒரு முக்கியமான நாள். என்னெண்டு சொல்லு பார்ப்பம்?

“எனக்குத் தெரியாது, நடுச்சாமத்திலை வந்து என்னைக் குழப்பாதை போ..”

“டேய் இண்டைக்கு இருபதாம் திகதி ..இனியென்டாலும் சொல்லு பார்ப்பம்.”

“இன்றைக்கு கார்த்திகாவின் பிறந்த நாள். அதை மறக்க முடியுமா? என்னை விட்டு விட்டுப் போன அவளை ஏன் நான் நினைக்க வேணும்” என்று எண்ணியவாறு , “இருபதும், ஐம்பதும்” எனக்கு நித்திரை வருது. நீ போ “ என்று கூறி விட்டு கதவைச் சாத்தினான் வளவன்.

“நீ போவென்றால் நான் போயிடுவனோ?” என்றவாறு கதவைப் பலமாகத் தட்டினான் பூபாலன்.

“குடிச்சுட்டு பலமாகக் கதவைத் தட்டினால் அக்கம் பக்கம் என்ன நினைக்கும். பேசாமல் உள்ளை வந்து படு. இல்லாவிட்டால் போ .இஞ்சை நின்று கத்தாதை.” என்றாள் பார்வதி.

பூபாலன் பார்வதிக்குப் பயந்தவன்.

“நான் இஞ்சை படுக்கிறன் .வீட்டை போனால் அவள் கதவைத் திறவாள்.” என்றவாறு உள்ளே வந்தான் பூபாலன்.

“வளவா.. வளவா.. பாவமடா அவள். அந்த நேர உணர்ச்சிப் பெருக்கால் எதையும் ஆராயாமல் சென்று விட்டாள். கோவிக்காதையடா.. முன்பு ஒவ்வொரு பிறந்த தினத்திற்கும் கவிதை எழுதுறனீ..” சிறிது

நேரம் பூபாலன் பேசவில்லை.. வளவனால் எதுவும் பேச முடியவில்லை. அவள் இயக்கத்திற்குச் சென்றதை அவனால் மன்னிக்க முடியவில்லை. அத்துடன் தன்னையும் இயக்கத்தில் சேரச் சொன்னதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

**“ரதியாகப் பூமிக்கு வந்த நாள் இன்று**

**சுகம் தந்து என்னை ஆள வந்த நாள் இன்று**

**அருவியாய் என் மனதுள் சலசலத்து**

**ஓடுபவள் அவதரித்த நாள் இன்று**

**அன்பான அமுதம் அழகிலே சிகரம்**

**பண்பான உள்ளம் பளபளக்கும் தேகம்**

**முத்தான கீதம் முழுநிலவான கோலம்**

**முகிழ்ந்த நாள் இன்று**

**அழகான மங்கை மனதுக்குள்க் கங்கை**

**அவதரித்த நாள் இன்று**

**மலர்களின் அரசி மஞ்சள் ரோஜா**

**மலர்ந்த நாள் இன்று”**

பூபாலன் பாடிக் கொண்டிருந்தான். வளவன் கவிதைகளை எழுதி விட்டுப் பூபாலனிடம் கொடுப்பான். அவன் படித்து விட்டு விமர்சித்த பின்பு அதைத் திருத்திப் பின்பு கார்த்திகாவுக்குக் கொடுப்பான்.

அந்த நேரம் விசரில் எழுதியது எவ்வளவு தப்பு என்று இப்போது தான் புரிகிறது. நான் எவ்வளவு அன்பு வைத்திருந்தனான். அதை அவள் புரியவில்லை. இனி அவளின்ரை கதை கதையாதை.''

**“மலர்கள் மலரும்**

**கருமுடியாளின்**

**தோளில் சாய்ந்தால்**

**நினைக்கும் இன்பம்**

**நினைத்ததும் பெறுவேன்**

**நீங்கா இன்ப**

**நிழலில் வாழ்வேன்”**

மீண்டும் பூபாலன் பாடினான்.

“எவ்வளவு கற்பனை .கார்த்திகாவைப் பற்றி எப்படியெல்லாம் நினைத்திருந்தேன். அவளை அணு அணுவாய் ரசித்து கவிதைகள் எழுதியது தான் மிச்சம். வளவனின் மனம் அலறியது.

**“பெற்ற கல்வியும்**

**பெருமுடல் பலமும்**

**உன்னைக் கண்டால் உருகி வழியும்**

**பிரியும் வேளை**

**கல்வியும் பலமும்**

**கசிந்து கரையும்”**

எழுதிய கவிதை ஒன்று நினைவில் வந்தது. யாருக்கும் தெரியாது உள்ளத்துள்க் கனன்ற பிரழயம் ஊருக்கு வந்தமையால் பொங்கி வெடித்து விடும் போல இருந்தது. கனடாவில் வாழும் போது மனைவியான அகல்யாவின் அரவணைப்பு இருந்தது.அவள் அவனை யோசிக்க விடமாட்டாள். எந் நேரமும் சுற்றிச் சுற்றி வந்து குதூகலமூட்டிக் கொண்டிருப்பாள். ஆரம்பத்தில் அது அவனுக்கு ஆத்திரத்தை உண்டாக்கும். அதை அகல்யா கருத்தில் கொள்ளாது அன்புடன் பழகுவாள். அதன் பின் இரண்டு

ஆண் பிள்ளைகள் பிறந்தன. பிள்ளைகளின் நெருக்கம் அவனை முற்றாக மாற்றி விட்டது. இப்போ ஊருக்கு வந்ததும் நிலைமை மாறி விட்டது.

**“உன்னை நினைத்தால்**

**பனி மழை குளிப்பாட்டும்**

**உன்னைப் பார்த்தால்**

**முத்துக்கள் உருவாகும்”**

“அடுத்த வரியை மறந்து போனன் சொல்லடா...” பூபாலன் கேட்டான்.

“என்ன? என்று ஆத்திரத்துடன் கேட்ட வளவன் பூபாலனின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

“உனக்கும் வெறி, எனக்கும் வெறி. நீ ஆரடா.. என்ரை நண்பன் .என்ரை உயிர் நண்பன் .அடி.இன்னும் அடி ..உன்ரை கோபந் தீர அடி.. நான் திருப்பி அடிக்க மாட்டன். நீ பிழை செய்யேல்லை. அவள் தான் உன்ரை அன்பைப் புரியாமல் ஓடினவள். இப்ப அழுறா. உனக்குத் துரோகம் செய்திட்டாவாம். தவறான முடிவாலை ஒரு நல்லவனைத் தண்டித்து விட்டேன் என்று அழுறா. இதெல்லாம் மாயம்...”

“அப்படிச் சொன்னவளா?” ஆச்சரியப்பட்டான் வளவன்.

“அவா இப்ப எல்லாத்தையும் உணர்ந்திட்டா. .இனி உணர்ந்தென்ன. இன்னும் கனக்கச் சொன்னவா..நான் பிறகு சொல்லுறன்.”

“அவற்றையெல்லாம் ஏன் எனக்கு எழுதேல்லை. போனிலயாவது சொல்லியிருக்கலாம் தானே?” கோபப்பட்டான் வளவன்.

“நீ குடும்பத்தவனாகிவிட்டாய். நான் எழுதிய கடிதத்தை அகல்யா பார்த்தால் என்ன நடக்கும். போனிலை சொல்லி நிம்மதியாய் வாழுற உன்னைக் குழப்ப விரும்பவில்லை” என்றான் பூபாலன்.

வளவன் எதுவும் பேசவில்லை. “ கார்த்திகா ஓடினத்தாலை பல வருசம் துன்பப்பட்டனி. பிறகு பலரின் வற்புறுத்தலுக்காகக் கலியாணம் செய்தனி. அகல்யா நல்ல பெண். எங்களோட படிச்சவள். உன்னை முழுமையாக அறிஞ்சவள். அவள் உன்ரை வாழ்வை மேம்படுத்த வேண்டுமென்டு தான் உன்னைக் கலியாணம் கட்டினவள். அது எனக்குத் தெரியும். பிறகு

எப்படிச் சொல்லுறது.இப்ப நீ ஏன் இஞ்சை வந்தனீ..'' கோபப்பட்டான் பூபாலன்.

''வர நான் விரும்பவில்லை. அப்பா கடுமையாக இருக்கிறார்.அவரை ஒருமுறை பார்க்க வேண்டும் என்று வந்தேன். பூபாலா அப்பா என்னுடன் நட்பாகத் தானே பழகினார். அப்படியான ஒருவரைப் பெற நான் தவம் செய்திருக்க வேண்டும்'' அழுதான் வளவன்.

''அழாதையடா.. வாழ்க்கை என்றால் இப்படித்தான். நாங்கள் ஒன்றை நினைக்க இன்னொன்று நடக்கும். இயக்கத்தை அழிப்பாங்கள் என்று யாரும் கனவு கூடக் காணேல்ல. எல்லாம் நாசமாய்ப் போச்சு...'' பெருமூச்சு விட்டான் பூபாலன்.

''கார்த்திகா இப்பவும் என்னை நினைக்கிறாளா? தான் செய்தது தவறு என்று உணருறாளா? தழுதழுத்தான் வளவன்.

''இனிமேல் கார்த்திகாவைப் பற்றிக் கதைக்காதை. அவள் யாரோ. அன்புள்ளவளாக இருந்தால் உன்னைத் தவிக்க விட்டு விட்டுச் சென்றிருப்பாளா..? சீ. அந்த நாயை மறந்திடு'' கோபப்பட்டான் பூபாலன்.

இதுநாள் வரை கார்த்திகாவை நினைத்து ஆத்திரப்பட்ட வளவனின் மனதில் இரக்கம் பிறந்தது, ‘‘பாவமடா அவள். காலை இழந்து முள்ளந்தண்டில் செல் பட்டுத் துன்பப்படுகிறாள். அவளை ஏசாதே’’ மனம் வருந்தினான் வளவன்.

‘‘ஏன் நீ கவலைப்படவேணும்? அவளுக்கு ஏதும் தீமை செய்தனியா? விரும்பிப் போனாள்.துன்பப்பட்டு வந்திருக்கிறாள்.இதுக்கு நாம் எதுவும் செய்ய முடியாது. வெறி முறிந்து விட்டது. போத்திலை எடுத்தா.. ‘‘என்றான் பூபாலன்.

‘‘இப்பவே தாங்க முடியாதிருக்கிறது. போதும், இனியும் குடித்தால் தாங்க முடியாது’’ என்றான் வளவன்.

‘‘தம்பி அப்பா விழித்திட்டார். உங்கடை சத்தத்தை என்னால தாங்க முடியவில்லை.லைற்றை அணைத்து விட்டுப் படுங்கோ. காலமை கதைக்கலாம்’’ என்றாள் பார்வதி.

‘‘சரிம்மா’’ என்ற வளவன் லைற்றை அணைத்தான்.

‘‘வளவா, கொஞ்சம் சாராயம் தா’’ என்று கெஞ்சினான் பூபாலன்.

“தந்தால் குடித்து விட்டுப் பேசாமல் படுக்க வேணும். அலட்டக் கூடாது” என்றான் வளவன்.

“அலட்ட மாட்டன்” என்றான் பூபாலன்.

# 4

பொழுது சரியாக விடியவில்லை. பூபாலன் எழுந்து விட்டான். தலை பயங்கரமாக வலித்தது. முதல் நாள் முழுவதும் வெளிநாட்டுச் சாராயத்தை அளவுக்கதிகமாக குடித்ததால் வயிற்றைப் புரட்டியது. வாந்தி வருவது போல இருந்தது. வெளியே வந்தான். முற்றத்தில் யாரோ நின்றார்கள். எனினும் நிற்பவரை அடையாளம் காண பூபாலனின் வயிறு விடவில்லை. ஓங்காளித்தபடி வீட்டின் பின் புறம் சென்றான்.

ஓங்காளிக்கும் சத்தம் கேட்டு வெளியே வந்த பார்வதி முற்றத்தில் யாரோ நிற்பதைக் கண்டு திகைத்துப் போனாள். அவளது நாய்கள் இரண்டும் பொல்லாதவை. கடியன் என்று ஊரில் பெயர் வாங்கியவை. பகலில் கூட எவரும் அழைக்காமல் உள்ளே வரமுடியாது. அப்படியான நாய்கள் நிற்பவரைச் சுற்றி நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்து

கொண்டிருந்தன. அதனால் நாய்களுக்குத் தெரிந்தவர் தான் வந்திருக்க வேண்டும் என்று நினைத்து உள்ளே சென்று சுவிற்சைப் போட்டு விட்டு வந்து பார்த்தாள்.

‘‘கார்த்திகா ஏனம்மா முற்றத்தில நிற்கிறாய். உள்ளே வா’’ என்றாள் பார்வதி.

வீட்டின் பின்புறம் சென்ற பூபாலன் வந்த போது கார்த்திகா சொன்னாள், ‘‘உனக்கு குடும்ப நினைவே இல்லை. பாவம் ஆரணி .நீ ஒரு நல்ல மனிதன் என்று எண்ணி உன்னைக் காதலித்துத் தனது வீட்டாரை வெறுத்து வந்தவள். அப்படியானவளை நீ நிம்மதியாக இருக்க விடுகிறாயா? அவள் வசதியானவள். உன்னுடைய சாதியும் இல்லை. அப்படியிருக்க இயக்கத்தில் இருந்து அகப்பட்டு புனர்வாழ்வு பெற்ற பின் பெற்றோர் ஏற்காமையால் வளவனின் வீட்டை வந்திருந்தவள். அவளை நீ வலுக்கட்டாயமாகக் காதலிச்சுக் கலியாணம் கட்டினனீ. அப்ப இருந்த காதல் இப்ப எங்க போயிட்டுது. காதலிக்கும் போதே அவளது இடது கால் வழங்காது என்பது உனக்குத் தெரியும். அத்துடன் தகப்பன் தன்ரை சொல்லை மீறி இயக்கத்திற்குச் சென்று விட்டாள் என்பதற்காகத் தனது காணி முழுவதையும் பிரித்து தமது ஆண் பிள்ளைகள் மூவருக்கும் எழுதியவர் .பின்பு அவள்

புனர்வாழ்வு பெற்று வந்த பின்பு பாவம் பார்த்து ஏற்காதவர். அதைச் சமாளித்திருக்னலாம். அதற்கிடையில் நீ அவளைத் திருமணம் செய்தாய். இப்ப அவளை முற்றாக ஏற்க மறுத்து விட்டார். அதற்குக் காரணம் நீ . நீ சாதி குறைந்தவன் என்று சொல்லி முற்றாக உறவை அறுத்து விட்டார்'' உணர்ச்சிவசப்பட்டாள் கார்த்திகா.

பூபாலனுக்கு அவள் கூறிய எவையும் ஏறவில்லை. அவள் பேசும் போது உள்ளே செல்ல முற்பட்டான்.

''எங்கை போறாய். நில் உதிலை'' அதட்டினாள் கார்த்திகா..

கார்த்திகா உண்மையானவள். நேர்மையானவள். சத்தியத்தைக் கடைப்பிடிப்பவள். அவளது தொழில் நிலையத்தில் தான் ஆரணி வேலை செய்கிறாள். அத்துடன் பூபாலனும் வேலை செய்கிறான்.

''நீ காதலிக்கும் போது நான் உனக்கு எல்லாத்தையும் விளக்கமாகச் சொன்னனான். அப்ப நீ என்ன சொன்னனீ. இயக்கத்தில் சாதி வேறுபாடில்லை. இயக்கத்தில் பெரிய பொறுப்பில் இருந்த உனக்கு இது தெரியாதா? என்றனீ.. அதனால் தான் நான் முன்நின்று உனக்குத் திருமணத்தை நடத்தி வைத்தேன். அதுவும்

உனது பெற்றோருக்கும் விருப்பம் இல்லை. வலது குறைந்த பெண்ணை நான் உனக்கு வலுக்கட்டாயமாகக் கட்டி வைக்கிறேன் என்று கோபப்பட்டனர். ஆரணியின் பெற்றோர் சாதி குறைந்தவனைக் கட்டி வைத்து எம்மைப் பழி வாங்குகிறாயா? என்று எமது உறவை முறித்தனர். உனக்கு எல்லாம் தெரியும். தெரிந்தும் வேணுமென்று செய்கிறாய். ஆரணி உனக்கு என்ன துரோகம் செய்தவள். அவள் உன்னைக் கட்ட மாட்டன் என்று மறுத்தவள். இப்போ இயக்கத்தில் இருந்து வந்த புதிதில் புதுமைகள் செய்கிறதாய் நினைத்து பலவற்றையும் செய்யலாம். காலப் போக்கில் பெரும் பிரச்சனைகள் உண்டாகும். அதனால் நான் இப்படியே இருக்க விரும்புறன்'' என்றவள். ''நீ தான் அப்படி நடக்க மாட்டனென்று பல முறை சத்தியம் பண்ணி அவளைச் சம்மதிக்கப் பண்ணினாய். இப்ப இராப் பகலாய்க் குடித்து விட்டு அவளைத் துன்பப்படுத்துகிறாய். உனக்கு விருப்பமில்லாவிட்டால் அவளை விட்டு விட்டுப் போ. தொல்லை குடுக்காதை .அவளும் இரண்டு பிள்ளைகளும் நிம்மதியாக வாழட்டும்'' என்றாள் கார்த்திகா.

அதைப் பூபாலன் எதிர்பார்க்கவில்லை. வெளியே பெருஞ் சத்தம் கேட்டு வெளியே வந்த வளவன் கார்த்திகாவைக் கண்டு திகைத்துப் போனான்.

பத்து வருடங்களாகத் தொடர்பின்றி வாழ்ந்த கார்த்திகா எப்படி வளவனின் முகத்தில் விழிப்பது என்று இரவிரவாக யோசித்துக் கொண்டிருந்தாள். “நான் செய்த துரோகத்திற்கு நான் தான் பரிகாரம் காண வேண்டும்” என்று நினைத்துப் பார்த்து பல மணி நேரச் சிந்தனையின் பின் விடியற்காலை எழுந்து வந்தாள்.

வளவனால் பேச முடியவில்லை. அழகுப் பதுமையாக இருந்த அவளின் பெரும்பகுதி சிதைந்திருந்தது. கன்னங்கள் இரண்டிலும் வெட்டுக் காயங்கள். அவை கறுத்திருந்தன. இடது கண் சுருங்கியிருந்தது.அவளை முன்பு அவன் தினமும் இரண்டு மூன்று முறை சந்திப்பான். முதல் கண்டது போல் அவளது அழகு மறுமுறை இருந்ததில்லை. ஒரு நாளில் பல முறை பல விதமாக அவள் தன்னை அலங்காரம் செய்வாள்.

**“கண்கள் காணும் தோற்றம் யாவும்**

**கணங்கள் தோறும் மாறுதே**

**விண்ணில் பூத்த பூக்கள் போல**

**உன் கண்கள் இரண்டும் துடிக்குதே**

**கண்ணை மயக்கும் அழகின் தோற்றம்**

**தேனாய் மனதில் இனிக்குதே**

**மலர்களை வென்ற அழகு உந்தன்**

**வதனம் தன்னில் மிளிர்குதே"**

அவளின் அழகைப் பற்றி எழுதிய செய்யுளை நினைத்துப் பார்த்தான் நெஞ்சு வலித்தது.

"பூபாலன் பெரும் மோசம். ஆரணியைத் தான் திருமணம் செய்வது உங்களுக்கு விருப்பம் என்றவன். அதனால் நீங்கள் தான் அவனுக்கு புத்திமதி கூறுதல் வேண்டும். இடைக்கிடை நீங்கள் பெருந்தொகைப் பணம் அனுப்புகிறீர்கள். அதையும் தான் உழைப்பதையும் குடித்தழிக்கிறான். அதனால் இனி அவனுக்குப் பணம் அனுப்ப வேண்டாம். அவனது பிள்ளைகளின் பெயரில் அனுப்பும் காசை வங்கியில் வைப்பிலிடுங்கள்" என்றாள் கார்த்திகா.

வளவன் இன்னும் சுயநினைவடையவில்லை. விடிந்ததும் கார்த்திகாவைச் சென்று பார்த்து விட

வேண்டும் என்று நினைத்திருந்தான். ஆனால் விடியுமுன் அவளே வந்து விட்டாள்.

"வா பிள்ளை உள்ளுக்கு" என்றாள் பார்வதி. கார்த்திகா அவளது மூத்த சகோதரனின் மகள் .அவள் பிறந்தன்றே பார்வதி அவளை வளவனுக்குக் கட்டி வைக்க தீர்மானித்தாள். பின்பு இரு குடும்பங்களும் அதை ஒத்துக் கொண்டன. அவர் இயக்கத்திற்குச் சென்று புனர்வாழ்வு பெற்றுத் திரும்பி வந்த பின்பும் பார்வதி முன்போலப் பாசம் கொண்டவளாகவே இருந்தாள்.

வளவனும் பூபாலனும் பார்வதியும் கார்த்திகாவும் உள்ளே வந்து அமர்ந்தனர்.

"இரவு முழுவதும் குடித்திருக்கிறாய். குடித்த பின் நீ வீட்டுக்குச் சென்றிருக்கலாம் தானே. பெரும்பாலான நாட்களில் நண்பர்களோடு சேர்ந்து குடித்து விட்டு வாசிகசாலையிலும் கோவில் மடத்திலயும் தெருவோரங்களிலும் படுக்கிறாய். நான் பலமுறை புத்திமதி சொல்லியும் கேட்கிறாயில்லை. ஆரணியை நினைத்தால் பாவமாக உள்ளது. திருமணம் என்பது பாசப் பிணைப்பு. தகுதி தராதரம் சாதி பணம் பொருள் பாராது தோன்றும் காதல் பின் ஏன்

குழப்பத்துக்குள்ளாகிறது?" கேட்டுவிட்டு மௌனியானாள் கார்த்திகா.

பூபாலனுக்குத் தர்மசங்கடமாகி விட்டது. குடிக்கக் கூடாது. குடிக்கக் கூடாது என்று பகலில் நினைத்தாலும் இரவில் அந்த நினைவு தோன்றித் தொல்லை கொடுப்பதால் தான் அதிலிருந்து மீள முடியாது அவன் குடிக்கிறான்.

வளவனுக்கு எதுவும் கதைக்கத் தோன்றவில்லை. கார்த்திகா சென்ற பின்பு கதைப்போம் என்று நினைத்தான்.

"சரி இனியாவது போய்க் குடும்பத்தைக் கவனி. போ.. அதிகாரத் தோரணையில் கூறினாள் கார்த்திகா.. பூபாலன் எதுவும் பேசாமல் எழுந்து சென்றான்.

பூபாலன் சென்றதும் கார்த்திகா சொன்னாள், "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். உணர்ச்சிப் பெருக்கால் ஆசிரியர் ஒருவரின் தூண்டுதலால் இயக்கத்திற்குச் சென்று விட்டேன். இயக்கத்தில் இருக்கும் வரை எமக்கு எந்த விதமான குறைகளும் இருக்கவில்லை. போராட வேண்டும்., நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது. பின் சரணடைந்து புனர் வாழ்வு பெற்ற பின்பு

தான் ஞானோதயம் உண்டானது. கண் கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் செய்யும் நிலை, நான் அறியாத் தனமாய் உங்களை ஏமாற்றினேன். ஆனால் பலர் திட்டமிட்டு எம்மை ஏமாற்றியதால் தான் எமக்கு இந்த நிலை ஏற்பட்டது. அதை இனி உணர்வதால் பிரயோசனமில்லை. இயக்கத்தில் இருந்த காலத்தில் உங்களைப் பற்றி ஒரு கணம் கூட நான் சிந்தித்ததில்லை. புனர் வாழ்வு பெற்றுத் திரும்பிய பின் ஒரு நிமிடம் கூட உங்களை நினைக்காமல் இருக்க முடியுதில்லை. அந்தளவு பாசத்தோடு என்னோடு பழகினீர்கள்.'' அவளால் மேற்க்கொண்டு பேச முடியவில்லை.விம்மினாள். கண்களால் வழிந்தோடும் கண்ணீரைக் கூடக் கவனிக்காது விம்மினாள்.

வளவன் விம்மி விம்மி அழுத கார்த்திகாவை வெறித்துப் பாாத்தபடி இருந்தான். அவனால் பேச முடியவில்லை. பேச நினைத்தான். வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கினவே தவிர வெளியே வரவில்லை. கார்த்திகா வெகு நேரமாக அழுதாள். அவளது அழுகை நிற்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. முன்பு பிறந்து மூன்று நாட்களான ஆட்டுக்குட்டி துள்ளி விளையாடுவதைப் போலத் துள்ளித் துள்ளித் திரிந்தவள் இன்று அழுவதை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அருகில்

இருந்தும் தொட்டுத் தடவி ஆறுதல் கூற முடியாதவனாக இருக்கும் நிலையை எண்ணிக் கவலைப்பட்டான். கொள்ளை அழகு குறைந்து பேய் போல இருப்பவள் குலுங்கிக் குலுங்கி அழுததால் மேலும் விகாரமடைந்தாள்.

**“நினைக்கும் போதும் அணைக்கும் போதும்**

**தோன்றும் இன்பம் புதுமை புதுமை**

**நினைக்கும் போது நெஞ்சம் இனிக்கும்**

**அருகில் வந்தால் உள்ளம் மலரும்**

**தீயாய்ச் சுட்டும் நீராய்க் குளிர்ந்தும்**

**செய்யும் கொடுமை நித்தம் நடக்கும்**

**வானில் பறக்கும் எண்ணம் தோன்றும்**

**கனவுகள் யாவும் நிஜமாய்த் தோன்றும்”**

என்ற கவிதையை நினைத்துப் பார்த்தான். வாழ்க்கை வெறுத்தது. திருமணமே வேண்டாம் என்றிருந்தவனைப் பலரும் வற்புறுத்தித் திருமணம்

செய்து வைத்தனர். செய்யாதிருந்தால் இப்போ கார்த்திகாவைச் செய்திருக்கலாம் என்று நினைத்தான்.

அவனது தந்தையார் சொன்னார், ‘‘மகனே எல்லாம் விதி. விதியை மிஞ்சிய சக்தி உலகில் எதுவும் இல்லை. இன்னார்க்கு இன்னார் என்று இறைவன் நிச்சயித்து வைத்திருக்கிறான். இல்லாவிட்டால் வெளிநாட்டில் வாழும் உனது மாமா வெள்ளைக்காரியைச் செய்வாரா? சென்ற வாரம் மார்க்கண்டுவின் மகன் வயலுக்குச் சென்ற போது கண்ணி வெடியால் தாக்கப்பட்டு இறந்து விட்டான். ஐந்து வருடங்களாக அந்தப் பாதையால் மக்களும் வாகனங்களும் பயணிக்கின்றனர். ஆனால் எதுவும் நடக்கவில்லை. அன்று ஏன் நடக்க வேண்டும்.?மனிதனின் செயல்கள் யாவும் இறைவனின் கட்டளைப்படியே நடைபெறுகின்றன. அகல்யா எனது ஒன்றுவிட்ட சகோதரியின் மகள்.நல்லவள், படித்தவள்,அதை விடப் பண்புள்ளவள். உனது பிரச்சனைகள் யாவும் தெரிந்தவள். அவள் கனடாவில் இருந்தாலும் உனது நிலையை எண்ணிக் கவலைப்படுகிறாள்.அவள் விரும்பியவன் அவளை ஏமாற்றி விட்டான். இப்போ அவள் கனடாவில் சகல வசதிகளோடும் வாழ்வதால் அவளைத் திருமணம் செய்ய விரும்புகிறான். ஆனால் அவளுக்கு

விருப்பமில்லை. தான் வசதியாக வாழக் கனடாவுக்குச் செல்ல விரும்புவதால் தான் அவன் மீண்டும் தன்னை விரும்புவதாக நினைக்கிறாள். அதனால் இது தான் விதியென்று நினைத்து அகல்யாவைத் திருமணம் செய்'' என்று அவனது தந்தை கூறியதால் தான் சம்மதித்தான். அதற்காக அவன் சில காலம் வருந்தினான்.அதை உணர்ந்த அகல்யா அவன் மீது அளவற்ற அன்பைச் செலுத்தியமையால் காலப் போக்கில் யாவற்றையும் மறந்து விட்டான். இப்போ கார்த்திகா வந்தமையால் அவனது மனம் மீண்டும் தவிக்க ஆரம்பித்தது.

''தம்பி ரெலிபோன் அடிக்குது. கேட்கவில்லையா? '' என்று பார்வதி சொல்ல வளவன் உள்ளே சென்று ரெலிபோனைப் பார்த்தான். அகல்யா அழைப்பில் இருந்தாள். வளவன் சற்றுத் தடுமாறிப் போனான்.

# 5

''அழைப்பை எடுப்போமா விடுவோமா? என்று சிந்தித்துக் கொண்டிருந்தான் வளவன். இரவு எடுத்து ஒரு மணி நேரம் கதைத்தவள் .இப்போ ஏன்

எடுக்கிறாள்.? என்று நினைத்தபடி வளவன் அழைப்பைப் பெற்று “அகல்யா” என்றான்.

“கார்த்திகாவைச் சந்தித்தீர்களா? என்ன சொன்னாள்?வளவனுக்கு தர்மசங்கடமாக இருந்தது. கதைக்கத் தொடங்கினால் அகல்யா தொடர்ந்து கதைத்துக் கொண்டிருப்பாள். அதனால் வளவன் சொன்னான். “பாத்ரூமில் இருந்தனான். ரெலிபோன் மணி அடிக்கும் சத்தம் கேட்டதால் வந்தேன். பிறகு எடுக்கிறேன்.” என்று சொல்லித் தொடர்பைத் துண்டித்தான். “பெரியதொரு பிரச்சனை தீர்ந்தது” என்று நினைத்துப் பெருமூச்சு விட்டபடி வெளியே வந்தான். கோலில் கார்த்திகாவும் பார்வதியும் இருந்தனர். வளவனைக் கண்டதும் பார்வதி எழுந்தாள். “ இன்னும் வளவன் ரீ குடிக்கவில்லை. முன்பென்றால் எழுந்தவுடன் பல் துலக்காமல் தேநீர் குடிப்பான்” என்றவள் உள்ளே சென்றாள்.

வளவன் வந்து அவளுக்கெதிரே இருந்த சோபாவில் அமர்ந்தான். என்ன கதைப்பது எப்படிக் கதையைத் தொடங்குவது என்று புரியாமல் வளவன் தவிப்புடன் நிலத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

கிட்டத்தட்ட அதே நிலையில் தான் கார்த்திகாவும் இருந்தாள்.

முன்பென்றால் அவன் வந்தால் அவனுடன் சரசமாடுவாள்.அவனைப் பிடித்துத் தள்ளுவாள். ஓயாமல் கதைப்பாள். வளவனைக் கதைக்க விடமாட்டாள். ஆனால் இன்று முதன் முதலாக ஓர் அன்னியனைப் பார்க்கும் நிலையில் இருந்தாள். முன்பென்றால் ஆயிரம் ஆயிரம் வார்த்தைகள் துள்ளிக் குதித்து வரும். இன்று வெற்றுக் குடம் போல மனம் இருந்தது.

**“கண்டதும் மெய் மறப்பேன்**

**உன்னைக் கண்டதும் மெய் மறப்பேன்**

**என் நெஞ்சில் குடியிருக்கும் உயிரே**

**உன்னைக் கண்டதும் மெய் மறப்பேன்**

**என் நாவினில் குடியிருக்கும் -நாமகளே**

**என்னைக் கவிஞனாக்கியவளே**

**உன்னைக் கண்டதும் மெய் மறப்பேன்”**

என்று முன்பு அவளைச் சந்தித்த போது எழுதிய கவிதை தான் அப்போது ஞாபகத்தில் வந்தது.

“நீங்கள் அதிகம் கதைப்பதில்லை. நான் தான் கதைத்துக் கதைத்து உங்களைப் பைத்தியமாக்கினேன்.” விம்மினாள். கண்களால் கண்ணீர் வடிந்தது.

முன்பென்றால் வளவன் அவளுக்குக் கோபம் வரும்படியாகக் கதைப்பான். அப்போது அவள் ஏசுவாள். பின்பு விம்மி விம்மி அழுவாள். அவள் அழட்டும் என்று காத்திருந்த வளவன் எழுந்து சென்று கண்ணீரைத் துடைப்பான். பின்பு மன்னிப்புக் கேட்பான்.

அது அவளுக்கு விருப்பமாக இருக்கும். ஆனால் அன்று அவள் துயரத்தைத் தாங்க முடியாது விம்மி விம்மி அழுத போதும் அவன் கலவரப்படவில்லை. தேற்றவில்லை. ஒப்புக்காவது ஆறுதல் மொழி கூறவில்லை. அது கார்த்திகாவுக்குப் பெருந் துன்பத்தைக் கொடுத்தது.

“நான் ஏமாந்து விட்டேன் .இப்படி ஒரு நிலை ஏற்படுமென்று எம்மில் எவரும் கனவு கூடக் காணவில்லை. பத்துப் பதினைந்து வருடங்கள் எமது கட்டுப்பாட்டில் இருந்த மண் பறி போய்விட்டது. அதை

மீட்கலாம். ஆனால் எம்மவரை மீட்க முடியாது. அவர்கள் இயக்கத்தை மறந்து விடவில்லை. வெறுத்து விட்டார்கள். ஒவ்வொருவரும் எம்மோடு பழகியதைப் பார்த்தால் அவர்கள் எமக்காக எதையும் செய்வார்கள் என்று நினைத்தோம் ஆனால் அவர்கள் சுயநலம் கொண்டு தமது தேவைகளைப் பூர்த்தி செய்யவே எம்முடன் திட்டமிட்டு உறவாடினார்கள் என்று இப்போது தான் புரிகிறது'' கதைத்துக் கொண்டிருந்தவள். கதைப்பதை நிறுத்தினாள். அவளது முகம் விகாரமடைந்திருந்தது. கண்கள் அளவுக்கதிகமாகச் சிவந்திருந்தன. பத்திரகாளியைப் போல் காட்சியளித்தாள்.

**பேரழகே!**

**பேசும் பொற் சிலையே!**

**அன்பின் உருவே!**

**அமிழ்தமே!**

**என்னன்பே நீ**

**வாடாத தாமரை**

**வடிவான ரோஜா**

**பார்த்துக் கொண்டிருந்தால்**

**பசியும் வராது''**

''என்று வர்ணித்த கார்த்திகாவா இவள்?'' வளவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''தென்றலாக இருந்த வாழ்வு புயலாக, சுனாமியாக மாறிய பின் அவளால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்'' கவலைப்பட்டான் வளவன்.

''முன்பே அப்பா சொன்னவர் . நான் தான் கேட்கவில்லை. பக்கத்து வீட்டு சிவகௌரி இயக்கத்திற்குச் சென்ற போது அப்பா சொன்னவர். அவள் என்னுடன் படித்தவள். இடம் பெயர்ந்து வந்து எமது ஊரில் யாரோ ஒரு இனத்தவரின் காணியில் சிறு கொட்டில் அமைத்து வாழ்ந்தவள். அவள் இயக்கத்திற்குப் போன போது என்றுமில்லாதவாறு அப்பா என்னை அழைத்துச் சொன்னவர், ''கார்த்தி, கௌரி வறுமைப்பட்டவள். ஏழை, குடியிருக்கக் காணி கூட இல்லாதவள். ஆனால் நீ வசதியானவள். இயக்கத்திற்குச் சென்று விடாதே.தமிழர்கள் சுயநலம் மிக்கவர்கள். அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து எதுவும்

செய்ய முடியாது.சேர சோழ பாண்டியர்கள் தமிழர்கள். தமக்குள்ளேயே போரிட்டுத் தம் பலத்தை இழந்து அந்நியனுக்கு அடிமைப்பட்டவர்கள்.வீர பாண்டிய கட்ட பொம்மன் , சங்கிலியன் போன்ற வீரத் தமிழர்களை அவர்களோடு இருந்தவர்கள் தான் சுயநலனுக்காகக் காட்டிக் கொடுத்தனர். அந்தப் பரம்பரையில் வந்த தமிழர் தான் இப்போ இருப்பவர்கள்.அவர்களுக்கு ஒரு தலைவனின் கீழ்ப் போராடி நாட்டைக் கைப்பற்ற விருப்பமில்லை. தான் தலைவனாக வேண்டுமென்ற முனைப்புத் தான் இருக்கும்'' என்றவர்.அவர் சொன்னது சரி. அது தான் நடந்தது'' பல்லை நெருமினாள் கார்த்திகா.

அவளது தோற்றத்தையும் பார்க்க அவனுக்குப் பயமாக இருந்தது.

அப்போதும் வளவன் பேசவில்லை. அவனால் பேச முடியவில்லை. எதைப் பேசுவது ,என்னத்தைப் பற்றிப் பேசுவது என்று புரியாமல் தவிப்போடு அமர்ந்திருந்தாள்.

அப்போது தேநீருடன் வந்த பார்வதி ஒரு கோப்பையை வளவனுக்குக் கொடுத்து விட்டு மற்றதை கார்த்திகாவிடம் கொடுத்தாள்.

வளவன் வந்த பின் கார்த்திகாவால் இயங்க முடியவில்லை. பல்வேறு வகையான எண்ணங்கள் தோன்றி சரவெடி போல மனதுள் ஓயாமல் வெடித்துக் கொண்டிருந்தன. அதனால் அவன் தனது தொழிலகத்திற்கும் செல்லவில்லை. சாப்பிடவும் இல்லை. அத்துடன் பசிக்கவும் இல்லை. இப்போது பசிப்பது போல் இருந்தது. அதனால் பார்வதி கொடுத்த தேநீரைச் சுவைத்துக் குடித்தாள். பல வருடங்களுக்குப் பின் வளவனுக்கு அருகில் இருந்து தேநீர் குடிப்பது அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

கார்த்திகாவின் வீட்டுக்குச் சென்றால் அவனுக்கு கோப்பையில் தான் தேநீர் கொண்டு வருவாள். ‘‘சிவம் இல்லை, சக்தி தான் பெரியவள். அதனால் நான் குடித்து விட்டுத் தான் உங்களுக்கு பருக்குவேன்’’ என்று கோப்பை மீது தனது உதடுகளைப் பதிப்பாளே தவிர குடிக்க மாட்டாள். பின்பு வளவனின் உதட்டருகே கோப்பையை வைப்பாள்.எல்லயில்லாத மகிழ்வுடன் வளவன் மிகமிக மெதுவாகத் தேநீரைப் பருகுவான். விரைவாகக் குடித்தால், குடித்து முடிந்ததும் அவள் எழுந்து சென்று விடுவாள் என்ற பயம் வளவனுக்கு. அப்படியானவள் இன்று தான் தேநீரைக் குடிக்குமுன் தான் குடிக்கிறாளே என்று வளவன் கவலைப்பட்டான்.

**“ஊட்டி உண்டு மகிழ்வாள்**

**உண்ண உண்ணக் கதைப்பாள்**

**உண்ணும் போது பறிப்பாள்**

**உள்ளம் உடைந்தால் சிரிப்பாள்**

**உண்ட பின்பே தருவாள்**

**கேட்டுக் கோபித்தால்**

**நான் கண்ணப்பன் பரம்பரை என்பாள்**

**கண்டு கொள்ள முடியாது**

**என் காதலியின் மனக் குறிப்பை”**

‘‘சரி ஊர்க்கதை எதுக்கு, நான் இயக்கத்திற்குச் சென்றதை நினைத்துக் கவலைப்படுகிறேன். அது என் வாழ்நாளில் தீராது. தீராத நோய். கான்சர் . அழுது அழுது சிந்தித்துச் சிந்தித்து கடைசியில் பைத்தியமாகிச் சாக வேண்டியது தான். உங்களோடு நெடுங்காலம் பழகியும் உங்களை நான் புரிந்து கொள்ளவில்லை. அதற்குக் காரணம் எனது உறவினரான சிவராமன் தான். அவர் தனது ஆண்

பிள்ளை இரண்டையும் யாருக்கும் தெரியாமல் வேலணை ஊடாக இந்தியாவுக்கு அனுப்பி விட்டு அவர்களைக் காணவில்லை என்று தேடிக் கொண்டிருந்தார். அவர் அப்போது மாற்று இயக்கத்தில் இருந்தார். அவரின் மூத்த மகன் பிரான்சிற்கு முன்பே போய் விட்டான். அவன் பின் தனது இரு சகோதரர்களையும் பிரான்சிற்கு அழைத்து விட்டான். அந்தத் தகவல் எனக்குத் தெரிய ஐந்து வருடம் சென்றது. அவர் அதன் பின் இயக்கத்திற்காக உழைத்தார்.அவரின் நடிப்பை இயக்கமும் நம்பி விட்டது. அவர் என்னைக் காணும் போதெல்லாம் இயக்கத்தைப் புகழ்வார்.அவரைப் போல ஊரில் உள்ள அனைவரும் இயக்கத்தைப் பற்றிப் பேசியமையால் அதில் மயங்கி சென்று விட்டேன். எல்லாம் விதி'' என்று அலுத்துக் கொண்டாள் கார்த்திகா. அவளின் மனதில் முன்பு வளவன் எழுதிய கவிதை ஒன்று நினைவுக்கு வந்தது.

**''என் உயிரைப் பறித்து**

**மனதில் புதைத்து**

**மகிழும் மயிலே**

**உன்னை நினைத்து**

**மகிழ என் மனதும் இல்லை**

**உயிரும் இல்லை**

**உடல் பொருள் ஆவி**

**யாவும் உன் வசமான பின்**

**எனக்குத் துணையாக**

**இருப்பது யார்**

**கவிதையும் காவியமும்**

**உன்னைத் தேடி**

**உன்னைச் சுற்றும் போது**

**உருத் தெரியாமல்**

**அழிகிறேன் நான்”**

விம்மினாள் கார்த்திகா. அவளாலும் பேச முடியவில்லை. வளவனைப் பார்த்தாள். அவன் திக் பிரமை பிடித்தவன் போல முகட்டை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவனது இந்தச்

சோகத்திற்குக் காரணம் தான் தான் என்பதை நினைக்க அவளுக்குத் துக்கமாக இருந்தது.

இப்போ அவன் நிறையக் குடிக்கிறவன். அவனது மனைவி கார்த்திகாவின் இனத்தவள். வளவனைப் பற்றி முழுமையாகத் தெரிந்தவள். இருப்பினும் அவனை விரும்பி ஏற்றுக் கொண்டாள். முதலில் மறுத்த அவன் பின் பலரின் வற்புறுத்தலுக்காகத் திருமணம் செய்தான். இருந்த போதும் குடியைக் கைவிடவில்லை. காலப் போக்கில் அகல்யா தனது போக்கால் அவனைத் திருத்தி விட்டாள். இப்போ அவன் குடிப்பதில்லை. நல்லதொரு குடும்பத்தவனாக மாறிவிட்டான் என்று கேள்விப்பட்டாள் கார்த்திகா.

"நடந்தவற்றைக் கனவாக நினைத்து மறந்து விடுங்கள். நீங்கள் நிம்மதியாகவும், மகிழச்சியாகவும் வாழ வேண்டும் " கார்த்திகா கதைத்துக் கொண்டிருந்தாள்.

வளவனுக்குக் கோபம் வந்தது. அவளுக்கு அடிக்க வேண்டும் போல இருந்தது. "நம்பியவனை ஏமாற்றி விட்டு இப்போ வந்து உபதேசம் செய்கிறாள்" என்று நினைக்கக் கோபம் கட்டுமீறியது. எனினும் அவன் வாய் திறக்கவில்லை.

“இப்போ நீங்கள் குடும்பத்தர். மனைவியும் இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள். கடந்த காலத்தை எண்ணிக் கவலைப்படாது எதிர்காலத்தை எண்ணி சிறப்புடன் வாழுங்கள். பிள்ளைகளின் எதிர்காலம் முக்கியம். அவர்களைக் கவனமாக வளர்த்தல் வேண்டும்” என்றாள் கார்த்திகா.

அப்போது அங்கே வந்த பார்வதி சொன்னாள், “கார்த்தி, காலைச் சாப்பாடு தயாரித்து விட்டேன். வா சாப்பிட, வளவா நீயும் வா”

கார்த்திகா மகிழ்வுடன் வளவனைப் பார்த்தாள். அவனது முகத்தில் எந்த விதமான மாற்றமும் நிகழவில்லை. முன்பை விடக் கறுத்திருந்தது. தன்னுடன் சாப்பிட விரும்புவானா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள சில கணங்கள் தான் இருந்தது. அதற்கிடையில் கார்த்திகாவின் மனம் போர்க்களத்தில் நிற்பதைப் போல உசாரானது.

வளவன் எதுவும் பேசாது வெளியே சென்றான். அது கார்த்திகாவுக்கு எரிச்சலைக் கொடுத்தது. எனினும் அதைக் காட்டிக் கொள்ளாது சாப்பிடும் மேசைக்குச் சென்றாள்.பார்வதி இரண்டு தட்டுக்களை வைத்து விட்டு அரிசி மாவில் செய்த பிட்டை அதில் வைத்தாள்.

உருளைக் கிழங்குப் பிரட்டலும், நல்லெண்ணெயில் பொரித்த முட்டையும் எச்சிலை ஊற வைத்தன.

“முட்டைப் பொரியலின் வாசம் மூக்கைத் துளைக்கிறது. எத்தனை நாட்களாகின்றன அம்மாவின் முட்டைப் பொரியல் சாப்பிட்டு” என்றவாறு முட்டைப் பொரியலில் சிறிதளவு எடுத்து வாயில் வைத்தான் வளவன்.

அப்போது பூபாலன் “வளவா” என்று அழைத்தவாறு உள்ளே வந்தான்.

“வா,..வா” அம்மா ஒரு தட்டுக் கொண்டு வாருங்கோ” என்று சொல்ல நினைக்கும் முன்பே கார்த்திகா கோபத்துடன் எழுந்தாள்.

“இப்ப ஏன் இங்கை வந்தனீ. ? பூபாலன் பயந்து போனான்.

## 6

பூபாலன் நடுநடுங்கினான். அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. கார்த்திகா மிகவும் பொல்லாதவள்.சொன்னதைச் செய்பவள். அவள்

ஒன்றைத் தீர்மானித்து விட்டால் முடிக்காமல் விட மாட்டாள்.

“நான் உனக்குப் பல தடவைகள் கூறியுள்ளேன். அதை விட எச்சரித்தும் உள்ளேன். இன்று தைத்த உடைகளைக் கடைக்குக் கொடுக்க வேண்டும். புடைவைக் கடைக்காரர் எம்மிடம் நம்பிக்கை வைத்தமையால் தான் வாடிக்கையாளரின் துணிகளை வாங்கி எம்மிடம் தைக்கத் தருகிறார்கள். இன்று பதினைந்து உடைகள் கொடுத்தல் வேண்டும்.கடை திறந்தவுடன் கொடுத்தல் வேண்டும்.உடைகளைத் தைக்கக் கொடுத்தவர்கள் கடை திறந்தவுடன் வரத் தொடங்கி விடுவார்கள். இப்ப நேரம் ஒன்பதரை. எல்லாக் கடைகளும் திறந்திருப்பார்கள். உனக்கு இவற்றைப் பற்றிச் சொல்லி பிரயோசனமில்லை. இனிமேல் நீ வேலைக்கு வர வேண்டாம்”என்றவள் போனை எடுத்து டயல் செய்தாள். “யார் சரண்யா தானே? சரவணண் வந்து விட்டானா?சரி தைத்த உடுப்புக்களை அவனிடம் கொடுத்தனுப்பு. பூபாலன் வந்தால் வேலை செய்ய விட வேண்டாம்.” என்று கூறி விட்டுத் தொடர்பைத் துண்டித்து விட்டாள்.

சென்ற மாதம் ஒரு நாள் பூபாலன் அறிவிக்காமல் நின்று விட்டான். மறுநாள் கார்த்திகா சொன்னாள்,

“பூபாலு, என்னை நம்பி ஐம்பது புனர்வாழ்வு பெற்ற போராளிகளின் குடும்பங்கள் இருக்கு.. நாம் நேர்மையாகவும்,கண்ணியமாகவும் நடப்பதால் தான் பட்டணத்தில் உள்ள புடைவைக் கடைகள் எம்மிடம் துணியைத் தருகிறார்கள்.குறித்த தினத்திற்குத் தைத்த உடைகளைக் கொடுக்காவிட்டால் கடை உரிமையாளர்கள் பெரும் சங்கடத்துக்குள்ளாவார்கள். ஒரு திருமணத்திற்கான ஓடர்களை நீ கொண்டு சென்று கொடுத்திருத்தல் வேண்டும். நீ அறிவித்திருந்தால் நான் வேறு யாரிடமாவது கொடுத்தனுப்பியிருப்பேன். நீ வராததால் பொருட்களை சாந்தியிடம் கொடுத்தனுப்பினேன்.அதனால் எனது மானம் காப்பாற்றப்பட்டது. உனக்கு வேறு வேலைகள் எதுவும் தெரியாது. அதனால் தான் வெளிவேலைகளைத் தந்தேன். என்னிடம் வேலை செய்யும் பல பெண்களுக்கு வாகனங்கள் ஓட்டத் தெரியும். அதனால் இனி நீ வரவேண்டாம்”

பூபாலனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எதைச் சொன்னாலும் அதை அவள் ஏற்க மாட்டாள் என்று அவனுக்குத் தெரியும். அதனால் “அக்கா என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்” என்று அவளின் கால்களில் விழுந்தான்.

‘‘உனது மனைவி ஆரணி பாவம். உறுதியானவள், நேர்மையானவள், கடமையுணர்வும், விசுவாசமும் உள்ளவள். நீ இயக்கத்தில் இருந்தமையால் யாரும் உனக்குப் பெண் தர முன் வரவில்லை.அதுபோல காயப்பட்ட ஆரணியையும் யாரும் திருமணம் செய்ய விரும்பவில்லை. அதனால் நீ விருப்பப்பட்டாய் என்பதற்காய் செய்து வைத்தேன்.அத்துடன் உனக்கு ஆதரவாய் வளவனும் இருந்தார். இப்போ நீ அவளைக் கொடுமைப்படுத்துகிறாய். வேலைக்கு ஒழுங்காக வருவதில்லை. நீ திருந்த மாட்டாய்’’ என்றாள் கார்த்திகா. கோபத்தால் அவளது கண்கள் சிவந்தன. குரல் பலமாக இருந்தது.

‘‘இனிமேல் நான் பிழை விட மாட்டேன். என்னை நம்புங்கள் அக்கா’’கெஞ்சினான் பூபாலன்.

‘‘உனக்காக நான் இரக்கப்பட்டால் எனது தொழிற்சாலையை மூட வேண்டி வரும்,நீ போகலாம்’’ என்றாள் கார்த்திகா.

அவள் முடிவெடுத்தால் மாற்ற மாட்டாள் என்று அவனுக்குத் தெரியும். அதனால் வளவனைப் பார்த்தான்.

பூபாலன் பார்வையால் இரப்பது வளவனுக்குப் புரிந்தது. இருந்தும் அவன் எதுவும் பேசவில்லை. தென்றலின் இனிமையையும் தேனின் சுவையையும் உடைய கார்த்திகாவின் வார்த்தைகள் தீயாக வெளி வந்ததை அவனால் நம்ப முடியவில்லை.

**“கதையும் பேச்சும் கரும்பேயாகும்**

**நினைவும் செயலும் தேனேயாகும்**

**நினைத்ததும் கனவுகள் கவிதைகளாகும்**

**கனவிலும் உந்தன் வார்த்தைகள் இனிக்கும்”**

என்று கவிதை எழுதி அதை உண்மை என்று நம்பியிருந்தவனுக்கு இன்று கார்த்திகாவின் உதட்டிலிருந்து பொங்கிப் பிரசவித்த வார்த்தைகள் அதிர்ச்சியைக் கொடுத்தன.

இனிக் கதைப்பதில் பிரயோசனமில்லை என்று தெரிந்து கொண்ட பூபாலன் அவ்விடத்தை விட்டு வெளியே செல்ல முற்பட்ட போது பார்வதி வந்து சொன்னாள், “சாப்பிட்டு விட்டுப் போ” என்று.

பூபாலன் கலக்கத்துடன் கார்த்திகாவைப் பார்த்தான். ‘‘சாப்பிடு’’ என்றாள்.

தடுமாற்றத்துடன் தட்டை எடுத்தான். பார்வதி பிட்டை மூவருக்கும் வைத்தாள். கார்த்திகா முட்டைப் பொரியலை எடுத்து வைத்து விட்டு உருளைக் கிழங்குக் கறியை வைத்தாள்.

ஒரு கணம் வளவனின் உடல் அதிர்ந்து குலுங்கியது. பத்து வருடங்களுக்கு முன்பு அவள் உணவு பரிமாறினால் அவனது தோளோடு உரசியபடி நின்று பரிமாறுவாள். அந்த ஸ்பரிசம் அவனை உண்ணவிடாது.அதனால் அவளது கையைப் பிடிப்பான். அவள் அதை உதறி விட்டுத் தூரச் செல்வாள்.பல வருட காலத்திற்குப் பின்பு கார்த்திகா அவனுக்கு உணவு பரிமாறியதை நினைத்து உடலெங்கும் சிலிர்த்தது.

**‘‘உள்ளம் உவர்க்க**

**உரோமம் சிலிர்க்க**

**உலகை மறந்து**

**உவகை கொள்ள**

**வைத்த உந்தன்**

**செயலின் தன்மை**

**நினைக்கும் வேளை**

**நீங்கா இன்பம்**

**தந்து வாட்டும்"**

ஒருநாள் அவள் உணவு பரிமாறும் போது அந்த மேசையில் வைத்து எழுதிய கவிதை ஞாபகத்திற்கு வந்தது.

கார்த்திகா எதுவும் நடவாதது போல உணவைச் சுவைத்து உண்டு கொண்டிருந்தாள். மாமி அவிக்கும் பிட்டின் வாசணையோடு சாப்பிடலாம். அதை விட உருளைக்கிழங்குக் கறி பிரமாதம் .முட்டைப் பொரியலைப் பற்றி வர்ணிக்க வார்த்தைகளே இல்லை" என்றாள்.

வளவனுக்கு அவளது செயலை நினைக்க ஆச்சரியமாக இருந்தது. சில கணங்களுக்கு முன் எரிமலையாக குமுறியவள் ,சில கணங்கள் கழித்து குளிர் நீரோடை போல மிக மிக அமைதியாக இருந்தாள்.

வளவனால் பேச முடியவில்லை. பூபாலன் சாப்பிடாது தட்டில் வைக்கப்பட்ட பிட்டைப் பிசைந்து கொண்டிருந்தான். கார்த்திகாவும் கதைக்கவில்லை. இருப்பினும் அவளது மனதில் ஆயிரம் ஆயிரம் வார்த்தைகள் பிரசவித்துக் கொண்டிருந்தன.

சாப்பிட்டு முடிந்ததும் கார்த்திகா எழுந்து, ‘‘எனக்கு வேலை இருக்கு. நான் வரப் போகிறேன்.’’ என்று கூறி விட்டு வளவனைப் பார்த்தாள்.அப்போதாவது அவனது மௌனம் கலையுமா என்று.

அப்போதும் வளவன் பேசவில்லை ‘‘ம்’’ என்று தலையாட்டினான்.அது கார்த்திகாவுக்கு ஏமாற்றத்தை அளித்தது. எனினும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாது, ‘‘மாமி நான் பிறகு வருகிறேன்’’ என்று கூறி விட்டு வருகிறேன்.’’ என்று கூறி விட்டு நடந்தாள்.

மோட்டார் சைக்கிளில் அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றான் வளவன். அவள் மறைந்த பின்பும் அவனால் சுயநினைவுக்கு வரமுடியவில்லை.

அவன் உள்ளே வந்த போது பூபாலன் சாப்பாட்டு மேசையிலேயே அமர்ந்திருந்தான். அவனுக்கு உலகம் இருண்டு விட்டதைப் போலிருந்தது.

**“முதலிரு நிலவு என் மனதினில்- உலவும்**

**மூன்றாம் நிலவு அவன் உதட்டினில் சிரிக்கும்**

**நான்கும் ஐந்தும் நெற்றியில் தவழ**

**பௌர்ணமி நிலவாய் எதிரினால் வருவாள்”**

இப்படி இருந்த கார்த்திகா இன்று மூர்க்கத்தனமான அக்கினி நிலவாகி விட்டாள் என்பதை நினைக்க அவனுக்கு வேதனையாக இருந்தது.

“வளவா, பார்த்தாயா, கார்த்திகாவின் செயலை. முன்பு அமைதியும், பண்பும், இரக்கமும் கொண்டவளாக இருந்தாள். இப்போ அன்பாக ஒரு வார்த்தை அவளுக்குப் பேசத் தெரியாது.இரக்கம் என்ற ஒன்று இருப்பதை அவள் உணர்வதே இல்லை. இயக்கம் அவளை இரும்பாக்கி விட்டது.சொன்னால் சொன்னது தான். யார் சொன்னாலும் கேட்க மாட்டாள்.அதனால் தான் நான் உன்னைக் கேட்கவில்லை.இப்போ அவள் இருக்கும் மனநிலையில் உனது பேச்சையும் மதிக்காள்.அதுவும் ஒரு வகையில் நல்லது தான். நான் உன்னைச் சந்தித்து விட்டுச் செல்வோம் என்று தான் வந்தேன்..” என்று

நிறுத்தியவன் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். அவனது கண்கள் கலங்கின.

“கார்த்திகா இப்படி இருப்பதால் தான் ஐம்பது குடும்பங்கள் வயிறார உண்கின்றன. புனர் வாழ்வு பெற்றுத் திரும்பி வந்த போது அவள் முற்றாக மாறி விட்டாள்.மக்கள் நடந்து கொள்ளும் விதம் அவளுக்குப் பிடிக்கவில்லை.அவள் வசதியானவள். அவளுடன் இயக்கத்தில் இருந்த பலர் அன்றன்றைக்கே உணவுக்கும் கஷ்டப்பட்டனர். அதனால் அவர்களின் கஷ்டத்தைப் போக்குவதற்காகத் தனது தோட்டத்தை ஐம்பது இலட்சத்துக்கு விற்றவள்.அது குடும்பத்தில் உள்ள எவருக்கும் விருப்பமில்லை.எனினும் அவள் தனது கொள்கையில் இருந்து மாறவில்லை. கார்த்திகாவின் தம்பி கஜேந்திரன் காணியை விற்க வேண்டாம். நான் உனக்குத் தேவையான காசு தருகிறேன் என்றவன். அதற்கு அவள் சொன்னாள், “தம்பி உன்னுடைய பணத்தைக் கொண்டு நீ நல்ல முறையில் வாழ். இங்கு அழகான படித்த பணக்காரப் பெண்களுக்கே நல்ல வாழ்வு அமைவதில்லை. இயக்கத்திற்குச் சென்ற எவரையும் யாரும் திருமணம் செய்ய மாட்டார்கள். அதை விட நான் ஊனமானவள்.என்னை யார் திருமணம் செய்யப்

போகிறார்கள். அதனால் எனது பெயரில் உள்ள அந்தத் தோட்டக் காணியை விற்கிறேன்’’ என்றாள்.

அதன் பின் கஜேந்திரன் அவளுடன் கதைக்க முயன்றான். அவள் அதை விரும்பவில்லை. அவளின் தந்தை சின்னத்துரை ஐயாவின் பேச்சையும் அவள் கேட்கவில்லை. , ‘‘அப்பா, எனக்குச் சீதனம் தந்து விட்டதாக நினையுங்கள்’’ என்று கூறிக் கதையை நிறுத்தி விட்டாள். அவள் யாரின் பேச்சையும் கேட்பதில்லை. அத்துடன் யாரையும் மதிப்பதில்லை. தான் கற்ற நாவலர் பாடசாலை அதிபர் ஒருவருக்குத் தான் மதிப்புக் கொடுப்பாள். அதிபர் அவளோடு கதைக்க மாட்டார். அவள் செய்வது சரியானது. அவளது நோக்கமும் கொள்கையும் சிறப்பானது. அவள் என்ன செய்யப் போகிறேன் என்று சொல்லி விட்டாள்.அவள் சொன்னதைச் செய்வாள். கெட்டிக்காரி என்று சின்னத்துரை ஐயாவுக்கு நாவலர் அதிபர் சொன்னவராம்.’’

‘‘நாவலர் வித்தியாலய அதிபரும் தான் நினைத்தவற்றைத் தான் செய்வார்.அநீதியான அதிகாரிகளுக்கு அடி பணிய மாட்டார்.தேடுவாரற்றுக் கிடந்த நாவலர் பாடசாலையை வானுயர உயர்த்தியவர்.அவரின் மாணவியான கார்த்திகா சிறு

வயதிலிருந்தே அவரைப் பின்பற்றி வாழ்ந்தவள்'' என்றான் வளவன்.

''உண்மை தான். கெட்டிக்காரி என்று சொல்ல முடியாது. நிபுணி. எல்லா வேலைகளும் அவளுக்குத் தெரியும். போராளிகளுக்குப் புனர் வாழ்வளிக்கும் போது சிலருக்குத் தையற் பயிற்சியும், சிலருக்குக் கணணிப் பயிற்சியும், சிலருக்கு இயந்திரங்களைத் திருத்தும் பயிற்சியும் ,சிலருக்கு தாவரங்களை ஒட்டும் பயிற்சியும், சிலருக்கு கோழி வளர்ப்பும் வழங்கப்பட்டது.பயிற்சியை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும். ஊரில் உள்ள பலர் இப்படியான வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் புதிதாகத் தொழில் தொடங்கினால் வாடிக்கையாளர்கள் வரமாட்டார்கள். அதனால் எல்லோரும் வருமானமின்றிக் கஷ்ரப்பட்டோம். கார்த்திகா துணிவுடன் முதலில் தையல் கடையை ஆரம்பித்தாள்.பின்பு கணணி திருத்தும் நிலையத்தை அமைத்தாள்.பின்பு படிப்படியாகப் பல தொழில்களைத் தொடங்கினவள். இப்போ அவள் பத்து விதமான தொழில்களைச் செய்கிறாள். ஆரம்பத்தில் வரும் வருமானத்தைப் பிரித்துக் கொடுத்தாள். இப்போ வருமானம் பெருகி விட்டது. அதனால் பெருந் தொகையாகச் சம்பளம் கொடுக்கிறாள். அவள் முன்னேறியதற்குக் காரணம் அவளது விடாமுயற்சியும்,

விட்டுக் கொடுக்காத தன்மையும் தான். வேலை செய்யும் எவருக்கும் படிப்பறிவில்லை.எல்லோரும் ஓ.எல் க்கு முன்பே படிப்பைக் குழப்பிவிட்டு இயக்கத்திற்குச் சென்றவர்கள் தானே. இப்போ மாலை வேளைகளிலும், இரவிலும் ஆசிரியர்கள் வந்து கற்பிக்கிறார்கள்'' என்றான் பூபாலன்.

''கார்த்திகாவைப் பற்றிப் பூபாலன் சொன்ன எதையும் வளவனால் நம்ப முடியவில்லை. நான்கு வருடங்களுக்கு முன் கார்த்திகாவின் தம்பியான கஜேந்திரன் வந்து சொன்னான், ''அத்தான், அக்காவின் அட்டகாசம் எல்லை மீறிச் செல்கிறது.அவள் முன்பு இயக்கத்தில் பொறுப்பான பதவி வகித்தவள். இப்போதும் தான் அந்தப் பதவியில் இருப்பதாக நினைத்து அப்பாவையும், அம்மாவையும், மாமா,மாமியையும் வெருட்டுகிறாள். நான் சொன்னாலும் கேட்கிறாளில்லை. இப்போ நான் போன் பண்ணினால் எடுக்காள். சரியான திமிர், தோட்டக் காணியை விற்க விலை பேசுகிறாள். யார் சொன்னாலும் கேட்கிறாளில்லை. நீங்கள் சொல்லிப் பாருங்கோ கேட்பள்'' என்று சொல்லி அவளின் போன் நம்பரைக் கொடுத்து விட்டுச் சென்றான். ஆனால் வளவனுக்கு அவளோடு கதைக்கப் பிடிக்கவில்லை. காணிப் பிரச்சனை பற்றி கதைக்க முற்பட்டால் பழைய

பிரச்சனைகள் வரும். அது குடும்பத்தவனான எனக்கும் பல தொல்லைகளைத் தரும் என்று நினைத்து கதைக்காமல் விட்டு விட்டான்.

# 7

‘‘நான் முக்கியமான விடயங்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருக்கிறன். நீ எதையோ யோசித்துக் கொண்டிருக்கிறாய்’’ என்று வளவனது தோளைப் பிடித்து உலுப்பினான் பூபாலன்.

‘‘என்னடா நான் கேட்டுக் கொண்டு தான் இருந்தனான். இடையில் கனடாவில் நடந்த ஒரு சம்பவம் குறுக்கிட்டு விட்டது. நீ மேலே சொல்’’ என்றான் வளவன்.

‘‘கார்த்திகாவைப் பற்றிச் சொல்லி முடிக்க முடியாது. அவள் படிக்கும் போது சரியான கெட்டிக்காரி தானே. ஏ.எல் எடுக்காமல் இயக்கத்திற்குப் போனதால் புனர்வாழ்வு பெற்று வந்த பின் மிகவும் கஸ்ரப்பட்டாள்.

இவளுடன் கற்ற கலைவாணி இப்போ ஊர் வைத்தியசாலையில் வைத்தியராக இருக்கிறாள். சாரதா

ஆசிரியராகப் பணிபுரிகிறாள். ஒரு நாள் இருவரும் கார்த்திகாவின் வீட்டுக்கு வந்தனர். கலைவாணிக்குப் படிக்கும் போதே கார்த்திகாவைப் பிடிக்காது. ஓயாமல் பிரச்சனைப்பட்டுக் கொண்டேயிருப்பார்கள். ஒருநாள் கலைவாணியின் தகப்பன் வந்து ஆசிரியருக்கு இருவரின் சண்டை பற்றிச் சொல்ல, அதிபர் இருவரையும் அழைத்துக் கண்டித்தவர்''

''உதெல்லாம் எனக்குத் தெரியும். தெரியாதவற்றைச் சொல்லு'' என்றான் வளவன்.

''தெரிந்ததைச் சொல்லித் தான் தெரியாததைச் சொல்ல வேண்டும்.வீட்டுக்கு வந்த சாரதா பெரிதாக ஒன்றும் கதைக்கவில்லை. கலைவாணி கனக்கக் கதைத்தாள். இயக்கத்தைக் கண்டித்தாள்.கார்த்திகாவின் வாழ்வு அழிந்து விட்டதாகக் குறிப்பிட்டாள். முக்கியமாக உன்னைப் பற்றித் தான் கதைத்தாள். அவள் படிக்கும் போது உன்னை விரும்பியவள், ''நீ அநியாயமாக வளவனின் வாழ்வைக் கெடுத்து விட்டாய். உன்னைக் காதலித்ததால் தான் அவர் என்னை வெறுத்தவர். நானும் அவரின் மாமனின் மகள் தானே. அவர் என்னை ஒரு துரும்பாகக் கூட மதிக்கவில்லை. இப்போ நான் நல்லாய் இருக்கிறன். எனது கணவரும்

வைத்தியர். ஆனால் நீ இயக்கத்திற்குப் போய் கெட்டழிந்தது மட்டுமல்லாது வளவனையும் குடிகாரனாக மாற்றி விட்டாய்.இது எனக்குச் சந்தோசம்'' என்றாள்.

வளவன் எதுவும் பேசவில்லை. கலைவாணி அவனது தகப்பனின் சகோதரியின் மகள். தகப்பன் குடிகாரன். தாய் வாய்க்காரி. ஊரில் உள்ள அனைவருடனும் பிரச்சனைப்படுபவள். ஆனால் கார்த்திகாவும் பெற்றோரும் சாந்தமானவர்கள். ஊரவர்க்கு உதவி செய்பவர்கள். அதைவிட கலைவாணியை விடக் கார்த்திகா அழகி. கலைவாணி குட்டையானவள். கரிய நிறமுடையவள். குட்டையான தலைமுடியை உடையவள். ஆனால் கார்த்திகாவின் தலைமுடி இடையைக் கடந்து நின்று அவள் நடக்கும் போது நாட்டியமாடும். வளவன் அவளது நீண்ட தலைமுடியைப் பற்றியும் அதன் அலங்காரங்களைப் பற்றியும் பல கவிதைகள் எழுதியுள்ளான்.

''கலைவாணி வந்து பிரசங்கம் செய்யும் போது கார்த்திகா எதுவும் பேசவில்லை. பேசினால் பல பிரச்சனைகள் உருவாகும் என்று அவளுக்குத் தெரியும். பின் தாயும் மகளும் ஊர் முழுக்க அவளைப் பற்றிப் பிரச்சாரம் செய்வார்கள் என்பதும் தெரியும்.

“கலைவாணி அன்று பேசிய பின் கார்த்திகா பல நாட்கள் விரக்தியுடன் இருந்தாள். நான் சமாதானம் கூறினால் எரிந்து விழுவாள்.நான் உனது நல்ல நண்பனாக இருந்ததாலும், உனது தந்தை நோய்வாய்ப்பட்டதாலும் என்னை உங்களின் வீட்டில் தங்கியிருந்து பெற்றோரைக் கவனிக்குமாறு கூறினாய். அதனால் நான் உங்கள் வீட்டில் இருப்பேன். கார்த்திகா உனது தாயாருடன் மனம் விட்டுப் பேசுவாள். தனக்கு நேர்ந்த துன்பங்களைப் பற்றிக் கூறுவாள். அதிகமான நேரம் உங்களது வீட்டிலேயே இருப்பாள். இவை எல்லாவற்றையும் உனக்குச் சொல்லக் கூடாதென்று கட்டளையிட்டிருந்தாள். அவற்றைச் சொன்னால் உனக்கு பாதிப்பு ஏற்படுமென்றும், அதனால் உனது குடும்ப வாழ்வு கெட்டு விடுமென்றும் கூறுவாள். அதனால் தான் நான் எவற்றையும் உனக்குக் கூறவில்லை” அதைக் கூறும் போது பூபாலனின் குரல் கரகரத்தது. மேலே பேசமுடியாது தவித்தான்.

கார்த்திகா என் மீது உயிரையே வைத்திருந்தாள். அவள் காதலிக்கும் போது கூட அவனை விளையாட்டாகக் கூடத் துன்பப்படுத்தியதில்லை.மனம் நோகும்படியான வார்த்தைகளைக் கூறியதில்லை. “அத்தான்” என்று அழைத்தாளேயானால் தேனும், பாலும் கலந்து உண்ணும் சுவையுண்டாகும்.

சிறிது தடுமாறிய பூபாலன் தொண்டையைச் செருமிச் சரிப்படுத்தி விட்டுச் சொன்னான், “கார்த்திகா யார் சொல்வதையும் கேட்க மாட்டாள். உனது தாயார் அவள் மீது பேரன்பு கொண்டவர். அவா “பிள்ளை உனக்குத் தேவையானளவு பணம் நான் தருகிறேன். தோட்டக் காணியை விற்காதே. அது எனது தந்தையார் உனது தந்தையாருக்கு முதுசமாய்க் கொடுத்தது. அவரின் நினைவாக அது இருக்கட்டும்” என்றா.

அதைக் கூடக் கார்த்திகா ஏற்கவில்லை. அது அம்மாவுக்குப் பெரும் துன்பம். இப்போதும் அடிக்கடிச் சொல்லிக் கவலைப்படுவா.

கார்த்திகா தோட்டக் காணியை விற்கப் போகிறாள்.அவளுக்குத் தேவையான அளவு பணத்தைக் கொடு என்று அம்மா ரெலிபோனில் சொன்னவா. நான் சம்மதித்தேன். அந்த விசயம் கார்த்திகாவுக்குத் தெரிந்ததால் தான் அதை மறுத்தவள்.கஜேந்திரன் தான் தேவையான பணம் கொடுப்பதாகக் கூறியும் அவள் ஏற்கவில்லை” என்றான் வளவன்.

“நான் தோட்டத்தை விற்காது கஜேந்திரன் அல்லது வளவன் தரும் காசைப் பெற்றால் என்ன என்று

கேட்டேன் அவள் அதற்குக் கோபப்படாது அமைதியாகச் சொன்னாள்''

''பூபாலு, வளவன் என்னைக் காதலித்தவர். இப்போ எனது தங்கை முறையான அகல்யாவைக் திருமணம் செய்திருக்கிறார். இந்த நிலையில் நான் அவரிடம் பணம் பெற்றால் அது குடும்பத்தில் பல பிரச்சினைகளை உருவாக்கும். அவருக்கு என்னால் இன்பமளிக்க முடியாவிட்டாலும் துன்பத்தைக் கொடாமலாவது இருக்க வேண்டுமல்லவா. என்ன தான் தங்கையாக இருந்தாலும் பண விசயத்தில் யாரும் இலேசில் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.பணம் வாங்கினால் அவர் என்னுடன் அடிக்கடி தொடர்பு கொள்ள நினைப்பார். அது அவருக்குக் கூடாது. அவரது குடும்பத்திற்கும் கூடாது. எனக்கும் கூடாது. தம்பி கஜேந்திரனின் மனைவி சுயநலக்காரி. எமக்குச் சிறிதளவு பணம் அனுப்புவதையே விரும்பாதவள். அவளது ஏச்சுக்கும் பேச்சுக்கும் மத்தியில் என் தம்பி வாழக்கூடாது.தோட்டத்தை இப்ப அப்பா செய்வதில்லை. குத்தகைக்குக் கொடுத்தால் பிரச்சனைகள் பல வரும் என்று குத்தகைக்கும் அவர் கொடுக்கவில்லை. இப்போது நாடு சீரடைந்தமையால் பொருட்கள் எல்லாம் இங்கு வந்து குவிகின்றன. அதனால் விவசாயிகளே செய்கையைக் குறைத்து விட்டார்கள். அதனால் அதை

விற்பதைத் தவிர வேறு வழியில்லை” என்று பிடிவாதமாக நின்று விற்றவள். ஆரம்பத்தில் பிரச்சனைக்குரிய காணி என்று ஊரவர்கள் எவரும் வாங்கவில்லை.இடம் பெயர்ந்த போராளிக் குடும்பம் ஒன்று கடனாகக் கேட்டது. அவர்களுக்கு அவள் கொடுக்க மறுத்து விட்டாள். பின்பு பொன்னம்பலத்திடம் வலியச் சென்று வாங்கச் சொல்லிக் கேட்டவள். பொன்னம்பலம் நல்ல மனிதன். கார்த்திகா இயக்கத்தில் இருந்த போது அவளை மதித்து தனது வீட்டில் அடைக்கலம் கொடுத்தவர். அதனால் அவரைக் கைது செய்து ஆறு மாதங்கள் ஜெயிலில் வைத்திருந்தனர். “கார்த்திகா, உன் மீது எனக்குப் பாசமுண்டு. உனது நடத்தைகள் என்னை வசீகரித்ததால் தான் நான் உனக்கு முன்பும் உதவிகள் செய்தேன். உனது தந்தை எனது நண்பர். அதனால் அவர் விரும்பாத ஒரு செயலை நான் செய்ய விரும்பவில்லை. உனது தந்தையின் முதுசம் அது. அதை உயிர் உள்ளவரை விற்க விடமாட்டார். அதனால் அதை ஈடு வைத்துப் பணம் தருகிறேன். பிறகு மீட்டெடு .அத்துடன் எனக்குக் காணி தேவையில்லை. எனது ஐந்து பிள்ளைகளும் வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். என்னையும் அங்கு

வரச் சொல்லிக் கரைச்சல் கொ்டுக்கிறார்கள்'' என்று சொல்லி ஐம்பது இலட்ச ரூபா கடனாகக் கொடுத்தவர்.

வளவன் எதுவும் பேசவில்லை.அதனால் பூபாலன் சொன்னான். , ‘‘முதலில் தையல் கடை தான் ஆரம்பித்தாள்.பத்துத் தையல் இயந்திரங்களுடன் ஆரம்பித்த கடை இப்போது ஐம்பது இயந்திரங்ளுடன் நடைபெறுகிறது.பின் கம்பியூட்டர் திருத்தும் கடையொன்றை ரேணுகா என்ற போராளியை வைத்து திறந்தாள். ரேணுகா புனர்வாழ்வின் போது கம்பியூட்டர் பயிற்சி பெற்றவர். அவளுக்குக் கீழ் பத்துப் போராளிகள் வேலை செய்கின்றனர். அதன் பின் சேரலாதன் என்ற போராளியின் தலைமையில் மோட்டார் சைக்கிள் பழுது பார்க்கும் கடையொன்றைத் திறந்தாள். அதிலும் பத்துப் போராளிகள் வேலை செய்கின்றனர்'' மூச்சு விட்டான் பூபாலன்.

அவற்றைக் கேட்க வளவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

**‘‘தமிழாகிக் குறளாகி நெஞ்சில்**

**கருவாகிப் பிறந்த கவிதைச் சரமே**

**விருந்தாகி மருந்தாகி களிப்பூட்ட**

**வந்தடைந்த தேவதையே**

**உன்னையெண்ணி மனம் கொள்ளும்**

**உவகைக்கு அளவுண்டோ?**

**கரும்பாகி முக்கனியாகி**

**சுவைக்கின்ற அமிழ்தே**

**அதையெண்ணி மகிழ்கிறேன்''**

அன்று எனக்காகப் பிறந்தவளென்று எண்ணி மகிழ்ந்த நான் எழுதிய கவிதை. ஆனால் இன்று உலகிற்காக நீ வாழும் வாழ்க்கையை அன்றுடன் ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்கிறேன். இதைத் தவிர என்னால் எதையும் செய்ய முடியவில்லை'' என்று வருந்தினான் வளவன்.

''அதன் பின் அங்கு வேலை செய்யும் வேலைக்காரர்கள் சாப்பிடுவதற்காக ஒரு சாப்பாட்டுக்கடையை வரதநாயகி என்ற போராளியின் தலைமையில் உருவாக்கினாள். காலப் போக்கில் அது பெரிய கடையானது. இப்போ ஊரில் நடைபெறும் நல்லது கெட்டதுக்கெல்லாம் சமையல் அங்குதான்.

அதில் ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் வேலை செய்கிறார்கள். எல்லாம் போராளிகள் தான். அதிகமானவர்கள் பெண்கள்.பெண்கள் எவரும் திருமணம் செய்யவில்லை'' என்று கூறிவிட்டுச் சிரித்த பூபாலன். சிறிது நேரத்தின் பின் சொன்னான், ''அவர்களை யாரும் திருமணம் செய்ய முன் வரவில்லை. ஒவ்வொருவருக்கும் கொழுத்த சீதனம் வேண்டும்.பெண் அரச உத்தியோகத்தில் இருத்தல் வேண்டும். காணி,பூமி,வீடு, டொனேசன் வேண்டும்.இதுக்கெல்லாம் கார்த்திகா எங்கே போவாள்?'' அதைச் சொல்லும் போது பூபாலனின் குரல் தழுதழுத்தது.

''எதுவும் வேண்டாம் என்று கூறித் தான் நான் ஆரணியைத் திருமணம் செய்தேன். என்னைச் செய்ய முதலில் ஆரணி மறுத்தாள். அதைக் கார்த்திகாவும் விரும்பவில்லை. நானும் ஒரு புனர்வாழ்வு பெற்ற போராளி என்பதால் இறுதியில் எனது விருப்பத்தை ஆரணி விரும்பினாள்.ஆனால் கார்த்திகா விரும்பவில்லை. ''காதல் என்பது அற்புதமான ஒரு உணர்வு. தெய்வீக நினைவு, அன்பு ,பண்பு, பாசம் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட ஓர் உயர்ந்த உறவு. நீ உனக்கு யாரும் பெண் தர மறுத்ததால் அவளை விரும்புகிறாய். அவள் உத்தமி. உறவை, அன்பை,

பாசத்தை மதிக்கத் தெரிந்தவள். அன்புக்குக் கட்டுப்பட்டவள். இயக்கத்தில் மேன்மையானவள் எனப் பெயரெடுத்தவள். அதன்படி வாழ்கிறாள். நீ அப்படியானவன் அல்ல. இயக்கத்தில் இருந்த போது கட்டுப்பாடுகளினால் ஒழுக்கமாக வாழ்ந்தாய். இப்போது கெட்டு விட்டாய்.'' என்று ஏசினவள் பின் அந்த எண்ணத்தை மறந்து விடு. யாழ்ப்பாணத்தவரின் புத்தி நிலை தடுமாறும் தன்மையானது. சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் தன்மை கொண்டது. நிலையில்லாதது. அதனால் உன்னை நான் நம்பமாட்டேன்.'' என்றாள். எனக்கு அது கவலையளித்தது.நாட் செல்ல செல்ல எனக்கு ஆரணி மீதிருந்த காதல் அதிகரித்தது. எனது நினைவை நான் சொன்னதால் ஆரம்பத்தில் விரும்பாத ஆரணி பின் என்னைக் கண்டதும் வெட்கப்படுவாள்.விலகிச் செல்வாள், பின் லேசான சிரிப்பு, அதன் பின் கதை காதலாக மாறியது. இருந்தும் அதைக் கார்த்திகா விரும்பவில்லை. அதனால் அவள் தனது விருப்பமின்மை பற்றி ஆரணிக்குச் சொன்னாள். அவளையே நம்பியிருக்கும் அனைவரும் அவளைக் கடவுளாக எண்ணினர். அதனால் ஆரணி என்னுடன் கதைப்பதை நிறுத்தினாள்.

# 8

“காதல் என்பது காட்டாற்று வெள்ளம் போன்றது. அதற்கு அணை கட்ட முடியாது. தானாகத் தணிந்தால் தான் உண்டு. சில மாதங்கள் கழிந்தன. ஆரணி முறுவலித்தாள். எனக்கு அது ஆச்சரியத்தைக் கொடுத்தது. விசாரித்தேன்.

“கார்த்திகா அக்கா நான் உங்களோடு கதைக்கச் சொன்னவா. அவா உங்களோடும் கதைப்பா” என்றாள்.

அன்று வேலை முடிந்த போது கார்த்திகா அழைத்தாள். நான் சென்று அவளின் முன்னால் கை கட்டி நின்றேன், “முதலில் நடிப்பதை நிறுத்தி விட்டு மனிதன் மாதிரி நில்” கடுமையாக அவளது குரல் ஒலித்தது. நான் கவலை மேலீட்டால் எனது நண்பனோடு சேர்ந்து குடித்து விட்டேன் ,கவலையை மறக்க வேண்டுமானால் சாராயம் குடிக்க வேண்டும் குடி” என்றான். நான் குடித்து விட்டேன். நன்றாகத் தான் இருந்தது. அது யாருக்கும் தெரியாது. சில சமயம் எனது நண்பன் திட்டமிட்டுக் குடிக்கப் பண்ணிவிட்டு கார்த்திகாவிடம் சொல்லி விடுவானோ என்று நினைக்க எனது உடல் நடுங்கியது. அவள் கோபமதிகரித்ததால் அடித்தும் விடுவாள். நினைக்கவே

பயமாக இருந்தது. ஒரு நாள் மோட்டார் சைக்கிள் திருத்தும் சேரலாதன் குடித்துவிட்டு வீட்டாருடன் சண்டை பிடித்தான். அதைக் குடும்பத்தினர் வந்து சொல்லி விட்டனர்.'' பெரு மூச்சு விட்டான் பூபாலன்.

சிறிது நேரம் மௌனமாக இருந்த பூபாலன் சொன்னான், ''மறு நாள் சேரலாதன் தொழிற்சாலைக்கு வந்ததும் அங்கு வேலை செய்யும் கஜமுகன், ''அண்ணா உங்களை இன்று வேலை செய்ய விட வேண்டாம்'' என்று அக்கா சொன்னவா'' என்று சொன்னான்.

அதைக் கேட்டுத் திகைத்துப் போனான் சேரலாதன் .மெதுவாக நடந்து சென்று கார்த்திகாவின் அறை வாசலில் நின்றான். ''உள்ளே வா'' என்று பயங்கரமாகக் கத்தினாள். கார்த்திகா அவன் உள்ளே சென்றதும் அவனது கன்னத்தில் நாலைந்து முறை ஓங்கி அடித்தாள். அதை அவன் எதிர்பாராததால் திகைத்து விட்டான். ''இங்கே குடிகாரர்களுக்கு வேலை கிடையாது. நாளைக்கும் குடித்து விட்டு வந்து இங்கும் கலாட்டா பண்ணுவாய். ஆரணி இவனின் கணக்கைப் பார்த்துப் பணத்தைக் கொடுத்தனுப்பு'' என்றாள். ஆரணி தான் கணக்குகளைப் பேணுபவள். கார்த்திகா சொன்னதும் ஆரணி சென்று விட்டாள்.''

“உங்களுக்காகத் தான் நான் பல்வேறு போராட்டங்களை நடத்தி பலரின் வெறுப்புக்குள்ளாகி உங்களது வாழ்க்கையை மேம்படுத்த நினைக்கிறேன். ஊரில் உங்களை மதிப்பவர்கள் யாராவது இருக்கிறார்களா? உங்களுக்குத் தொழில் தரக்கூடியவர்களாவது இருக்கிறார்களா?அப்படியிருக்க நேர்மையாக உழைத்து முன்னேற விரும்பாமல் குடித்து விட்டுக் குடும்பத்தில் கலகம் செய்தால் உன்னை எப்படி மன்னிப்பது” ஆவேசமாகக் கத்தினாள் கார்த்திகா.

சேரலாதன் தனது மாமனின் மகளை இயக்கத்திற்கு வருமுன் விரும்பியவன். அவன் ஓ.எல் படிக்கும் போது இயக்கத்திற்கு வந்தமையால் படிக்கவில்லை. இப்போது அவளுக்கு நல்ல இடத்தில் திருமணம் பேசுகிறார்கள். அதை அறிந்து தான் அவன் குடித்து விட்டுச் சென்று சண்டை பிடித்தவன்”

“அந்தப் பெண் இப்போ இவனை விரும்புகிறாளா?” வளவன் கேட்டான்.

“இல்லை, அவள் இப்போது பட்டதாரி ஆசிரியையாகக் கடமையாற்றுகிறாள். அவளது மூன்று சகோதரர்கள் வெளிநாட்டில் நன்றாக இருக்கிறார்கள். அவர்கள் பெருந் தொகையாகப் பணம் அனுப்பி ஓர்

எஞ்சினியரைப் பேசித் திருமண நாளும் குறித்து விட்டார்கள்.இந்த நிலையில் அவன் அவர்களுடன் சண்டைக்குச் செல்ல அவர்கள் பொலிசுக்கு அறிவித்து விட்டார்கள். பின் சேரலாதனின் தாயும் தகப்பனும் மன்னிப்புக் கேட்டுத் தான் விட்டவர்கள். இல்லாவிட்டால் பொலிசு கொண்டு போயிருக்கும். பொலிசு கொண்டு போனால் பழையதையும் விசாரிப்பாங்கள். தற்போது இருக்கும் நீதவான் பெண்களுக்குப் பிரச்சனை கொடுப்பவர்களைக் கடுமையாக தண்டிப்பார். நல்ல காலம் அவர்கள் விட்டது'' என்றான் பூபாலன்.

கார்த்திகா இவ்வளவு மூர்க்கம் கொண்டவளாக இருப்பாள் என்று வளவன் நினைக்கவில்லை.

**“அன்பே**

**நித்தம் புதுமலராய்**

**நீ மலர்கின்றாய்**

**புத்தம் புது வடிவில்**

**என் மனதில்**

**நித்தம் உலாவுகிறாய்**

**சித்தம் கலக்கியென்னைப்**

**பித்தனாக்கி விட்டாய்**

**அன்பும் அமைதியும்**

**கொண்ட பேரழகே**

**அடுத்தவனை மதிக்கும்**

**அன்பின் திருவுருவே"**

"எவ்வளவு நல்லவள். இரக்கமுள்ளவள், அன்பானவள் என்று எண்ணியிருந்தேன். அவள் ஏன் கொடுமையானவளானாள்" வளவன் சிந்தித்தான்.

"நீ காதலிக்கும் போது கண்ட கார்த்திகா தேவதை. இப்போது வாழும் கார்த்திகா அரக்கி. புனர் வாழ்வின் பின் இந்த ஊர் மக்கள் ஒரு நல்ல சேவகியை அரக்கத் தனம் மிக்க பேயாக்கிவிட்டனர். இருப்பினும் அவளது உள்ளத்தில் இரக்கமும் காதலும் இருக்கிறது"

"அதை நீ எப்படிக் கண்டு பிடித்தாய்" என்று கேட்டான் வளவன்.

“சேரலாதனுடன் தான் அப் பெண் படித்தவள். படிக்கும் போது மாணவர்கள் இருவரையும் கேலி செய்து சேர்த்து வைத்தனர்.இடையில் அவன் இயக்கத்திற்குச் சென்று விட்டான். இயக்கத்தில் எட்டு வருடம் இருந்தான்.அந்த வேளையில் இருவருக்குமிடையில் தொடர்பில்லாததால் அவள் அவனை மறந்து விட்டாள். ஆனால் சேரலாதன் மறக்கவில்லை, “அக்கா, என்னால் அவளை மறக்க முடியவில்லை, இப்போ நானிருக்கும் எனது பெற்றோரும் உடன் பிறப்புக்களும் இனத்தவர்களும் கூட என்னை வெறுக்கின்றனர். நான் தங்களுடன் தொடர்பு வைத்தால் அதனால் பல பிரச்சனைகள் வருமென்று அஞ்சுகின்றனர். அதனால் நான் யாரினதும் வீடுகளுக்குச் செல்வதில்லை. எனது நிலையை உணர்ந்து நானே ஒதுங்கிக் கொண்டேன். ஆனால் அவளை என்னால் மறக்க முடியவில்லை.’’ சேரலாதன் விம்மி விம்மி அழுதான்.

எரிமலையாகக் கொதித்தவள் பட்டென்று குளிர் நீரோடையாக மாறினாள்.

“சேரலாதா ,சிறு வயதுக் காதல் நிறைவேறுவது குறைவு. காதலென்பது இருவரிடமும் சமமாக இருத்தல் வேண்டும். கூடிக் குறைந்தால் இப்படியான

பிரச்சனைகள் உருவாகும். ஆயுதங்களால் தொழில் செய்வோர் ஆயுதங்களைத் தினமும் தீட்டிப் பராமரிக்க வேண்டும். காதலும் அப்படித் தான் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் புதுப்பித்துக் கொண்டிருத்தல் வேண்டும்.நீ எட்டு வருடங்களாக அவளைச் சந்திக்கவில்லை. அவள் படித்துப் பட்டதாரியாகி விட்டாள். அத்துடன் தனக்குப் பொருத்தமானவனையும் தேர்ந்தெடுத்து விட்டாள். நீயே சிறிது நேரத்திற்கு முன்பு பெற்றோரும் உடன் பிறப்புக்களும் இனத்தவர்களும் உன்னை விரும்புவதில்லை என்று சொன்னால் அப்படியான நிலையில் அவள் எப்படி உன்னை விரும்புவாள். இயக்கத்தில் நாம் இருக்கும் போது எம்மைக் கடவுளாக நினைத்தனர். எமது விருப்பங்களைப் பூர்த்தி செய்தனர். அப்போ அவர்களுக்கு எம்மைத் தேவைப்பட்டது. இப்போ காணக் கூட விரும்புவதில்லை. காதல் என்பது உயிரைக் கொல்லும் விஷம். அது பழகும் போது அமிர்தமாக இருக்கும் வெறுக்கும் போது விஷமாக மாறும். அந்த வேதனையைப் பற்றி எனக்குத் தெரியும். என்னை மனிதர்கள் இரும்பாக மாற்றிவிட்டார்கள். அதனால் யாரையும் நம்புவதில்லை. உன்னை வேலையால் நிறுத்த வேண்டுமென்று தான் நினைத்தேன். இப்போது தான் உனது நிலை புரிந்தது. இனிமேல் அப்படி நடவாதே. விருப்பமில்லாதவன்

எதையும் செய்ய மாட்டான். அதனால் வேலையைக் கவனத்துடன் செய், முன்னேறு'' என்றாள் கார்த்திகா. இதிலிருந்து தான் அவளிடமும் இரக்கமும் காதலும் இருக்கென்று கண்டு பிடித்தேன்'' என்றான் பூபாலன்.

''காலையில் கார்த்திகா உன்னோடு பிரச்சனைப்பட்டாள்.இனி என்ன செய்யப் போறாய்?'' என்று கேட்டான் வளவன்.

''பலமுறை எச்சரித்தவள். இரண்டு முறை அடித்தவள். இந்த முறை ஏசி விட்டுப் போகிறாள்'' என்று கவலைப்பட்டான் பூபாலன்.

''கார்த்திகா எல்லோருக்கும் அடிப்பாளா?''

''எனக்கு மட்டும் தான் அடித்தவள்.இரண்டு மூன்று தினங்களுக்கு முன் சேரலாதனுக்கும் அடித்தவள். காலையில் எனக்கு அடித்திருந்தால் நான் சந்தோசப்பட்டிருப்பேன். அவள் அடிக்காததும் நல்லது தான். இரண்டு மூன்று நாட்களுக்கு உன்னோடு மனம் விட்டுப் பழகலாம்'' என்றான் பூபாலன்.

அவள் அடிப்பதைச் சாதாரணமாகச் சொல்கிறாயே. உனக்குக் கோபம் வருவதில்லையா'' என்று கேட்டான் வளவன்.

“கோபப்பட்டு என்ன செய்வது? நூறு குடும்பத்திற்கு அவளை விட்டால் வேறு கதியில்லை. எம்மை யார் மனிதர்களாக மதிக்கிறார்கள். முன்பும் இயக்கத்தை விரும்பாத பலர் நடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தான் இயக்கத்தோடு ஒட்டி உறவாடியவர்கள். இயக்கம் மறைந்ததும் தமது சுயரூபத்தைக் காட்டுகிறார்கள். கார்த்திகா மாதாந்தம் ஆரணிக்கு இருபதாயிரம் ரூபா கொடுக்கிறாள். எனக்கு இருபத்தைந்தாயிரம் ரூபா தருகிறாள். இதை எம்மால் வேறு இடத்தில் ஒரு வருடம் வேலை செய்தாலும் பெற முடியாது. பின் அவளைக் கோபித்து எப்படி வாழ்வது?”

“இது அடிமைத் தனமில்லையா?”

“அடிமைத்தனம் தான். எம்மால் வேறு என்ன செய்ய முடியும்.? போராளிகளின் குடும்பங்களுக்கு அவள் எவ்வளவோ உதவிகள் செய்கிறாள். அருணாசலம் என்ற போராளிக்கு இரு கண்களும் தெரியாது. அவனது மனைவிக்கு வலது காலில்லை. அவள் சமையல் பகுதியில் வேலை செய்கிறாள். அவளது மகள் வைஷ்ணவி மருத்துவக் கல்லூரியில் கற்கிறாள். அவளைக் கற்பிப்பது கார்த்திகா தான். இப்படிப் பல்வேறு உதவிகள் செய்வதால் அவளைக்

கடவுளாக அவர்கள் போற்றுகின்றனர். என்னை மாதிரி குழப்பக்காரர்களுக்குத் தான் அவள் அடிப்பாள்.அதை எவரும் கருத்தில் கொள்வதில்லை’’ என்றான் பூபாலன்.

‘‘நீ ஆரணியை விரும்பித் தானே திருமணம் செய்தாய்.பின்பு ஏன் அவளைக் கொடுமைப்படுத்துகிறாய்?’’ வளவன் கேட்டான்.

வெகுநேரம் பூபாலன் எதுவும் பேசவில்லை. சோகமாக இருந்தான். பின் சொன்னான், ‘‘இயக்கத்தில் இருக்கும் போது ஆரணி நல்ல அழகி. துடிப்பானவள். நேர்மையானவள். அதனால் எனக்கு விருப்பம் இருந்தது. புனர் வாழ்வு பெற்று வந்த பின்னர் பெற்றோர் எனக்குப் பெண் தேட ஆரம்பித்தனர். இரண்டு வருடமாகியும் யாரும் என்னை விரும்பவில்லை. பலர் அப்பாவுக்கு நேரடியாக பிரச்சனையைக் கூறினர். சிலர் சண்டைக்குச் சென்றனர். அதிலிருந்து எனக்குப் பெண்தரமாட்டார்கள் என்று புரிந்தது. யாரும் எம்மோடு கதைப்பதில்லை. மனம் சோர்ந்து கவலைப்பட்டேன். சுக துக்கங்களைப் பகிரக் கூட யாரும் இல்லை.மனதுக்குள்ளேயே அவை அமிழ்ந்து பெரும் துன்பத்தைக் கொடுத்தன. அந்த நேரம் தான் ஆரணி கார்த்திகாவின் தொழிற்சாலையில்

சேர்ந்தாள். நான் அப்போது வேலை செய்து கொண்டிருந்தேன்.'' மூச்சுவிட்டான் பூபாலன்.

''அவளது கதைகள் துன்பப்பட்ட என் மனதிற்கு இதமளித்தன. அதனால் நாமிருவரும் திருமணம் செய்ய விரும்பினோம். ஆரணி அதைக் கார்த்திகாவுக்குச் சொன்னாள். அதைக் கார்த்திகா விரும்பவில்லை. இருவரும் வெவ்வேறு சாதி, பிற்காலத்தில் பெரும் பிரச்சனை வருமென்று மறுத்து விட்டாள். பின்பு இருவரின் மனநிலையையும் அறிந்து சில நிபந்தனைகளுடன் சம்மதித்தாள். அதில் முக்கியமானது. ஆரணியை ஒருபோதும் விட்டுப் பிரியக் கூடாதென்பது. ஆரம்பத்தில் இனித்த குடும்ப வாழ்க்கை எனக்குக் காலப் போக்கில் வேம்பாகக் கசக்கத் தொடங்கியது. இருவருக்குமிடையே அடிக்கடி சண்டைகள் வந்தன. சில சமயம் தற்கொலை செய்யலாமா என்று கூட எண்ணத் தோன்றும்'' அழுதான் பூபாலன். வளவன் எதுவும் பேசவில்லை. அவனுக்கு யாவும் தெரியும்.

# 9

மாலை ஆறுமணிக்கு ஆரணியும் அவளது சகோதரி வித்தியாவும் அவளது மகள் அர்ச்சனாவும் கார்த்திகாவின் வீட்டுக்கு வந்தனர். பொதுவாக எந்நேரமும் அலுவலகத்தில் இருக்கும் கார்த்திகா அன்று மத்தியானம் சாப்பிட வந்தவள் திரும்பிச் செல்லவில்லை. அதற்குக் காரணம் மன உழைச்சல் தான். வளவன் ஊருக்கு வருமுன் அவனது நினைவு அவளுக்கு வருவதில்லை. காலையில் இருந்து இரவு பத்து மணிவரை அலுவலகத்திலேயே இருப்பாள்.சில வேளைகளில் இரவு சாப்பாட்டை வரதநாயகியிடம் வாங்கிச் சாப்பிட்டு விட்டு வேலைகளைக் கவனிப்பாள். தாயார் காத்திருந்து விட்டுப் போன் பண்ணுவாள். அதைச் சிரமப்பட்டு சமாளித்து விட்டுத் தொடர்ந்து வேலை செய்வாள்.

ஆரணிக்குக் கார்த்திகாவைச் சிறுவயதிலிருந்தே தெரியும். பின் இயக்கத்திற்குச் சென்ற பின் இருவரும் சேர்ந்து பணியாற்றியுள்ளனர்.

கார்த்திகா தான் பின்நேரம் அலுவலகத்திற்கு வரமாட்டேன் என்று அறிவித்தாள். அவள் இல்லாத வேளைகளில் அலுவலகப் பொறுப்பு ஆரணியிடம் தான் இருக்கும்.அன்று வித்தியா தனது மகளான

அர்ச்சனாவைப் பட்டணத்தில் உள்ள பாடசாலை ஒன்றிற்கு அழைத்துச் சென்றாள்.அவள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருந்தாள். தரம் ஆறில் சேர்ப்பதற்காக வித்தியா அனுமதி கோரி இருந்தாள். அதற்காக அவளை அழைத்திருந்தார் அதிபர்.

அங்கு சென்ற வித்தியாவுக்கு ஏமாற்றம் காத்திருந்தது. அர்ச்சனா 152 புள்ளிகள் பெற்றிருந்தாள்.பாடசாலை 160 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்குத் தான் அனுமதி உண்டு என்று அறிவித்தது. அதனால் வித்தியாவும் ஆரணியும் கார்த்திகாவைச் சந்திப்பதற்காக கார்த்திகாவின் வீட்டுக்கு வந்திருந்தனர்.

வளவனைக் கண்ட பின்பு கார்த்திகா முற்றாகக் குழம்பிப் போனாள். ஏதோ ஓர் உந்தலில் உணர்ச்சிப் பெருக்கால் இயக்கத்திற்குச் சென்ற அவள் இயக்கத்தில் இருக்கும் வரை வளவனை நினைக்கவில்லை. போராடி நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற நினைப்பு அவளது உள்ளத்தை நிரப்பியிருந்ததால் வேறெந்த நினைப்பும் அவளது உள்ளத்தில் எழவில்லை.

போராட்டம், நாட்டை மீட்டல், அதன் பின்னரான இன்ப வாழ்வு என்பனவே அவளது உள்ளத்தை ஆக்கிரமித்திருந்தன. அதனால் அவளுக்கு உலக வாழ்க்கையைப் பற்றிய உணர்வே உண்டாகவில்லை.

இயக்கம் தோற்று, போராளிகளோடு போராளியாகப் புனர்வாழ்வு பெறும் போது அவளுக்கு உலகே வெறுத்தது. தற்கொலை செய்வோமா என்ற நினைப்பு மேலோங்கியது.அவ் வேளைகளில் ஆரணி தான் துணையாக இருந்தாள்.

புனர்வாழ்வு பெற்று விடுதலையான பின்பு அவளுடன் மக்கள் நடந்து கொண்ட விதம் அவளை மிகவும் பாதித்தது. அதனால் மக்கள் மீதும் வாழ்க்கை மீதும் வெறுப்பேற்பட்டது.அப்போதும் ஆரணி தான் அவளுக்கு உறுதுணையாக இருந்து அவளைத் தைரியப்படுத்தினாள். எனினும் போராளிகள் மக்களால் புறக்கணிக்கப்பட்டு அவமானமடைந்த போது அதைக் கார்த்திகாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்பதற்காகப் பெற்றோரின் சொல்லை மீறித் தோட்டக் காணியை விற்றுத் தொழிலை ஆரம்பித்தாள். இப்போ தொழில் ஓகோ என்று நடைபெறுகிறது. பல்லாயிரக்கணக்கான ரூபா மாதா மாதம் இலாபமாகக் கிடைக்கிறது.அதனால் அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு

அளவே இல்லை. ஆனால் இன்று வளவன் ஊருக்கு வந்து விட்டான் என்பதை அறிந்ததும் மனம் என்றுமில்லாதவாறு குழம்பிவிட்டது. தான் அவனுக்குச் செய்தது பெரும் துரோகம் என முதன் முறையாக அவள் மனம் சொன்னது.அவளால் அவனது நினைவுகளில் இருந்து விடுபட முடியவில்லை. அதனால் தான் அவள் அலுவலகத்திற்குச் செல்லாமல் வீட்டில் தங்கினாள்.அது ஆரணிக்கும் கார்த்திகாவின் தாயாரான செல்லம்மாவுக்கும் கமலா மாமிக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது.

வளவனின் நினைவுகளில் இருந்து விடுபட முடியாத கார்த்திகா, வளவன் முன்பு எழுதிக் கொடுத்த கவிதைகளைத் தேடி எடுத்தாள்.

**“அருகினில் இருந்தும்**

**அழகாய்ச் சிரித்தும்**

**அற்புதமாய்க் கதைத்தும்- உன்**

**உள்ளத்தைப் புரிந்து கொள்ள**

**என்னால் முடியவில்லை**

**சிரிக்கிறாயென்று**

அருகினிலே வந்தால்

நெருப்பாய் சுடுகிறாய்

நீராயும் குளிர்கிறாய்

பட்டென்று கோபமாய்

பலவார்த்தை உதிர்கிறாய்

பேசாதிருந்தாலும்

கடும் சொல்லால் வதைக்கிறாய்

பலநாள்ப் பழகியும்

பலமுறை சிரித்தும்

தொட்டுப் பேசியும்

புரிந்து கொள்ள முடியவில்லை

முற்றும் துறந்த பலர்

மெல்லிடையாள் கண்பட்டு

தனை இழந்து தவமிழந்த

கதை உனக்குத் தெரியாதோ

அன்பே, என் அமுதே

**விளையாட்டிற்கும்**

**கோபிக்காதே**

**உள்ளத்தில் உள்ளதை**

**உள்ளபடி சொல்**

**சூடான வார்த்தைகளையும்**

**வேண்டாத பேச்சுக்களையும்**

**விட்டு விடு'**

கார்த்திகா விம்மினாள்.

அவள் இயக்கத்திற்குச் செல்ல வேண்டும் என்று தீர்மானித்த பின் அவனுடன் கலகலப்பாகப் பேச மாட்டாள். சிரிக்க மாட்டாள். அருகினில் வரமாட்டாள்.அதைப் பொறுக்க முடியாத வளவன் பேச முற்பட்டான். அவள் விலகிச் சென்றாள். அதனால் தனது எண்ணங்களைக் கவிதையாக்கிக் கொடுத்தான்.

பல வருடங்களின் பின் அதைப் படிக்கும் போது இறுதி நாட்களில் தான் நடந்து கொண்ட விதம்

எவ்வளவு தவறானது என்று புரிந்தது. அவன் அவளை எப்படியெல்லாம் நேசித்தான். எங்கே கண்டாலும், தான் கண்டதை அப்படியே எழுதித் தந்து விடுவான். பிள்ளையார் கோவில் கொடியேறினால் பத்து நாட்கள் திருவிழா நடைபெறும். பத்து நாட்களும் அவன் விரதம் பிடிப்பான். தொண்டுகள் பலவும் செய்வான். வீதியில் பிரதட்டை செய்வான்.செய்த பின் அவளைக் கண்டானானால் உடனே வீட்டுக்குச் சென்று கவிதை எழுதி விடுவான்.

அன்று பிள்ளையார் கோவில் தேர்.அவளும் விரதம் அனுட்டிப்பாள்.

**“பிள்ளையார் தேரில் பவனி வர**

**தேரோடு நீ வந்தாய் தேராக**

**உன்தன் பளபளக்கும் பட்டுடலை**

**பசுமையான பச்சைப்பட்டு சுற்றிற்று**

**எடுப்பான மேலிடத்தை**

**மஞ்சள் பட்டு மறைக்க**

**தளிர்புற்களும் பசுமை**

**சுற்றி நின்ற மரங்களும் பசுமை**

**தேரும் பசுமை**

**நீயும் பசுமை**

**பசுமைகள் யாவும்**

**என்னைப் பசுமையாக்கின.**

**எந்நிறம் போர்த்தாலும்**

**அந்நிறம் சிறப்படையும்**

**அழகான உன் எழில்**

**அந்நிறத்தில் பொலிவடையும்''**

துக்கத்தைத் தாங்க முடியாது விம்மினாள் .விம்மல் சத்தம் கேட்டு கமலா மாமி பரபரப்புடன அவ்விடம் வந்தாள். கமலா மாமியைக கண்ட பின்பும் அழுகையை அடக்க முடியவில்லை.

''கார்த்தி, என்னம்மா? உடல் நெருப்பாகக் கொதிக்கிறது.'' துடிதுடித்தாள் கமலா மாமி.

''தலை வலிக்குது, தாங்கிக் கொள்ள முடியவில்லை'' என்று மறைத்தாள் கார்த்திகா. அவள் பொய் சொல்கிறாள் என்பதை அறியாத கமலா மாமி பரபரப்புடன் குடிநீர் அவிக்கச் சென்றாள்.

அந்த நேரம் ஆரணி வந்தாள், ‘‘என்ன சுகமில்லையா அக்கா, முகமெல்லாம் வீங்கிக் கறுத்திருக்கு. கண்கள் சிவந்து கலங்கியிருக்கின்றன’’ பரபரத்தாள் ஆரணி.

‘‘பெரிதாக எதுவுமில்லை. சரியான தடிமன். தலைவலிக்கிறது.’’

‘‘நீங்கள் வருவீர்களென்று எதிர்பார்த்தேன். நீங்கள் வரவில்லை.அதுதான் வந்தேன்’’ என்றாள் ஆரணி.

‘‘வித்தியா அதிபரைச் சந்தித்தவளா? அட்மிசன் கிடைத்து விட்டதா?’’ ஆவலுடன் கேட்டாள் கார்த்திகா.

ஆரணி உடனே பதில் கூறவில்லை. தடுமாறினாள். அதிலிருந்து ஏதோ பிரச்சனை என்று நினைத்தாள் கார்த்திகா. ‘‘காசு கேட்டவையே..? அரசாங்கம் பாடசாலை அனுமதிக்குப் பணம் வாங்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறது. இருந்தும் அதிபர்மார் காசு வாங்கினை. தமது பிள்ளைகள் பிரச்சனை இல்லாமல் படிக்க வேண்டுமென்று நினைத்துப் பலர் காசு குடுக்கினை. எங்கடை ஆட்களைத் திருத்தவே முடியாது.காசை வாங்கிச் சில ஆசிரியர்களின் பெயரில் வங்கியில் வைப்பிலிட்டுள்ளனர்.பிற்காலத்தில் அது

இருவருக்குமுரியதாகிவிடும். வாங்கிற காசுக்குப் பற்றுச் சீட்டும் கொடுப்பதில்லை. என்ன செய்வது.காசு கேட்டால் குடுப்பம்'' என்றாள் கார்த்திகா.

ஆரணி அதிர்ந்து போனாள். அவள் வாய் திறந்து பேச முன் கார்த்திகா சொன்னாள், ''நான் ஏதாவது கதைக்கப் போனால் சனம் என்னிலை தான் குறை காணும். அதனால் அதை மறந்திடு'' என்றாள் கார்த்திகா.

''அவை காசு கேட்கவில்லை. தாங்கள் 160 புள்ளிகளுக்கு மேல் எடுத்த பிள்ளைகளைத் தானாம் சேர்ப்பார்கள்'' என்றாள் ஆரணி.

''உதெல்லாம் காசு வாங்கிறதுக்கு ஒரு சாட்டு. இரண்டு மூன்று மாதத்தாலை 130 புள்ளிகள் பெற்ற பிள்ளைகளையும் காசு வாங்கிக் கொண்டு சேர்ப்பினை. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மட்டும் சேர்க்கும் பாடசாலையில் நூற்றுக் கணக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத பிள்ளைகள் கற்கிறார்கள்'' என்றாள் கார்த்திகா.

''இயக்கம் இருந்த காலத்திலும் அப்படி இருந்தது'' என்றாள் ஆரணி.

‘‘அப்ப கூட இருந்தது. மாவட்டத்தில் உள்ள எல்லாரும் புலிகள். அதிகாரிகள் அதிபர்கள் தாம் பெரும் புலிகள் போல நடித்துச் சமூகத்தை ஏமாற்றினவை. அது அப்ப எமக்குத் தெரியாது. யுத்தம் முடிவுக்கு வந்த பின்பு தான் ஒவ்வொருவரும் அவற்றைச் சொன்னார்கள்.’’ என்றாள் கார்த்திகா.

‘‘எமது ஊர்ப்பள்ளிக்கூடம், 1 A.B பாடசாலை. அதன் அதிபர் புலியின் பெரும் ஆதரவாளர் போல நடித்து தரமில்லாமல் அதிபரானவர்’’ என்றாள் ஆரணி.

‘‘எமது பாடசாலையல்ல வடமாகாணத்தில் உள்ள ஏபீசி பாடசாலைகள் அனைத்திலும் தரமில்லாத அதிபர்மார் தான் அதிபராகக் கடமையாற்றினவை. அவையெல்லோரும் அதிகாரிகளின் கையாட்கள். அவர்கள் திட்டமிட்டு இயக்க வேலைகளைச் செய்து தாம் இயக்க ஆதரவாளர் என்று கூறிப் பதவி பெற்றவை. அதைத் தட்டிக் கேட்க மற்றவர்களுக்குப் பயம்’ என்றாள் கார்த்திகா.

அதனால் தான் எமது பிரதேசத்தின் கல்வி பாழாய்ப் போனது. ஐம்பத்தெட்டு வயதுடைய அனுபவம் மிக்க ஆசிரியரை விட்டு விட்டு நாற்பது வயதுள்ள ஆசிரியருக்கு அதிபர் பதவி கொடுத்தால்

எப்படி மூத்த ஆசிரியர் வேலை செய்வார். தரமுள்ள அதிபர்மாரை சிறிய பாடசாலைகளுக்கே நியமித்தனர். அதனால் தான் கல்வி சீரழிந்தது'' என்றாள் கார்த்திகா.

''இயக்கம் இருந்த காலத்திலும் அவர்கள் பிழைத்தார்கள். இயக்கம் இல்லாத காலத்திலும் அவர்கள் பிழைக்கிறார்கள். கெட்டிக்காரர்கள்'' என்றாள் ஆரணி.

''இப்ப என்ன செய்யிறது'' கவலைப்பட்டாள் கார்த்திகா.

''நீ ஒருமுறை போய் பேசினால் என்ன?''

விரக்தியாகச் சிரித்தாள் கார்த்திகா. ''முன்பு நாங்கள் சொல்லும் இடத்திற்கு வந்து கை கட்டி வாய் பொத்தி இருந்தவை. நாங்கள் சொல்வதை வேத வாக்காக ஏற்றவை. அவையெல்லாம் நடிப்பு. தங்களது தேவையைப் பூர்த்தி செய்வதற்கென்று எமக்கு அப்போ புரியவில்லை. இப்போ போனால் நாயை அடித்துக் கலைப்பதைப் போல என்னையும் அடித்துக் கலைப்பார்கள்'' என்றாள் கார்த்திகா.

''அர்ச்சனா, தான் அப் பாடசாலையில் படிக்க வேணுமென்டு ஆசைப்பட்டுத் தான் படித்தவள். நாமும்

பாடசாலையில் சேர்ப்பதாகக் கூறித் தான் அவளை உற்சாகப்படுத்தினோம்.இப்போ சேர்க்கவிட்டால் அவளது மனம் உடைந்து விடும்'' என்றாள் ஆரணி.

அவள் புனர்வாழ்வு பெறும்போது புனர்வாழ்வுக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி “ நீங்கள் ஒருவரும் கவலைப்பட வேண்டாம். உங்களுக்குத் தேவையான உதவிகளை நாம் செய்து தரவே விரும்புகிறோம். எதையும் பயமில்லாமல் கேளுங்கள்'' என்றவர். அத்துடன் மாதத்தில் ஒருமுறையாவது சுகம் விசாரிப்பார்.அவரிடம் கேட்கலாமென நினைத்தாள். அந்த நேரச் சூழ்நிலையில் அதைத் தவிர அவளால் எதையும் சிந்திக்க முடியவில்லை. கான்போனை எடுத்து இலக்கங்களை அழுத்தினாள். போன் அடிக்கும் சத்தம் கேட்டது. அப்போது அவளது மனம் தான் செய்வது சரியா என்று கேட்டது.

# 10

யோசிப்பதற்கு நேரமில்லை. ஏதோ ஒரு அவசரத்தில் அவள் அந்த சிங்கள அதிகாரியை அழைத்தாள். எனினும் மனச்சாட்சி இடங்கொடாததால் அழைப்பைத் துண்டித்தாள். மனதுக்குள்ளே ஒரு பெரும்

போராட்டம் நடைபெற்றது.சிங்கள இராணுவத்திற்கு எதிராகப் போராடி பல இராணுவ முகாம்களையும் ,இராணுவ வீரர்களையும் அழித்தும் கொன்று விட்டு அவர்களிடம் உதவி கேட்பது எந்த வகையில் நியாயம் என்று நினைத்தாள். யாரின் நன்மைக்காகப் போராடினோமோ அவர்கள் எல்லாம் எம்மால் பெரும் நன்மைகளைப் பெற்று விட்டு இப்போது புனர்வாழ்வு பெற்ற போராளிகளுக்கு அரசாங்கம் நிதி வழங்க வேண்டும்,உதவிகள் செய்ய வேண்டும். வங்கிக் கடன் வழங்க வேண்டும் என்று கூக்குரல் இடுகிறார்கள். இது நியாயமா? என்று அவள் தன்னைத் தானே பலமுறை கேட்டுள்ளாள். அந்தக் கேள்வி மீண்டும் மனதில் எழுந்தது.

போராட்டத்தைக் காரணம் காட்டி பல இலட்சம் பேர் பொருள் தேடும் நோக்குடன் வெளிநாடுகளுக்குச் சென்று இன்று கோடீஸ்வரர்களாக வாழ்கின்றனர். அவர்கள் மாதா மாதம் சிறு உதவிகள் செய்யலாம். இல்லாவிட்டால் தொழிற்சாலைகள் அமைத்துத் தொழில் கொடுக்கலாம். அவற்றை விட்டு விட்டு வெளிநாடுகளில் குரலெழுப்புவதால் எந்தப் பயனும் இல்லை.

ரெலிபோன் மணி அடித்தது. வேறு வழியின்றி அவள் அழைப்பை ஏற்றாள். அந்தச் சிங்கள அதிகாரி

பேசினார். ஐந்து நிமிடங்கள் அவர் பேசினார். தொடர்பு துண்டிக்கப்பட்ட பின்னர் கார்த்திகாவின் முகம் மலர்ந்ததைக் கண்ட ஆரணி அவளின் அருகே சென்றாள்.

‘‘எனக்கு அந்தச் சிங்கள அதிகாரியுடன் பேச விருப்பமில்லை. அவர் நாம் புனர்வாழ்வு பெறும்போது அன்பாகவும் பண்பாகவும் நடந்து கொள்வார். அவர் அப்போது கூறிய வார்த்தைகள் செல்த்துகள்களாகவே இருந்தன. இப்போது அவற்றை நினைத்தால் ஆச்சரியமாக இருக்கிறது. ‘‘சுதந்திரத்திற்காகப் போராடிய நாடுகளில், அந்த நாடுகள் சுதந்திரம் பெற்ற பின் சுதந்திரத்திற்காகப் போராடிய வீரர்களை நினைத்துப் பார்ப்பதில்லை. இது உலக சரித்திரம். இப்போ உங்களுக்குப் புரியாது. நீங்கள் வீட்டுக்குச் சென்ற சில நாட்களில் அது புரியும்.சுத்நதிரமடைந்த நாடுகளில் வாழும் அரசியல் வாதிகளே அவர்களைப் பற்றிச் சிந்தித்ததில்லை. உதாரணமாக எமது அயல் நாடான இந்தியாவை எடுத்துக் கொண்டால் இது புரியும். உங்கள் போராட்டம் தோல்வியில் முடிவடைந்து விட்டது. வெற்றி பெற்றிருந்தால் உங்கள் தலைவர் உங்களின் நலன்களை நல்ல முறையில் கவனித்திருப்பார். ஆனால் தோல்வியடைந்த

போராட்டத்தில் போராளிகள் மதிக்கப்படுவதில்லை'' என்றவர். ''அது உண்மை என்று இப்போது புரிகிறது''.

''இப்போ அவர் என்ன சொல்கிறார்'' ஆரணி கேட்டாள்.

''அவரது பேச்சைக் கேட்க அவமானமாக இருக்கிறது. மிகவும் உயர்ந்த நிலையில் இருந்த போராளியான உன்னிடம் எத்தனை அரச உயர் அதிகாரிகள் உதவி பெற்றிருப்பர். அவர்கள் எல்லாம் இப்போ அரசின் பக்கம். முன்பும் அவர்கள் உங்களுக்கு நம்பிக்கையானவர்களாக இருந்தது போல அரசுக்கும் விசுவாசமானவர்களாக இருந்தவர்கள். இதை நான் உரத்துச் சொல்வேன். ஏனென்றால் அவர்கள் எல்லோரும் என்னுடன் நெருக்கமாகப் பழகியவர்கள் என்று சொன்னார். தான் உதவி செய்வதாகக் கூறினார்'' என்றாள் கார்த்திகா.

''எங்கடை விதியை நினைக்க அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை. நாம் நம்பிய அனைவரும் எம்மை ஏமாற்றி விட்டார்கள்.''என்றாள் ஆரணி.

“அதுசரி பூபாலனின் போக்கு இப்போது முற்றாக மாறிவிட்டது. இப்படி மாறுவான் என்று நான் கனவு கூடக் காணவில்லை.’’ என்றாள் கார்த்திகா.

“நானும் நம்பவில்லை. காதலிக்கும் போது என்னைப் பூப்போலப் பாதுகாப்பேன் என்றார். அவரின் மயக்கு வார்த்தைகளை நானும் நம்பிவிட்டேன். இயக்கத்தில் இருந்தவர். உண்மையான போராளியாகவும், விசுவாசமுள்ளவராகவும் நடந்து கொண்டவர். அவரா இப்படி நடக்கிறார் என்று நினைக்க அவர் மீது வெறுப்பாக உள்ளது.தினமும் குடித்து விட்டு வந்து ஒரே தொல்லை. என்னைப் பற்றிய விபரங்கள் யாவும் அறிந்த பின்பு தான் என்னைத் திருமணம் செய்தவர். அவரைத் திருமணம் செய்ய வேண்டாம் என்று நீயே கூறினனீ.பின் அவரின் நடிப்பில் மயங்கிச செய்யச் சொன்னனீ’’ விம்மினாள் ஆரணி.

“காதலிக்கும் போது காமம் கண்களை மறைக்கும். கலியாணமான பின் காமம் தீர்ந்ததும் தகுதி அந்தஸ்து, பணம் பொருளைத் தான் மனம் விரும்பும். பூபாலனுக்கு ஊரில் யாரும் பெண் கொடுக்க மாட்டார்கள். அது தெரிந்த பின்பு தான் அவன் உன்னை விரும்பினவன்.ஆசை அறுபது நாள். மோகம்

முப்பது நாள் என்ற முதுமொழிக்கேற்ப நடக்கிறான்.'' உணர்ச்சிவசப்பட்டாள் கார்த்திகா.

''அவரை எனக்குத் தேவையில்லை. எனக்கு நிம்மதி தான் தேவை. நீங்கள் நான் குறையின்றி வாழ்வதற்குப் போதுமான சம்பளம் தருகிறீர்கள். இரண்டு பிள்ளைகள் இருக்கு. அவர்களை நல்ல முறையில் வளர்த்தெடுத்தால் போதும்.: என்றவள் பின்பு சொன்னாள், ''போ என்று கலைத்தாலும் போகிறாரில்லை, என்னிலை இடங் கண்டு என்னை வெருட்டி வாழப் பார்க்குறார்''

''ஏதாவது வருமானம் இருந்தால் தான் யாராவது உதவி செய்வினை.அவரைக் கூட்டிச் சென்றால் கூட்டிச் செல்பவர் தான் சாப்பாடு கொடுக்க வேண்டும். பலமுறை சொல்லியும் கேட்கவில்லை. தொழிலில் எள்ளளவேனும் அக்கறை இல்லை. காலமை, இனிமேல் வேலைக்கு வரவேண்டாம் என்று கூறி விட்டேன்'' என்றாள் கார்த்திகா.

''மிகவும் நல்லது. நீங்கள் குடுக்கிற சம்பளத்துல ஒரு சதம் கூடத் தாறேல்ல. நான் தான் சாப்பாடு கொடுக்கிறது. அதைத் தொடருவம்'' என்று விரக்தியாகச் சிரித்தாள் ஆரணி.

அப்போது ரெலிபோன் மணி அடித்தது. அந்த அதிகாரி தான் பேசினார்.

அவருடன் மகிழ்வுடன் பேசிய கார்த்திகா. அவர் தொடர்பைத் துண்டித்ததும் சொன்னாள், “டிரைக்றருடன் கதைத்தவராம். டிறைக்ரர் அதிபருடன் கதைத்துள்ளார். அதிபர் போனில் சொல்லுறதாகச் சொன்னவராம்.” என்றாள் கார்த்திகா.

“காலையில் வளவனைச் சந்தித்தாயா? என்ன சொன்னவர்?” ஆவலுடன் கேட்டாள் கார்த்திகா.

விரக்தியாகச் சிரித்தாள் கார்த்திகா. அவர் எப்போதாவது பேசினதுண்டா. பேச நினைப்பவற்றை கவிதையாக எழுதித் தருவார். அப்போது நான் அவற்றைப் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. அவர் எழுதிய கவிதைகள் பலவற்றை நான் வாசித்ததேயில்லை. அவர் கேட்டால் அருமையான கவிதை என்பேன். சில சமயம் விசர் முற்றி விட்டது அதனால் தான் இப்படி எழுதுகிறீர்கள் என்பேன். காதலிக்கும் போதும் வாசிக்கவில்லை. புனர்வாழ்வு பெற்று வந்த பின்பும் வாசிக்கவில்லை. அவர் வந்த பின்பு தான் வாசித்தேன். ஒவ்வொரு வார்த்தையும் என்னைக் கொல்கிறது. அவற்றை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் எழுதித் தந்ததை

வாசித்திருந்தால் எனக்கு இந்த நிலை ஏற்பட்டிராது. ஒவ்வொரு பிறந்த தினத்தன்றும் கவிதை எழுதித் தருவார்.நேற்று எனது பிறந்த தினம். ஒரு கவிதையை எடுத்துப் படித்தேன்.'' விம்மி விம்மி அழுதாள். சில கணங்களின் பின் ''இதை வாசித்துப் பார்'' என்றாள்.

ஆரணி தயங்கினாள். ''இனி இதை வாசிப்பதால் பயனில்லை. அவர் எப்படி எல்லாம் என்னை நேசித்தார். எப்படியெல்லாம் ரசித்தார்'' என்று வாசித்துப் பார்.

ஆரணி வாங்கிப் பார்த்தாள்

**''அன்பே உன்**

**உடலெங்கும் காந்தமா..?**

**எட்ட இருந்தாலும் கவர்கிறாய்**

**கிட்ட இருந்தால் மயக்குறாய்**

**பிரிந்திருக்க முடியவில்லை**

**அன்பே உன்னைக் காண்கின்ற போது**

**ஐம்புலனும் அறிவிழக்கும்**

**காணாத போது**

**புலனைந்தும் துடிதுடிக்கும்**

**மருந்துமாய் விருந்துமாய்**

**மலர்ந்திருக்கும் பேரழகே**

**உனைக் காணாத நாளெல்லாம்**

**வாழாத நாளே”**

கார்த்திகாவால் துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. விம்மி விம்மி அழுதாள். அவளை அந்த நிலையில் இதுவரை ஆரணி பார்த்ததில்லை. மிடுக்கும் தைரியமும் உள்ள அவள் துயரத்தைத் தாங்க முடியாது அழுவதைக் கண்டு ஆரணியின் கண்களும் கலங்கின.

“நாங்களே தேடிக் கொண்ட வாழ்க்கை இது. இரு வீட்டுப் பெற்றோரின் விருப்பத்துடனும் நாம் காதலித்ததால் காதலின் அருமை தெரியவில்லை. இரு வீட்டாரும் எதிர்த்திருந்தால் நாங்கள் காதலில் தீவிரமாக இருந்திருப்போம். அத்துடன் காதலித்தும் இருப்போம். அவர் எனக்கென நிச்சயிக்கப்பட்டவர் என்ற அசட்டை தான் எனது இந்த நிலைக்குக் காரணம்”

‘‘என்றோ முடிந்து போன சம்பவங்களை எண்ணிக் கவலைப்பட்டால் தைரியமிழந்து விடுவாய். மனம் போராடும் ,குழப்பமடையும். அதன் பின் எதையும் உன்னால் செய்ய முடியாது. சாதாரணமான ஒரு பெண்ணாக இருந்த நீ இப்போது இரும்புப் பெண்ணாக உருவெடுத்திருக்கிறாய். இதுவரை உன்னைப் பற்று ,பாசம் எவையும் தாக்கவில்லை. ஊரையும், குடும்பத்தினரையும் எதிர்த்து உனது தோட்டக் காணியை விற்றமையால் தான் இன்று பல குடும்பங்கள் நிம்மதியாக வாழ்கிறது. அதைக் கெடுத்து விடாதே. இப்போ வளவன் குடும்பத்தன். அவருக்கு பிள்ளைகள் இருக்கு’’ பேசிக் கொண்டிருந்த ஆரணியைக் கோபத்துடன் முறைத்துப் பார்த்தாள் கார்த்திகா.

அவளின் பார்வையின் கொடுமை ஆரணியை அச்சுறுத்தியது. ‘‘என்ன விசரி மாதிரிக் கதைக்கிறாய். எனது வாழ்வில் நடைபெற்று முடிந்த அந்த சோக நிகழ்வு எனது கவனக் குறைவால் ஏற்பட்டது. என்னை உயிருக்குயிராக விரும்பிய ஒருவரின் அன்பை நான் அலட்சியப்படுத்திவிட்டேன். அதனால் அவர் துன்பத்தால் துடிதுடித்திருப்பாரென்று கவலைப்பட்டுச் சொன்னால், நீ நான் அவரது வாழ்வில் குறுக்கிட்டு

விடுவேன் என்று நினைத்து உபதேசம் செய்கிறாய்'' ஆத்திரப்பட்டாள் கார்த்திகா.

அதை எதிர்பாராத ஆரணி சொன்னாள். ''நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை'' தடுமாறினாள் ஆரணி

''நீ என்னைப் புரிந்து கொண்டது இவ்வளவு தான். எனக்கு மற்றவர்களுக்கு உதவி செய்து தான் பழக்கம். கெடுத்துப் பழக்கமில்லை நீ என்னைப் புரிந்து கொண்டவள் என்று நினைத்துச் சொன்னேன்.'' கார்த்திகா உள்ளே செல்ல நினைத்தாள். அப்போது ரெலிபோன் மணி அடித்தது. ''யாராக இருக்கும். புதிய இலக்கமாக இருக்கு'' என நினைத்தவாறு அழைப்பை ஏற்றாள் கார்த்திகா.

ஐந்து நிமிடங்கள் கார்த்திகா பேசிவிட்டுத் தொடர்பைத் துண்டித்தாள். பின் ''அந்த அதிகாரி டிறைக்ரருக்குச் சொல்ல டிறைக்ரர் அதிபருக்குச் சொல்லியிருக்கிறார். அர்ச்சனாவைத் திங்கட்கிழமை பாடசாலைக்கு அழைத்து வரட்டாம். அழைத்துச் செல். எனக்கு களைப்பாக இருக்கு. கொஞ்ச நேரம் படுக்கப் போகிறேன்'' என்று சொல்லி விட்டு ஆரணியின் பதிலை எதிர்பாராது உள்ளே சென்றாள் கார்த்திகா.

அச் செயல் ஆரணிக்கு மன வருத்தத்தைக் கொடுத்தது. இப்படி ஒருபோதும் அவள் நடந்து கொண்டதில்லை. கார்த்திகா வளவன் எழுதிய கடிதத்ததைக் காட்டி தனது துக்கத்தை வெளிப்படுத்திய போது நான் அவளின் மனநிலையைப் புரிந்து கொள்ளாது பேசி விட்டேன். மன்னிப்புக் கேட்கலாம் என்றால் கார்த்திகாவின் அறைக்குச் செல்ல வேண்டும். அதை அவள் விரும்பமாட்டாள். அதற்கும் கோபிப்பாள் என்று குழம்பியபடி நின்றாள்.

ஆரணிக்கும் கார்த்திகாவுக்கும் தேநீர் கொண்டு வந்த செல்லம்மா ஆரணிக்குத் தேநீரைக் கொடுத்து விட்டுக் கார்த்திகாவைத் தேடினாள். அவளைக் காணவில்லை. கார்த்திகாவின் அறைக் கதவு திறந்திருந்தமையால் அதற்குள் இருப்பாளென நினைத்து அறைக்குள்ச் சென்றாள்.

கார்த்திகா கட்டிலில் குப்புறப் படுத்திருந்து விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். அது செல்லம்மாவுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. வானமே இடிந்து விழுந்தாலும் அதைப் பற்றிச் சிந்திக்காத கார்த்திகாவுக்கு இன்று என்ன நடந்தது என்று நினைத்துப் பயந்தாள்.

# 11

வாசலில் ‘‘மாமி, மாமி’’ என்று யாரோ அழைக்கும் சத்தம் கேட்டு ‘‘யாராக இருக்கும்’’ என்று நினைத்தவாறு வெளியே வந்தாள் செல்லம்மா.

‘‘எப்படி மாமி சுகமாக இருக்கிறீர்களா?’’ என்று சிரித்தவாறு கேட்டான் வளவன். அவனுடன் வேறு இரு இளைஞர்கள் நின்றனர்.

‘‘வாருங்கோ, வாருங்கோ , உள்ளே வாருங்கோ’’ என்று மகிழ்வுடன் வரவேற்றாள் செல்லம்மா. அவன் முன்பு ‘‘மாமி’’ என்று அழைத்தால் அவள் உருகிப் போவாள். இப்போதும் அவனது குரல் அவளைத் தடுமாற வைத்தது.

‘‘என்ன சுகம். இந்த தேகம் எப்போ போய்ச் சேரும் என்று காத்திருக்கிறன்.’’ அவளின் குரலில் வெறுப்பும் துயரும் வெளிப்பட்டது. வளவனால் பேச முடியவில்லை. முன்பு தனது மகளுக்கு நிச்சயிக்கப்பட்டவனென்று நினைத்து அவனின் மீது உயிரையே வைத்திருந்தாள். வளவனும் அவளை மாமியாராகக் கருதாது தாயாகவே கருதினான். அதனால் அவளின் விருப்பத்திற்கு மாறாக என்றுமே

நடந்ததில்லை.கார்த்திகா இயக்கத்திற்குச் சென்ற பின் செல்லம்மா பல முறை வளவனுடன் ரெலிபோனில் பேசியிருக்கிறாள்.அப்போது வளவன் தனக்கிருக்கும் துயரை மறந்து கலகலப்பாகப் பேசுவான். தற்செயலாகக் குரல் பிசிறினாலும் செல்லம்மா துடிதுடித்துப் போவாள். அதற்காக அவன் தன்னைத் தயார்படுத்திப் பேசினாலும் அது தகர்த்துவிடும். செல்லம்மா பேசுவதை விட்டு விட்டு விம்மி விம்மி அழுவாள். அது பலமணி நேரமாய்க் கூட நீடிக்கும். அதனால் அவன் அவளுடன் பேசுவதை இயன்றவரை தவிர்ப்பான்.அதற்காக அவன் அகல்யாவையே பேசச் சொல்வான்.

அகல்யா பேசினால் அவளின் சுக துக்கங்களைப் பற்றி விசாரியாது வளவனைப் பற்றியே செல்லம்மா கண்கலங்கியவாறு பேசுவாள். , ‘‘வளவனைப் பௌத்திரமாகப் பாரம்மா. அவன் ஒரு குழந்தைப் பிள்ளையைப் போன்றவன். சிறுக்கி கார்த்திகாவின் செயலால் முற்றாக மனமுடைந்து போனான். நீ அவனுக்கு மனைவியாக மட்டும் இருக்காது சகோதரியாகவும் ,தாயாகவும் மாறி அவனது மனத் துயரை நீக்கம்மா. நீயும் எனது மகள் தானே. அதனால் அவனைப் பற்றி முழுமையாக அறிந்தவள் நீ. அவன் மனவேதனையோடு வாழ்கிறான். அதனால் பல

குறைகளை நீ காண்பாய். தயவு செய்து எனக்காக அவனை முழுமையாக ஏற்று குறை நிறை காணாது வாழம்மா. அவன் குணவான். நல்ல சேவையாளன். வஞ்சகமில்லாதவன். இவற்றையெல்லாம் நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை..''

பொங்கி வந்த அழுகையை மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு அவர்களை உள்ளே அழைத்துச் சென்ற செல்லம்மா கோலில் உள்ள சோபாக்களில் அவர்களை அமரச் சொல்லி விட்டு, ''கார்த்திகா மாப்பிள்ளை வந்திருக்கிறார்'' என்றாள். அதன் பின்புதான் தான் முன்பு சொல்வதைப் போல் சொல்லி விட்டேன் என்று நினைத்த செல்லம்மா. ''அவள் செய்யாவிட்டாலும் வளவன் எனது மாப்பிளை தான்'' என்றாள்.

அவளது வார்த்தைகள் வளவனின் நெஞ்சைத் தாக்கின. அதனால் சற்றுத் தளர்ந்து விட்டான்.

இயக்கம் என்று ஒன்று வந்ததால் எவ்வளவு பிரச்சனை.எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டிருநதோம். எமக்கு ஒரு விடிவு காலம் வருமென்று. எம்மவர் எவனையும் நம்பமுடியாது.ஒட்டி உறவாடி எல்லாவற்றையும் கெடுத்து விட்டார்கள். நான் கார்த்திகா சென்றதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

அவளைப் போன்ற விசுவாசம் மிக்க ஆயிரக் கணக்கான இளைஞர் ,யுவதிகளின் வாழ்க்கை நிர்க்கதிக்குள்ளாகிவிட்டது.அவர்கள் அங்கவீனர்களாக எதற்கும் வழியற்றவர்களாக வாழ்வதை நினைக்க நெஞ்சு வெடித்து விடுகிறது'' என்றாள் செல்லம்மா.

தாய் ''மாப்பிள்ளை வந்திருக்கிறார்'' என்று சொன்னதும் கார்த்திகா திகைப்படையவில்லை. அவனின் வரவை எதிர்பார்த்திருந்தாள். விம்மி விம்மி அழுததால் அவள் கண்ணாடியில் முகத்தைப் பார்த்தாள்.செல்துகள் பட்ட காயங்கள் மாறிக் கறுத்திருந்தன. அழுததால் முகமும் கண்களும் வீங்கிச் சிவந்திருந்தன. அறையில் இருந்த வாஸ்பேசனில் முகத்தைக் கழுவிவிட்டு பவுடரைப் பூசிக் கொண்டு வெளியே வந்தாள்.

**''ஓங்கிய மூங்கில் மெல்லிய தோளாம்**

**தளிரை மிஞ்சும் மேனியின் பசுமை**

**முத்தாய் ஒளிரும் முக்கனிப் பற்கள்**

**மலரைப் பழிக்கும் நறுமண மேனி**

**வேலை விஞ்சிய கூரிய கருவிழி**

**கொண்ட எந்தன் கோகுலவாணி''**

அன்று அப்படி இருந்த கார்த்திகாவின் முகம் வீரத் தழும்புகளால் கறுத்திருந்தது. முதுகில் சிறிய கூனல். விழிகளில் வீக்கம். அவனால் அவளைப் பார்க்க முடியவில்லை.

“இவர்கள் இருவரும் எனது நண்பர்கள். இவர் இராகவன் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். இவர் குருபரன் புன்னாலைக்கட்டுவானைச் சேர்ந்தவர். இருவரும் என்னுடன் வேலை செய்கின்றனர்” என்றவன் “இவள் எனது முறைப் பெண். போராளி மேயர் வான்நிலா.கேள்விப்பட்டிருப்பீர்கள்?” என்றான்.

இருவரும் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தனர்: “மேயர் வான்நிலாவைப் பற்றி அறியாதவர்கள் தமிழர்களாக இருக்க மாட்டார்கள். ரீவியில் எந்த நாளும் உங்களைப் பற்றிச் சொல்வார்கள். உங்களின் செயலால் கவரப்பட்ட நான் எனது மூத்த மகளுக்கு வான்நிலா என்று பெயர் வைத்துள்ளேன்” என்றான் ராகவன்.

எதுவும் பேசாது சிரித்தாள் கார்த்திகா; இயக்கத்தில் எந்த விதமான குறைகளும் இல்லை. தமிழனுக்கென்று எந்த நாடும் இல்லை. ஒரு நாட்டை உருவாக்க வேண்டுமென்று உழைத்தவர் தலைவர். நம்பக்

கூடாதவர்களை நம்பியமையால் தான் இந்த நிலை வந்தது'' என்று நினைத்தாள் கார்த்திகா.

குருபரன் ‘‘ஹலோ'' என்றான் . வேறு எதுவும் பேசவில்லை.

அப்போது செல்லம்மா மூவருக்கும் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

வளவனுக்குப் பேச வேண்டும் போல இருந்தது. ஆனால் பேச முடியவில்லை. குருபரன் அமைதியானவன். கலகலப்பாகப் பேசத் தெரியாதவன். அதனால் அவனும் அமைதியாக இருந்தான்.

‘‘இன்றைக்கு மூவரும் சாப்பிட்டு விட்டுத் தான் செல்ல வேண்டும்'' என்றாள் செல்லம்மா.

‘‘மூவரும் இன்று முக்கியமான ஒரு இடத்திற்குச் செல்ல வேண்டும். அதனால் இன்னொரு நாளைக்கு வருகிறோம்'' என்றான் வளவன்.

‘‘நீங்கள் ஐம்பது பேருக்குத தொழில் குடுத்திருக்கிறீர்கள் என்று வளவன் சொன்னவன். அதைச் செய்யும் தைரியம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?'' என்று கேட்டான் இராகவன்.

“எமக்குத் துணிவு இருக்கு.நம்பிக்கையும் இருக்கு. பணம் தான் தேவைப்பட்டது. அதற்காக எமது தோட்டக் காணியை விற்றேன்.நிறையத் தொழிலாளர்கள் இருந்தனர். நல்ல திட்டமிடலும் துணிவும் எதையும் சாதிக்கும் என்று எனக்குத் தெரியும்’’ என்றாள் கார்த்திகா.

“ஒன்றல்ல பல தொழில்களை ஆரம்பித்துள்ளீர்கள். இவையெல்லாம் எப்படி வெற்றியளித்தது’’ இராகவன் கேட்டான்.

“என்னுடன் வேலை செய்பவர்கள் எல்லோரும் முன்னாள் போராளிகள். எனது நண்பர்கள். நாம் புனர்வாழ்வு பெற்ற போது ஒவ்வொருவரினதும் திறமைக்கேற்ற தொழில் பயிற்சி வழங்கப்பட்டது. எனக்குக் கணணி சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டது.இப்படி இயந்திரங்கள் திருத்தல், துவிச்சக்கர வண்டி திருத்தல், தையல் பயிற்சி,பூ அலங்காரம் ,கேக் ஐசிங் சமையல் பயிற்சியென்று பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டன. அதனால் பல தொழில்களைத் தொடங்க முடிந்தது’’ என்றாள் கார்த்திகா.

“உங்களுக்கு முழுமையான பயிற்சி வழங்கப்பட்டதா?” இராகவன் கேட்டான்.

“ஒன்றைப் பற்றி முழுமையாகத் தெரிந்த பின் தொழிலைத் தொடங்க முடியாது. ஏதோ அறிந்தோம். இப்போ தொழிலைத் தொடங்கிய பின் அறிந்து வருகிறோம். நீச்சல் கற்றுக் கொள்ள விரும்புபவர்கள் முதலில் ஆழமான நீரில் இறங்க வேண்டும் .அதற்குத் துணிவிருந்தால் நீச்சல் பழகலாம்” சிரித்தாள் கார்த்திகா.

“உலகைப் பற்றி எதுவும் தெரியாது. புத்தகங்களுடன் இருந்தவள் இன்று எல்லாம் அறிந்தவள் போலப் பேசுகிறாள். முன்பு யாழ்ப்பாணத்திற்குச் செல்வதாக இருந்தாலும் யாரோ ஒருவர் கூட்டிச் செல்ல வேண்டும். இன்று பல தொழிலாளர்களை வைத்துச் சிறப்பாகச் செயற்படுகிறாள்” என்பதை நினைக்க வளவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

“உங்களது தொழிலாளர்களைச் சந்திக்கலாமா? இராகவன் கேட்டான்.

‘‘சந்திக்கலாம். ஆனால் கதைக்கக் கூடாது. எதையும் அறிய முயலக் கூடாது.’’ என்றாள் கார்த்திகா. அதைச் சொல்லும் போது அவளது முகம் மாறியதை அவதானித்தான். இராகவன் அத்துடன் அவனது பேச்சு அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. மேற்கொண்டு அவளுடன் கதைக்க அச்சமாயும் இருந்தது.

‘‘அப்போ அவர்களை அடிமையாக வைத்திருக்க விரும்புகிறீர்களா’’ அமைதியாக இருந்த குருபரன் சற்று கோபமாகக் கேட்டான்.

‘‘இல்லை அவர்களை நிம்மதியாகவும் ,மகிழ்ச்சியாகவும் வைத்திருக்க விரும்புகிறேன்’’ என்றாள் கார்த்திகா.

‘‘பிறருடன் மகிழ்ச்சியுடன் கதைத்ததால் துன்பங்கள் யாவும் மறைந்து விடும் என்பார்கள் உங்களது பேச்சு விசித்திரமாயுள்ளது’’என்றான் குருபரன்.

‘‘விசித்திரமானவர்களுக்கும் ,புகழை விரும்புகிறவைக்கும் எனது பேச்சு விசித்திரமானதாகத் தான் இருக்கும். இன்று வெளிநாட்டிற்குச் சென்றவர்கள் எல்லோரும் நாட்டில் போர் நடைபெறுவதால் தமக்குப் பாதுகாப்பில்லை என்று பல நாடுகளுக்கும் அறிவித்து

அது உண்மையென்று புரிந்து கொண்டதால் சென்றவர்கள். இப்படிச் சென்ற எத்தனை பேர் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியிருக்கிறார்கள்? கேட்டு விட்டுக் குருபரனைப் பார்த்தாள் கார்த்திகா.

குருபரனுக்குத் தர்மசங்கடமாக இருந்தது. ‘‘போர் முடிந்து சமாதானம் ஏற்பட்டதும் இங்கு வருபவர்கள் இங்குள்ளவர்களை ஏளனமாகப் பார்க்கின்றனர். ஊர் பார்க்க வருபவர்கள் கூட்டம் கூடி தம்மைப் பிரபலப்படுத்தி வாக்குறுதிகளை அளிக்க, பாமர மக்கள் அதை நம்பி தடல் புடலாக வரவேற்கின்றனர். வரவேற்பை வீடியோவில் எடுத்த பலர் அதை வைத்து வெளிநாடுகளில் பிழைப்பு நடாத்துகிறார்கள்’’ கொதித்தாள் கார்த்திகா.

கார்த்திகா சாதாரமான பெண் இல்லை என்பதை உணர்ந்தான் குருபரன்.

‘‘சென்ற வருடம் பலர் இங்கு வந்தனர். பல்வேறு விதமான வாக்குறுதிகளை எமக்குத் தந்தனர். ஒருவன் பத்துக் கொம்பியூட்டர் அனுப்புவதாகச் சொன்னான். இன்னொருவன் போரால் பெற்றோரை இழந்தவர்களின் கற்றல் செலவுகளை ஏற்பதாகச் சொன்னான். இன்னொருவன் பத்துத் தையல் மிசின்கள் தருவதாகச் சொல்லி யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்ற

விபரத்தைத் தரும்படி கேட்டான். நாங்கள் மிகுந்த சிரமத்துடன் பயனாளிகளைத் தெரிவு செய்தோம். சிலர் நாம் எமக்குத் தேவையானவர்களின் பெயர்களைக் கொடுத்ததாகக் கதைத்தனர். ஒருவருடம் கழிந்தும் எதுவும் வந்து சேரவில்லை.பணத் திமிருடன் வரும் பலர் தமது திமிரைக் காட்டிச் செல்கிறார்களே தவிர உதவுவதில்லை. இதை நான் சொல்லவில்லை. வட கிழக்கு மாகாணம் முழுவதும் சொல்கிறது.''

குருபரனால் பேசமுடியவில்லை. இவ்வளவு தைரியம் கார்த்திகாவுக்கு எங்கிருந்து வந்தது என்று நினைத்தான் வளவன்.

''எமது தொழிலாளர்கள் அர்ப்பணிப்புடனும் மகிழ்ச்சியுடனும் ,நிம்மதியுடனும் வேலை செய்கிறார்கள். வெளிநாட்டில் இருந்து வருபவர்கள் சிலரின் பேச்சால் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். சிறு சிறு பிள்ளைகள் ஏமாற்றப்படுகிறார்கள். தமிழராய்ப் பிறந்த பாவத்திற்காகப் பழியைச் சுமக்கிறோம்.அது போதும். யாரும் எமக்காக இரக்கப்படத் தேவையில்லை. அதற்காகத் தான் சொன்னேன்" என்றாள் கார்த்திகா அமைதியாக

குருபரன் எதுவும் பேசவில்லை. எத்தனையோ பிரச்சனைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறான். அவையெல்லாம் இப்படியான பாதிப்புக்களை உருவாக்கும் என அவன் நினைக்கவில்லை.

“நாங்கள் வரப் போகிறோம்” என்று எழுந்தான் வளவன். அவனுடன் கூட வந்தவர்களும் எழுந்தனர். அது செல்லம்மாவுக்கு துக்கத்தை உண்டாக்கியது. வளவனுடன் மனம் திறந்து பேச முடியவில்லையே என்று நினைத்துக் கவலைப்பட்டாள்.

“நான் நாளைக்கு வாரன் மாமி. ஆறுதலாய்க் கதைக்கலாம்” என்றான் வளவன். அது செல்லம்மாவுக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

மூவரையும் வாசல் வரை வந்து வழியனுப்பினாள் கா்ர்த்திகா. வரும் போது வளவன் எதுவும் பேசவில்லை.

“ஆறுதலாக ஒரு நாளைக்குத் தொழிற்சாலைக்கு வாருங்கள் அத்தான்” என்றாள் கார்த்திகா.

“அத்தான்” என்ற வார்த்தையைக் கேட்டு அதிர்ந்து போனான் வளவன்.

## 12

வளவனுக்கு இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை. முன்பு அவன் கார்த்திகாவின் வீட்டுக்குச் சென்றால் கார்த்திகா, “அத்தான ,அத்தான்” என்று வாயோயாமல் ஆயிரம் தடவைகள் அழைப்பாள். கண்டதெல்லாம் பேசுவாள். அப் பேச்சு சில நேரம் வளவனுக்கு அலுப்புத் தட்டும். அதைப் புரிந்து கொண்ட அவள், “இப்ப சலிக்கிறியள். கலியாணம் கட்டிய பிறகு என்ன செய்வீர்கள்..? அடிப்பீர்களா? என்று கேட்பாள்.அதற்கு அவன் பதில் சொல்லாவிட்டால் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருப்பாள்.

பெருமூச்சு விட்டான் வளவன்.

பலவருடங்களுக்குப் பிறகு அவள் அத்தான் என்று அழைத்தது அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. எனினும் அவள் இப்போ அந்நியமாகிவிட்டாள். அவளை

இனி நினைக்கக் கூடாது.மீறி நினைத்தால் பாவம் தான் வரும் என்று நினைத்தான் வளவன்.

பல வருடங்களுக்குப் பிறகு கார்த்திகாவின் நினைவு வந்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. எனது அன்பைப் புரிந்து கொள்ளாமல் என்னைத் துயரத்துத்துள் ஆழ்த்தி விட்டுச் சென்ற அவளை நினைக்கக் கூடாது. அகல்யா கார்த்திகாவை விட அழகி .அதை விட அவனை முழுமையாகப் புரிந்து கொண்டவள். அவன் மனம் நோகாமல் பாதுகாப்பவள். கார்த்திகா இயக்கத்திற்குச் சென்ற புதிதில் வளவன் அளவுக்கதிகமாகக் குடித்தான். குடித்துவிட்டுத் தெருக்களில் விழுந்து கிடந்தான். அவனது தந்தையான சின்னத்துரை இரவு பத்து மணிக்கு மேல் அவனைத் தேடிச் சென்று அழைத்து வருவார்.

திருமணமான பின் அகல்யா அவனுக்கு எந்தக் குறையும் வைத்ததில்லை. பக்குவமாய் அன்புடன் எடுத்துச் சொல்வாள். ஆரம்பத்தில் கேட்க மறுத்த வளவன் பின் தனது துயரம் அகல்யாவின் பேச்சால் சிறிது சிறிதாகக் குறைவடைவதைக் கண்டான். காலப் போக்கில் அவளது அரவணைப்பு வளவனுக்குத்

தேவைப்பட்டது. மெல்ல மெல்ல அவன் நிலைமையை உணர்ந்து இயல்பு நிலைக்குத் திரும்பினான்.

“இங்கு வந்து அவளைக் கண்டதால் தான் எனக்குத் துன்பமாக உள்ளது. வராமல் விட்டிருக்கலாம். ஆனால் அப்பா பாவம்.அன்புடனும் பண்புடனும் ,பாசத்துடனும் வளர்த்தவர். நான் குடித்து விட்டுத் தெருக்களில் விழுந்து கிடந்த போது அன்போடு அரவணைத்து அழைத்து வந்தார். அன்று அவர் போனில் அழுதார், “மகனே, உன்னை ஒருமுறை பார்க்க வேண்டும் போல உள்ளது. இன்றோ நாளையோ என்றிருக்கிறேன். என்னை வந்து பார்” என்று கெஞ்சிய பின்பு அவனால் பேசமுடியவில்லை” மறுநாள் புறப்பட்டு வந்து விட்டான்.

வரும்போது அகல்யா ஒரு பார்சலைக் கொடுத்து விட்டுச் சொன்னாள், “கார்த்திகா யாருக்கும் கடமைப்பட விரும்பமாட்டாள். யாரிடமும் எதையும் வாங்க மாட்டாள்.அவள் எனது உயிர்த்தோழி. புனர்வாழ்வு பெற்று வந்த பின்பு பலமுறை தொடர்பு கொண்டவள். தோட்டக் காணியை விற்கப் போவதாகச் சொன்னவள். அதை விற்க வேண்டாம் .நான் பணம் தருகிறேன் என்று கூறிய போது வாங்க மறுத்தாள். பாவம் இப்போ

உடலெங்கும் காயப்பட்டு ஊனமாகி வந்திருக்கிறாள். அவளைச் சென்று பார்த்து ஆறுதல் வார்த்தைகள் கூறுங்கோ” என்றாள்.

எவ்வளவு தான் மனதைக் கட்டுப்படுத்தினாலும் மனம் கேட்க மறுத்தது. இயக்கம் பொருத்தமான பெயர் தான் வைச்சிருக்கு வான் நிலா... இப்ப நீ வான் நிலா தான்.. அப்போது அவனுக்கு ஒரு கவிதை எழுத வேண்டும் போல இருந்தது.

அலுமாரியைத் திறந்து முன்பு தான் எழுதிய டைரியை எடுத்துப் பிரித்தான். அது ஆயிரத்துத் தொள்ளாயிரத்து தொன்னூற்றைந்தாம் ஆண்டு டையரி. அவள் சென்ற பின் அவன் டையரிகள் எழுதுவதில்லை.

**“கண்களுக்குள் கரைந்து**

**கைக்குள் வசித்த நிலா**

**வான் நிலவாகி**

**எட்டாத தூரத்தில் இருந்து**

**எனைப் பார்த்து ரசிக்கிறது**

**பேச முடியவில்லை**

**பழக முடியவில்லை**

**பித்தனாகிப் புலம்புகிறேன்**

**இன்னொரு பிறப்பு**

**இருக்கென்று நம்புகிறேன்**

**வலிய விதி சேர்த்து வைத்தால்**

**வாழ்ந்திடுவோம் இன்பமாக**

**அதுவரை**

**கடந்த கால நினைவுகள்**

**இனிக்கட்டும் மனதுக்குள்''**

அப்போ ரெலிபோன் அடித்தது. போனில் அகல்யா இருந்தாள். "கார்த்திகாவைக் கண்டீர்களா? எப்படி இருக்கிறாள்? நான் தந்த பார்சலைக் கொடுத்தீர்களா? என்ன சொன்னாள்?என்னைப் பற்றிக் கேட்டாளா?" அவசரப்பட்டுக் கதைத்தாள் அகல்யா.

"நேற்று நானும் குருபரனும் இராகவனும் கார்த்திகாவின் வீட்டுக்குச் சென்றோம். பெரிதாக நான்

கதைக்கவில்லை. இராகவனும் குருபரனும் தான் கதைத்தார்கள்” என்றான் வளவன்.

“நீங்கள் சாமியார் தானே. நான் தந்த பார்சலைக் கொடுத்தீர்களா?” என்ன சொன்னாள்.

அப்போது தான் அகல்யா கொடுத்த பார்சலின் நினைவு அவனுக்கு வந்தது. அவன் பதில் கூறாதிருப்பதைக் கண்ட அகல்யா சொன்னாள். “நீங்கள் எல்லாவற்றையும் மறந்து விடுவீர்கள் என்று எனக்குத் தெரியும். இப்பவே கொண்டு சென்று கொடுத்து விட்டுப் போன் பண்ணுங்கள்” என்று கூறி விட்டுத் தொடர்பைத் துண்டித்தாள் அகல்யா.

அகல்யாவை நினைக்க வளவனுக்கு சிரிப்பு வந்தது. அவள் கோவிக்க மாட்டாள். இன்னும் ஐந்து நிமிடங்களில் மீண்டும் போனை எடுத்துக் குழைவாள். முன்பு கதைத்ததை மறந்து விடுவாள்.

அப்போது மீண்டும் ரெலிபோன் அடித்தது, “உங்களோடு கதைத்ததால் மாமியை மறந்து விட்டேன் .மாமியிடம் கொடுங்கோ” என்றவள் வேறெதுவும் பேசவில்லை. வளவன் போனைக் கொண்டு போய்த்

தாயிடம் கொடுத்து “அகல்யா கதைக்கப் போறாளாம்” என்றான்.

பத்து நிமிடங்களுக்குப் பின்பு பார்வதி ,அகல்யா கொடுத்தனுப்பிய பார்சலைக் கொண்டு வந்து வளவனுக்கு அருகில் வைத்து விட்டுச் சொன்னாள், “கதிர்காமுவின் ஓட்டோவுக்குச் சொல்லியிருக்கிறன். இன்னும் பத்து நிமிடத்தில் வந்து விடுவான்.வெளிக்கிடு” என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அவள் கூறிவிட்டுச் சென்ற சில நிமிடங்களில் வாசலில் ஓட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

“கார்த்திகாவுக்குப் போன் பண்ணி விட்டுப் போ” என்றாள் பார்வதி.

கார்த்திகாவுக்குப் போன் பண்ண அவன் விரும்பவில்லை. அவளின் நினைவுகள் மனதில் இருந்தாலும் அவளை நினைக்கும் போது அவனுக்கு வெறுப்புத் தான் ஏற்படும்,மனதைப் புரிந்து கொள்ள முடியாதவள்,திமிர் பிடித்தவள், ஆணவக்காரி, நான் எவ்வளவு அன்பை வைத்திருந்தேன். அதை நினையாது சென்றவளை நான் ஏன் நினைக்க வேண்டும். என்ற

எண்ணம் தான் வரும்.அதனால் கனடாவில் இருக்கும் போது அவன் அவளை நினைப்பதில்லை.

கதிர்காமு தான் இப்போது அம்மாவுக்கும் அப்பாவுக்கும் உதவி. அதனால் கதிர்காமுவுக்கு ஒரு பார்சல் கொடுத்தான். கொஞ்சக் காசும் கொடுத்தான். பார்வதி அவனுக்குப் பணம் அனுப்பும்படி அடிக்கடி போனில் சொல்வாள். அவன் தாய்க்குப் பணம் அனுப்பும் போது கதிர்காமுவுக்கும் சேர்த்து அனுப்புவான்.

கதிர்காமுவும் பூபாலனும் ஒன்றாகப் படித்தவர்கள். அதனால் வளவனுக்குச் சொன்னான், "பூபாலன் தினமும் நன்றாகக் குடித்து விட்டு ஆரணிக்கு அடிக்கிறான். கார்த்திகா பலமுறை சொல்லியும் அவன் கேட்கிறானில்லை. நீங்கள் ஒருமுறை சொல்லுங்கோ. அவள் பாவம் நோயாளி. போரில் காயப்பட்டவள். எல்லாம் தெரிந்து தான் இவன் அவளைத் திருமணம் செய்தவன். இப்போ சீதனம் கேட்கிறான்."

"எல்லோரும் சொல்லிக் கேளாதவன் நான் சொல்லியா கேட்கப் போறான?" என்றான் வளவன்.

“நீங்கள் சொன்னால் கேட்பான். ஏனென்றால் மாதா மாதம் நீங்கள் அவனுக்கு உங்கள் பெற்றாரைப் பராமரிக்கவென்று பணம் அனுப்புகிறீர்கள். அவன் எங்கை பார்க்கிறான். காலையில் இருந்து மாலை ஐந்து மணிவரை வேலை செய்கிறான். அதன் பின் குடிக்கிறான். இரவு பத்து மணி வரை குடித்து விட்டு வீட்டுக்குச் சென்று ஆரணியோடு பிரச்சனைப்படுகிறான்.”

“அப்படித் தான் அம்மாவும் சொல்கிறா. அவனை விட்டால் அவவைப் பார்ப்பது யார்? என்று கேட்டான்” வளவன்.

“ வெளித் தேவைகள் எல்லாவற்றையும் நான் தான் கவனிக்கிறேன். வேண்டுமென்றால் நான் மிகுதியையும் கவனிக்கிறேன். ஆரணி படுற கஸ்டத்தைப் பார்க்கப் பாவமாயிருக்கு”

“அப்படித் தான் அம்மா அடிக்கடி சொல்லுறவா. நேற்று காயத்திரியும் சொன்னவள்.” என்றான் வளவன்.

“பாவம் ஆரணி. தான் கலியாணம் செய்யாமல் இருந்திருக்கலாம்” என்று அடிக்கடி கூறுவாள். இரண்டு வருடங்களுக்கு முன் ஒருநாள் பூபாலன் நன்றாகக்

குடித்து விட்டு ஆரணியையும் பிள்ளைகளையும் வீட்டை விட்டுத் துரத்தி விட்டான். அதுகள் இரவில தட்டுத் தடுமாறிச் சென்றதுகள். பகலிலேயே ஆரணி நடக்க மாட்டாள். இரவு இரண்டு பிள்ளைகளைக் கொண்டு செல்ல அவளால முடியுமே. ?தற்செயலாக நான் அந்த வழியால வந்திட்டேன் . அதனால் அவர்களை ஓட்டோவில் ஏற்றிச் சென்று தாய் வீட்டை விட்டனான். தான் பூபாலனை விவாகரத்துச் செய்யப் போவதாகச் சொன்னாள். விவாகரத்துச் செய்தாலும் அவருக்குப் போக்கிடமில்லை. தாய் தகப்பனும் உறவினர்களும் இவனை அண்டுவதில்லை. அவன் ரோசமில்லாதவன். மறுநாள் காலை வீடு தேடி வந்து "கதிர்காமு வெறிலை தெரியாத்தனமாய் நடந்திட்டன். பகலில் கூட நடக்கச் சிரமப்படுபவளை நான் இரவிலை வீட்டை விட்டு கலைச்சு விட்டன். நீயென்டபடியால் ஓட்டோவில் ஏற்றிக் கொண்டு சென்று விட்டாய். மிகவும் நன்றி" என்று கூறி நூறு ரூபாயை எடுத்து நீட்டினான்.

"நீ ஆமான ஆம்பிளை என்றால் நம்பி வந்த அந்த அனாதைப் பெண்ணை கண் கலங்காமல் காத்திடு" என்று சொல்லி விட்டு வந்தனான். அவன் திருந்த மாட்டான்" என்றான் கதிர்காமு.

“இயக்கத்திலை இருந்தவன் இப்படிச் செய்தால் மற்றவன் என்ன செய்வான்? ” என்று கவலைப்பட்டான் வளவன்.

“அதுக்குக் காரணம் இந்தச் சனம் தான். அவர்கள் இயக்கத்தில இருக்கும் போது அவர்களைத் தேவர்களாக மதித்த சனம் இப்ப மனிதர்களாகக் கூட மதிப்பதில்லை. கார்த்திகா இயக்கத்திலை பெரிய பதவி வகித்தவள். அவள் இயக்கத்திலை இருக்கும் போது பெரியவர்கள், உயர் அதிகாரிகள் கூட அவளைக் கண்டால் எழுந்து நின்று பெரும் மரியாதை செய்தவை. போற்றிப் புகழ்ந்தவை. இப்ப அவா இயக்கத்தில கண் மண் தெரியாமல் நடந்தவா. இப்ப அனுபவிக்கிறா” என்று சொல்பவர்கள் பலர் இருக்கிறார்கள்.

“எமது சனத்தை நம்பி எதுவும் செய்ய முடியாது. தமது தேவை முடியும் வரை தான் பாசமுள்ளதாக, பற்றுள்ளதாக காட்டிக் கொள்வார்கள்.தனது காரியம் முடிந்தால் கண்டது யாரென்பார்கள். இந்த நிலை கனடாவிலயும் இருக்கு” என்றான் வளவன்.

“எப்படிக் கார்த்திகா சந்தோசமாக இருக்கிறாளா?” என்று கேட்டான் வளவன்.

“பாவம் கார்த்திகா. இயக்கத்திற்குச் சென்று தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றினவள். இப்போ தனது நிலையை நினைத்துக் கவலைப்படுகிறாள். பணம் தாராளமாகப் புழங்குகிறது. பலர் வேலை செய்யினை. இருந்தும் வாழ்க்கை இல்லையே. எவ்வளவு வசதியானவள். தகப்பன் எந்தக் குறையுமில்லாமல் வளர்த்தவர். இடையிலை வந்த இயக்க ஆசை.. அந்த நேரம் எல்லாரும் ஓடினவை தானே. எனது மருமகள் தேவகியும் பத்துப் பிள்ளைகளும் இயக்கத்திற்குச் சென்றவை. அதிலை ஆறு பேர் வீரமரணமடைந்து விட்டார்கள். நான்கு பேர் ஊனமுற்று வீடுகளுக்குப் போயிருக்கினை. இப்ப அரசாங்கம் படித்தவைக்கு நல்ல வேலை கொடுக்குது. இவை ஒருத்தரும் படிக்காததாலை இப்ப கஸ்டப்படினை. தேவகியின் தகப்பன் நல்லாயிருக்கிறார். எவ்வளவு சீதனம் கொடுக்கவும் தயாராயிருக்கிறார். அவளைச் செய்ய யாரும் சம்மதிக்கினை இல்லை. சபாபதியற்றை மகன் பெண்சாதி விபத்திலை இறந்து போனாள். தேவகியின்

தகப்பன் நூறு தரம் போய் சபாபதியரைக் கேட்டவர். தகப்பனே செய்ய மறுத்திட்டார். இயக்கத்தில இருந்தவளை நம்பிச் செய்யேலாதாம். அது தேவகியின் தகப்பனுக்குப் பெரும் கவலை. என்னுடைய மச்சான் தானே அவர். அதை நினைத்து நினைத்துக் கவலைப்படுவதால் பிறைசர் அடிக்கடிக் கூடிக் குறையுது. இயக்கத்திற்குச் சென்று புனர்வாழ்வு பெற்று வந்தவையால பெற்றோரும், உறவினரும் பெரும் துன்பப்படினை. தேவகிக்குக் கார்த்திகா உதவியாக இருக்கிறாள். அவள் முன்பு என்னைக் கண்டால் சொல்வாள், “மாமா, போரில் வீரமரணமடைந்தவர்கள் பாக்கியசாலிகள். எனக்கு அந்தக் கொடுப்பனவு கிடைக்கவில்லை” என்று அழுவாள் . இதைக் கேட்டால் பெற்றோர் எவ்வளவு கவலைப்படுவார்?” என்றான் கதிர்காமு.

வளவன் எதுவும் பேசவில்லை. அவனால் எதுவும் பேசமுடியவில்லை. கண்கள் கலங்கின. பெருமூச்சு விட்டான். கதிர்காமு கதைத்துக் கொண்டேயிருந்தான். அதை வளவன் கவனிக்கவில்லை. “ஏன் இங்கு வந்தோம்?” என்று நினைத்தான்.

# 13

ஓட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டதும் கார்த்திகா வெளியே வந்தாள். ஓட்டோவின் இயந்திரம் நிறுத்தப்பட்ட பின்பும் வளவன் ஓட்டோவால் இறங்காது உள்ளே பிரமை பிடித்தவன் போல இருந்தான்.

"அத்தான்" மீண்டும் மின்னல் தாக்கியது போல இருந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளாது ஓட்டோவை விட்டு இறங்கினான். அது ஒரு பெரிய மாடி வீடு. பேரம்பலம் அதிபரின் சகோதரியின் வீடு. பேரம்பலத்தின் சகோதரி சாரதா. அவளின் மூத்த மகன் வசீகரன் அவனோடு கற்றவன். அப்போது அவன் அடிக்கடி வளவனது வீட்டுக்கு வருவான். அவர்களெல்லாம் பிரான்சில் குடியேறிப் பல காலமாகிவிட்டது.

"இந்த வீட்டை இப்போது யார் பராமரிக்கிறார்கள்.? இதை எப்படி கார்த்திகா பெற்றாள்." என்று சிந்தித்தபடி வந்தான் வளவன்.

"இப்ப நான் உங்களுக்கு ஒரு முக்கியமான பிரமுகரை அறிமுகப்படுத்தப் போகிறேன் .மேலே வாருங்கள் அத்தான்" என்றாள் கார்த்திகா.

ஒரு காலத்தில் எத்தனை முறை அழைத்தாலும் சலிக்காத அவ் வார்த்தை அவனுக்கு வெறுப்பைக் கொடுத்தது “இனி அத்தான் என்று அழைக்காதே. அது எனக்குப் பிடிக்கவில்லை. எனது பெயரைச் சொல்லி அழை” என்று சொல்ல நினைத்தான். ஆனால் முடியவில்லை.

“மேலே வாருங்கள் அத்தான்” மீண்டும் அதிர்ச்சி. வெறுப்பு

“சேர் உங்களின் விருப்பத்துக்குரிய மாணவனை அழைத்து வந்திருக்கிறேன்” என்றாள் கார்த்திகா.

பேசும் சத்தம் கேட்ட பேரம்பலம் சிறிது நேரம் அவனை உற்றுப் பார்த்தார்.

“என்ன சேர் யோசிக்கிறியள். என்னுடைய அத்தான்”

“வளவா.. ஆளே மாறி விட்டாயப்பா..” என்றபடி எழுந்து வந்து கட்டியணைத்தார். அதில் அவருக்கு ஒரு சுகம் இருந்தது.

அவருடைய மகன் சம்பந்தன் அவனுடன் படித்தவன். அதனால் சம்பந்தனைச் சந்திப்பதற்காக அவனின் வீட்டிற்கு அடிக்கடி வளவன் செல்வான்.

சம்பந்தனுக்கு ராதிகா என்றொரு தங்கை இருந்தாள். அவள் சிறுமி. பேரம்பலம் கண்டிப்பு நிறைந்தவர். அர்ப்பணிப்புடன் செயலாற்றுபவர். மாணவர்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவர். கண்டிப்பானவர்.

“எப்படி நலமாக இருக்கிறாயா? எல்லாம் கனவாய்ப் போச்சு. முக்கியமானவர்கள் ஏமாற்றியதால் தான் இந்தப் பெரும் தோல்வி ஏற்பட்டது” என்ற பேரம்பலம் சிறிது நேரம் பேசாமல் இருந்தார்.

“கார்த்திகா பாவம். துரோகிகளால் வஞ்சிக்கப்பட்டு விட்டாள். எப்படியெல்லாம் வாழ வேண்டியவள். சரியான கெட்டிக்காரி . தடம் மாறியதால் வாழ்க்கை சூனியமாகிவிட்டது. யார் நினைத்தார்கள் இப்படியெல்லாம் நடக்குமென்று” பெருமூச்சு விட்டார் பேரம்பலம்.

சம்பந்தனும் ராதிகாவும் இயக்கத்திற்குச் சென்ற பிறகு பேரம்பலம் கிளிநொச்சிக்கு மாற்றம் எடுத்துக்

கொண்டு சென்று விட்டார். அதன் பின் என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது.

“எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. சம்பந்தன் என்ன ஆனான் என்று எனக்கு இதுவரையும் தெரியாது. ராதிகாவின் இறந்த உடலைக் கொண்டு வந்து பாடசாலையில் அஞ்சலிக்காக வைத்தார்கள். அதைப் பார்த்தவுடன் எனது மனைவி மயக்கமடைந்து விட்டாள். ஆறு மாதங்கள் கோமா நிலையில் இருந்து மரணமானாள். இவற்றையெல்லாம் சிந்தித்தால் விசர் வரும். நல்ல வேளை கார்த்திகா புனர்வாழ்வு பெற்றுத் திரும்பி வந்தாள். எனக்குப் பிள்ளைகள் இல்லாத குறையை அவள் தான் நீக்கியுள்ளாள். எனது சகோதரியின் வீட்டை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வாடகைக்கு கொடுத்திருந்தேன். கார்த்திகா தனக்குத் தேவையென்றாள் வெளிநாட்டு நிறுவனத்திடம் இருந்து பெற்றுக் கொடுத்துள்ளேன். இப்போ மிக மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன்” என்றார் பேரம்பலம்.

“நீங்கள் நல்லதொரு ஆசிரியர். அததுடன் நல்லதொரு அதிபர். ஏன் ஐம்பத்தைந்து வயதில் இளைப்பாறினீர்கள்?” என்று கேட்டான் வளவன்.

நீண்ட பெருமூச்சு ஒன்று விட்டார் பேரம்பலம். பின் சொன்னார், "எல்லோரும் இயக்கத்தின் தீவிர ஆதரவாளர்கள். இயக்கப் பொறுப்பாளர்கள் அதிகாரிகளை நம்பினர். ஆனால் அதிகாரிகள் தமக்குத் தேவையானவர்களுக்குத் தான் பதவிகளை வழங்கினர். சேவை, மூப்பு, தராதரம் பாராது அதிகாரிகள் தமக்குத் தேவையானவர்களையே அதிபர் பதவிக்கு நியமித்தனர். தொன்னூறாம் ஆண்டுக்குப் தன் தரமுள்ள அதிபர் எவரும் உயர்தரப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவில்லை. நான் இரண்டாம் தரப் பாடசாலை ஒன்றில் தான் கடமையாற்றினேன். ஊரில் உள்ள வன் ஏ. பீ சீ பாடசாலைகளுக்கு என்னைத் தான் நியமிக்க வேண்டும். நான் நேர்மையானவர். சலுகைகளை விரும்பாதவன். யாரிடமும் உதவி கோராதவன். சாதியில் குறைந்தவன். அதனால் நான் கற்ற பாடசாலைக்கு அதிபர் பதவி வெற்றிடமான போது எனக்குத் தரவில்லை. இன்னொருவருக்குக் கொடுத்தார்கள். அவர் அதிகாரியின் மனைவியின் கையாள். அதிகாரி இயக்கத்துடன் நெருக்கமாக உறவாடும்படி கூறியதற்கிணங்க அவர் இயக்கத்துடன் ஒட்டி உறவாடினார். பின்பு அரசுடன் சேர்ந்த அரசியல் கட்சியில் சேர்ந்து அதில் முக்கியஸ்தராக இருந்தார்.

சந்தர்ப்பவாதிகள் தருணத்திற்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக் கொள்வார்கள்" என்றார் பேரம்பலம்.

"அப்போ நீங்கள் அதைப் பற்றிக் கேட்கவில்லையா?" என்று கேட்டான் வளவன்.

"கேட்டனான். பல பதில் கூறினார்கள். எல்லோரும் இயக்கம் என்றிருந்த வேளையில் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை." என்றார் பேரம்பலம்.

"குடாநாட்டுக் கல்வி இப்போ சீரழிந்து விட்டது என்று சொல்கிறார்கள். அது உண்மையா?" என்று கேட்டான் வளவன்.

"சீரழியவில்லை. முற்றாக அழிந்து விட்டது. உதாரணமாக ஆரம்பக் கல்வி தான் அத்திவாரம் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு பாலர்களை எப்படிக் கற்பிக்க வேண்டும் என்று இரண்டு வருடங்கள் ஆசிரியர் கலாசாலையில் பயிற்றுவிக்கிறார்கள். மேலைநாடுகளில் ஆரம்பக் கல்விக்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கு அப்படி அல்ல. ஆரம்பக் கல்வியை யாரும் கற்பிக்கலாம் என்று நினைத்து விஞ்ஞானம், கணிதம் ,விவசாயம் போன்ற பாடங்களைக் கற்பிக்கும்

ஆசிரியர்களை செல்வாக்குக் கருதி ஆரம்பக் கல்வி முதன்மை ஆசிரியர்களாகவும், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களாகவும் நியமிக்கின்றனர். இதனால் ஆரம்பக் கல்வி பற்றி எதுவும் தெரியாத அவர்கள் சரியாகக் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கெடுக்கின்றனர். பிழையான தகவல்களையும் தவறான கற்பித்தல் முறைகளையும் அறிமுகப்படுத்துகின்றனர். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பார்கள். ஆரம்பக் கல்வி பற்றி அணுவளவும் அறிவில்லாத அவர்களால் அத்திவாரமே தகர்க்கப்படுகிறது" உணர்ச்சிவசப்பட்டார் பேரம்பலம்.

வளவன் அதிர்ந்து போனான். அவனால் அவற்றை நம்ப முடியவில்லை. போரும், அரசின் மூர்க்கத்தனமான தாக்குதல்களும் தான் எம் மக்களின் கல்வியை அழிக்கிறது என்று புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் அறிஞர்கள் கூற பேரம்பலம் ஆசிரியர் எம்மவர்களால் தான் வடபகுதியின் கல்வி அழிக்கப்படுகிறது என்று கூறுகிறார். அதற்கு நியாயமும் கற்பிக்கிறார்.

“வயதில் மிகமிகக் குறைந்தவர்கள் பெரிய பாடசாலைக்குச் செல்வாக்குக் காரணமாக நியமிக்கப்பட்டால் அவருக்குக் கீழ்க் கடமையாற்றும் அனுபவம் மிக்க மூத்த ஆசிரியர்கள் எப்படிக் கற்பிப்பார்கள்? செல்வாக்குள்ள அற்பத்தனமான அதிபரை எப்படி மதிப்பது? அதனால் அதிபராகப் பொறுப்பேற்றவர் அலுவலகத்தில் முடங்கி விடுவார். ஆசிரியர்கள் தமது வேலையைப் பார்ப்பார்கள். அதிபரென்றால் தரம் இருக்க வேண்டும். ஆசிரியர்களை விடக் கற்றவராக இருக்க வேண்டும். ஆசிரியர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்து வைத்தல் வேண்டும். கற்பித்துக் காட்டுதல் வேண்டும். இது எதுவும் தெரியாத ஒருவரை எப்படி அதிபர் என்று ஏற்பது? இதை விட அதிசயம் என்னவென்றால் உச்ச நிலையில் இருந்த பாடசாலையைக் கெடுத்தவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கியும் இருக்கிறார்கள்” உணர்ச்சிவசப்பட்டார் பேரம்பலம்.

பேரம்பலம் கடமையைச் சரிவரச் செய்பவர். மாணவரின் கல்வியில் அக்கறை கொண்டவர். கல்வியைக் கரைத்துக் குடித்தவர். அப்படியிருக்க அவர் விண்ணப்பித்த கல்லூரிக்கு எந்தத் தகைமையும்

இல்லாத நாற்பது வயதுடைய செல்வாக்கு மட்டும் உள்ள பழைய மாணவர் அல்லாத ஒருவரை அதிபராக நியமித்தால் அவர் எப்படி ஏற்பார். இப்படி எல்லா பாடசாலைகளுக்கும் அதிபர்கள் நியமிக்கப்படாமையால் தான் எமது கல்வி அழிந்தது” என்றாள் கார்த்திகா.

“இன்றும் அது தான் நடக்கிறது. கல்வித் துறையில் மட்டுமல்ல ஏனைய எல்லாத் துறைகளிலும் அதிகாரிகளுக்கு வேண்டியவர்களுக்கே பதவிகள் வழங்கப்படுகின்றன. விருதுகள் வழங்கப்படுகின்றன.” என்றார் பேரம்பலம்.

வளவனால் பேரம்பலம் சொன்னதை நம்ப முடியவில்லை.

“இதெல்லாவற்றையும் நம்புவது கஷ்டம் தான். ஆனால் நான் பொய் சொல்லவில்லை. உயர் பதவியில் உள்ளவர்களை நம்பித் தான் அரசாங்கம் உள்ளது. பொறுப்பானவர்கள் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். ஆசிரியர்கள் , அதிபர்களுக்குத் துணிவு இல்லை. எது வேண்டுமானாலும் நடைபெறட்டும் எமக்குச் சம்பளம் வந்தால் சரி என்றே பலரும் நினைக்கிறார்கள். இதை மீறிச் சிலர் கண்டனம்

செய்வார்கள். ஊர்வலம் போவார்கள். முதல் முறை நூறு பேர் கலந்து கொண்டால் இரண்டாம் முறை இருபது முப்பது பேர் தான் கலந்து கொள்வார்கள். அதன் பின் ஊர்வலத்தை ஏற்பாடு செய்த ஓரிருவர் தான் செயற்படுவார்கள். பின் அவர்களும் ஒதுங்கி விடுவார்கள். இது எல்லோருக்கும் தெரியும். அதனால் பயன் எதுவும் உண்டாவதில்லை." என்றார் பேரம்பலம்.

"சேர் அதிபராக இருக்கும் போது நாம் அங்கே படித்தோம். அப்போது பாடசாலை நல்ல நிலையில் இருந்தது. பின் நாம் ஏ.எல் படிக்க பெரிய பாடசாலைக்குச் சென்றோம். அப் பெரிய பாடசாலைக்கு அதிபராகச் சேர் தான் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் உயரதிகாரியின் கையாள் ஒருவர் நியமிக்கப்பட்டதால் இரண்டாயிரம் பிள்ளைகள் ஆயிரமாகக் குறைந்து இப்போ நானூறு ஐந்நூறு பிள்ளைகள் கற்கிறார்கள். காலப்போக்கில் மூட வேண்டிய நிலை ஏற்படலாம்" என்றாள் கார்த்திகா.

"சரி சரி இதுகள் ஒரு நாளும் தீராது. அதை விட்டு விட்டு உனது சுக நலன்களைச் சொல்லு." என்றார் பேரம்பலம்.

வளவன் உடனே பதில் சொல்லவில்லை. கார்த்திகாவைப் பார்த்தான். அந்தப் பார்வை கார்த்திகா அங்கு இருப்பது பிடிக்கவில்லை என உணர்த்தியது.

“நீங்கள் கதையுங்கோ. நான் ரீ கொண்டு வாரன்” என்று சொல்லி விட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள் கார்த்திகா.

“ஏதோ வாழ வேண்டும் என்பதற்காக வாழுறம். நல்ல நாடு.சகல வசதிகளும் இருக்கிறது. அகல்யா நல்ல குடும்பப் பெண் .என்னைக் கண்கலங்காது பாதுகாக்கிறாள். இருந்தும் மகிழ்ச்சியில்லை” வளவனின் குரல் கரகரத்தது.

உடனே பேரம்பலம் பதில் கூறவில்லை. சிறிது நேரம் கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தார். பின், “இறைவனால் படைக்கப்பட்ட அத்தனை உயிர்களுக்கும் பல்வேறு விதமான குறைகள் இருக்கிறது. நீ வாழும் நாட்டை எடுத்துப் பார். எல்லோரும் மகிழ்வுடன் இருக்கிறார்களா? மனைவி பிள்ளைகளுடன் மகிழ்ந்திருக்க நேரமில்லை. உற்றார் உறவினர், பெற்றாரைக் காண முடிவதில்லை. மனைவியோடு பிரச்சனை, பெற்றாரோடு பிரச்சனை,

இனத்தவரோடு பிரச்சனை. இப்படிப் பிரச்சனைகளுடன் தான் பலர் வாழ்கின்றனர். சென்ற வாரம் பிரான்சில் இருந்து நாகராசாவின் மகள் வந்திருந்தாள். அவள் எனது மாணவி. என்னைச் சந்திக்க வந்த நேரம் முதல் போகும் வரை தனக்குள்ள துன்பங்களைச் சொல்லிச் சொல்லி அழுதாள். அவள் கேசவனைக் காதலித்து பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் திருமணம் செய்தவள். இப்ப கேசவன் இன்னொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளானாம். வீட்டுக்கு வருவதில்லையாம். என்னை அவனுடன் போனில் கதைக்கச் சொன்னாள். என்னுடன் அவன் சில நிமிடங்கள் தான் கதைத்தான். பின்பு தனக்கு முக்கிய வேலை இருக்கென்று சொல்லித் தொடர்பைத் துண்டித்து விட்டான். பிறகு நாலைந்து முறை நான் எடுத்தேன். அவன் எடுத்துப் பேசவில்லை,நீ காதலுக்காக உருகுகிறாய். அவன் காதலித்தவளை வெறுக்கிறான். இது தான் உலகம். உலகைப் புரிந்து கொண்டால் எது நடந்தாலும் அதைப் பற்றி கவலை உண்டாகாது” என்றார் பேரம்பலம்.

அப்போது ஒரு பெண் தேநீரும் வடையும் கொண்டு வந்து பேரம்பலத்தின் மேசையில் வைத்தாள்.

## 14

“காதல் என்பது இரண்டு மனங்களிலும் சரிசமமாக இருத்தல் வேண்டும். அது இறப்பு வரை தொடர வேண்டும். ஒருவரிடம் கூடி, இன்னொருவரிடம் குறைந்து கொண்டு வந்தால் தொந்தரவுகள், பிரச்சனைகள், சிக்கல்கள் உண்டாகும். வேண்டாப் பொண்டாட்டி கை பட்டால் குற்றம். கால் பட்டால் குற்றம் என்று சொல்வார்கள். காதலிக்கும் போது இனிக்கும் செயல்கள் கல்யாணமான பின் கசப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அது எமது சமூக அமைப்பால் உண்டானது. பணம், பொருள், பதவி, சாதி என்று மனிதனை ஆட்டிப் படைக்கும் விடயங்கள் உண்டு. இவற்றை எல்லாம் மீறியது அன்பு என்ற காதல். அந்தக் காதல் எந்த வேளையிலும் உயிர்ப்புடன் இருத்தல் வேண்டும். குறைவுபடாமலும் இருத்தல் வேண்டும். சிறிது நேரத்திற்கு முன் எமக்குத் தேநீர் கொண்டு வந்தவள் ரேவதி.பெரிய பணக்காரனின் மகள். பதினாறு வயதில் ஒருவனைக் காதலித்து அவனுடன் சென்று விட்டாள். அவன் படிக்கவில்லை. பணம், பொருள் இல்லாதவன். ரேவதி பெரும் பணக்காரி

என்பதை அறிந்து அவளை அழைத்துச் சென்று விட்டான். தகப்பன் கொடியவன். யாரின் சொல்லும் கேட்காதவன். அவன் தனது சொத்து முழுவதையும் ஏனைய மூன்று பிள்ளைகளுக்கும் பங்கிட்டு எழுதி விட்டான். ஆறு மாதங்கள் ரேவதி அவனுடன் குடும்பம் நடத்தினாள். பெருங் கஷ்டம். அவனும் அவனின் தகப்பனும் குடித்து விட்டு வந்து ரேவதியைக் கொடுமைப்படுத்தினார். தகப்பனிடம் பணம் வாங்கி வரும்படி வீட்டை விட்டுத் துரத்தி விட்டனர். ரேவதியைத் தகப்பன் ஏற்கவில்லை. அதனால் அவள் தற்கொலை செய்வதற்காகக் கிணற்றில் குதித்தாள். அது ஆழமான தோட்டக் கிணறு. கார்த்திகாவின் தலைமையில் அக் கிணற்றடியில் போராளிகள் பலர் இருந்தனர். அவர்கள் அவளைக் காப்பாற்றினர். ரேவதி தன்னைச் சாகவிடும்படி கதறினாள். அவளின் நிலைமையை உணர்ந்த கார்த்திகா தனது முகாமுக்குக் கூட்டிச் சென்றாள். பின் புனர்வாழ்வு பெற்று வந்தாள். தகப்பன் இறந்து விட்டார். தாயார் ரேவதியைச் சேர்த்துக் கொள்ளும்படி மன்றாடியும் சகோதரர்கள் சேர்த்துக் கொள்ளவில்லை.அதனால் அவள் கார்த்திகாவுடன் இருக்கிறாள்” என்றார் பேரம்பலம்.

“பொருளில்லாதவனுக்குப் பல பிள்ளைகள். பொருளுள்ள பலருக்குப் பிள்ளைகள் இல்லை. அது போலத் தான் உண்மையாகக் காதலிப்பவர்களுக்குப் பிரிவு ஏற்படுகிறது” என்று நினைத்தான் வளவன்.

ரேவதியின் கதையை மட்டும் தான் நான் உனக்குக் கூறியுள்ளேன். இங்கு ஏராளமான புனர்வாழ்வு பெற்ற போராளிகள் வாழ்கின்றனர். அவர்களின் கதைகளைக் கேட்டால் உன்னால் அல்ல யாராலும் தாங்க முடியாது” என்று நிறுத்தியவர் சிறிது நேரம் கழித்துச் சொன்னார்.

இந்த வீட்டை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு வாடகைக்குக் கொடுத்திருந்தேன். அவர்கள் தம் பணியை முடித்து விட்டுச் சென்று விட்டனர். அதன் பின் வாடகைக்குப் பலர் கேட்டனர். அவ்வேளையில் கார்த்திகா கேட்டாள். கொடுத்து விட்டேன். இப்போ இங்குள்ளவர்கள் எனது சகோதரிக்கு வீட்டைப் பற்றிக் கண்டபடி எழுதுகிறார்கள். இயக்கத்திற்குக் கொடுத்துள்ளீர்கள். அதனால் பல்வேறு பிரச்சனைகள் வரும். வாடகைக்குக் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. வீட்டை மறியுங்கோ என்று பலர் தினமும் ரெலிபோனில் பேசுகிறார்கள். நான் இயக்கக்

காரனாம். அதனால் இயக்கத்தில் இருந்தவர்களை ஆதரிக்கிறேனாம்." என்று சொல்லியுள்ளார்கள். எனது சகோதரி ஆரம்பத்தில் அதைப் பெரிதாக எடுக்கவில்லை. காலம் செல்லச் செல்ல அவளின் மனநிலையும் மாறுபடுகிறது. எதைச் சொன்னாலும் கேட்கிறாளில்லை. இப்போ நான் ஆறு மாத கால தவணை கேட்டுள்ளேன்.

குறுக்கிட்டான் வளவன் . "ஆறு மாதங்களின் பின் என்ன செய்யப் போறியள்"?பரபரத்தான் வளவன்.

"எல்லாம் கடவுள் விட்ட வழி . கார்த்திகா தான் தொடங்கும் தொழில் இவ்வளவு முன்னேறும் என்று கனவு கூடக் காணவில்லை. மாதா மாதம் பெரியதொரு தொகைப்பணம் இலாபமாகக் கிடைக்கிறது. அத்துடன் கார்த்திகா தோட்டத்தை விற்ற பணத்தில் ஒரு பகுதியை வங்கியில் நிரந்தர வைப்பில் இட்டிருக்கிறாள். நான் பென்சன் எடுக்கும் போது தந்த பணத்தை வங்கியில் வைப்பிலிட்டேன். அது ஒரு பதினைந்து இலட்சம் வரும். வங்கியில் கடன் எடுக்கலாம். என்னுடைய வீட்டோடு எனக்குப் பத்துப் பரப்புக் காணி இருக்கு. இதை அப்படியே அங்கே நகர்த்தலாம் என்று நினைக்கிறேன். எனக்கு யார்

இருக்கிறார்கள். எனது மகள் உயிரோடு இருந்திருந்தால் அவளுக்குக் கொடுத்திருக்கலாம்” உணர்ச்சிவசப்பட்டார் பேரம்பலம்.

“உங்கடை இனத்தவை ஏதும் சொல்ல மாட்டார்களா?” வளவன் கேட்டான்.

“எனது மனைவிக்குத் தனது இனத்தவர்களைப் பிடிக்காது. எல்லோரும் பொருளுக்கு அடிபடுகிறார்கள். எனக்குச் சேர வேண்டிய காணி பூமிகளை உங்களின் பெயருக்கு மாற்றி விடுகிறேன். பிற்காலத்தில் உங்களைப் பார்ப்பவர்களுக்கு எழுதிக் கொடுங்கள் என்றவள். நான் சட்டப்படி எழுதுவித்தனான். பிறகு அவளது இனத்தவர்கள் நான் கள்ள உறுதி முடித்ததாயும் சொல்வார்கள்” என்றார் பேரம்பலம்.

“எப்ப போவதாய் உத்தேசம்?” வளவன் கேட்டான்.

“வேலை தொடங்கி விட்டோம். இரண்டொரு மாதத்தில் செல்லலாம் என்று நினைக்கிறேன்.அத்துடன் எனது காணிகளை எனக்குப் பின்பு கார்த்திகாவுக்கு உரியதென்றும் எழுதப் போகிறேன். அவள் என்னைத் தன்னுடைய தகப்பனைப் போலப் பார்ப்பாள்” கண் கலங்கினார் பேரம்பலம்.

வளவனுக்கு கார்த்திகாவைக் காண வெறுப்பாக இருந்தது, "உயிருக்குயிராக நேசித்தவனை உதறித் தள்ளி விட்டு ஊர் பேர் தெரியாத நூற்றுக் கணக்கான அனாதைகளுக்கு உதவுறாவாம்..."

"சரியான மனவலிமை மிக்கவள் கார்த்திகா.தனிய நின்று பெரியதொரு நிறுவனத்தை உருவாக்கியுள்ளாள். இப்படி ஒரு நிறுவனத்தை உருவாக்கிப் பராமரிக்க முடியாது. எவ்வளவு சோதனைகள், வேதனைகள் தெரியுமா? மனச் சாட்சியில்லாமல் நாக் கூசாது கண்டபடி கதைக்கிறார்கள். கார்த்திகா இயக்கத்தின் பணம் நகைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு வந்து விட்டாள் என்று கூறுகிறார்கள். இயக்கத்தோடு நின்ற பலர் கொள்ளையடித்துக் கொண்டு வந்து வீடு கட்டியிருக்கிறார்கள். காணி ,பூமி வாங்கியிருக்கிறார்கள். வாகனங்கள் வாங்கியிருக்கிறார்கள். கார்த்திகா போட்டிருந்த சட்டையோடு வந்தவள். அவள் காசு, நகை கொண்டு வந்திருந்தால் ஏன் தோட்டக் காணியை விற்க வேண்டும்?" என்று ஆத்திரப்பட்டாள் பேரம்பலம்.

அவளின் நிறுவனத்தைப் பார்க்க வளவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. நன்றாகத் திட்டமிட்டு யாவற்றையும் செய்திருந்தாள்.

“சனத்தின்ரை கொடுமை பெரிய கொடுமை. இயக்கப் போராளிகள் பலரைச் சேர்த்துப் பயிற்சியளிக்கிறாள்” என்று இராணுவத்திற்குப் பெட்டிசம் போட்டு விட்டார்கள்.ஒருநாள் இராணுவத்தினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர். கார்த்திகா புனர்வாழ்வு பெறும் போது சிங்களத்தைக் கற்றிருந்தாள். அதனால் அவள் நன்றாகச் சிங்களம் கதைப்பாள். வந்த இராணுவ அதிகாரி கார்த்திகாவுக்கு புனர்வாழ்வளித்தவர். அதனால் கார்த்திகாவுடன் அன்பாகப் பேசினார். காலில்லாத, கையில்லாத, கண்ணில்லாத பலர் வேலை செய்கின்றனர். அவர்கள் நடப்பதற்கே சிரமப்படுகின்றனர். அப்படியிருக்க போர்த்தளபாடங்களை எப்படி அவர்கள் தோளில் சுமப்பர் என்று கார்த்திகா கேட்டாள்”

அதற்கு அந்த அதிகாரி, “நாம் நம்பினாலும் உங்கள் ஆட்கள் அடிக்கடி பெட்டிசம் போட்டு எம்மையும் உங்களையும் துன்பப்படுத்துகிறார்கள். புகார்க் கடிதம் வந்தால் நாம் நடவடிக்கை எடுக்க

வேண்டும்” என்றார். இப்படி இருக்கும் போது நாம் என்ன செய்வது? என்று கேட்டார் பேரம்பலம்.

அப்போது வசந்தினி என்பவள் வந்து அவர்கள் தேநீர் குடித்து விட்டு வைத்த டம்ளர்களை எடுத்துச் சென்றனர்.

“வசந்தினி இங்கே வாம்மா” என்றார் பேரம்பலம்.

வசந்தினி பேரம்பலத்தின் அருகில் வந்து, “சொல்லுங்கள் ஐயா” என்றாள்.

“இவர் வளவன் .கனடாவில் இருந்து வந்திருக்கிறார். கார்த்திகாவின் மைத்துனர்” என்று பேரம்பலம் சொல்லும் போது ஆச்சரியத்துடன் வளவனை நிமிர்ந்து பார்த்தாள் வசந்தினி. நல்ல உயரம். திடமான தேகம். நல்ல சிவப்பு நிறம். அளவான மீசை. இப்போது கூட பெண்களை ஈர்க்கக் கூடிய ஒரு கவர்ச்சி அவனது உடலெங்கும் வியாபித்திருக்கிறது. பத்து வருடங்களுக்கு முன் எப்படி இருந்திருப்பான். என்று நினைத்தாள் வசந்தினி.

“வசந்தினி முல்லைத்தீவைச் சேர்ந்தவள். கார்த்திகாவின் படையணியில் இருந்தவள்.

இயக்கத்தில் இருந்த காலத்தில் யாருடனும் கலகலப்பாகப் பேசாதவள். தனது கடமையைச் சரிவரச் செய்பவள். போராளிகள் அவளது பெயரைக் கேட்டாலே நடுங்குவார். அப்படியானவள் புனர்வாழ்விற்குப் பின் முற்றாக மாறிவிட்டாள். சந்தர்ப்பமும் சூழ்நிலைகளும் அவளை முழுமையாக மாற்றியிருந்தன"

"வசந்தினிக்கு ஐந்து சகோதரிகள். அவர்களுள் மூவர் போராளிகள். அதில் இருவர் இடப் பெயர்வின் போது காணாமல் போய்விட்டனர். வசந்தினிக்குத் தலையில் பெரிய காயம். ஆகாய விமானம் குண்டு போடும் போது குண்டால் சிதறப்பட்டு தலை பிழந்து விட்டது. அதிஷ்டவசமாகத் தப்பிவிட்டாள். காயத்தைக் காட்டம்மா" என்றார் பேரம்பலம்.

வசந்தினி தலையில் வைத்திருந்த விக்கை எடுத்தாள். நெற்றிக்கு மேல் பெரிய காயம் இருந்தது. அதில் முடிகள் இல்லை. வளவனால் அதைப் பார்க்க முடியவில்லை. அவ்வளவு பெரிய காயம் அது.

“இவ்வளவு பெரிய காயத்திற்கு மருத்துவம் செய்யும் அளவிற்கு இயக்கத்திடம் வசதிகள் இருந்தனவா?” என்று கேட்டான் வளவன்.

“அப்படியான நவீன வசதிகள் இல்லாவிட்டால் காயப்படும் போராளிகள் மரணமடைந்து விடுவார்கள். இயக்கத்திடம் சகல வசதிகளும் இருந்தன. இருந்தும் என்ன பிரயோசனம்?” பெருமூச்சு விட்டார் பேரம்பலம்.

“வசந்தினியின் தாயும் தகப்பனும் நந்திக் கடலூடாக வரும் போது கடலில் மூழ்கி இறந்து விட்டனர். அவர்களது உடலை யாரும் எடுத்தரவில்லை. அந்த நிலையில் யார் இருந்தாலும் அதைத் தான் செய்வார்கள். தன்னையே காப்பாற்ற முடியாத ஒருவரால் மற்றவர்களை எப்படிக் காப்பாற்ற முடியும். இப்போ வசந்தினியின் சகோதரிகள் இருவர் முல்லைத்தீவில் வசிக்கிறார்கள்.ஒருத்திக்குத் திருமணமாகி விட்டது. புலிகள் இயக்கதத்தின் தொழிற்சாலையில் வேலை செய்தவள். இயக்கம் பல தொழிற்சாலைகளை வைத்துப் பலருக்கு வேலை கொடுத்திருந்தது. அங்கு பல்லாயிரம் பேர் வேலை செய்தனர். இப்போ அவர்களுக்கு வேலை இல்லை. எல்லோரும் கஷ்ரப்படுகிறார்கள். வசந்தினியின்

சகோதரியின் கணவன் புலிகள் இயக்கத்தில் வேலை செய்தவன். இப்போ கூலி வேலை செய்கிறான்” என்றார் பேரம்பலம்.

ஒவ்வொருவரினதும் கதையைக் கேட்க வளவனுக்கு தலை சுற்றியது.

“வசந்தினி கெட்டிக்காரி.அவளை முல்லைத்தீவுக்குச் சென்று அங்கு ஒரு தொழிற்சாலை அமைத்து அங்குள்ளவர்களுக்கு வேலை கொடுக்குமாறு கார்த்திகா பலமுறை சொல்லியும் வசந்தின கேட்கிறாளில்லை” என்றார் பேரம்பலம்.

“நிதியில்லாவிட்டால் சொல்லுங்கோ. நான் தருகிறேன். தொழிலைத் தொடங்குங்கோ.” என்றான் வளவன்.

“நிதிப்பிரச்சனை இல்லை. தேவையான பணத்தை அக்கா தருவா.எனக்கு விருப்பம் இல்லை. பத்து வருடங்கள் இயக்கத்தில் மகிழ்ச்சியாகவும் ,நிம்மதியாகவும் இருந்தேன். வஞ்சகர்களின் சதியால் அடிமைகளானோம். புனர்வாழ்வு பெறும்போது துயரடைந்தோம். புனர்வாழ்விற்குப் பின்பு நரகத்தில் வாழ்கிறோம். எம்மை ஆதரித்து

உற்சாகப்படுத்தியவர்கள் எம்மை இப்போது இம்சிக்கிறார்கள். அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அக்கா எமக்கு வாழ்வளித்துள்ளார். அவருக்குள்ள மனத் துணிவு ,ஆளுமை எனக்கில்லை. முன்பு இருந்தது. இப்போது இல்லை. ஒரு இலட்சியத்தை நோக்கித் துணிவுடன் போராடினோம். அப்போது எந்தக் குறைகளும் இல்லை. இப்போது ஆயிரக் கணக்கான பிரச்சனைகள் அதனால் துணிவு, ஆளுமை யாவும் அற்றுப் பலவீனப்பட்டு விட்டேன். இப்போது உயிர் வாழ உணவும், மானங் காக்க உடையும் இருந்தால் போதும் என்ற மனநிலையில் தான் இருக்கிறேன். அக்கா போராளிகள் எல்லோரும் மகிழ்வுடன் இருக்க வேண்டும் என்று விரும்புறா. ஆனால் இங்குள்ள எவருக்கும் அந்த எண்ணமில்லை. அத்துடன் கொடியதொரு போர் நடைபெற்றது..அதில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் அழிந்தன. பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிந்தன என்ற எண்ணமே இல்லை” உணர்ச்சிப் பிழம்பானாள் வசந்தினி.

# 15

வளவன் அவள் பேசுவதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அவளின் பேச்சில் அளவுக்கதிகமான உணர்ச்சிப் பெருக்கு இருந்தது. கோபமும் ஆத்திரமும் கலந்திருந்தது. இயலாமையும் விரக்தியும் ஏமாற்றமும் கலந்திருந்தது.

"எம்மைச் சந்தித்த பிரமுகர்களெல்லாம் எமக்காக உயிரை விடவும் தயாராக இருப்பதாகக் கூறினர். ஆனால் இப்போ உயிரை எடுக்கவும் தயாராக உள்ளனர். நாம் துன்பங்களால் துவண்டு இனி இழப்பதற்கு எதுவும் இல்லை என்ற நிலையில் இருக்கிறோம். ஆனால் எம்மை ஆதரித்தவர்கள் தாம் எமக்குக் கூறியவற்றை மேடை அமைத்து கூறி வருகின்றனர். செத்த வீட்டில் மைக் கொடுத்தால் புரட்சிகரமாகப் பேசுகின்றனர். தேர்தல் வந்தால் வாக்குக்காக எதையும் பேசத் தயங்க மாட்டார்கள். தேர்தல் முடித்துவிட்டால் எல்லாம் முடிந்து விடும்'' கனல் பறந்தது அவளது பேச்சில்.

வளவனுக்கு அவள் பேசுவது புதுமையாக இருக்கவில்லை. நாடு சுதந்திரமடைந்ததில் இருந்து பேசிப் பேசிப் பழகியதையே இப்போதும் பேசுகிறார்கள் என்று நினைத்தான் வளவன்.

‘‘நாம் எல்லாவற்றிற்கும் சிங்கள அரசைக் குறை கூற முடியாது. கல்வியைப் பொறுத்தவரையில் சிங்களத் தலையீடு இல்லை. அதிகாரிகள் எல்லோரும் தமிழர்கள். அதிபரும் ஆசிரியர்களும் தமிழர்கள். அப்படியிருக்கும் போது கல்வியில் அக்கறைப்பட்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றி கல்வியை மேம்படுத்தலாம் தானே. அப்படிச் செய்கிறார்களா? உயர்தரத்தில் தமிழ்ப்பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் முன் வருவதில்லை. மாணவர்கள் விரும்பத்தக்க முறையில் தமிழைக் கற்பிக்க யாரும் இல்லை. அதனால் தமிழ்ப் பாடத்தை இன்றைய மாணவர்கள் கற்க விரும்புவதில்லை’’

வளவனுக்கு அவளின் வார்த்தைகள் அதிர்ச்சியைக் கொடுத்தது. ‘‘தாய் மொழியைக் கற்பிக்க ஆசிரியர் இல்லையா?’’ வளவனுக்கு அதிசயமாக இருந்தது.

‘‘இங்குள்ள அதிகாரிகள் தான் அதிபர்களை நியமிக்கிறார்கள். பேரம்பலம் சேர் திறமையானவர். சகல நுணுக்கங்களும் அறிந்தவர் அவர் இளைப்பாறும் வரை அவர் கற்ற பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்படவில்லை. அது அவருக்கு இப்போதும் கவலையளித்துக் கொண்டிருக்கிறது. வடமாகாணத்தின்

எந்த வலயத்திலாவது ஆரம்பக் கல்வி முதன்மை ஆசிரியராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் ஆரம்பக் கல்வியைக் கற்ற எவரும் நியமிக்கப்படவில்லை. கணிதம், விஞ்ஞானம் , விவசாயம் போன்ற பாடங்களைக் கற்ற அதிகாரிகளுக்கு வேண்டியவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். இப்படியிருக்க கல்வி எப்படி முன்னேறும். ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கலாசாலைகளிலும் கல்விக்கல்லூரிகளிலும் வீட்டில் இருந்து பாடசாலைக்கு வரும் பாலர்களை எப்படி வசியம் செய்வது ,எப்படி அவர்களோடு உறவாடுவது ,எப்படிக் கற்பிப்பது என்று இரண்டு வருடங்கள் பயிற்சி கொடுக்கிறார்கள். இவர்களை ஒதுக்கிவிட்டு விஞ்ஞான, கணித, விவசாய ஆசிரியர்களை நியமித்தால் பயன் என்னவாகும்?" உணர்ச்சிவசப்பட்டதால் வசந்தினிக்கு கீழ் மூச்சு மேல் மூச்சு வாங்கியது.

வளவனால் எதுவும் பேசமுடியவில்லை. "உதை விடம்மா" நாம் பேசி ஏதாவது நடக்கவா போகுது?என்றார் பேரம்பலம்.

"எதுவும் நடக்காது. எதுவும் நடக்காவிட்டாலும் நாலு பேர் அறியட்டும். நீங்கள் ஓர் எழுத்தாளர். பல

நூல்களை வெளியிட்டுள்ளீர்கள். பல கல்வியாளர்களை உருவாக்கியுள்ளீர்கள். நீங்கள் எழுதிய கட்டுரைகள் பலவற்றை நான் வாசித்துள்ளேன். சிறந்த கல்வியாளர்களை உருவாக்குவது எப்படி? நல்ல மாணவர்களை உருவாக்குவது எப்படி? என்றெல்லாம் எழுதியுள்ளீர்கள். ஆனால் அதற்காக உங்களுக்கு விருதுகள் எவையும் வழங்கப்படவில்லை. உங்களது கல்வி சம்பந்தமான பல நூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இந்த நூல்களை வாசித்து விருது வழங்குவது யார்? தமிழர்கள் தானே. இதுவரை விருதுகள் வழங்கப்பட்டவர்களின் நூல்களைக் கடைகளில் பெற முடியுமா? நீங்கள் பத்து வருடங்களுக்கு முன் எழுதிப் பிரசுரித்த நூல்களை இன்றும் புத்தகக் கடைகளில் பெறலாம். இந்த வருடம் விருது கொடுக்கப்பட்ட நூலை எங்கு பெறலாம் என்று சொல்லுங்கள்" என்றாள் வசந்தினி.

"இங்கு நாம் நினைத்துக் கூடப் பார்க்காத பல விடயங்களில் ஊழல் நடைபெறுகிறது. இதைத் தடுக்க முடியாதா?" என்று யோசித்தான் வளவன்.

"இங்கு ஊழல் இல்லாத விடயங்கள் எதுவும் இல்லை. பாடசாலைகளில் பிள்ளைகளைச்

சேர்ப்பதற்குப் பணம் வழங்க வேண்டாம் என்று அடிக்கடி அரசாங்கம் கூறுகிறது. ஆனால் பிரபலமான பாடசாலைகள் பணம் பெறுவதாகக் கூறுகிறார்கள். சில நாட்களுக்கு முன் ஆரணியின் சகோதரியின் மகளைப் பாடசாலையில் சேர்க்க முடியாதென்றார்கள். இவற்றிற்கெல்லாம் காரணம் எமது மக்கள் தான். தானும் தனது குடும்பமும் நன்றாக வாழ வேண்டுமென்பதற்காகச் சட்டவிரோதமாகப் பலவற்றைச் செய்கிறார்கள். இலஞ்சம் கொடுப்பவன் புகாரிட்டால் தானே வாங்குபவனைப் பிடிக்க முடியும்? யாவும் இரகசியமாக யாருக்கும் தெரியாமல் நடைபெறுகின்றன. அதனால் ஏழை எளியவர்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள்"என்றாள் வசந்தினி.

அப்போது அங்கு ஒருவர் வந்தார். பேரம்பலம் " வணக்கம் வாருங்கோ. ஆசனத்தில் அமருங்கள்" என்றார்.

வந்தவர் ஆசனத்தில் அமர்ந்தார்.. "நான் வரோதயன். ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். எனது மகளுக்கு அடுத்த புதன்கிழமை திருமணம். நான் சில நாட்களுக்கு முன்பு எனது நண்பனின் மகளின் திருமணத்தில் கலந்து கொண்டேன்.

மதிய வேளை பரிமாறப்பட்ட உணவு மிகவும் சுவையாக இருந்தது. அதனால் அதைச் சமைத்தவர் யாரெனக் கேட்டபோது உங்களைக் கூறினார்கள். காசைப் பற்றிப் பிரச்சனை இல்லை. நல்ல சுவையான உணவை ஐநூறு பேருக்குத் தர வேண்டும்" அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போது பேரம்பலம் குறுக்கிட்டுச் சொன்னார். "உணவு மட்டும் தானா?"

வந்தவர் சொன்னார், "இல்லை, குளிர்பானம், ஐஸ்கிறீம், சோடா, வெற்றிலை ,வருபவர்களுக்குக் கொடுக்கப் பலகாரப் பை, யாவும் வேண்டும். அதன் பின் சனிக்கிழமை நாலாஞ் சடங்கு நூறு ஆட்டிறைச்சிச் சாப்பாடு, இருநூறு கோழி கறிச் சாப்பாடு, நூறு சைவச் சாப்பாடு ,சோடா முந்நூறு..." என்று வந்தவர் கூறிக் கொண்டிருந்தார்.

பேரம்பலம் ஒரு படிவத்தைக் கொடுத்து, "ஐயா இதில் உங்களுக்குத் தேவையானவற்றை எழுதுங்கள். முக்கியமாக விலாசத்தை எழுதுங்கள். எழுதுவது சிரமமானால் நாம் படிவத்தை நிரப்புவோம். விபரத்தைச் சொல்லுங்கள்" என்றார்.

"எனக்கு எழுதுவது சிரமம்" என்றார் வந்தவர்.

“வசந்தினி ஐயாவை அழைத்துச் சென்று வரதநாயகியிடம் ஒப்படை” என்றார் பேரம்பலம்.

வசந்தினி வந்தவரை அழைத்துச் சென்றார்.

“பெரும் சமையலுக்கான உபகரணங்கள், தொழிலாளர்கள் உங்களிடம் இருக்கிறார்களா? என்று கேட்டான் வளவன்.

“இருக்கிறது. போராளிகளைத் தவிர நாம் வேறு எவரையும் வேலையில் அமர்த்துவதில்லை. போராளிகள் விசுவாசமானவர்கள். நம்பிக்கைக்கு உரியவர்கள். அத்துடன் வேறு இடங்களுக்குச் செல்ல மாட்டார்கள். சம்பளத்தை உயர்த்து என்றும் கோரமாட்டார்கள்”

“அப்படியா. நம்ப முடியாதுள்ளது” என்றான் வளவன்.

பேரம்பலம் சிரித்தார். பின்பு சொன்னார். “நம்மவர் எவரும் இவர்களை இலேசில் வேலைக்குச் சேர்க்க மாட்டார்கள். அத்துடன் அவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள். துரோகம் செய்ய மாட்டார்கள். ஒவ்வொருவரும் இது தமது நிறுவனம் என்றே நினைக்கிறார்கள். கார்த்திகாவும் இலாபத்தை

விரும்புவதில்லை. சம்பளத்திலும் குறைபாடுகள் இருப்பதில்லை”

“கோழி, ஆடு போன்றவற்றின் இறைச்சிகளை எங்கே வாங்குவீர்கள்?” வளவன் கேட்டான்.

“கோழிகளை வளர்க்கிறோம். அதனால் எமக்கு நல்ல வருமானம் உண்டு. தற்போது எம்மவர் ஆட்டிறைச்சி உண்பதில்லை. அதனால் ஆட்டிறைச்சியை வெளியே வாங்குவோம்” என்றார் பேரம்பலம்.

அப்போது ஆரணி வந்து தயங்கியபடி நின்றாள். “என்னம்மா. பிள்ளைக்கு ஏதாவது சுகமில்லையா?

அவள் பேசவில்லை. விம்மினாள். “என்னவென்று சொல்லு”

விம்மல் அழுகையாக மாறியது. விக்கி விசும்பி அழுதாள். அவளுக்கு ஏராளமான துன்பங்கள். பெற்றோருக்குக் குடியிருக்க வீடு இல்லை. அவர்கள் பலாலி விமான நிலையத்திற்கு அருகே இருந்தவர்கள்.அந்தப் பகுதி இன்னும்

விடுவிக்கப்படவில்லை. அதை விடப் பூபாலனால் பெரும் துன்பம்.

விக்கி விசும்பி அழுதவள் திடீரென்று அழுவதை நிறுத்தி விட்டுச் சொன்னாள்: “எனக்கு பூபாலனைத் தேவையில்லை. கார்த்திகா அக்காவும் நீங்களும் தான் எனக்கு எல்லாம். அக்காவுக்கு எல்லாவற்றையும் சொல்லி விட்டேன். தயவு செய்து என்னை நிம்மதியாக வாழ வையுங்கள். அவரால் எனக்கு இருபத்து நான்கு மணி நேரமும் துன்பம். எனக்கு விடுதலை பெற்றுத் தாருங்கோ. அக்காவுக்கு எல்லாம் தெரியும். அக்காவும், வளவன் அண்ணாவும் தான் வற்புறுத்தி இத் திருமணத்தைச் செய்து வைத்தார்கள். இயக்கத்தில் இருந்தவர் என்னைப் புரிந்து கொள்வார் என்று நினைத்தேன். ஏனைய பெண்களைப் போல நானும் திருமணமாகாமல் இருந்திருந்தால் எவ்வளவு சந்தோசமாக இருந்திருப்பேன். நாம் இருப்பதே இரவல் வீடு .அப்பா கூலி வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறார். அவரிடம் சீதனம் கேட்டால் அவர் எங்கே போவார்?” விம்மினாள் ஆரணி.

அப்போது அங்கே பூபாலனும் கார்த்திகாவும் வந்தனர். பூபாலனை வேலைக்கு வரக் கூடாதென்று

கார்த்திகா கூறிவிட்டு ரெலிபோனில், “உடனே வா” என்று கூறியதும் தனக்கு வேலை தரப் போகிறாள் என்று நினைத்து பூபாலன் அவசரமாக வந்தான். உள்ளே ஆரணியும் வளவனும் இருப்பதைப் பார்த்து அதிர்ந்து போனான்.

சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது. அந்த அமைதியைக் கலைத்தாள் கார்த்திகா, “உன்னுடைய கொடுமைகள் எல்லை மீறி விட்டன. நேற்று இரவு நடுச்சாமத்தில் ஆரணியை வீட்டை விட்டுத் துரத்தியுள்ளாய். ஊனமடைந்த அவள் இரண்டு பிள்ளைகளையும் தூக்கிக் கொண்டு நடுச் சாம வேளையில் நடுவீதியில் அமர்ந்திருந்த போது ஓட்டோவில் வந்த கதிர்காமு அவளையும் அவளது பிள்ளைகளையும் ஓட்டோவில் ஏற்றிச் சென்று தாயின் வீட்டில் விட்டுள்ளார். இனிமேல் இவற்றைப் பொறுக்க முடியாது. காதல் வசப்பட்டு அழுது குளறி உண்ணாமல் உறங்காமல் இருந்து அவளைத் திருமணம் செய்தனி. இப்ப அவளில் என்ன குறை கண்டாய்?”

பூபாலன் பேசவில்லை. “நான் பெரும் பிழை விட்டு விட்டேன். என்னுடன் படித்தவன் நல்லவன் என

நினைத்து விருப்பமில்லாத ஆரணியை வற்புறுத்தி உனக்குச் செய்து வைத்தேன். காதலிப்பதாகச் சொன்னாய். அவளைத் திருமணம் செய்யாவிட்டால் தற்கொலை செய்வேன் என்றாய்.இது தானா நீ காதலித்தததுக்கான பரிசு. டேய் காதல் என்றால் உனக்கு என்னவென்று தெரியுமா…? இரண்டு உயிர்கள் ஓருயிராவது தான் காதல். அப்படி ஓருயிரானால் ஒரு உடலுக்கு வலிக்கும் போது மற்ற உடலுக்கும் வலிக்கும். காலில் காயம் பட்டால் காலுக்கு மட்டும் வலிப்பதில்லை. உடல் முழுவதும் வலிக்கும். அது போன்றது தான் காதல் .உன்னைப் போய் காதலிக்கிறானென நம்பினேன். காதல் வசனம் பேசிய உன்னால் எப்படியடா அவளைத் தண்டிக்க முடிகிறது? அதுவும் கொடுமையாக. அவள் உன்னைக் காதலித்தவளா.?வலியச் சென்று காதல் மொழி பேசியும் அவள் கலங்காதிருந்தாள். கார்த்திகாவும் பேரம்பலம் சேரும் பற்றாததிற்கு நானும் உனக்காகப் பரிதாபப்பட்டோம். சீ.. உன்னை எனது நண்பன் என்று சொல்ல எனக்கு வெட்கமாயிருக்கு. இனிமேல் நான் சாகும்வரை உன்னுடன் தொடர்பு கொள்ள மாட்டேன்” வளவன் துயரத்தைத் தாங்க முடியாது அழுதான்.

கார்த்திகா திகைத்துப் போனாள். அவன் கலங்கியதை அவள் இதுவரை கண்டதில்லை. அவளது கண்களும் கலங்கின. நெஞ்சுக்குள் செல்கள் பல விழுந்து வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தன. தன்னைக் கட்டுப்படுத்த முயன்றாள். முடியவில்லை. நெஞ்சுக்குள் நிகழ்ந்த பிரளயம் சுனாமியாக வெடித்துச் சிதறியது. விம்மி விம்மி அழுதாள்.

பேரம்பலம் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார். அவரது கண்களும் கலங்கின. தனது பிள்ளைகள் இறந்த போது கலங்கித் தணிந்த அவரது விழிகள் மறுமுறையாக அன்று கலங்கின.

பூபாலன் திகைத்துத் திகிலடைந்து போனான். மூவரும் கலங்கினால் தனது நிலை என்னாகும் என்று அவனுக்குப் புரிந்தது. திகிலுடன் நால்வரையும் மாறி மாறிப் பார்த்தான

.
.

# 16

“காதலித்துத் திருமணம் செய்யும் காதலனின் மனதில் எப்போதும் காதலிக்கு எந்த விதமான குறைகளையும் நான் வைக்கக் கூடாது என்ற எண்ணம் மட்டும் தான் இருக்க வேண்டும். காதலிக்குத் தன் காதலன் எப்போதும் தன்னால் நன்மையும் மகிழ்ச்சியும் அடைய வேண்டும் என்ற எண்ணம் மட்டும் தான் இருக்க வேண்டும். பொன், பொருள், சீதனம் ,வீடு ,வாசல் என்பவற்றுக்கு ஆசைப்பட்டால் காதல் கருகி விடும். ஆரணிக்கு நீ தான் உலகம். உன்னைத் தவிர வேறு எதுவும் உயர்ந்தது அல்ல. இப்போ உனக்கு உனது பெற்றோரின் நினைவு வருகிறது. உறவினர்களின் நினைவு வருகிறது. பொன், பொருள், காசு பணத்தின் நினைவு வருகிறது. அதனால் இனி மேல் உன்னால் ஆரணியைத் திருப்திப்படுத்த முடியாது. அதனால் அவளை விட்டு விடு” என்றாள் கார்த்திகா.

பூபாலன் எதுவும் பேசவில்லை. பேசினால் கார்த்திகா காளியாக மாறிவிடுவாள் என்பது அவனுக்குத் தெரியும்.

“மனமொத்த காதலில் இதயத்தில் அன்பைத் தவிர வேறு எதுவும் உண்டாகாது. அந்த அன்பு

இருவருக்கிடையேயும் நெருக்கத்தை உண்டாக்குதல் வேண்டும். உலகில் அபூர்வமான சம்பவங்கள் எப்போதாவது ஒருமுறை நடைபெறும்.ஆனால் காதலரது உள்ளத்தில் தினமும் பல அபூர்வமான சம்பவங்கள் நிகழும். காதலனது செயல்கள் காதலிக்கும் காதலியின் செயல்கள் காதலனுக்கும் ஒருபோதும் திருப்தியளிக்காது.அதனால் அவர்கள் அடிக்கடிச் சந்தித்துத் தமது செயல்களைப் புதுப்பித்துக் கொள்கிறார்கள். இதை வள்ளுவன், "ஒரு நல்ல புத்தகத்தை வாசிக்கும் போது வாசிக்கும் ஒவ்வொருமுறையும் ஒவ்வொரு விதமான அர்த்தத்தைக் குறிக்கும். அது போலக் காதலர்கள் சந்திக்கும் போதெல்லாம் புதிய புதிய அனுபவங்கள் உண்டாகும் என்கிறார்.நீ காதலித்திருந்தால் தான் அது உனக்குப் புரியும். நீ உனது வக்கிரமான உணர்வைத் தீர்க்கத் தான் ஆரணியை விரும்பினாய். இப்படி நடக்குமென்டு தெரிந்து தான் நான் விரும்பவில்லை. ஆனால் நீ உயிரை விடுவேன் என்று மிரட்டினாய். அந்த நேரக் காதல் உயிரை விடச் சொன்னது. இப்போது உள்ள நிலை அவளின் உயிரை எடுக்கச் சொல்லுதோ?" கொதித்தாள் கார்த்திகா.

“பூபாலா, நன்றாக யோசித்து உனது முடிவைச் சொல்லு, ஆரணி தனது முடிவைக் கூறிவிட்டாள். அதில் அவள் திடமாகவும் உள்ளாள். நீ முடிவைச் சொன்னால் நானும் கார்த்திகாவும், வளவனும் ஆலோசித்து முடிவெடுப்போம்” என்றார் பேரம்பலம்.

அதற்கும் பூபாலன் பேசவில்லை, “உனது முடிவைச் சொல்ல ஏன் தயங்குகிறாய்? ஆரணியை எனது சகோதரியாகவே நினைக்கிறேன். எனக்குச் சகோதரிகள் இல்லை. அவளுக்கு நேர்ந்த துன்பம் இன்னொருவருக்கு நேரக் கூடாது. இயக்கத்தால் வந்த பின்பு தாங்கொணாத் துன்பத்தை அனுபவித்தாள். இப்போது பெருந்துன்பத்தை அனுபவிக்கிறாள்.அதற்கு விடுதலை வேண்டும். நீ எதற்கும் யோசிக்கத் தேவையில்லை. வேண்டாத உறவைத் தொடர்வதை விட முறித்துக் கொள்வது மேலானது” என்றான் வளவன்.

“எனக்குத் துணிவு இருக்கு. போதியளவு துணையும் இருக்கு. அதனால் அவரை விலக்கி விடுங்கள்” என்றாள் ஆரணி.

“எனக்கு விருப்பமில்லை. நான் தவறுகள் பல செய்துள்ளேன்.இனிமேல் தவறுகள் செய்ய மாட்டேன். இம்முறை என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்” என்றான் பூபாலன்.

“இப்படி எத்தனையோ தரம் சொல்லி விட்டார். அதை நம்பி நான் மோசம் போய் விட்டேன். இனியும் இவரை மன்னிக்க நான் தயாராக இல்லை” என்றாள் ஆரணி.

“ஆரணியின் விருப்பப்படி நடப்பது தான் நல்லது. தினமும் குடித்து விட்டு அவளைத் துன்பப்படுத்துகிறாய்.இரவிலும் அவளால் நிம்மதியாகத் தூங்க முடிவதில்லை.அதனால் பிரிவது தான் நல்லது. என்றான் வளவன்.

“வளவா, என்னை மன்னித்துக் கொள்ளடா. இனிமேல் நான் அப்படி நடக்க மாட்டேன்”அழுதான் பூபாலன்.

“உன்னுடைய அழுகையை நம்ப முடியாது.இப்போது இயலாமையால் அழுகிறாய். வீட்டுக்குச் சென்று குடித்து விட்டால் உனது மனம் மாறிவிடும். நினைத்த வாழ்க்கை கிடைக்காதவர்கள் கிடைத்த வாழ்க்கையை

ஏற்று மகிழ்வுடன் வாழ வேண்டும். ஏனென்றால் மனிதப் பிறவி ஒருமுறை தான் கிடைக்கும் என்கிறார்கள். கிடைத்தது எனது விதி என்று எண்ணி வாழ்பவன் தான் நல்ல மனிதன். ஆனால் உனக்கு நீ விரும்பிய வாழ்வு கிடைத்துள்ளது.அந்த வாழ்வு எப்படியானது என்று உனக்குத் தெரியும். தெரிந்த பின் வாழ்வைத் தொடக்கிய உனக்கு இப்போது ஏன் கிடைக்கக் கூடாதவற்றில் ஆசை வருகிறது? காதலிக்கும் போது என்ன சொன்னனீ என்று நினைத்துப் பார். ‘நான் இயக்கத்தில் இருந்தனான். எனக்குப் பொன், பொருள், வீடு, வளவு எதுவும் தேவையில்லை. அவற்றை என்னால் தேடிக் கொள்ள முடியும். ஆரணி இயக்கத்தில் இருந்தவள். அவளை வாழ்நாள் முழுவதும் மகிழ்வுடன் வாழ வைக்க வேண்டும்’ என்றாய் . இப்போ என்ன செய்கிறாய்?பூபாலா அவளை வாழ வை. அல்லது வாழ விடு. என்றான் வளவன்.

“இனிமேல் நான் ஆரணியைத் துன்புறுத்த மாட்டேன். இது பிள்ளையார் மீது சத்தியம்.” அழுதான் பூபாலன்.

“நான் எதையும் நம்பத் தயாரில்லை. எத்தனை தரம் கடவுளுக்கு முன்னால் கற்பூரம் கொழுத்திச் சத்தியம் பண்ணியவர். சத்தியத்திற்கு ஒரு சக்தி

இருக்கிறது. அதனால் தான் பெரியவர்கள் சத்தியம் பண்ணுமாறு வற்புறுத்துறார்கள்.எமக்குப் பெரியவர்கள் என்று இருப்பது அக்காவும், சேரும் தான். அவர்களின் முன் எத்தனை தரம் சத்தியம் பண்ணி இருப்பார்.காதலில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஊரில் நடைபெற்ற கதைகளைக் கேட்டால் காதலிப்பவர்களைக் கொல்ல வேண்டும் போல ஆத்திரம் வரும். காதலில் நம்பிக்கையில்லாதிருந்த எனக்கு நம்பிக்கையூட்டி மாயா ஜாலக் கதைகளைக் கூறி என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தி ஏமாற்றி விட்டு இப்போ கொடுமைப்படுத்துகிறார். இவரையோ, இவரது சத்தியத்தையோ நான் நம்பத் தயாரில்லை" என்றாள் ஆரணி.

"சரி. சரி நீ போய் வேலையைக் கவனி. உனக்கு இன்று நல்ல முடிவைச் சொல்லுவோம்" என்றாள் கார்த்திகா.

"சரி அக்கா" என்று கூறிச் சென்றாள் ஆரணி.

அப்போது வசந்தினி ஒரு பெரியவரை அழைத்துக் கொண்டு உள்ளே வந்தாள். "அண்ணா இவர்

உங்களைச் சந்திக்க வேண்டும் என்று வந்திருக்கிறார்” என்று கூறி விட்டுச் சென்றாள் வசந்தினி.

“தம்பி நான் இராகவனின் தாய் மாமன். உங்களது வீட்டுக்குச் சென்றேன். அம்மா இங்கு இருப்பதாகச் சொன்னா. முக்கியமான ஒரு விடயமாகக் கதைக்க வந்துள்ளேன்” என்றார் அந்தப் பெரியவர்.

“நீங்கள் ரதிதேவியினுடைய அப்பா செல்லத்துரை தானே.” கார்த்திகா கேட்டாள்.

“ஓம் பிள்ளை. இரண்டு மாதங்களுக்கு முன் ரதியும் நானும் உங்களது வீட்டுக்கு வந்தனாங்கள்” என்றார் செல்லத்துரை.

“சரி, வசந்தினி .இருவரையும் எனது அறைக்கு அழைத்துச் செல்” என்றாள் கார்த்திகா.

இருவரும் கார்த்திகாவின் அறைக்குள் வந்தனர். ஒரு மேசையில் கார்த்திகா அமர ,ஒரு நாற்காலியும் எதிரே இரண்டு நாற்காலிகளுக்கும் இருந்தன. அறைக்குத் தூய வெள்ளைப் பெயின்ற் அடிக்கப்பட்டு இருந்தது.

இருவரும் நாற்காலியில் அமா்ந்தனா், “ தம்பி நீங்கள் ஊருக்கு வந்திருப்பதாக எனது மகன் நாவுக்கரசன் சொன்னான். அவன் கனடாவில் தானே வசிக்கிறான். உங்களை ஒருமுறை வந்து சந்தித்தாகச் சொன்னான்”

அப்போது இரண்டு மாதங்களுக்கு முன் நாவுக்கரசன் வந்து சந்தித்தது நினைவுக்கு வந்தது.

“தம்பீ, எனக்கு ஐந்து ஆண் பிள்ளைகளும். ஒரு பெண் பிள்ளையும். ஐந்து பேரும் ஐந்து நாடுகளில் வசிக்கிறாா்கள். பொருளாதாரத்திற்கு குறைவில்லை. நான் எனது மகளை எவ்வளவு கனவுகளோடும், கற்பனைகளோடும் வளா்த்தேன். பாடசாலைக்கென்று சென்று அவள் அங்கிருந்து இயக்கத்திற்குச் சென்று விட்டாள். இப்போ புனா்வாழ்வு பெற்று விட்டு வீட்டுக்கு வந்துள்ளாள்.முகத்தில் லேசான எரிகாயம். காலில் இரண்டு விரல்கள் இல்லை. அதைத் தவிர அவளுக்கு வேறு எந்தக் குறையும் இல்லை. ஆனால் திருமணம் பேச ஒத்துக் கொள்கிறாளில்லை. இராகவன் ஊரில் இருக்கும் போது அடிக்கடி வீட்டுக்கு வந்து இயக்கம் சம்பந்தமாகப் பேசுவான். இருவரும் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருப்பாா்கள். அவன்

இயக்கத்துக்கு மிக மிக விசுவாசமானவன். பின் வெளிநாடு சென்று அங்கும் இயக்கத்திற்காக வேலை செய்தவன். இப்போதும் செய்வதாகக் கேள்வி. அதனால் அவனுக்கு ரதியைச் செய்து கொடுக்கலாமென்று நினைத்துப் பலரையும் விட்டுக் கேட்டுப் பார்த்தன். அவன் மறுத்திட்டான். அதனால் உங்களுடன் கதைத்துப் பார்க்கலாமென்று வந்தேன். உருப்படியாக இருக்கும் பெண்களுக்குக் கூடத் திருமணம் செய்து வைக்க முடியவில்லை. இவள் ஊனப்பட்டவள். யார் செய்யப் போகிறார்கள்? இராகவன் அவளைப் பற்றி முழுமையாக அறிந்தவன்."அவரால் மேற்கொண்டு பேசமுடியவில்லை.

ரதிதேவியின் சகோதரன் கனடாவில் சந்தித்த நினைவு அவனின் மனக் கண் முன் நிழலாடியது.

"இயக்கம் என்பது வேறு. திருமணம் என்பது வேறு. ஒருமுறை தான் வாழ்வு அமையும். அந்த வாழ்வை ஏற்று அணு அணுவாக ரசித்து சுவைத்து அனுபவிக்க வேண்டும். என்னிடம் தேவையான அளவு பணம் இருக்கிறது. அழகான கவர்ச்சி மிக்க ஒரு பெண்ணையே திருமணம் செய்ய விரும்புகிறேன்.

அதனால் நான் ஒருமுறை யாழ்ப்பாணத்திற்குச் செல்லவிருக்கிறேன்”

“நீ இயக்கத்திலை இருந்தவன். அவள் உனது தாய் மாமன் மகள். நீ ஊரில் இருக்கும் போது அவளுடன் பலமுறை கதைத்ததாகக் கேள்விப்பட்டேன்” என்று வளவன் கூற

குறுக்கிட்டுச் சொன்னான் இராகவன், “வளவா, இயக்கம் வேறு ,வாழ்க்கை வேறு என்று உனக்கு நான் முன்பே கூறிவிட்டேன். இயக்கத்திற்கு விசுவாசமாய் நடந்தேன்.இயக்கத்திற்கு ஆட்களைச் சேர்த்தேன். அது வேறு.வாழ்க்கை வேறு. நான் ரதியைக் காதலிக்கவில்லை. காதலிக்கவும் மாட்டேன். நான் உனது நண்பன். அதனால் உன்னோடு பேசி முரண்பட விரும்பவில்லை. அதனால் ஊரில் நல்ல அழகான பெண் இருந்தால் கூறு. இதற்கு மேல் கதைக்க விரும்பவில்லை”என்று கூறினான்.

வளவனுக்கு வியர்த்தது. பாவம் செல்லத்துரை என்று நினைத்தான். அவனது மனம் துன்பப்பட்டான்.

“உங்களுடன் இராகவனும் வந்திருக்கிறான். உங்களது நல்ல நண்பன் அவன். தயவு செய்து

எனக்காக மீண்டும் ஒருமுறை பேசிப்பாருங்கள்" கெஞ்சினார் செல்லத்துரை.

"அவன் திருமணம் செய்யும் நோக்கத்துடன் தான் இங்கு வந்தான். நீங்கள் உங்கள் சகோதரியுடன் பேசிப் பாருங்களேன்" என்றான் வளவன்.

"ஐந்து வருடங்களுக்கு முன் இரண்டு ,மூன்று முறை நான் அவர்களது வீட்டுக்குச் சென்றேன். ஒப்புக்குக் கூட அவர்கள் என்னை வரவேற்கவில்லை. ரதி இயக்கத்தில் இருக்கும் போது காணிப்பிரச்சனை சம்பந்தமாக அவர்களை விசாரிக்க வந்தவள். அவர்கள் ரதி சொல்வதைக் கேட்காததால் அவர்களை காம்புக்கு அழைத்துச் சென்று விசாரித்தவள். அது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர்கள் அன்றே எமது உறவை முடித்து விட்டார்கள். ரதியால் என்ன செய்ய முடியும்? இயக்கத் தலைமை சொல்வதைத் தானே கேட்க முடியும். அதை அவர்கள் நம்புகிறார்கள் இல்லை. இராகவனுக்கு இயக்கத்தைப் பற்றி நன்றாகத் தெரியும். அதனால் தான் அவனுடன் கதைக்கச் சொல்கிறேன்" என்றார் செல்லத்துரை.

“இராகவன் என்னுடைய நண்பன் என்று சொல்ல முடியாது. கனடாவில் அவருக்கு ஒத்துப் போகக் கூடியவர்கள் யாரும் இல்லை. திமிரான போக்கும் மற்றவர்களை மதியாத தன்மையும் அவனுக்குண்டு. அதனால் அங்குள்ளவர்கள் அவனைப் பெரிதாக மதிப்பதில்லை. அதனால் என்னைத் தேடி வருவான். அவ்வளவு தான் எமது நட்பு” என்றான் வளவன்.

“எனக்கு எழுபத்தைந்து வயது. எல்லா வருத்தங்களும் உண்டு. நான் சாகுமுன் அவளைக் கரை சேர்க்க வேண்டும். தமையன் மார் தங்களுடன் வந்திருக்குமாறு கூறியும் அதை ஏற்கிறாளில்லை. தன்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமாம். தனக்குதவியாக கார்த்திகாவும், ஆரணியும் இருப்பார்கள் கவலைப்படாதைங்கோ என்கிறாள். ஆரணி அடிக்கடி ரெலிபோனில் தொடர்பு கொள்வாள். அவளது காதல் முறிவு ரதியை வெகுவாகப் பாதித்துள்ளது. இயக்கத்தில் இருந்தவன் . அவள் விரும்பாத போது வற்புறுத்தி மற்றவர்களைக் கொண்டு சொல்லுவித்துத் திருமணம் செய்து விட்டு அவளைக் கொடுமைப்படுத்துகிறான். அது போல என்னைக் கட்டுறவனும் கொடுமை செய்தால் நான் என்ன

செய்வது. எம்மிடம் பணம் இருக்கு. அழகில்லை. தொழில் இல்லை. தற்போதைய இளைஞர்களுக்குப் பேரழகு வேண்டும். பெரும் தொகையாகப் பணம் வேண்டும். பெண்கள் தொழில் பார்க்க வேண்டும். அதனால் எனது திருமணத்தை மறந்து விடுங்கள் என்கிறாள் அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை" என்றார் செல்லத்துரை.

# 17

செல்லத்துரையைப் பார்க்க வளவனால் முடியவில்லை, "திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர் , புனிதமானது என்றெல்லாம் கற்பனை பண்ணி அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறார்களே தவிர யாரும் நடைமுறைப்படுத்துவதில்லை. கலை, கலாச்சாரம், ஒழுக்கம் ,பண்பாடெல்லாம் எழுத்திலும், வாய்ச் சொல்லிலும் தான் தங்கியுள்ளது. நடைமுறையில் அவை எதுவும் இல்லை. எல்லோரும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் தான் நடந்து கொள்கிறார்கள்'' என்று நினைத்தான் வளவன்.

“எல்லாம் விதிப்படி நடக்கட்டும். வாழ்வில் என்னென்ன நடக்க வேண்டுமோ அது தான் நடக்கும். எனது மூத்த மகனுக்கு எனது சகோதரியின் மகளைக் கட்டிக் கொடுத்தேன்.அவர்கள் மிகவும் ஏழைகள். எனது தங்கை தான் விரும்பிய ஒருவனைக் காதலித்து அவனுடன் சென்று விட்டாள். அதனால் உறவினர்கள் எல்லோரும் அவளைக் கைவிட்டு விட்டனர். நான் தான் அவ்வப்போது யாருக்கும் தெரியாமல் உதவி செய்வேன். பின் அவளது மூத்த மகளை எனது மூத்த மகனுக்குச் செய்து வைத்தேன். ஏனோ தெரியவில்லை. அவள் எம்மோடு தொடர்பு கொள்வதில்லை. அவனையும் மாற்றி விட்டாள். அவள் தனது சகோதரர் மூவரையும் தாம் வாழும் நாட்டிற்கு அழைத்து விட்டாள். இப்போது சகோதரியும், புருசனும் அந் நாட்டிற்குச் செல்லப் போகிறார்களாம். செல்லட்டும். எல்லோரும் நன்றாக வாழ வேண்டும் என்று விரும்புவன் நான். இருப்பினும் எனது மூத்த மகன் நல்லது கெட்டதுக்குக் கூட எம்முடன் தொடர்பு கொள்வதில்லை.’’ அவரின் குரல் தழுதழுத்தது.

“நான் இன்னொருமுறை இராகவனுடன் கதைத்துப் பார்க்கிறேன். வயதான நேரத்தில் நீங்கள் கஷ்ரப்பட்டு

வர வேண்டாம். உங்களது போன் நம்பரைத் தந்து விட்டுப் போங்கள். நான் கதைத்து விட்டுச் சொல்கிறேன்’’ என்றான் வளவன்.

“ரதி அடிக்கடி அவளது நண்பிகளைச் சந்திக்க வருவாள். இன்றும் அவளை அவளது நண்பி வீட்டில் இறக்கி விட்டு விட்டு வந்தேன். இனி வந்து விடுவாள். அதனால் எனக்கு எந்தச் சிரமமும் இல்லை” என்றார் செல்லத்துரை.

அப்போது அங்கே வந்த கார்த்திகா, “அத்தான்,சமையல் முடிந்து விட்டது. வாருங்கோ, சாப்பிட’’ என்றவள் செல்லத்துரையின் பக்கம் திரும்பி நீங்களும் வாருங்கோ’’ என்றாள்.

“நான் பத்தியச் சாப்பாடு சாப்பிர்றனான். தேங்காய்ப் பால், எண்ணெய், உறைப்பு என்பன எனக்கு ஒத்துக் கொள்ளாது. வீட்டில் சமைத்திருப்பார்கள்” என்றார் செல்லத்துரை.

“பரவாயில்லை வாருங்கோ. வேறு கறிகள் உள்ளன” என்றாள் .அப்போது ரதிதேவியும் அவளது

தோழியான மாலினியும் வந்தனர். மாலினி ஒரு போராளி.புனர் வாழ்வு பெற்று வந்தவள்.

“வா ரதி, மாலினி இப்போ சற்றுப் பருத்துவிட்டாள். வளவன், மாலினி அதிட்டவசமாக போர்க்களத்தில் காயம்படாமல் தப்பியவள். சகோதரர்கள் மூவர் வெளிநாட்டில் உள்ளனர். நல்ல வசதியான குடும்பம். மாலினிக்கு எம்முடன் சேர்ந்து வேலை செய்ய விருப்பம். ஆனால் பெற்றோரிற்கு விருப்பமில்லை. எம்முடன் சேர்ந்தால் கெட்டுவிடுவாளாம். இராணுவம் வந்து கைது செய்து விடுமாம்'' சிரித்தாள் கார்த்திகா.

மாலினி உதடு பிரியாமல் சிரித்தாளே தவிர எதுவும் பேசவில்லை.

“இரண்டு பேரும் வாருங்கோ சாப்பிடுவம். இன்று அத்தானுக்காக விசேட சமையல் .அதுவும் நானே செய்தனான். கலகலவெனச் சிரித்தாள் கார்த்திகா.

வளவன் அவள் சிரிப்பதை ஒரு கணம் மெய்மறந்து ரசித்தான். பத்து வருடங்களுக்கு முந்தி அவள் சிரித்த சிரிப்பு போன்றதொரு முழுமையான சிரிப்பு அவனது கற்பனையைத் தூண்டி விட்டது.

“மீண்டும் நான் பிறக்க வேண்டும்

பிறந்து

மயக்கம் தந்து

மாயம் புரிந்து

அசத்தி என்னை

அகலப் பிடிக்குள்

சிக்க வைத்து

பித்தனாக்கிப்

பிதற்ற வைத்த

உன்னை மறுபடியும் காதலித்து

கைப்பிடிக்க வேண்டும்

அப்போது தான்

நான் கண்ட கனவுகள்

கற்பனைகள்

மனக்கோட்டைகள்

நிஜமாகும்

இறைவா அதற்கு வழி செய்”

கண்களை மூடினான் வளவன். நெஞ்சு வலித்தது. கண்கள் கலங்கின. அவனது மனதில் கார்த்திகாவின் எழிலுருவம் தோன்றிக் கலகலவெனச் சிரித்தது.

“அத்தான்.. கவிதை மனதில் உருவாகி விட்டதோ? பத்து வருடங்களுக்கு முற்பட்ட நிலையை நான் காண்கிறேன்” என்றாள் மிக மிக மெதுவாக.

அவ்வார்த்தைகள் வளவனது மனதில் கிளர்ச்சியை உண்டாக்கவில்லை. மாறாகத் துயரத்தையே விதைத்தது. எதுவும் பேசாது மெல்ல நடந்து சாப்பிடும் இடத்தை அடைந்தான்.

அங்கு ஒரு பெரிய மேசை போடப்பட்டிருந்தது. அது வண்ணப் பூக்கள் தைக்கப்பட்ட அழகான சேலையால் மூடப்பட்டிருந்தது. அந்தப் பூக்கள் வளவனைப் பார்த்து கண் சிமிட்டின. கார்த்திகா தையல் பழகியவள். அழகாகத் தைப்பாள். அவள் காதலிக்கும் போது அழகிய நிறங்களிலான ரீசேட்டுக்களை வாங்கி அதில் பூக்களையும், குருவிகளையும் சோடி சோடியாகத் தைத்துக் கொடுப்பாள், “சோடியாகத் தைப்பது ஏன் என்று தெரியுமா? என்னை நீங்கள் மறக்காமல் இருப்பதற்கு”

அவன் பெரும்பாலும் அவள் தைத்துக் கொடுத்த ரீசேட்டுக்களையே போடுவான். அவனது நண்பர்களுக்கு அது பொறாமையாக இருக்கும், “உனக்கென்ன பணக்கார அழகிய கலை நுட்பம் வாய்ந்த மனைவி. பெற்றோரும் உனது காதலை அங்கீகரித்துள்ளனர்.எம்மைத் திரும்பிப் பார்ப்பாரில்லை. அதிஷ்டக்காரன்” என்பான் உருத்திரன். அவன் சிறிது பெண்களின் சபலம் உள்ளவன். அதிகமான பெண்கள் யுத்தம் நடைபெற்றமையால் காதலிப்பதை விரும்புவதில்லை. அது உருத்திரனுக்குப் பெரும் துன்பத்தைக் கொடுக்கும்.

பெருமூச்சு விட்டான் வளவன். உருத்திரன் மட்டுமல்ல. அவர்களது நண்பர்கள் அனைவரும் அவனைப் பார்த்துக் கேலி செய்வர்.

வளவனுக்கு அருகில் இருந்து சாப்பிட்ட கார்த்திகா. “என்ன யோசிக்கிறீர்கள். சாப்பிடுங்கோ, எப்படிச் சமையல்?” என்று கேட்டாள்.

தனது வீட்டில் ஆடு அல்லது கோழி காய்ச்சினால் விடியுமுன் சொல்லிவிடுவாள். மத்தியானம் சாப்பிடச் சென்றால் இரண்டு நாட்கள் சாப்பிடும் சாப்பாட்டைச்

சாப்பிடுமாறு வற்புறுத்துவாள். அன்று அவள் தான் சமைப்பாள். வாய்க்குள் கறியை வைத்து விட்டு அதன் சுவையைப் பற்றிச் சொன்ன பிறகு தான் அடுத்த முறை உணவை வாய்க்குள் வைக்க வேண்டும்.

“பிரமாதம், மிகப் பிரமாதம். இப்படி ஒரு சுவையான உணவை நான் இதுவரை உண்டதில்லை. இன்றைக்கு வயிறார உண்ணப் போகிறேன். வீட்டுக்குச் சென்று அதிகமாக இரண்டு குளிசைகளைப் போட்டால் சரி’’ என்றார் செல்லத்துரை.

வளவன் எதுவும் பேசாமல் சாப்பிட்டது கார்த்திகாவுக்கு கவலையளித்தது. எனினும் அதைக் காட்டிக் கொள்ளாது சாப்பிட்டாள். வளவன் கேட்டதற்காகச் சாப்பிட்டானே தவிர ருசித்துச் சாப்பிடவில்லை. அது கார்த்திகாவுக்குப் புரிந்தது. முன்பு வனவன் சாப்பிட்டு முடிந்ததும் கவிதை எழுதிக் கொடுப்பான். அவன் சென்ற பின் நூறு முறையாவது அவள் அதை வாசித்து மகிழ்வாள்.

**“எண்ணாத போது**

**என்னருகே வந்து**

**எண்ணத்தை மீட்டுகிறாய்**

**எட்டாத தொலைவில்**

**வான்நிலாவாய்**

**வானத்தில் உலாவும் உன்னை**

**எண்ணுவதால் என்ன பயன்**

**நிம்மதி தான் தொலையும்”**

என்று எண்ணினான் வளவன்.ஆனால் கார்த்திகாவுக்கு ஒருநாள் அவன் அவளது வீட்டில் உண்டு விட்டு எழுதிக் கொடுத்த கவிதை ஞாபகத்திற்கு வந்தது.

**“அறுசுவை உணவு**

**அருகில் இருந்து ஊட்டி**

**அன்பாய்ப் பேசி**

**அளவுக்கதிகமாக**

**உண்ணச் செய்து**

**பார்த்து மகிழ்ந்து**

**சிரித்துப் பேசி**

**அரவணைத்து**

**அமிழ்தும் ஊட்டி**

**இன்சொல்லோடு**

**இனிக்கச் சிரித்து**

**என்னைக் கொல்லும்**

**மன்மத யமனே**

**உன்னை மறக்க**

**என்னால் முடியாது”**

அதற்கு மேல் அவளால் நினைக்க முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைக்க விம்மினாள். உணவு புரையேறியது. அருகில் இருந்த வளவன் தண்ணீர்ப் போத்தலை எடுத்துக் கொடுத்தான். முன்பென்றால் தொடுவதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பான். அவள் சாப்பிடும் போது மூக்கை இழுத்தாலும் தலையில் பலமுறை தட்டுவான்.அந்தச் சுகம் அவளைத் திக்குமுக்காடச் செய்யும்.

“சாப்பிடும் போது நிம்மதியாகவும் ,மகிழ்வாகவும் வேறு சிந்தனைகள் இன்றியும் சாப்பிட வேண்டும். இல்லாவிட்டால் உணவு புரையேறும். சமிக்காது” என்றார் செல்லத்துரை.

“பூபாலு உன்னை இன்று அழைத்தது ஏன் தெரியுமா. நாம் எல்லோரும் இன்று மகிழ்வுடன் ஒன்று

சேர்த்து சாப்பிடுகிறோம். இதுவரை நாம் ஒன்றாக இருந்து சாப்பிட்டதில்லை. இன்று அத்தான் மேல் நாட்டிலிருந்து வந்திருக்கிறார். அதற்காகவும்" நிறுத்தினாள் கார்த்திகா.

வளவன் நிமிர்ந்து கார்த்திகாவைப் பார்த்தான். பூபாலன் கலவரத்துடன் கார்த்திகாவைப் பார்த்தான்.

"அத்தானை இனி நான் காண்பேனோ தெரியாது. அதுபோல பூபாலா ஆரணியும் நீயும் இனிமேல் சேர்வீர்களோ தெரியாது"

"சேரக் கூடாது" என்றாள் மாலினி.

"உனக்கெல்லாம் என்ன வாழ்க்கை. உயிருக்குயிராய் நேசிப்பதாய் நடித்து விட்டு இப்போ அவளைக் கொலை செய்யவும் தயங்க மாட்டாய். உன்னை என்னால் மன்னிக்க முடியாது. இராகவன் இயக்கம் வேறு வாழ்க்கை வேறு என்று கூறுவதைப் போல நீ காதல் வேறு, வாழ்க்கை வேறு என்று சொல்லப் போகிறாயா? ஆரணி பூபாலனை நம்பாதே. உனக்கு நான் இருக்கிறேன்" என்றாள் ரதிதேவி.

“பலநாட்களுக்குப் பின்பு ஒன்றாக இருந்து சாப்பிடுகிறோம் என்றீர்கள். அதை மகிழ்வுடன் செய்யுங்கள்” என்றான் வளவன்.

கார்த்திகா வளவனின் முகத்தைப் பார்த்தாள். அவனது முகம் கறுத்திருந்தது, “பல வருடங்களுக்குப் பின் அருகில் இருந்து சாப்பிடும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.அதைக் கெடுக்கக் கூடாது” என்று நினைத்தாள் கார்த்திகா.

கார்த்திகா கோழிக்கறியை வாங்கி வளவனது கோப்பைக்குள் வைக்க வளவன் சொன்னான், “அவரவர்களுக்குத் தேவையானவற்றை அவரவரே எடுத்துச் சாப்பிடும் நிலை இங்கு இன்னும் வரவில்லையா? எனக்கு முன்பு வைத்ததே அதிகம்” என்றான் வளவன்.

அச் சொற்கள் கார்த்திகாவை வேதனைப்படுத்தின. அதை அவள் வெளிப்படுத்தவில்லை. சாப்பிட்டு முடித்து விட்டுக் கை கழுவினான்.கார்த்திகா கையைக் கழுவி விட்டு ஐஸ்கிறீம் கொண்டு வந்து கொடுத்தாள். அவன் அவளிடம் வாங்கும் போது அவளது கை

வளவனது கையில் பட்டது. அவள் அதை விலக்கிய போது ஐஸ்கிறீம் கப் நிலத்தில் விழுந்து சிதறியது.

ஆரணி வேறொரு கப் கொண்டு வந்து கார்த்திகாவிடம் நீட்டிய போது வளவன் அதைப் பெற்றுக் கொண்டான்.அவனுக்குக் கார்த்திகாவின் செயல்கள் பிடிக்கவில்லை.

**“நம்ப வைத்து**

**ஏமாற்றி**

**நடுத் தெருவில்**

**விட்ட போது**

**வராத அக்கறை**

**இப்போது ஏன்?**

**குடும்பமும்**

**குடித்தனமுமாய்**

**உள்ளவனின்**

**உள்ளத்தைக்**

**குழப்பாதே”**

என்று சொல்ல வேண்டும் போல இருந்தது. பலரின் முன் அதைக் கூற அவன் விரும்பவில்லை.

அங்கு வேலை செய்யும் அனைவருக்கும் கார்த்திகாவின் கதை தெரியும். அனைவரும் வளவனைப் பார்க்க விரும்பினர். சாப்பிட்டு முடிந்ததும் அவர்கள் அனைவரும் வளவனைச் சூழ்ந்து நின்றனர்.ஆரணி, மாலினி போன்ற சிலரிற்கு வளவனைத் தெரியும். அவர்கள் அந்த ஊரவர்கள். அவர்கள் அவனைச் சூழ்ந்து நின்றார்களே தவிர எதுவும் பேசவில்லை.

வளவன் சொன்னான், “இலட்சியத்திற்காகப் போராடி உங்கள் வாழ்வையும் அங்கங்களையும் தொலைத்து விட்ட உங்களைப் பார்க்கக் கவலையாக உள்ளது. அதை விட நீங்கள் போராடும் போது உறுதுணையாக நின்று உங்களைத் தைரிய மூட்டிய அனைவரும் உங்களைக் கவனிக்காதிருப்பது அதை விடத் துன்பமளிக்கிறது. நான் எனது தந்தையின் இறுதி ஆசைக்காக வந்தேன். இல்லாவிட்டால் வரமாட்டேன். இங்கு வந்து உங்களைப் பார்த்துத் துன்பப்பட்டது தான் மிச்சம். பல போராளிகள் வாழ்க்கையை நடாத்தப் போராடும் போது நீங்கள் ஒன்றாகச் சேர்ந்து

இந்த நிறுவனத்தை அமைத்துத் துணிவுடன் வாழ்வதைப் பார்த்துப் பெருமைப்படுகிறேன். மகிழ்ச்சியடைகிறேன்” என்றான். வளவன். அங்கு மயான அமைதி நிலவியது.

## 18

எல்லோரும் சென்ற பின் வளவன் தனியாக இருந்தான். அப்போது செல்லத்துரையும் ரதிதேவியும் அவ்விடத்திற்கு வந்தனர். தம்பி நான் போயிட்டு வாரன்.ஆறுதலாக இராகவனுடன் கதைத்து விட்டுப் போன் பண்ணு” கலங்கினார் செல்லத்துரை.

“அப்பா, நீங்கள் போய் ஆரணியுடன் கதையுங்கள். நான் வளவன் அண்ணாவுடன் ஐந்து நிமிடங்கள் கதைத்து விட்டு வருகிறேன்”என்றாள் ரதிதேவி.

“சரியம்மா” என்று கூறிவிட்டுச் சென்றார் செல்லத்துரை.

ரதிதேவியை வளவனுக்கு முன் பின் தெரியாது. அவளது பெயரைக் கூட அவன் கேள்விப்பட்டதில்லை.

அதனால் ரதிதேவியே கதைக்கட்டும் என்று காத்திருந்தான்.

“அண்ணா, அப்பாவின் விருப்பத்தைக் குழப்பக் கூடாதென்று தான் நான் அவரை இங்கிருந்து போகச் சொன்னேன். இராகவன் அவரது சகோதரியின் மகன். இயக்கத்தை விரும்பியவன்.அதனால் முற்போக்காக நடப்பான் என்று எண்ணுகிறார். அவன் அப்படியானவன் அல்ல. சந்தர்ப்பவாதி. அவன் வெளிநாட்டுக்குச் செல்ல வேண்டும் என்று நினைத்துத் தான் இயக்கத்துடன் இணைந்து செயற்பட்டவன். அதை அறியாமல் நான் அவனது உணர்ச்சிகரமான பேச்சை நம்பி ஏமாந்து விட்டேன். அவன் படித்தவன். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானவன்.நல்ல பேச்சாளன். தேவைக்கேற்றபடி பேசித் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் வல்லவன். அப்படித் தான் அவன் அன்றும் இருந்தான். இன்றும் இருக்கிறான். என்றும் இருப்பான். நேற்று நான் கற்ற பாடசாலையில் மும்மொழி விழா நடத்தப்பட்டது. தமிழ் ,சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் மாணவர்கள் தேர்ச்சி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. அதைப் பாடசாலைகளில் விழா எடுத்துக் கொண்டாடுகிறார்கள்”

உணர்ச்சிவசப்பட்டாள் ரதிதேவி. அவளால் சிறிது நேரம் பேசமுடியவில்லை. விழாவில் முக்கியமான அரசியல் பிரமுகர் ஒருவர் கலந்து “தமிழ்ப் பிள்ளைகள் சிங்களம் படித்தல் வேண்டும். அப்போது தான் இன உணர்வு ஏற்படும் .தவறான எண்ணங்கள் அகலும். புரிந்துணர்வு உண்டாகும்” இப்படியெல்லாம் பேசினார். இவர் முப்பது வருடங்களுக்கு முன்பு சிங்களம் படிக்கக் கூடாது.சிங்களம் படித்தால் தமிழ் அழிந்து விடும்” என்று பேசினார். அன்றும் அவர் தனது இலாபத்தைக் கருதியே பேசினார். இன்றும் தனது இலாபத்தைக் கருதியே பேசுகிறார். இப்படியானவர்கள் தான் இங்கு வாழ்கிறார்கள். சிலர் முப்பது வருடங்களுக்கு முன் இன்று பேசியதைப் பேசியிருந்தால் இவ்வளவு அழிவுகளும் வந்திராது.” என்று கூறி விட்டு வளவனைப் பார்த்தாள் ரதிதேவி.

உண்மையான பேச்சு. அரசியலில் உள்ளவர்களும், பிரமுகர்களும் தருணத்திற்கேற்ற வகையில் பேசித் தமது காரியங்களை முடித்துக் கொள்கிறார்கள் என்று நினைத்தான் வளவன். ஆனால் எதுவும் பேசவில்லை.

“இப்படியானவர்களில் மிகவும் மோசமானவன் தான் இராகவன்.அவனுக்கு யார் எதைச் சொன்னாலும் ஏறாது.

தன்னைப் பற்றி மட்டுமே நினைப்பான். அதனால் அவனுடன் எனது திருமணத்தைப் பற்றிக் கதைக்காதீர்கள். இப்போது அவன் திருமணத் தரகர்களுடன் தான் திரிகிறான். கன்னிப் பெண்கள் பலரின் படங்களைப் பார்த்துவிட்டு நிராகரிக்கிறான். பேரழகி வேணுமாம்.பத்துப் பதினைந்து தரகர்கள் அவனது வீட்டிற்குத் தினமும் சென்று வருகின்றனர். எனது அத்தான் முறையான ஒருவர் பத்துப் பதினைந்து பெண்களின் படத்தை அவனுக்குக் காட்டியுள்ளார்.எதிலும் அவன் திருப்திப்படவில்லை" என்றாள் ரதிதேவி.

வளவன் இராகவனுடன் பெரிதாகப் பழகுவதில்லை. அவன் வரும் வேளைகளில் முகத்தைச் சுழிக்காது ஒப்புக்குக் கதைப்பான். அதனால் தான் அவன் அவனுடன் நட்பைப் பேணுகிறான்.

"விருப்பமில்லாத ஒருவனைக் கட்டாயப்படுத்தக் கூடாது. இருவரது மனமும் பொருந்திக் கலப்பது தான் திருமணம். அது மற்றவர்களின் விருப்பு வெறுப்புக்கேற்ப ஏற்படக் கூடாது. ஏதோ ஒரு வகையில் அந்த நேரம் உணர்வுகள் ஒன்று சேரத் துடிப்பது தான் காதல்.

ஆனால் இப்போது காதலித்துத் திருமணம் செய்யும் எத்தனை பேர் இன்பமாக வாழ்கிறார்கள்? நான் பார்த்தளவில் மகிழ்ச்சியாகப் பலர் வாழவில்லை. பேசிச் செய்த திருமணங்களும் பெரிதாக வாழவில்லை. இதற்கெல்லாம் காரணம் பண ஆசை தான். பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு பதினைந்து இலட்ச ரூபாவும் வீடு வளவும் போதிய நகையும் கொடுத்துத் திருமணத்தை நடாத்தி வைத்தனர். இருப்பினும் தினமும் சண்டை, சென்ற வாரம் பொலிசார் வந்து அந்தப் பெண்ணின் கணவரை அழைத்துச் சென்றனர். இவற்றையெல்லாம் பார்க்கும் போது இதற்காகக் தானா திருமணம் நடைபெறுகிறது என்ற எண்ணம் தான் வருகிறது?" என்றாள் ரதிதேவி.

"எல்லோரும் அப்படியல்ல. ஒரு சிலர் தான் புரிந்து கொள்ளாமையால் பிரச்சனைப்படுகின்றனர்" என்றான் வளவன்.

"அப்படி நான் நினைக்கவில்லை. இப்போது ஆடம்பரப் பொருட்கள் பலவும் வந்து சேர்ந்து விட்டன. முன்பு இரண்டாயிரம் ரூபாவுக்கு வாங்கிய ரெலிபோனை இப்போ யாரும் விரும்புவதில்லை. ஐம்பதினாயிரம், ஒருலட்சம் ரூபா பெறுமதியான ரெலிபோனைத் தான்

விரும்புகிறார்கள். அப்படித் தான் ஏனைய பொருட்களையும் விரும்புகிறார்கள். பக்கத்து வீட்டுப் பெண்ணுக்கு ஐம்பதினாயிரம் ரூபா போன் வேணுமாம். அதைப் புருசனால் வாங்கிக் கொடுக்க முடியவில்லை. அப் பிரச்சனை பொலிஸ் வரை சென்று விட்டது. கலை கலாச்சாரம், மதிப்பு, மரியாதை எதுவும் இப்போ இங்கு இல்லை" என்றாள் ரதிதேவி.

அப்போது அங்கு வந்த ஆரணி, "அண்ணா, கிழவிகளை மாதிரி ஓயாமல் அலட்டிக் கொண்டேயிருப்பாள்" என்றாள்.

ரதிதேவி சிரித்துவிட்டுக் கேட்டாள், "நான் ஏதாவது அலட்டினேனா?"

இல்லை.. இல்லை.. தகப்பன் இராகவனோடு கதைக்கச் சொல்கிறார். ரதிதேவி கதைக்க வேண்டாம் என்கிறாள். நான் என்ன செய்வது?" என்று கேட்டான் வளவன்.

"கதைக்க வேண்டாம் அண்ணா. செல்லத்துரை ஐயாவுக்கு ஏதாவது சொல்லி சமாளியுங்கள். நாம் இயக்கத்தில் இருந்த போது பெரு மகிழ்வுடன் இருந்தோம். புனர் வாழ்வு பெற்ற பின் பெருந்

துன்பப்படுகிறோம். காதல் என்பதெல்லாம் பொய். காதலிக்கும் போது தான் இனிக்கும், ஆவலைத் தூண்டும். கனவுகளை உருவாக்கும். காதல் கல்யாணத்தில் முடிந்தால் தேவைகள் அதிகரிக்கும். அதனால் அது கசக்கும். எதை நினைத்துக் காதலிக்கிறோமோ அது திருமணமான சில நாட்களில் முடிவுக்கு வந்து விடும். அதன் பின் துன்பம் தான். அதனால் விருப்பப்படாத அவனுடன் கதைக்காதீர்கள். எமக்கு எமது நிறுவனத்தில் உதவப் பலர் இருக்கிறார்கள். அது போதும்" என்றாள் ஆரணி.

"அதைத் தான் நானும் நினைக்கிறேன். அப்பா இல்லாத காலத்தில் கார்த்திகா அக்காவும் ,நிறுவனத் தோழிகளும் இருக்கிறார்கள். இப்போ நான்கு பிள்ளைகளைப் பெற்றவர்களும் நான்கு பிள்ளைகளையும் வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டு துன்பத்துடன் தானே வாழ்கிறார்கள். பிள்ளைகள் அனுப்பும் பணம் அவர்களின் வயிற்றுப் பசியை மட்டும் தான் நிரப்புகிறது" என்றாள் ரதிதேவி.

"அன்பு, ஆதரவு, பரிவு, பாசம் ,அக்கறை எனப் பகிர்ந்து கொள்ள ஆயிரம் பிரச்சினைகள் உண்டு .அவற்றையெல்லாம் நான் கார்த்திகாவிடம் இருந்து

பெற்றுக் கொள்கிறேன் . அருமையான பிள்ளை. மற்றவர்கள் நினைப்பதை உணர்ந்து செயற்படுவாள். எனக்குப் பிள்ளைகளின் நினைப்பு வந்தால் கார்த்திகாவுக்குத் தான் போன் பண்ணுவேன். உடனே வந்து விடுவாள்” என்று அவனின் தாயார் அடிக்கடிச் சொல்வது அவனுக்கு நினைவுக்கு வந்தது. அந்தளவில் அம்மா கொடுத்து வைத்தவர் என்று நினைத்தான் வளவன். அந்த நினைவு வளவனுக்கு திருப்தியையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது.

அப்போது வேகமாக வந்து ஒரு கார் நின்றது. குருபரன் அவசரமாக இறங்கி ஓடி வந்தான். அவனின் பின்னால் இருவர் வந்தனர்.

“தெரியாத் தனமாக நான் இங்கு வந்து விட்டேன்” தடுமாறினான் குருபரன். அவனது குரல் தழுதழுத்தது. உடல் நடுங்கியது. “என்ன நடந்தது” என்று கேட்டான் வளவன்.

இராத்திரி நடுச்சாமத்தில் கொழும்பில் இருந்து வந்த பொலிசார் இராகவனைக் கைது செய்து கொண்டு சென்று விட்டார்களாம். எனக்குப் பயமாக இருக்கு. நடுங்கினான் குருபரன்.

“வீணாகப் பயப்படாதையுங்கோ. கொழும்பில் இருந்து வந்த பொலிஸ் இராகவனை மட்டும் தானே கைது செய்தது. அவனுடன் வந்த உங்களையோ இல்லை வளவனையோ விசாரிக்கக் கூட இல்லை. தேவையில்லாமல் பயப்படாதைங்கோ” என்றாள் கார்த்திகா.

“இப்படித் தான் ஊரில் உள்ளவர்களும் சொன்னார்கள். நான் இராகவனைப் போல இயக்க வேலைகள் எதனையும் கனடாவில் செய்யவில்லை” என்றான் குருபரன்.

“அப்ப ஏன் பயப்படுகிறீர்கள். இங்கு வருடம் வருடம் ஆயிரக் கணக்கானோர் பிற நாடுகளில் இருந்து வந்து போகிறார்கள். உங்களில் பொலிசுக்கு சந்தேகமேற்பட்டிருந்தால் இரவு உங்களையும் கைது செய்திருப்பார்கள்” என்றாள் ரதிதேவி.

“இரவு கைது செய்தவர்களாம். எனக்கு இப்பத் தான் தெரியும். தற்செயலாக அவனது வீட்டுக்குச் சென்ற போது தான் தெரிய வந்தது. அவனுடைய பெற்றோரும் சகோதரர்களும் ஒவ்வொரு நாடுகளில் இருக்கிறார்கள். இங்கு கொட்டலில் தான் தங்கியிருந்தவன். இராத்திரி

அவனது பள்ளித் தோழனோடு உணவு உண்டவனாம். அப்போது தான் பிடிபட்டிருக்கிறான். பள்ளித்தோழன் பெற்றோருக்கு அறிவித்தவனாம். அவர்கள் அவனைச் சென்று பார்க்கும்படி கூறியிருக்கிறார்கள். அவன் ஏன் தனக்குத் தேவையில்லாத வேலை என்கிறான். வெளிநாட்டுக்குப் போய் பத்து வருடங்களிருக்கும். ஒரு நாளென்றாலும் என்னோடு தொடர்பு கொள்ளவில்லை. எனது வீட்டுக்குப் பக்கத்தில் அழகான பெண் ஒருத்தி இருப்பதாக புறோக்கர் கூறியுள்ளான். அவளைப் பார்க்க வந்த போது தான் சந்தியில் என்னைக் கண்டவன்.பெண்ணைப் பற்றி விசாரிப்பதற்காக எனது வீட்டுக்கு வந்தவன். பெண்ணை அவனுக்குப் பிடிக்கவில்லை. பேசிக் கொண்டிருக்கும் போது தான் கைது செய்யப்பட்டவன் என்று அவன் சொன்னான்" என்றான் குருபரன்.

கார்த்திகா சொன்ன பின்பு குருபரனுக்குச் சற்று நிம்மதி பிறந்தது. எனினும் மனம் பரபரத்துக் கொண்டேயிருந்தது.

"நான் அவனைத் தேட விரும்பவில்லை. அவளது பள்ளித் தோழன் கூறுவதைப் போல எமக்கேன் வீண்

பிரச்சனை. நாம் வந்த விஷயங்களை முடித்து விட்டுச் செல்வோம்” என்றான் குருபரன்.

“அவருக்குத் தலைக்கனம் அதிகம். யாரையும் மதிப்பதில்லை. யாராவது அறிவித்திருப்பார்கள்” என்றாள் ரதிதேவி.

“இப்ப என்ன செய்வது? நாம் மூவரும் ஒன்றாக வந்தோம். ஒருவருக்குப் பிரச்சனையென்றால் இன்னொருவர் உதவத் தானே வேண்டும்” என்றான் வளவன்.

“உதவுவதற்குத் தான் உதவலாம். இதுக்கெல்லாம் உதவ முடியாது. நாம் உதவப் போனால் நாம் வந்த காரியம் முடியாது. அத்துடன் தொல்லைகள் தான் வரும்” என்றான் குருபரன்.

அதைக் கேள்விப்பட்ட செல்லத்துரை பரபரப்படைத்தார்.

“அவன் எனது மகளைத் திருமணம் செய்யாவிட்டாலும் எனது மருமகன். ரதி நீ போய் பிரக்கிராசியரைச் சந்தித்துக் கதை” என்றார் செல்லத்துரை.

“ இது பிரக்கிராசியருடன் கதைத்துத் தீர்க்கக் கூடிய விஷயமல்ல. மனித உரிமை ஆணைக் குழுவிற்குச் சென்று புகாரிட்டுப் பார்ப்போம். ஆனால் மனித உரிமைக்குழு நாம் தான் தேடுவதாக இராணுவத்திற்குச் சொன்னால் வேண்டாத பிரச்சனைகள் பலவும் வரும்” என்றாள் கார்த்திகா.

செல்லத்துரைக்குத் துக்கமாக இருந்தது. அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

வளவன் இராகவனின் தகப்பனுக்குப் போன் பண்ணினான். சில கணங்களில் அவர் தொடர்பு கொண்டார், “இராகவனின் பள்ளித் தோழனின் வீட்டில் தானாம் இராகவனைக் கைது செய்தது. அவர்கள் கைது செய்தமைக்கான பற்றுச் சீட்டுக் கொடுத்துள்ளார்களாம். தம்பீ தயவு செய்து அவனைச் சந்தித்து என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய். தயவு செய்து செய் தம்பி. அவர் கெஞ்சினார். எமக்கு உங்கு நெருங்கிய உறவினர்கள் எவரும் இல்லை. நீர் தான் உதவி செய்ய வேண்டும். நம்பியிருக்கிறேன். குருபரனையும் அழைத்துச் செல்லும்” என்றார் அவர்.

“என்னுடைய மாமா என்னவாம்” என்று கேட்டாள் ரதிதேவி.

“என்னைத் தானாம் நம்பியிருக்கிறாராம். போய் விசாரித்து ஆவண செய்யட்டாம்” என்றான் வளவன்.

“கைது செய்த பொலிசார் இராகவனின் தோழனுக்கு அறிவிப்பார்கள். அதுவரை பொறுத்திருங்கோ. அவசரப்படாதைங்கோ. நீங்கள் விசாரிக்கச் செல்ல உங்களைப் பற்றி விசாரிப்பார்கள்” என்றாள் கார்த்திகா.

“இவனை எம்மோடு கூட்டி வந்தது பிழை.தினமும் பலர் வந்து போகிறார்கள் தானே. இவனைப் பற்றிய தகவல் ஏதோ கிடைத்திருக்கு.நான் வரவில்லை. நீ வேண்டுமானால் போ” என்றார் குருபரன்.

வளவன் கார்த்திகாவைப் பார்த்தான். அவள் போக வேண்டாமெனத் தலையை அசைத்தாள்.

# 19

“ஐயோ, ஐயோ என்று யாரோ அலறும் சத்தம் கேட்டது.குருபரன் திகிலுடன் சத்தம் வந்த திசையைப் பார்த்தான். இரு பெண்கள் தலைவிரிகோலமாக அலறியபடி ஓடி வந்தனர். யாருக்கும் அவர்களை அடையாளம் தெரியவில்லை. வேகமாக ஓடி வந்த இளம்பெண் அவர்களின் எதிரே நின்றாள். அவளுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. எதையோ சொல்லத் துடித்தாள். களைப்பும் துயரமும் சொற்களை வெளியே வர விடாது தடுத்தன. பின்னால் ஒரு முதிய மூதாட்டி அழுதபடி ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். “நீ யாரம்மா” பேரம்பலம் கேட்டார்.

வளவனுக்குப் பயமாக இருந்தது. குருபரனுக்கு சுயநினைவு இல்லை. கார்த்திகா இவற்றிற்கெல்லாம் பயப்படாதவள், “அம்மா பயப்படாதீர்கள் .நடந்ததைச் சொல்லுங்கள்” என்றாள்.

மீண்டும் பலமாகக் குளறிய அவள் ,சிறிது நேரத்தின் பின் சொன்னாள், “நான் இராகவனின் பள்ளித் தோழன் ஆருரனின் மனைவி வாணி. இப்போ சில மணித்தியாலங்களுக்கு முன்பு வந்த

இராணுவத்தினர் வீடு முழுவதும் தேடுதல் செய்து விட்டு அவரைக் கைது செய்து கொண்டு சென்று விட்டார்கள்”

அதைக் கேட்ட குருபரன் திகைத்து திகிலடைந்து போனான். தன்னையும் கைது செய்து விடுவார்களோ எனப் பயந்தான்.

வளவனுக்கும் பயமாக இருந்தது, “இராகவனுடன் ஓ.எல்லிலை இவர் கூடப் படித்தவராம். அத்துடன் இவர் இயக்கத்திற்குப் பொருட்கள் வாங்கிக் கொர்டுத்தவர். அதை அறிந்த இராணுவத்தினர் ஒரு வருடத்திற்கு முன்பு அவரைக் கைது செய்து இருபது நாட்கள் விசாரித்து விட்டு விடுதலை செய்தவர்கள். இப்போ மீண்டும் கைது செய்திருக்கிறார்கள். எனக்குப் பயமாக இருக்கிறது. எனக்கு மூன்று பெண் பிள்ளைகள்” விம்மி விம்மி அழுதாள்.

“முன்பு கைது செய்து விசாரித்த பின் விட்டு விட்டால் பெரும் பிரச்சனைகள் எதுவும் வராது. நீங்கள் பொலிஸ் ஸ்ரேசனுக்குச் சென்று விசாரியுங்கள்” என்றாள் கார்த்திகா.

“என்னுடன் கூட வர யாரும் இல்லை. எனது மூத்த அண்ணன் ஆசிரியராக இருக்கிறார். அவரிடம் சென்றேன். அவர் வர மறுத்து விட்டார். “இயக்கத்தில் இருந்தவனைத் திருமணம் செய்ய வேண்டாம், பின் பல பிரச்சனைகள் வருமென்று நான் கூறக் கூற அதைக் கேளாமல் அவனைக் காதலித்துச் செய்தாய். இப்படி எத்தனை பிரச்சனைகள் அவனால் எமது குடும்பத்திற்கு வந்தது. நோய் துன்பமென்றால் உதவி செய்யலாம். இதுக்கு எத்தனை தரம் உதவுவது. என்னால் வரமுடியாது” என்று கூறி விட்டார். இவரது நண்பர்கள் எவரும் இவர் கைது செய்யப்பட்டதை அறிந்து வீட்டுக்கு வராமல் மறைந்து விட்டார்கள். அவர்களின் வீட்டுக்குச் சென்றேன். பெற்றோரும் மனைவி மாரும் தான் கதை சொல்கிறார்கள். உறவினர்கள் எவரும் உதவமாட்டார்கள்” என்றாள் வாணி.

“நான் வாறன். நீ என்னுடன் வா.” என்றார் செல்லத்துரை.

ரதிதேவி தகப்பனை முறைத்துப் பார்த்தாள். அவளின் பார்வையின் அர்த்தம் செல்லத்துரைக்குப் புரிந்தது. அதைக் கவனிக்காதவர் போல, “நான் மனித உரிமை ஆணைக் குழுவிற்குப் போட்டு வாறன்”

என்று கூறிவிட்டு வாணியின் பக்கம் திரும்பி , “நீ வா பிள்ளை” என்று கூறி விட்டு நடந்தார்.

அப்போது ரெலிபோன் மணி அடித்தது. வளவன் கான் போனைப் பயத்துடன் பார்த்தான். அது தாயின் அழைப்பு , “தம்பீ, அப்பா உன்னை அழைக்கிறார். தான் சாகப் போறாராம். உன்னை வரட்டாம்”

“உடனை வாறன்” அழைப்பைத் துண்டித்து விட்டு , “கார்த்திகா அப்பா வரச் சொல்கிறார், நான் பின்பு வருகிறேன். குருபரன் நீயும் வா” என்று கூறி விட்டு நடந்தான்.

“அப்பா கடந்த பத்துப் பதினைந்து நாட்களாக என்னைப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறார். அதனால் தான் ஊருக்கு வந்தேன். இனி எங்கும் செல்லாது அவரோடு தான் இருத்தல் வேண்டும்.அவர் என்னைத் தனது மகனாக நினைக்காது நண்பனாக நினைத்தவர்” விம்மினான் வளவன்.

“நான் ஊரை விட்டு வெளிக்கிட்டுப் பதினைந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. வீடு , வளவு, தோட்டம், வயற்காணி முழுவதையும் விற்க வேண்டும்

என்பதற்காக வந்தேன். இங்கு நிற்கப் பயமாக உள்ளது. எனது தாயாரின் சகோதரியுடன் தங்கியிருக்கிறேன். அவாவின் பிள்ளைகள் ஐந்தும் ஐந்து நாடுகளில் வசிக்கிறார்கள். சின்னம்மா படும் வேதனையைக் காண துக்கமாக இருக்கு. எண்பது வயதில் இங்கு இருந்து பெரும் துன்பப்படுகிறா. அவாவிற்குத் துணையாக வசாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து வந்த குடும்பம் ஒன்று இருக்கிறது. அவர்கள் நன்றாகக் கவனித்துக் கொள்கிறார்கள். இருந்தாலும் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பார்க்க அவா ஆசைப்படுகிறா. ஐந்து பிள்ளைகளுக்கும் இங்கிருந்து பெண் பார்த்து அனுப்பினார்கள். அதன் பின் யாரும் வரவில்லை. அது சின்னம்மாவுக்குப் பெரும் குறையாக இருக்கிறது. என்னோடு அதைச் சொல்லிச் சொல்லி அழுவா. இராத்திரி அவாவின் மூத்த மகனோடு கதைச்சனான். அவனுக்கு இங்கு வர விருப்பமில்லை. ஏதேதோ சொல்லிச் சமாளிச்சான். இங்குள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் துன்பப்படுகிறார்கள்" என்றான் குருபரன்.

"இயக்கத்திற்குச் சென்ற கார்த்திகா செத்திருந்தால் அன்றுடன் பிரச்சனை முடிவுக்கு வந்திருக்கும்.

உயிரோடு வந்து சித்திரவதை செய்கிறாள். கனடாவில் இருக்கும் போது நினைவுகள் கொல்லும். ஊருக்கு வந்த பின் நேரில் வந்து சித்திரவதைப்படுத்துகிறாள். அவள் அத்தான் என்று அழைக்கும் போது உயிர் துடிதுடிக்கிறது. எவ்வளவு தான் மனதைக் கட்டுப்படுத்தினாலும் அவளது நினைவுகள் தீயாகச் சுடுகின்றன. அகல்யா மிக மிக நல்லவள். இப்படிக் கார்த்திகா கூடக் கவனிக்க மாட்டாள் என்று உள் மனம் கூறும். மறுகணம் பழைய நினைவுகளை மீட்டித் துன்பப்படும்" என்றான் வளவன்.

குருபரனுக்கு அவன் கூறியவை விளங்கவில்லை. அவன் தன்னையும் இராணுவம் கைது செய்து விடுமெனப் பயந்தான்.

வீட்டுக்கு வந்த வளவன் தந்தையைச் சென்று பார்த்தான். அவர் உணர்வின்றி மரக்கட்டை போலக் கிடந்தார். இடைக்கிடை "வளவா, வளவா" என்று அழைத்தார்.

அவர் படுத்திருந்த கட்டிலுக்கு அருகில் இருந்த நாற்காலியில் வளவன் அமர்ந்திருந்தான், "உனக்குப் பயமென்றால் என்னுடன் தங்கு" என்று

சொன்னமையால் குருபரன் சிறிய தாய்க்கு போன் பண்ணி , “வளவனின் தந்தைக்குக் கடுமையான சுகவீனம். அதனால் இரவு வளவனுடன் தங்கப் போகிறேன்” என்று கூறி விட்டான்.

குருபரன் பயந்து திக்பிரமை பிடித்தவன் போல இருப்பதைக் கண்ட பார்வதி சொன்னாள், “தம்பீ பயப்பட வேண்டாம். இராணுவம் முன்பு போலக் கண்டபடிக் கைது செய்வதில்லை. யாராவது அறிவித்தால் அல்லது சந்தேகமேற்பட்டால் தான் கைது செய்வார்கள். மற்றும்படி கைது செய்ய மாட்டார்கள். இரண்டொரு நாளில் விட்டு விடுவார்கள்” என்றாள்.

அவள் அப்படிக் கூறிய போதும் குருபரனின் மனம் அமைதி கொள்ளாது தவித்தது.

இரவு ஒன்பது மணிக்குக் கார்த்திகா அங்கு வந்தாள். கடந்த சில மாதங்களாக அவள் பார்வதிக்குத் துணையாக அங்கு தங்கியிருக்கிறாள். அங்கு வந்த கார்த்திகா மாமனைப் பார்த்து விட்டு வளவனிடம் வந்து சொன்னாள், “அத்தான், இன்று நீங்கள் மாமிக்குத் துணையாக இருப்பதால் நான் வீட்டுக்குச் செல்கிறேன்”

“சரி சரி நீ போ” என்றான் வளவன்.

அதன் பின் குருபரனிடம் வந்த கார்த்திகா சொன்னாள், “இராகவனைக் காலையில் விடுவதாகச் சொன்னார்களாம். வாணியும் செல்லத்துரை ஐயாவும் வந்து சொல்லி விட்டு ரதிதேவியை அழைத்துச் செல்கிறார்கள்”

“அப்போ இராகவனின் நிலைப்பாடு என்ன?”

“அவனைப் பற்றி பெரிதாக விசாரிக்க செல்லத்துரை பயப்படுகிறார். வாணி கேட்டிருக்கிறாள். “விசாரணை முடிய விடுவோம் என்றார்களாம்”

குருபரன் எதுவும் பேசவில்லை. உள்ளே சென்று ஒரு மதுப் போத்தலை எடுத்து மேசையில் வைத்தான்.

பூபாலன் அப்போது அங்கே வந்தான். வளவனின் தந்தைக்கு வேண்டிய உதவிகளைச் செய்பவன் அவன். இரவு பத்து மணி வரை அங்கு நிற்பான்.

பூபாலன் கார்த்திகாவிடம் வந்து சில கணங்கள் அமைதியாக நின்றான். பின் அவளது காலைப் பிடித்தான், “என்ன இது? விடடா”அதட்டினாள் கார்த்திகா.

“அக்கா இனிமேல் நான் ஆரணியைத் துன்புறுத்த மாட்டன்”

“இப்படி எத்தனை தடவை சொல்லி விட்டாய். உன்னை நம்பி வந்த ஒரு அப்பாவி ஊனமடைந்த பெண்ணை நீ துன்பப்படுத்தலாமா? உனக்கு விருப்பமில்லாவிட்டால் விட்டு விட்டுப் போ. அவள் நிம்மதியாக இருப்பாள். யோசித்துப் பார் உன்னால் அவளுக்குத் துன்பங்கள் தான் அதிகம். இரண்டு பிள்ளைகளின் எதிர்காலத்தை நினைத்துத் துன்பப்படுகிறாள்.உனது கொடுமைகளைத் தாங்க முடியாது துன்பப்படுகிறாள். இதை நீ நினைக்கிறாயா? தான் படிக்கவில்லை. அதனால் தனது பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டுமென விரும்புகிறாள். இது தவறா.. நீ தன்னுடன் கூட இருந்தால் தனது பிள்ளைகளின் எதிர்காலம் பாழாகிவிடுமென்று பயப்படுகிறாள். அது உண்மை .நீ இயக்கத்தில் இருந்தவன். ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் வாழ்வாய் என்று நினைத்துத் தான் ஆரணியைத் திருமணம் செய்து வைத்தோம். நீ தலை கீழாக மாறிவிட்டாய். நாம் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக நடக்க வேண்டும் என்பது இயக்கத்தினது விருப்பம். நீ மற்றவர்கள் கேலி

செய்யும்படி வாழ்கிறாய். என்னால் உன்னை மன்னிக்க முடியவில்லை” என்றாள் கார்த்திகா.

அப்போது குடித்து விட்டு மயக்கத்துடன் அவ்விடம் வந்த குருபரன் கார்த்திகாவைப் பார்த்துச் சொன்னான், “காதல் ஒருவனை விசரனாக்கும் , பித்தனாக்கும், பேயனாக்கும், முட்டாளாக்கும்”

கார்த்திகா குடிகாரர்களுடன் பேச விரும்புவதில்லை. அதனால் “நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருங்கள், நான் வருகிறேன்” என்று புறப்பட்டாள்.

“ஒரு கதை. ஒரே ஒரு கதை.கேட்டு விட்டுப் போ. உன்னால் மனம் குழம்பிய வளவன் இன்று என்ன சொன்னான் தெரியுமா?” சொல்லி விட்டுச் செருமினான்.

கார்த்திகாவின் மனம் படபடத்தது “சொல்” என்று மனம் பரபரத்தது.

“நீ போரில் செத்திருந்தால் இன்று தான் மகிழ்வுடன் வாழ்ந்திருப்பேனாம்”

கார்த்திகாவின் மனதுள் பீரங்கிகள் வெடித்தன, ‘வளவனா அப்படிச் சொன்னார்?’ அவளால் நம்ப முடியவில்லை.

“சத்தியமாய்ச் சொன்னவன். எனது பிள்ளையின் மீது ஆணை.” என்றான் குருபரன்.

அதைக் கேட்டுக் கார்த்திகா நிலை குலைந்து போனாள்.

“உன் மீது வளவன் கொண்ட காதலின் அளவு எனக்குத் தெரியாது. பொதுவாய்ச் சொன்னால் காதல் என்றால் என்ன என்று கூட எனக்குத் தெரியாது. பெற்றோர் விரும்பினர். ஊருக்குச் சென்று தாலி கட்டினேன். ஆறு மாதங்களின் பின் அவளை அழைத்து வந்தேன். நிம்மதியாகவும் மகிழ்வுடனும் வாழ்கிறேன். என்னுடைய வாழ்வு பற்றி வளவனுக்குத் தெரியம். காதல் ஏமாற்று, உடற் கவர்ச்சி இதைத் தவிர வேறென்ன இருக்கு. எனது நண்பன் ஒரு பெண்ணைக் காதலித்தவன். அவளும் காதலித்தாள். பெற்றார் வெளிநாட்டுக்காரனைப் பேசி முடிவெடுத்தனர். அவள் அவர்களின் முடிவின் படி வெளிநாட்டுக்காரனைத்

திருமணம் செய்து கொண்டு வெளிநாட்டுக்குப் போய் விட்டாள். இது தான் காதல்" புலம்பினான் குருபரன்.

குருபரன் சொன்னதைப் பூபாலன் வளவனுக்குச் சொன்னான். அதைக் கேட்ட வளவன் அதிர்ந்து போனான். உயிருக்குயிராக நேசித்த அவளைப் பற்றி அப்படிக் கூறியிருக்கக் கூடாது. அதைக் கேட்டுக் கார்த்திகா எவ்வளவு துன்பப்பட்டிருப்பாள்.

**"அன்பே!**
**உன் நிழல் கூட**
**வாய் திறந்து**
**காதல் கவிதை பேசும்**
**என்றும் என் மனதில்**
**மனதினில் உலவும்**
**பௌர்ணமி நிலவே**
**உன் நினைவுகள்**
**இல்லாதிருந்தால்**
**என் மனம்**
**அமாவாசை யாகும்"**

“என்று கவிதைகள் எழுதியவரா இன்று நான் போரில் செத்திருந்தால் மகிழ்ந்திருப்பேன் என்று கூறியது”

நினைக்க மனம் துவண்டது. குழப்பத்துடன் மாமன் படுத்திருக்கும் அறைக்கு வந்தாள். அங்கு பூபாலன் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான்.

“நான் போறன்” என்று கூறி விட்டு அவனது பதிலுக்குக் காத்திராமல் புறப்பட்டாள் கார்த்திகா.

வளவனால் எதுவும் பேச முடியவில்லை. துக்கத்துடன் வாசலைப் பார்த்தான். சூட்டிப் பப் புறப்பட்டுச் செல்லும் ஓசை வளவனின் காதுகளில் இடியாக இறங்கியது.

## 20

“சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் தான் மனிதனை மாற்றுகின்றன. அன்றைய சூழ்நிலையில் நான் கவிதையாக, கரும்பாக, அமிழ்தமாக, பௌர்ணமி நிலவாக இருந்தேன். இன்று? கார்த்திகாவால் சிந்திக்க முடியவில்லை. மோட்டார் வாகனத்தை நிறுத்தி விட்டு

வந்தாள். வீதியில் அவளது வருகைக்காக காத்திருக்கும் அவளது செல்லப்பிராணியான வீமன் ஊளையிட்டுத் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தது. அதை அவள் அணைத்தாள். அவள் தனக்கேற்படும் இன்ப துன்பங்களைப் பற்றி அதற்குக் கூறுவாள். அதனால் அவளது மனம் ஆறுதலடையும்.

"வீமா, இன்று என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லை. நீ போய்ப் படு. " என்று கூறி விட்டு உள்ளே சென்றாள். வீமனும் அவளுடன் அவளின் அறைக்குள் நுழைந்தது.

கார்த்திகா வந்த சத்தம் கேட்டு ஆரணி வெளியே வந்தாள் . பூபாலன் ஆரணியையும் பிள்ளைகளையும் வீட்டை விட்டுத் துரத்திய பின்பு அவள் ஆரணியைத் தனது வீட்டிற்கு அழைத்து வந்திருந்தாள்.

என்றுமில்லாதவாறு கார்த்திகாவின் முகம் விகாரமடைநதிருந்தது. அறைக்குள் நுழைந்த கார்த்திகா உடுப்புக்களைக் கழற்றாது கட்டிலில் விழுந்தாள். அவளது மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. விக்கி விசும்பி அழத் தொடங்கினாள்.

ஆரணி சில கணங்கள் திகைத்துப் போய் நின்றாள். இரும்புப் பொம்மை என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் கார்த்திகாவுக்கு இன்று என்ன நடந்தது.ஆரணியால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. அவள் எதற்கும் கலங்க மாட்டாள்.பயப்பட மாட்டாள். உணர்வுகளைப் பிறருக்கு வெளிப்படுத்த மாட்டாள்.

“அக்கா.. என்னக்கா?” கார்த்திகா அழும் சத்தம் கேட்டு செல்லம்மா வெளியே வந்தாள். ஆரணி கார்த்திகாவைத் தேற்றிக் கொண்டிருந்தாள். வளவன் வந்ததில் இருந்து கார்த்திகாவின் போக்கில் மாறுபாடு இருந்ததை செல்லம்மா கண்டு கொண்டாள். இருப்பினும் அதைக் காட்டிக் கொள்ளவில்லை. திமிர் பிடித்து இயக்கத்திற்குச் சென்றவள். அனுபவிக்கட்டும் என்று நினைத்தாள். அவள் இயக்கத்திற்குச் சென்று வந்த பின்பும் செல்லம்மாவுக்கு அவள் மீது வெறுப்பு இருந்தது.

“என்னவாம்.. ஏன் அழுகிறாள்?” என்று கேட்டாள் செல்லம்மா.

“நான் பலமுறை கேட்டுவிட்டேன். சொல்கிறாவில்லை. நீங்கள் கேட்டுப் பாருங்கோ” என்றாள் ஆரணி.

“கார்த்தி என்ன நடந்தது .சொல்லி விட்டு அழு” என்றாள் செல்லம்மா வெறுப்புடன்.

கார்த்திகா எதுவும் சொல்லாது விக்கி விசும்பி அழுவதைக் கண்ட செல்லம்மா, “தலை கால் தெரியாமல் நடந்தால் இப்படித்தான் அழ வேண்டும். வளவன் அருமையான பிள்ளை. அவனை ஏமாற்றி அவனது வாழ்வைச் சீரழித்து விட்டு இப்ப அவனைக் கண்டவுடனை துக்கம் வந்திட்டுதோ?” என்று கூறிவிட்டுச் சென்றாள் செல்லம்மா.

ஒரு தாய்க்கு இவ்வளவு வெறுப்பா. பிள்ளை துயரப்படும் போது ஆறுதல் வார்த்தைகள் கூறாது ஆத்திரப்பட்டு விட்டுச் செல்லும் தாயை அவளால் மன்னிக்க முடியவில்லை.

“எல்லாம் நாம் முன்பு செய்த பழி. இப்போ வந்து சூழ்ந்திருக்கு” என்று நினைத்தாள்.

சில நிமிடங்கள் அழுத கார்த்திகா திடீரென்று எழுந்து நாற்காலியில் அமர்ந்து கண்களைத்

துடைத்தாள். பின்பு “வானம் இடிந்து விழுந்தாலும் அஞ்சாத நான் ஒரு சிறு வார்த்தையால் அல்லற் பட்டு விட்டேன். வளவன் போரின் போது நான் இறந்திருந்தால் தான் மகிழ்ந்திருப்பேன் என்று குருபரனுக்குக் கூறினவராம். அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நான் அவரைக் காதலித்தது உண்மை. அந்த நேர உணர்வுகளின் உந்தலால் இயக்கத்திற்குச் சென்றுவிட்டேன் .அதற்காக இப்படியா சொல்வது?” என்று கேட்டாள் கார்த்திகா.

“வளவன் அப்படிச் சொன்னவரா ?” ஆரணி கேட்டாள்.

“ம்..குருபரன் தன் பிள்ளை மீது சத்தியம் பண்ணினவர். அதன் பின்பு தான் நான் நம்பினேன்” என்றாள் கார்த்திகா.

“ஆம்பிளைகள் ஆம்பிளைகள் தான். அவர்களின் பிறவிக்குணம் மாறாது. காதல் என்று உருகுவார்கள். அது எம்மைக் காணும் வேளையில் மட்டும் தான். அந்த நேரம் மயக்கத்தைத் தரும் சொற்களைப் பேசி மயக்கித் தம் உணர்வைப் பூர்த்தி செய்வர். பூர்த்தியான பின் அலட்சியப்படுத்துவர்” ஆத்திரப்பட்டாள் ஆரணி.

"அன்பே அமுதே

ஆருயிர்க் கொழுந்தே

தினமும் கனவில்

மயக்கும் மயிலே"

என்றும்

"கட்டழகாய் என் முன்னே

தோன்றும் சிற்பம்

கனியமுதாய் நெஞ்சுக்குள்

இனிக்கும் அமிர்தம்

சொல்லாமல் மனதுக்குள்

புகுந்த சொர்க்கம்

கலைகள் பலவும் உருவாகும்

கலை அரங்கம் "

என்றும்

"கதையும் பேச்சும் கரும்பேயாகும்

நினைவும் செயலும் தேனேயாகும்

நினைத்ததும் கனவுகள் கவிதைகளாகும்

கனவினில் மனதில் அலைகள் பொங்கும்

**நினைவினில் என்றும் தாரகை மலரும்**

**கனவும் நினைவும் செயல்களும்**

**உந்தன் உருவாய் வந்து மயக்கும்**

**உன்னை மறக்கவும் முடியுமா"**

என்றும்

**"விழித்திருக்கும் வேளை**

**பூத்திருக்கும் உன் நினைவு**

**விழி மூடித் துயில் கொண்டால்**

**மலர்ந்திருப்பாய் மனதுக்குள்"**

"என்றும் சொன்னவர் இன்று நான் செத்திருக்கலாம் என்று சொல்வதை என்னால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும். ஒருவர் மனதுள் எதையும் நினைக்கலாம். அது அவரது விருப்பம். ஆனால் அதை வெளியே சொல்லும் போது அடுத்தவர்களின் மனம் புண்படாமல் இருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டாமா? நான் அவர் உயிருக்குயிராக நேசித்தார் என்றும், அவரை ஏமாற்றி விட்டேன் என்றும் மனதுக்குள் நினைத்துத் துன்பப்படாத கணமே இல்லை.. காதலிப்பவர்கள் எல்லோரும் காதலில்

வெற்றியடைகிறார்கள? இல்லை காதலில் வென்றவர்கள் அனைவரும் இன்பமாக இருக்கிறார்களா? இல்லையே. தனக்கு வரும் துன்பம் தனது எதிரிக்குக் கூட வரக் கூடாதென்று நண்பர்கள் விரும்புவார்கள். இவர் என்னவென்றால் உயிருக்குயிராக நேசித்தவளை சாக வேணுமெண்டு விரும்புகிறார். நான் அவரிடம் எதையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவர்..? நெஞ்சம் குமுறச் சிலையாக அமர்ந்திருந்தாள் கார்த்திகா. அவளது முகம் கோரமாக இருந்தது.

ஆரணி ரெலிபோனை எடுத்துக் கொண்டு வெளியே வந்து வளவனை அழைத்தாள். உடனே வளவன் தொடர்பு கொண்டான். “என்ன? என்ன வேண்டும்? என்றான் வளவன். “நீங்கள் உண்மையாக அக்காவை நேசித்தீர்களா, அப்படி உண்மையாக நேசித்திருந்தால் அவா செத்திருந்தால் மகிழ்ந்திருப்பேன் என்று குருபரனுக்குக் கூறியிருப்பீர்களா, அக்கா இப்போது பெரும் துயரப்படுகிறா.அந்த நேர உணர்ச்சிப் பெருக்கால் ஆயிரக் கணக்கானோர் இயக்கத்தில் சேர்ந்தனர். நானும் அக்காவும் சேர்ந்தோம். ஒரு புனிதமான நோக்குடன் தான் சேர்ந்தோம்.எமது இலட்சியம் வெற்றி பெறும் என்று நம்பினோம்.

எதிர்பாராத விதமாகத் தோல்வி ஏற்பட்டு விட்டது. அதற்காக இவ்வளவு கொடுமையான சொல்லை நீங்கள் சொல்ல வேண்டுமா? பற்று, பாசம், இரக்கம் என்பன உங்கள் இதயத்தில் இல்லையா?" கோபமாகக் கேட்டாள் ஆரணி.

ஏதோ ஒரு உணர்வில் தவறுதலாகச் சொல்லிவிட்டான். அது இவ்வளவு தூரம் கார்த்திகாவின் மனதைப் பாதிக்கும் என்று அவன் நினைக்கவில்லை. அதைச் சொன்ன நேரம் முதல் அவனது மனம் தவித்துக் கொண்டிருந்தது. அதனால் அவன் கார்த்திகா துன்பப்படாமல் இருப்பதற்காகப் பொய் சொல்ல விரும்பினான்.

"கார்த்திகாவின் உடலில் எறும்பு கடித்தாலே என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. நான் எனது காதல் விடயங்களை யாருக்கும் சொல்வதில்லை. குருபரன் குடித்தால் கண்டபடி உளறுவான். முன்பின் தெரியாதவர்களுடனும் சட்டம் கதைப்பான். வாதாடுவான். இது அவனது பிறவிக் குணம். அவன் வெறியில் எதைச் சொன்னானோ எனக்குத் தெரியாது. கார்த்திகாவை அவனுக்கு முன்பின் தெரியாது. அப்படியிருக்க இப்படியான கதையை ஏன் சொன்னான்

என்று எனக்குப் புரியவில்லை. அவன் கார்த்திகாவுடன் கதைக்கும் போது பூபாலனும் இருந்திருக்கிறான். அவன் வந்து சொன்ன போது துடிதுடித்துப் போனேன். அப்பாவின் நிலை முன்பை விட மோசமாக உள்ளது. நான் பின்பு கதைக்கிறேன்" என்று கூறி விட்டுத் தொடர்பைத் துண்டித்தான் வளவன்.

ரெலிபோனுடன் வந்த ஆரணி ஸ்பீக்கரில் விட்டாள். அதைக் கேட்கக் கேட்க கார்த்திகாவின் மனம் மாறியது.

"குடிகாரனின் பேச்சு விடிந்தால் போச்சு என்பார்கள். பூபாலன் குடித்துவிட்டு பலவற்றை உழறுவார். விடிந்ததும் கேட்டால் தான் அப்படிச் சொல்லவில்லை என்பார். அதனால் அதை மறந்திடு" என்றாள் ஆரணி.

வளவனின் மீது அணுவளவும் பிசகாத நம்பிக்கை வைத்திருந்தாள் கார்த்திகா. பூபாலன் குடித்துவிட்டு வந்து கண்டபடி உளறுவான். மறுநாள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்பான். குருபரன் என்னோடு கதைக்கும் போது தள்ளாடினான். வாய் தவறிப் பல கதைகளையும் கதைத்தான். பூபாலனும் அடிக்கடி குடிக்க மாட்டேன் என்று பிள்ளைகள் மீது ஆணையிட்டுச் சத்தியம்

பண்ணுவான். மாறுநாள் குடிப்பான். குடிகாரர் இப்படித் தான் இருப்பார்ள் என்று நினைக்க தான் வளவனைச் சந்தேகப்பட்டது தவறு என்று உணர்ந்தாள் கார்த்திகா.அந்த நினைவு அவளுக்கு நிம்மதியையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது.

“அத்தான் என் மீது உயிரையே வைத்திருந்தவர். அதை நான் உணரவில்லை. புனர்வாழ்வு பெற்று வந்த பின்பு அவரது கவிதைகளை எடுத்து வாசிக்கும் போது தான் அது எனக்கு புரிந்தது, “போர் முடிவுக்கு வந்த பின்பு தான் திருமணம் செய்வேன். அதுவரை அத்தான் காத்திருந்தால் கிழவனாகி விடுவார்” அவரைத் திருமணம் செய்யச் சொல்லுங்கோ என்று மாமிக்கு அடிக்கடிச் சொல்லுவேன். மாமி அதை ஏற்றுக் கொள்வா. அம்மாவிற்கு என்னில் பார்க்க அத்தானில தான் அன்பு அதிகம். அதை அவா எனக்கு பல வழிகளாலும் புலப்படுத்தியுள்ளா.அவா அத்தானோடு போனில் கதைத்துக் கொண்டிருக்கும் போது நான் வந்தால் உடனே தொடர்பைத் துண்டித்து விடுவா. நான் கதைத்தால் அத்தான் கலியாணம் செய்ய மாட்டாராம். அவற்றை வாழ்க்கை என்னால் சீரழிந்து விடும் என்று சொல்வா. நான் சிறிது நேரத்திற்கு முன்

அழுத போது என்னை புதினம் பார்த்தாவே தவிர ஏனென்று கேட்கவில்லை. நான் இயக்கத்திற்குச் சென்றதை மன்னிப்பதற்கு அவா தயாரில்லை”என்று கூறும் போது கார்த்திகாவின் குரல் தழும்பியது.

“சரி விடு.எல்லாம் எப்பவோ முடிந்து போன காரியம் என்று பகவத்கீதை சொல்கிறது. எனது வாழ்க்கை இப்படித் தான் அமைய வேண்டுமென்பது விதி. விதியை வெல்ல யாரால் முடியும்” என்றாள் கார்த்திகா.

“இந்த நவீன காலத்திலும் விதியை நீங்கள் நம்புகிறீர்கள்” என்றாள் ஆரணி.

“நம்புறன். முழுமையாக நம்புறன். எந்தத் தொடர்பும் இல்லாமல் தான் பல செயல்கள் நடைபெறுகின்றன. செயல்கள் முடிந்த பின்பு தான் செயலின் நன்மை தீமைகள் பற்றியும் அவற்றைச் செய்யும் விதங்கள் பற்றியும் யோசிக்கிறோம். எமது போராட்டத்தில் எந்த விதமான குறைபாடுகளும் இருக்கவில்லை. வெற்றியடைவோம் என்று நினைத்தோம். நினைத்தபடி நடக்கவில்லை. முயற்சி, திட்டமிடல், செயல்கள் மூலதனம் ,செயற்பாட்டுக்கருவிகள் , அனுபவமுள்ளோரின் தொடர்பு என்பன இருந்தால்

வெற்றி கிடைக்கும் என்று கூறும் வள்ளுவர் விதிப்படி தான் யாவும் நடக்கும் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். வள்ளுவனின் வாக்குப் பொய்யாகாது" என்றாள் கார்த்திகா.

"விதிப்படி தான் யாவும் நடைபெறுகின்றன என்பது உண்மை இல்லாவிட்டால் ஊர் பெயர் தெரியாத பூபாலன் எனக்குக் கணவனாகியிருக்க முடியாது" என்றாள் ஆரணி.

"இழந்தவற்றை நினைத்து இப்போது தான் கவலைப்படுகிறேன். அத்தான் நல்லவர். பூப்போல என்னைப் போற்றியவர். எட்டாத உயரத்தில் வைத்து ரசித்தவர்.நான் தான் ஏமாந்து விட்டேன். அவர் ஒரு கவிஞர், எழுத்தாளர். அதை விட இலக்கியங்கள் பலவற்றையும் ரசித்து ருசித்துப் படித்தவர். அவர் எழுதிய கவிதைகள் மிகவும் சுவையானவை. அவர் எழுதிய கவிதை ஒன்று எனது மனதை உலுப்பியது. அதைக் கூறுகிறேன் கேள்" என்றவள் அக்கவிதையைக் கூறினாள்.

**"சீதை என்று சொன்னால்**

**இல்லை என்று சொல்வேன்**

**ராதையென்று சொன்னால்**

**உண்மையென்று உரைப்பேன்**

**சீதை பிரிந்து சென்றாள்**

**ராதை கூடி மகிழ்ந்தாள்**

**நித்தம் நித்தம் கூடி**

**நினைத்ததெல்லாம் பேசி**

**கண்ணனோடு சேர்ந்து**

**கலந்து மகிழ்ந்து வந்தாள்''**

"கற்பனையைப் பார்த்தாயா? சீதையைப் போல என்னை விட்டுப் பிரியாதே. ராதையைப் போலக் கூடி மகிழ் என்று சொல்கிறார்." என்று கூறிவிட்டுப் பேசாமல் இருந்தாள் கார்த்திகா.

ஆரணி கார்த்திகாவின் முகத்தைப் பார்த்தாள். அது மிகுந்த பூரிப்புடன் காணப்பட்டது.இப்படியே இவள் காலம் பூராகவும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்தாள் ஆரணி.

"நான் அவரைப் புரிந்து கொள்ளவில்லை. இப்போது தான் புரிகிறது. அத்தானது நினைப்பு எனக்கு

வாழ உறுதுணையாக இருக்கும்” என்று கண்களை மூடினாள் கார்த்திகா. அவளது கண்களுக்குள் தோன்றிச் சிரித்தான் வளவன்.

## 21

வளவனது தந்தை காலமான செய்தி கேட்ட கார்த்திகாவும் தாயும் நள்ளிரவில் வளவனது வீட்டுக்கு வந்து விட்டனர். பூபாலன் அவர்களுக்கு உதவியாக இருந்து சகல வேலைகளையும் செய்து கொண்டிருந்தான்.

கார்த்திகா வளவனிடம் வந்து சொன்னாள், “அத்தான் எப்படி மரணவீட்டைக் கொண்டாடப் போகிறீர்கள்?” வளவனுக்கு கார்த்திகாவின் கேள்வி விளங்கவில்லை.

“எப்படியென்றால்” என்று கேட்டான்.

“போனமாதம் இலண்டனில் வசிக்கும் கோகுலனது தாயார் இறந்து விட்டார். அவன் ஊருக்கு வந்து

செத்தவீட்டைத் தடல் புடலாகக் கொண்டாடினான். நான்கு பான்ட் செற், நான்கு பறைமோளம், விசேடமான நிகழ்வுகள் பல” என்று கார்த்திகா கூறும் போது இடைமறித்துக் கேட்டான் வளவன். “எனக்குப் புரியவில்லை. விசேட நிகழ்வுகள் என்றால் என்ன? முன்பென்றால் பறை மேளத்துடன் செத்தவீடு முடிந்து விடும்”

“இப்ப அப்படியில்லை. வெடி நாற்பது ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் கொழுத்துவார்கள். வீதியால் மக்களை நடந்து செல்ல நிலபாவாடை விரிப்பார்கள். வாகனத்தில் சாராயமும், சோடாவும் கொண்டு செல்வார்கள். விரும்பியவர்கள் எடுத்துக் குடிக்கலாம். பிரேதம் வைப்பதற்குப் பெட்டி ஐம்பது அறுபதினாயிரத்துக்கு எடுப்பார்கள். இன்னும் பல” என்றாள் கார்த்திகா.

“எல்லோரும் அப்படிச் செய்வார்களா”?

“எல்லோரிடமும் இவ்வளவு பணம் இருக்கா என்ன? வெளிநாட்டில் இருப்பவர்களில் இரண்டொருவர் தான் அப்படிச் செய்வார்கள். கோகுலனின் தாய் சகோதரங்கள் எல்லாவற்றுடனும் பகை

.கோகுலனுக்குத் திருமணம் பேசிய போது தாயின் தம்பியார் தனது மகளைக் கட்டச் சொல்லி அழுது புலம்பியவர். ஆனால் தாயார் ஒத்துக் கொள்ளாது மானிப்பாயில் செய்து கொடுத்தவர். கோகுலன் மானிப்பாயாருக்குத் தான் உதவி செய்வான்.தாயின் தம்பியாரைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. காலகதியில் மானிப்பாய்ச் சம்பந்தப் பகுதியையும் லண்டனுக்கு அழைத்திட்டான். தாயின் சகோதரி தனது பிள்ளைகளில் ஒன்றையாவது வெளிநாட்டுக்கழைக்குமாறு கெஞ்சிக் கூத்தாடியும் கூப்பிடவில்லை. அதனால் யாரும் கோகுலனின் தாயைப் பராமரிக்க முன்வரவில்லை. மிகவும் சிரமப்பட்ட மனிசியைக் கோகுலன் வந்து முதியோர் பராமரிப்பு நிலையத்தில் சேர்த்து விட்டுச் சென்றான். அங்கு போய்ப் பார்க்கக் கூட யாரும் இல்லை. மனிசி இறந்ததும் முதியோர் காப்பகத்தினர் கோகுலனுக்கு அறிவித்தனர். அவன் வந்து தடபுடலாகச் செத்த வீட்டைக் கொண்டாடி விட்டுச் சென்றான்" என்றாள் கார்த்திகா.

"பெரிதாக எதுவும் வேண்டாம். சாதாரணமான ஒரு பெட்டி எடுப்பம். பறை மேளம் மட்டும் போதும்.

நாளைக்கு பகல் இரண்டு மணிக்கு முன்னம் பிரேதம் எடுக்க வேண்டும்" என்றான் வளவன்.

உடனே கார்த்திகா ரெலிபோனில் தொடர்பு கொண்டாள்.

"யார் கார்த்திகாவா? சொல்லம்மா? என்று மறுமுனையில் இருந்து குரல் கேட்டது. ஸ்பீக்கரில் விட்டதால் வளவனும் அதைக் கேட்டான்.

"எனது மாமா இறந்து விட்டார். இறுதிக்கிரியை நாளைக் காலை பதினொரு மணிக்கு நடைபெறும். எல்லா ஆயத்தங்களையும் செய்யுங்கள். இப்போ தேவையான பொருட்களைக் கொண்டுவாருங்கள். மிகுதியை நேரில் கதைப்போம்" என்றாள் கார்த்திகா.

"இங்கு இப்போது எல்லாவற்றையும் ரெலிபோனில் செய்து முடிக்கலாம்.வெற்றிலைக் கடை உரிமையாளர் முருகேசன் எனக்குத் தெரிந்தவர். எனக்குச் சில பொருட்களை விநியோகிப்பவர்.பொதுவாக நியூ மாக்கெற்றில் உள்ள வெற்றிலைக் கடை உரிமையாளரிற்கு அறிவித்தால் செத்த வீட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் வந்து சேரும்" என்றாள் கார்த்திகா.

வளவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. முன்பென்றால் பொருட்கள் வாங்க, பறைமேளத்திற்குச் சொல்லவென்று பலர் சைக்கிளில் புறப்படுவார்கள் .இப்போ எல்லாம் மாறிவிட்டது.” என்று சிந்தித்தான் வளவன்.

“நீங்கள் கொள்ளி வைத்தால் முப்பத்தொரு நாட்கள் இங்கு தங்க வேண்டும். இங்கே அப்படியல்ல எல்லாம் புதிது புதிதாக நடைபெறுகிறது. இப்போ பதினொரு நாளில் துடக்குக் கழித்து அந்தியேட்டி செய்கிறார்கள். ஊரில் உள்ள குருக்கள் அப்படிச் செய்ய மாட்டார். வேற்றூரில் இருப்பவர்கள் செய்வார்கள். உங்களின் விருப்பப்படி செய்யுங்கோ. கோகுலன் தாய்க்குக் கொள்ளி வைத்து விட்டு எட்டு முடிய சுற்றுலா விடுதியில் தங்கியிருந்து விட்டு பதினொராம் நாள் வீட்டுக்கு வந்து அந்திரட்டி செய்தன்றே சென்று விட்டான். இங்குள்ள ஒரு மண்டபத்தில் தான் அந்திரட்டி நடைபெற்றது.அங்கு தான் சமையல். ஊரவரில் பலர் செல்லவில்லை.” என்றாள் கார்த்திகா.

“நான் முறைப்படி கிரியைகளைச் செய்ய விரும்புகிறேன்” என்றான் வளவன்.

“அப்ப முப்பத்தொரு நாளும் நிற்பீர்கள்”

“இல்லை, நான் செல்ல வேண்டும். முப்பதாம் நாள் வருகிறேன்.” என்றான் வளவன். அவனுக்கு ஊரில் நிற்க விருப்பம்.ஆனால் கார்த்திகாவைக் காணப் பிடிக்கவில்லை. அவள் ஓயாது அத்தான் அத்தான் என்று அழைத்துக் கொல்கிறாள்.என்பதால் போய் விட்டு வர விரும்பினான்.

கார்த்திகா போன் பண்ணி சில மணி நேரத்தில் முருகேசன் தேவையான பொருட்களுடன் வந்தார்.

அதிகாலை ஆறுமணிக்குப் பறைமேளம் அடிக்கத் தொடங்கியது. பதினொரு மணிக்குக் குருக்கள் வந்து கிரியைகள் செய்தார். ஒரு மணிக்குப் பிரேத ஊர்வலம் ஆரம்பமானது.

அன்று சிற்றுண்டி வகைகளும் மதிய உணவும் கார்த்திகாவின் உணவகத்தில் இருந்தே வந்தன.

எல்லாம் முடிந்த பின்பு இரவு எட்டு மணிக்குக் கார்த்திகாவின் அருகே வந்தான் வளவன். “கார்த்தி சிறப்பாக அப்பாவின் இறுதி நிகழ்வுகள் நடைபெற உதவினாய். சாதாரணமாகத் தான் இந் நிகழ்வு

நடைபெற்றது. அப்பாவின் நினைவாகப் போராளி குடும்பத்திற்கு உதவி செய்ய விரும்புகிறேன். போராளி குடும்பத்தைத் தெரிவு செய்து தா" என்றான்.

"அதைக் கேட்டதும் மகிழ்ந்த கார்த்திகா சொன்னாள், "பொன்னையா அண்ணரின் மகள் கௌசல்யாவுக்கு இடது கால் முழங்காலுக்கு மேல் இல்லை. முழங்காலுக்குக் கீழானால் செயற்கைக் கால் பொருத்தலாம்.அவள் ஏ.எல் லில் மூன்று பாடங்கள் பாஸ் பண்ணினவள்.நேசரி ஆசிரியைக்கான பயிற்சியும் பெற்றவள். அவள் கோகுலனின் வீட்டில் ஒரு முன்பள்ளி வைத்து நடாத்தி வந்தாள். கோகுலன் அந்த வீட்டை விற்று விட்டான். அதனால் அவள் பெரும் கஷ்ரப்படுகிறாள். முன்பள்ளியை நடாத்துவதில்லை. நீங்கள் உங்கள் வீட்டைக் கொடுத்தால் நடாத்துவாள். மாமாவின் பெயரில் முன்பள்ளியைத் தொடங்கலாம்" என்றாள்.

"சரி, முன் பள்ளிக்கு ஏற்ற வகையில் வீட்டை ஒழுங்கு செய். வேண்டிய பணம் நான் தருகிறேன். அப்பா சுகவீனமுற்றிருந்ததால் அம்மாவை என்னுடன் அழைத்துச் செல்ல முடியவில்லை. அம்மா இங்கு

தான் இருப்பா. அவாவைக் கவனமாகப் பார்க்க வேண்டும்” என்றான் வளவன்.

அது கார்த்திகாவின் மனதைத் தாக்கியது. கண்களைக் கசக்கினாள். அதைக் கண்ட வளவன் சொன்னான், “உனக்கு ஆயிரம் வேலை. அம்மாவைக் கவனிக்க முடியுமா?” என்று கேட்டான் வளவன்.

“அவா என்னுடைய மாமி. அவாவைக் கவனித்த பிறகு தான் மறுவேலைகள் செய்வேன்” என்றாள் கார்த்திகா.

மறுநாள் வீட்டை முன்பள்ளியாக மாற்றத் தொழிலாளர்கள் வந்தனர். ஐந்து தினங்களில் வீடு அழகிய முன்பள்ளியானது. பிள்ளைகளுக்குத் தேவையான உபகரணங்கள் முழுவதையும் வளவன் வாங்கிக் கொடுத்தான். விளையாட்டு முற்றம் ஒன்று அமைக்கப்பட்டது.

“வளவனைப் போல வெளிநாட்டில் உள்ளவர்கள் இப்படியான உதவிகளைப் போராளிகளுக்குச் செய்தால் போராளிகள் கஷ்ரங்களால் விரக்தியுற்றுத் தற்கொலை செய்ய மாட்டார்கள். எத்தனை போராளிகள்

கஷ்ரத்தைத் தாங்க முடியாமல் தமது உயிரை மாய்த்துக் கொண்டார்கள்” கலங்கினாள் கார்த்திகா.

“எம்மவரைத் திருத்தவே முடியாது. சென்ற வாரம் அம்மன் கோவில் திருவிழாவுக்காக வந்த ரூபன் எத்தனை இலட்சம் செலவு செய்தான். அதை அவனது இனத்தவரான கோசலைக்குக் கொடுத்திருக்கலாம். அவளுக்கு வலது கை இல்லை. இருப்பினும் தைரியத்துடன் மிக்சர் ,வடை, எள்ளுப் பாகு என்பவற்றைச் செய்து கடைகளுக்கு வைத்துச் சீவிக்கிறாள். அதைப் பெருப்பிக்க ஒரு லட்ச ரூபா கொடுத்தால் போதும்” என்றாள் ஆரணி.

“அப்பாவின் அந்திரட்டி வரை பொறுத்திராது வேலை முடிந்தால் முன்பள்ளியை ஆரம்பியுங்கள்” என்றான் வளவன்.

“அன்று திறப்பதைத் தான் நான் விரும்புகிறேன்” என்றாள் கார்த்திகா.

“கார்த்தி சடங்கு சம்பிரதாயங்கள் எதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. நாளையின்டைக்கு அப்பாவின் எண்பத்தொராவது பிறந்த தினம் .அன்று திறவுங்கள்” என்றான் வளவன்.

“ஆர் திறக்கிறது” என்று கேட்டாள் கார்த்திகா.

“பேரம்பலம் சேரைக் கொண்டு திறக்கலாம். பெரியவர்கள் ,அறிஞர்கள் என்பாரில் எனக்கு நம்பிக்கை இல்லை. அவர்கள் இதை ஒரு நிகழ்வாகக் கருதி வருவார்கள் பேசுவார்கள். பேஸ்புக்கிலும், பேப்பரிலும் அதைப் போட்டு மகிழ்வார்கள். அதைக் கொண்டு ஏதாவது இலாபம் சம்பாதிக்கலாம் என்று நினைப்பார்கள்.பேரம்பலம் சேர் நல்லதொரு ஆசிரியர். திறமையான அதிபர். இதை விட வேறென்ன வேண்டும்?” என்று கேட்டான் வளவன்.

“நான் அதை நினைக்கவில்லை. அவரை விடப் பொருத்தமானவர் எவருமில்லை” என்று கார்த்திகா கூறும்போது அங்கு வந்த பேரம்பலம் “யாரை விடப் பொருத்தமானவர் எவருமில்லை” என்கிறாய் என்று கேட்டார்.

“உங்களை விடப் பொருத்தமானவர் இங்கு யார் இருக்கிறார்கள். புதன்கிழமை முன்பள்ளியைத் திறக்கப் போகிறோம். அன்று மாமாவின் எண்பத்தொராவது பிறந்ததினம். நீங்கள் தான் முன்பள்ளியைத் திறந்து வைத்தல் வேண்டும் “என்றாள் கார்த்திகா.

“நானா?” ஆச்சரியப்பட்டார் பேரம்பலம்.

“ஓம்.. நீங்கள் எனது ஆசிரியர்.அப்பாவின் நண்பர். நல்ல கல்விமான்…” என்று வளவன் சொல்லும் போது பேரம்பலம் குறுக்கிட்டார். “போதும் போதும், நான் திறந்து வைக்கிறேன்” என்றார்.

அப்போது அங்கு வந்த கௌசல்யா சொன்னாள், “எமது முன் பள்ளிகளில் ஏதாவது விழாக்கள் நடந்தால் அயலில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களையும் மாணவர்களையும், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் அழைப்பது வழக்கம்”

“உங்களுக்கு விருப்பமான அனைவரையும் அழையுங்கள். கார்த்திகா இருக்கிறாள். எவ்வளவு பேர் வந்தாலும் சாப்பாடு போட” என்றான் வளவன்.

புதன்கிழமை முன்பள்ளியைப் பேரம்பலம் திறந்து வைத்தார்.முன்பள்ளியின் பெயர்ப் பலகையைக் கார்த்திகா திரைநீக்கம் செய்தாள். முதல் நாள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இராகவன் விடுதலை செய்யப்பட்டான். அவனும் குருபரனும் விழாவுக்கு வந்திருந்தனர்.

விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த அதிபர் பேரம்பலம் உரையாற்றினார். “இங்கு வந்திருக்கும் அனைவரையும் இருகரம் கூப்பி வரவேற்கிறேன். வளவன் தன்னைப் பற்றியோ, தனது குடும்பத்தைப் பற்றியோ எதுவும் பேசக் கூடாதென்று கட்டளையிட்டிருக்கிறான். அதனால் நான் அது பற்றிப் பேசவில்லை”

“இந்நாட்டில் நடைபெற்ற கொடிய போரைக் காரணம் காட்டித் தான் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றனர். இல்லாவிட்டால் சென்றிருக்கவே முடியாது. அவர்கள் வெளிநாடுகளில் இருந்து உணர்ச்சிகரமாகப் பேசினார்கள். பேசுகின்றனர். அதனால் எந்தப் பயனும் வரப் போவதில்லை.நம்பிக்கையுடன் போராடியோர் இன்று அங்கங்களை இழந்து வலுவிழந்து ஒருநேரச் சாப்பாட்டிற்குக் கூட வழியில்லாமல் துன்பப்படுகின்றனர். இதை யாரும் உணர்ந்ததாக இல்லை. இப்பொழுதும் போராட வேண்டும். உரிமையைப் பெற வேண்டும்.. என்று மேடைகளில் பேசி வருகிறார்கள். இது அவர்களுக்கு பல வழிகளிலும் வருமானத்தைக் கொடுக்கிறது. ஆனால் இதனால் போராளிகளுக்கு என்ன இலாபம்? வளவனைப் போல உதவி

செய்யுங்கள். வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் ஆடம்பரமாகக் கொண்டாடப்படும் விழாக்களில் கொடுக்கப்படும் மதுபானங்களின் செலவுத் தொகையை இங்கு ஒரு போராளிக்கு அனுப்பினால் அவன் ஒரு தொழிலை ஆரம்பிப்பான். இதைப் பற்றி இனியாவது சிந்தியுங்கள்" என்றார் பேரம்பலம்.

விழா முடிந்து எல்லோரும் சென்று விட்டனர். அப்போது பூபாலன் வளவனின் அருகே வந்து சொன்னான், "நாளைக் காலை நீங்கள் சென்று விடுவீர்கள். அதற்கு முன் ஆரணியின் விடயத்தைக் கவனியுங்கள்" என்றான்.

"நான் இன்னும் இருபது நாட்களில் இங்கு வருவேன். அதுவரை உனது நடவடிக்கைகள் பற்றி கார்த்திகா அவதானிப்பாள். நல்ல முறையில் நீ நடந்தால் சேர்த்து வைப்பேன். இல்லாவிட்டால் பிரிய வேண்டியது தான், போராளிகள் எல்லாவற்றையும் இழந்து விட்டார்கள். அவர்கள் இழப்பதற்கு இனி எதுவும் இல்லை, நான் எனது கல்வியை, குடும்பத்தை, நல்வாழ்வை, அங்கங்களை எல்லாவற்றையும் இழந்து விட்டேன். பூபாலனின் இழப்பு என்னைப் பாதிக்காது. அதனால் நன்மை தான் உண்டாகும்.அதனால் அவரைப் பிரித்து

வையுங்கள்" என்று ஆரணி என்னிடம் சொன்னாள். நான் திரும்பி வரும் போது அவள் என்னிடம் வந்து உன்னைச் சேர்த்து வைக்கும்படி கூற வேண்டும். அதற்கேற்ற படி நட" என்றான் வளவன். பூபாலன் திகைத்துப் போனான். அவனால் பேச முடியவில்லை.

"பயிற்சியும் முயற்சியும் எதையும் செய்ய வைக்கும். திடமான மனதுடன் போராடிய நீ, திடமான மனதுடன் வாழ முயற்சி செய்" என்றான் வளவன்.

## 22

வளவன் சென்ற பின்பு கார்த்திகாவின் உள்ளத்தில் வெறுமை படர்ந்திருந்தது. வேலைக்குச் செல்ல அவள் விரும்பவில்லை. நெஞ்சில் இனம்புரியாத வேதனை ஒன்று உருவாகிப் பெருகிக் கொண்டிருந்தது. என்ன தான் சமாதானம் சொன்னாலும் மனம் கேட்க மறுத்தது. மனதில் திடீரென்று ஏற்பட்டுத் தொல்லைகள் பலவும் கொடுக்கும் துன்பத்தைக் குறைப்பதற்காகத் தான் ஆரணியை அழைத்து வந்திருந்தாள். அப்படியிருந்தும் மனம் வளவனின் நினைவுகளில்

இருந்து விடுபடவே இல்லை. மாறாகப் பெருகிக் கொண்டேயிருந்தது.

"உனது நிலை தான் வளவனுக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும். அதற்காகத் தான் அவர் செத்த வீடு முடிந்த கையோடு கனடாவுக்குச் சென்று விட்டார்"என்றாள் ஆரணி.

கார்த்திகா எதுவும் பேசவில்லை. விடிந்து பல மணி நேரமாகியும் படுக்கையால் எழும்பாது கட்டிலில் புரண்டு கொண்டிருந்தாள்.

இரண்டு நாட்களாகப் பேரம்பலத்திற்குக் காய்ச்சல் நோய் ஏற்பட்டிருந்தது. அத்துடன் சுகரும் அதிகரித்திருந்தது. அதனால் அவர் வேலைக்குச் செல்லாது வீட்டில் படுத்திருந்தார். பேரம்பலத்திற்கு உதவி செய்ய உறவினர்கள் எவரும் விரும்பாததால் அவரைக் கார்த்திகா தனது வீட்டிற்கு அழைத்து வந்திருந்தாள்.

பேரம்பலத்தின் தாய்க்கு எட்டுச் சகோதரர்கள். தந்தைக்கு ஐந்து சகோதரர்கள். பேரம்பலத்திடம் ஏராளமான சொத்து இருந்தது.பேரம்பலத்தின் தாயின் சகோதரங்களும் தந்தையின் சகோதரங்களும் மிகவும்

ஏழைகள். அதனால் அவர் தான் அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்தார். அவர்களது பிள்ளைகளைக் கற்பித்தார். சிலர் வெளிநாடுகளுக்குச் செல்ல உதவினார். வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் காலப் போக்கில் தமது சகோதரர்களை தாம் வாழும் நாட்டிற்கு அழைத்துச் சென்று விட்டனர்.

பேரம்பலத்தின் தாயின் சகோதரங்களின் பிள்ளைகள் பத்துப் பேர் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர். மூவர் மட்டும் யாழ்ப்பாணத்தில் அரச உத்தியோகங்களில் உள்ளனர்.

பேரம்பலத்தின் தந்தையின் சகோதரர்களின பிள்ளைகள் இருபது பேர் வெளிநாட்டுக்குச் சென்று விட்டனர்.ஐந்து பேர் யாழ்ப்பாணத்தில் அரச உத்தியோகங்களில் உள்ளனர்.

வெளிநாடுகளுக்குச் சென்ற எவரும் பேரம்பலத்துடன் தொடர்பு கொள்வதில்லை. ஊருக்கு வந்தால் ஒரு வேட்டி அல்லது சேட்டுடன் சென்று கதைப்பார்கள். ஊரில் உள்ளவர்களுக்கும் பேரம்பலத்திற்கும் பெரிதாக ஒத்து வராது. அவர் இயக்கத்திற்கு வேலை செய்ததால் அடிக்கடி அவரை இராணுவம் தேடி வரும்.அதற்குப் பயந்து அவருடன் தொடர்பு

வைப்பதில்லை. மனைவியும் பிள்ளைகளும் இறந்த பின் அவர் தனியாகவே சமைத்து உண்டு வந்தார்.எவ்வளவோ உதவிகள் செய்தும் யாரும் தன்னைக் கவனிக்காததால் தனது உறவினர்களோடு இருந்த தொடர்பைத் துண்டித்து விட்டார். ஊரில் பெரும் சொத்துக்கள் அவருக்குண்டு. அதற்காக தாயின் சகோதரர்களின் பிள்ளைகளும் தந்தையின் சகோதரர்களின் பிள்ளைகளும் அவரை அக்கறையுடன் பார்க்க விரும்புவதாக கூறியும் அவர் ஏற்கவில்லை. அதனால் அடிக்கடி அவருக்கும் உறவினர்களுக்கும் இடையே பிரச்சனைகள் உருவாகும்.

கார்த்திகா அதிகாலை நான்கு மணிக்குத் தேனீர் குடிப்பாள். பின்பு எழுந்து குளித்து விட்டு ஆறு மணிக்குத் தொழிற்சாலைக்குச் சென்று விடுவாள். அன்று எட்டு மணியாகியும் படுக்கையால் எழும்பாததால் செல்லம்மா வந்து பார்த்தாள். வளவன் வந்த நாளில் இருந்து அவளது போக்கில் ஒரு மாறுதல் உண்டாகியிருப்பது அவளுக்குத் தெரிந்தது. வேலைக்கு ஒழுங்காகப் போவதில்லை. வேலையால் வந்தது முதல் திக்பிரமை பிடித்தவள் போல இருப்பது. அடிக்கடி தனக்குள் கதைப்பது. ஓசைப்படாமல் அழுவது. கண்ணீரைத் துடைப்பது. இவற்றையெல்லாம்

அவள் அவதானித்த போதும் அதைப் பற்றி அவள் வாய் திறந்து கேட்கவில்லை. வளவனைத் தவிக்க விட்டு விட்டு அவள் இயக்கத்திற்குச் சென்ற அன்றே அவளுக்கு கார்த்திகா மீது அளவுக்கதிகமாக கோபம் இருந்தது. அது அவள் புனர்வாழ்வு பெற்ற பின்பு வீட்டுக்கு வந்த பின்பும் குறையவில்லை. வளவன் வந்த பின்பு பல மடங்கு அதிகரித்திருந்தது.

மேசையில் ஆறிப் போயிருந்த தேநீர்க் கோப்பையில் ஈ மொய்த்திருந்தது. இருப்பினும் அதைக் கவனிக்காதவள் போலச் சென்றாள்.

கார்த்திகாவைச் சந்திப்பதற்காகப் பூபாலன் வந்து வெகுநேரமாகக் காத்திருந்தான்.

கார்த்திகா ஆரணியைக் கூட்டி வந்த பின்பு பூபாலன் பெரும் கஷ்டத்துக்குள்ளானான். ஆரணி விடியற்காலையில் எழுந்து காலை உணவும் மதிய உணவும் சமைத்து விடுவாள். அவள் நன்றாகச் சமைப்பாள். இயக்கத்தின் சமையல் அறையில் நெடுங்காலம் வேலை செய்ததால் மிகவும் சுவையான விதம் விதமான உணவுகளை அவள் சமைப்பாள்.அதை உண்டு பழகிய பூபாலனுக்கு கடைச் சாப்பாடு ஒத்து வரவில்லை. அத்துடன் வேலையும்

இல்லாததால் குடிப்பதற்கும் உண்பதற்கும் பெருங் கஷ்ரப்பட்டான். கார்த்திகா முரட்டுச் சுபாவம் கொண்டவள். அவளிடம் இரக்கத்தைக் காண முடியாது. ஏடாகூடமாகக் கதைத்தால் அடித்தும் விடுவாள். வேலை இல்லாததால் பொறுமையாக அவன் இருந்தான். அவனுக்கு காலை உணவும் தேநீரும் வளவனின் தாய் கொடுத்து வந்தாள்.

படுக்கையில் இருந்த பேரம்பலத்திடம் சென்றான் பூபாலன். அவர் அவனைக் காண விரும்பவில்லை. அதனால் கண்ணை மூடினார்.

“சேர்.. சேர்..” பூபாலனது நாத் தழுதழுத்தது.

“என்ன? அதட்டினார் பேரம்பலம்.

“சேர் இனிமேல் நான் குடிக்க மாட்டன். ஆரணியோடு சண்டை பிடிக்க மாட்டன்” அழுதான் பூபாலன்.

“போடா வெளீலை. உன்ரை வார்த்தையை நான் நம்ப மாட்டன். இப்படி எத்தனை தரம் சொன்னனீ..ஆரணி பாவம். வலது குறைந்தவள் என்று கூடப் பாராமல் குடித்து விட்டு அவளைக் கொடூரமாகத் தண்டிக்கிறாய். அவள் உழைக்கிறாள். பிள்ளைகளை வளர்த்து

ஆளாக்கி விட்டால் அவர்கள் அவளைக் கவனிப்பார்கள். உன்னுடன் கூடி வாழ்ந்தால் பிள்ளைகளின் எதிர்காலமும் பாழாகி விடும். நீ இயக்கத்தில் இருந்தனீ. ஒழுங்கு கட்டுப்பாடுகளுடன் வளர்ந்தனீ. ஏன் இப்படி மாறினாய்? அவளா விரும்பி உன்னைக் கலியாணம் செய்தவள்.பலரைக் கெஞ்சிக் கூத்தாடி அவளின் சம்மதத்தைப் பெற்ற பின்பு தான் அவள் ஏழை, வழியில்லாதவள் என்று உனக்குத் தெரியுதோ? அவளை விட்டுட்டுப் போ.வேணுமெண்டால் வேறு யாரையும் கலியாணம் செய். இனிமேல் இஞ்சை வராதை என்றார் பேரம்பலம். அவருக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

பேரம்பலத்தின் பலத்த குரல் கேட்டு கார்த்திகா படுக்கையால் எழுந்து பேரம்பலத்தின் அறைக்கு வந்தாள். அவளைக் கண்ட பூபாலன் ஒதுங்கி நின்றான்.

“இவனைப் படிப்பித்ததுக்கு நான் வெட்கப்படுகிறேன். அந்தப் பழியை எப்படித் தீர்ப்பதென்று எனக்குத் தெரியவில்லை. ஆரணியின் இன்றைய நிலைக்கு நானும் ஒரு காரணம் தானே.முன்பு சொன்னவற்றையெல்லாம் மறந்து மிருகமாகச் செயற்பட்டு விட்டு இப்போ மன்னிப்புக் கோருகிறான்.

குடிக்க மாட்டானாம். எப்படி நம்புறது?” ஆத்திரப்பட்டார் பேரம்பலம்.

“உனது செயல்களை நினைத்துப் பார். ஒரு காயப்பட்டு காலை இழந்த பெண்ணை ஏன் திருமணம் செய்ய விரும்பினாய்.? திருமணம் செய்தால் அவளைக் கண் கலங்காமல் காத்தல் வேண்டும். அதை விட்டு விட்டு அவளுக்குச் சதா தொல்லைகள் கொடுத்தால் அவள் என்ன செய்வாள்.அவளிடம் எந்த விதமான சொத்தும் இல்லையென்று உனக்குத் தெரியும். அப்படித் தெரிந்திருந்தும் சொத்து கேட்கிறாய். அவள் சொத்துக்கு எங்கே போவாள் சொல்லு”

பூபாலன் எதுவும் பேசாது நின்றான். அவனால் பதில் கூற முடியவில்லை.

“உன்னுடைய பெற்றோருக்கு அவளிலை விருப்பமில்லை என்று உனக்கு முன்பே தெரியும். அது தெரியாத மாதிரியல்லவா நீ பேசுகிறாய். எல்லாம் தெரிந்த பின் செய்து விட்டு எல்லாவற்றையும் நீ அடி தடி மூலம் தீர்க்கப் பார்க்கிறாய். அவளை வேண்டாமென்று நடுச்சாமத்தில் துரத்தி விட்டு இப்போ தேவையென்று வந்து நிற்கிறாய். இது நியாயமா?

இப்படி எத்தனை முறை நாம் சமாதானம் செய்து விட்டோம்.இனியும் உன்னை நம்ப ஆரணி தயாரில்லை. காதல் என்றால் என்ன.இரு உள்ளங்கள் ஒன்றை ஒன்று எந்த விதமான ஆசைகளும் இன்றி விரும்புவது .பேசிச் செய்யும் திருமணங்களுக்குத் தான் சீதனம் ,சீர்வரிசைகள் கொடுப்பார்கள். காதலிப்போர் காதலிக்கும் போது அவற்றை எதிர்பார்ப்பதில்லை. நீ காதலிக்கும் போது அவளிடம் எதுவும் இல்லை என்று உனக்குத் தெரியும். அப்போ என்ன சொன்னாய், அக்கா நான் இயக்கப் போராளி. நாட்டின் நன்மைக்காக உயிரைத் தியாகம் செய்ய திட்டமிட்டிருந்தேன். அது நடக்கவில்லை. அதனால் இயக்கப் போராளியைத் திருமணம் செய்து உயிரைக் கொடுத்து அவளைக் காப்பேன்" என்றாய். இப்போ அவற்றையெல்லாம் மறந்து அவளைக் கொல்கிறாய். இதற்குப் பின்பும் உன்னைச் சேர்த்து வைக்கலாமா? சொல்" அதட்டினாள் கார்த்திகா.

அப்போதும் பூபாலன் பேசவில்லை. மௌனமாக நின்றான். அது கார்த்திகாவுக்கு எரிச்சலை உண்டாக்கியது. அத்துடன் கோபத்தையும் வரவழைத்தது.

“டேய், உனக்கு காதல் என்றால் என்னென்டு தெரியுமாடா..?காதல் என்றால் காதலித்த பெண்ணை எந்தச் சந்தர்ப்பத்திலும் அவளுக்குத் துன்பமேற்படாது காப்பாற்றுவது. பெரிய உத்தியோகத்தனாக இருந்தாலும் பெண் வீட்டார் காதலை எதிர்ப்பார்கள். சமூகத்தில் காதலுக்கு இரக்கப்படுவார்கள் யாரும் இல்லை. பெற்றார், உற்றார், உறவினர் எல்லாரும் எதிர்ப்பர்.வெறுப்பர்.இதைக் காதலன் உணர்ந்து நடத்தல் வேண்டும்.தன்னை நம்பி வந்த பெண்ணை எந்த விதமான குறைகளும் இல்லாமல் மகாராணி மாதிரி வாழ வைக்க வேண்டும். அவர்கள் சந்தோசமாகவும் உல்லாசமாகவும் வாழ்வதைக் கண்டு வெறுத்தவர்கள் கவலைப்படல் வேண்டும் .காதலர் எவ்வளவுக்கெவ்வளவு மகிழ்வாயும் சிறப்பாகவும் வாழ்கிறார்களோ அவ்வளவிற்கவ்வளவு மதிக்கப்படுவார்கள். பொருளைத் தேடினால் தேடுபவன் தேவர்களால் கூட மதிக்கப்படுவான். என்ன மாதிரி இருந்த நீ ஏன் இப்படி மாறினாய்? உழைப்பால் எல்லாவற்றையும் தேடலாம். வேறு யாரையும் உதாரணமாகக் கொள்ளாது என்னைப் பார். எனது துணிவும் முயற்சியும் ஊக்கமும் என்னை இன்று எவ்வளவு உயர்த்தியுள்ளது. நானூறு போராளிகள்

வேலை செய்கின்றனர். உனக்கு நான் தரும் சம்பளம் முழுவதையும் குடித்து விட்டு ஆரணியின் சம்பளத்தையும் வெருட்டிப் பறிக்கிறாய். சரி அப்படிச் செய்யும் நீ சந்தோசமாக வாழவாவது விடுகிறாயா? வாழ்க்கையின் உச்சப் பலன் பிள்ளைகளைப் பெறுதல். அதன் பின் அவர்களை வளர்த்து ஆளாக்குதல். வளர்த்து ஆளாக்கினால் நீ இழந்தவை எனக் கருதுபவற்றை அவர்கள் பெற்றுத் தருவார்கள். எமது கிராமத்தில் உள்ள பலர் ஏழைகள், கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள், ஆனால் அவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் ஓகோ என்றிருக்கிறார்கள். அதனால் பெற்றோரும் பல்வேறுபட்ட வசதிகளுடன் வாழ்கிறார்கள். இது உனக்குப் புரியாதா?"

அப்போதும் பூபாலன் கதைக்கவில்லை. அதனால் பேரம்பலம் சொன்னார், "இவனோடு கதைப்பது வீண். நீ போம்மா.. நானும் இரண்டு நாட்களாகச் செல்லவில்லை. நீயும் போகாவிட்டால் கஷ்ரப்பட்டுச் செயலாற்றிய பலன் அனைத்தும் கெட்டுவிடும்"

கார்த்திகா பேரம்பலத்தைப் பார்த்தாள்.அவர் தனது நிலையைச் சொல்லாமல் சொல்கிறார் என்று அவளுக்குப் புரிந்தது. வளவன் வந்த பின்பு தனது

மனத் தவிப்பை அவர் சரியாகப் புரிந்துள்ளார் என்று நினைத்தாள்.

“எல்லாம் விதி அம்மா. காசு, பணம், பொருள், பதவி, அந்தஸ்து என்பன கொட்டிக் கிடந்தாலும் விதியின் படி தானம்மா வாழ்க்கை அமையும். பொருள் படைத்தாலோ பெரும் உத்தியோகத்தாலையோ வாழ்க்கை சிறப்படைவதில்லை. கந்தவனம் வறியவர். பரம ஏழை. பிள்ளைகள் ஐந்தும் வெளிநாட்டுக்குச் சென்று விட்டனர். மனிசனுக்குப் பிறசர், கொலஸ்ரோல், டையப்பற்றிக், பிள்ளைகள் பணத்தை அள்ளிக் கொட்டுகிறார்கள். என்ன பயன்? அவர் ஏழையாக இருந்த போது உண்ட உணவுகளைக் கூட இப்போ உண்ண முடியவில்லை. லட்சக் கணக்கில் அவரது நோய்க்காகப் பிள்ளைகள் செலவு செய்கின்றனர்.நோய் குணமானதா? இல்லையே. போன மாசம் இடக்காலும் இடக்கையும் இயங்கவில்லை. மனிசன் செத்தால் போதுமென்றிருக்கு. அப்படியான துன்பம் மிகுந்த வாழ்வில் இளமைக் காலத்தை மகிழ்வுடன் வாழ வேண்டும். மகிழ்வுடன் வாழ்வதானால் பிறரை மதிக்க வேண்டும். குடும்பத்தை நேசிக்க வேண்டும். துன்பப்படுவதால் வேதனைகள் குறையுமென்றால் துன்பப்படலாம். குடிப்பதால் துயரம் மறையும் என்றால்

குடிக்கலாம். இவையொன்றும் நடவாத இடத்துத் துன்பப்படுவதால் நோயுண்டாகுமே தவிர வேறு எதுவும் உண்டாகாது" என்று கூறிவிட்டு நிறுத்திய பேரம்பலம் கார்த்திகாவைப் பார்த்தார். கார்த்திகா அதிர்ந்து போனாள்.

# 23

சில கணங்கள் அமைதி நிலவியது. பேரம்பலம் தங்கியிருந்த அறையில் பூட்டப்பட்டிருந்த சீலிங் பானின் ஓசை பெரிதாகக் கேட்டது. கார்த்திகாவும் வளவனும் பேரம்பலத்தின் நன் மாணாக்கர். இயக்கத்தில் கார்த்திகா இருந்த போது பேரம்பலத்தைச் சந்தித்து பலமணி நேரம் உரையாடுவாள். அப்போதெல்லாம் அவள் மறந்தும் கூட வளவனின் பேச்சை எடுக்கமாட்டாள். அதற்குக் காரணம் கார்த்திகாவின் காதல் விடயம் முழுவதும் அவருக்குத் தெரியும். அத்துடன் அவள் வளவனை முற்றாக மறந்து விட்டுத் தான் இயக்கத்திற்குச் சென்றாள். அதனால் முழுமையாக வளவன் பாதிக்கப்பட்டான். விசரனைப் போல வீதியில் நடமாடினான். அவன் உணவுக்குக் கூட

வீட்டிற்குச் சென்றதில்லை. வீட்டால் புறப்பட்டுச் சென்றானென்றால் இரண்டு மூன்று தினங்களானாலும் வீட்டுக்கு வரமாட்டான். நண்பர்களோடு சேர்ந்து குடித்து விட்டு அங்கேயே படுத்து விடுவான். அவனது தாயும் தந்தையும் அவனைத் தேடிச் சென்று அழுது குளறி அழைத்து வருவார்கள். மறுநாள் சென்று விடுவான். பெற்றோர் படும் துயரைப் பொறுக்க முடியாது ஒருநாள் பேரம்பலம் அவனைத் தேடிச் சென்று சொன்னார்.

“மகனே, மானிடப் பிறப்பு அரிதானது. பெருமை மிக்கது. அதை வீணாக்காதே. உலகில் நாம் நினைப்பவை எவையும் நடப்பதில்லை. ஒன்றை நினைக்க இன்னொன்று நடக்கிறது. நீ படித்தவன். காதல் புனிதமானது. சிறந்தது. உயர்ந்தது .ஏனென்றால் நான் காதலித்துத் தான் திருமணம் செய்தேன்.நான் ஒரு சதத்திற்கும் வழியில்லாத ஏழை. எனது தகப்பனார் விவசாயி. அவரது வருமானம் குடும்பம் நடத்தவே காணாது. நான் முயற்சியுடன் கற்றேன். ஆசிரியர் நியமனம் கிடைத்தது.என்னுடன் ஆசிரியையாகக் கடமையாற்றிய கமலாவைக் காதலித்தேன். கமலாவின் தந்தை பெரிய கோடீஸ்வரர். அவர்கள் அவளுக்கு பெரிய பெரிய இடங்களில் மாப்பிளை தேடினர். ஆனால் கமலா என்னை விரும்பி என்னுடன் வந்து விட்டாள்.

அதனால் எம்மைக் கொல்ல அவர்கள் முயற்சித்தனர். நான் முல்லைத்தீவிற்குச் சென்றேன். எனக்குத் தெரிந்த கல்விப் பணிப்பாளர் அப்போது கடமையில் இருந்ததால் எமக்கு இடமாற்றம் தந்தார். நான் இரவு பகலாக முயற்சித்தேன். ஆசிரியர் வேலையுடன் கமம் செய்தேன். ரைக்றர் வாங்கினேன். அரிசி ஆலை அமைத்தேன். காடுகளை வெட்டித் தென்னைத் தோப்புகள் அமைத்தேன்.பத்து வருடங்களில் நான் அவர்களிலும் பார்க்க பணக்காரனாகி விட்டேன். கமலாவின் பெற்றோர் தமது சொத்துக்களை ஏனைய பிள்ளைகளுக்குக் கொடுத்து விட்டனர். எனக்கேன் சொத்து. தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் நினைத்தவற்றையெல்லாம் அடைய வைக்கும். என்னை நம்பி வந்த கமலாவை கோடீஸ்வரியாக்கி அவளின் பெற்றோர் முன் நிறுத்தினேன். இது கமலாவுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. பூபாலன் உன்னைப் போலத் தான் நானும் இருந்தேன். என்னைப் போல் நீயும் முயன்றால் பணக்காரனாகலாம்.எல்லோரும் தேடி வருவார்கள். காலப் போக்கில் கமலாவின் சகோதரர்கள் வெளிநாடு சென்றதால் அவளது பெற்றோர் முதியோர் இல்லத்தில் இருந்தார்கள். அது கமலாவுக்குப் பெரும் துன்பத்தைக் கொடுத்தது.அவளது துன்பத்தைச் சகிக்க

முடியாத நான் முதியோர் இல்லத்திற்குச் சென்று அவர்களை அழைத்து வந்தேன். அதன் பின் பத்து வருடங்கள் அவர்கள் எம்முடன் இருந்தனர். வெளிநாடுகளில் உள்ள தமது பிள்ளைகளின் விருப்பத்திற்காக அவர்கள் சிலகாலம் அவர்களுடன் தங்கினார்கள். அதன் பின் அவர்கள் ஊருக்கு வந்து எம்முடன் தான் இருந்தார்கள். சாதி, சமயம்,பதவி, அந்தஸ்து எல்லாம் பணத்திற்கு முன் தூசியாய் தான் மதிக்கப்படும்.இதை நான் பூபாலனிற்காகத் தான் சொன்னேன். நீ இப்போது போ, பிறகு வா. நான் கார்த்திகாவுடன் முக்கியமான கதை கதைக்க வேண்டும்" என்றார் பேரம்பலம்.

"காதலின் பெருமையைத் தெரிந்த நீங்கள் காதலரைப் பிரிக்கலாமா? என்று கேட்டான் பூபாலன்.

"நீ காதலனா? கேட்கச் சிரிப்பாக இருக்கு. நீ உண்மையாகக் காதலை நேசித்தால் மனைவியின் மனம் நோகாமல் பார். மனம் நோகவே கூடாது. மனம் நொந்தால் எல்லாப் பாதிப்புக்களும் தேடி வரும். இறுதியாக மனநோய் வந்து காதலைச் சிதைத்து விடும். உன்னால் விரும்பப்பட்டு உன்னை விரும்பி வந்தவள் சிறிது கூடப் பாதிக்கலாகாது. அந்த நிலை

வரும் வரை நீ பொறுக்கத் தான் வேண்டும். அதைத்தான் வளவனும் விரும்புகிறான். நான் எப்படி இந்தக் கிராமத்திலை வாழ்ந்தேனோ அப்படி நீயும் உனது மனைவியும் வாழ வேண்டும். அது தான் எமது விருப்பமே தவிர உங்களைப் பிரிப்பது எமது நோக்கமல்ல.இனியாவது விட்ட தவறுகளைத் திருத்தப் பார்.. போ” என்றார் பேரம்பலம்.

பூபாலன் சென்று வெகுநேரமாகியும் பேரம்பலம் பேசவில்லை. அதனால் பொறுமை இழந்த கார்த்திகா சொன்னாள், “நான் பிறகு வாறன். வேலைத் தளத்தில் நீங்களும் இல்லை.”

“அங்கே பாதிப்பு எதுவும் வராது.நான் சொல்ல நினைத்ததைச் சொல்லி விடுகிறேன். வளவன் வந்த பின் உனது போக்குச் சரியில்லை. அவன் இப்போது இன்னொருத்திக்குரியவன். அத்துடன் அவனது மனம் மென்மையானது. ஒரு சிறு கீறல் அதில் விழுந்தாலும் பெரும் பாதிப்பை உண்டாக்கும். உன்னுடைய மனம் சலனப்படுகிறது. அதுபோல அவனும் சலனப்படுகிறான். காலையில் வளவனின் தாய் வளவனின் அறையில் இருந்த காகிதமொன்றைக் கொண்டு வந்து தந்தாள். இந்தா பார்”

கார்த்திகா கடிதத்தை வாங்கிப் பிரித்தாள். அது ஒரு கவிதை.

**“என் (மன) சாந்தி நீ, எல்லாம்**

**உனக்குத் தெரியும்**

**கதைபேசி உறவாடி**

**களித்த நாட்கள்**

**கவிதையாய் வலம் வருகிறது**

**இனிக்கிறது**

**இன்பம் தருகிறது**

**இருப்பினும் மனதுள்**

**கொடிய வலி**

**ஒருமுறை ஒருகணம்**

**உன் மடி தேவையென**

**ஏங்கும் மனம்**

**அதை மறக்க**

**பறக்க நினைக்கிறது**

**நீ இல்லா இடத்திற்கு**

**சுற்றி வருகிறாய்**

**தூர நின்று பேசுகிறாய்.**

**உயிரிலே கலந்து நின்று**

**கொல்கிறாய் அணு அணுவாய்**

**முற்றாகக் கொன்று விடு**

**முடியவில்லை வாழ"**

கார்த்திகாவின் கண்களால் கண்ணீர் வழிந்தது. அதைக் கவனிக்காதவர் போல பேரம்பலம் சொன்னார்,

"மகளே, உன்னால் அவன் பட்ட துயரம் உனக்குத் தெரியாது. பித்துப் பிடித்து வீதி வீதியாக அலைந்தான். அந்த நிலையை மீண்டும் உருவாக்காதே. அது பாவம் மட்டுமல்ல.பழியும் கூட. இன்று அவன் இன்னொருத்தியைத் திருமணம் செய்து பிள்ளைகளுடன் வாழ்கிறான். குடும்பத்தைக் குலைத்த பழி உருவாகக் கூடாது என்று உனது தாயாரும் வளவனின் தாயாரும் விரும்புகின்றனர். அத்துடன் உனது தாய் உன்னை இப்போதும் ஏற்றுக் கொள்ளவில்லை. போரில் செத்திருந்தால் நான் மகிழ்ந்திருப்பேன் என்று கூறினார். ஏனென்றால் உன்னால் அவர்கள் பட்ட துயரத்திற்கு அளவே இல்லை. அதனால் யோசித்து நட.காதலின்

பெருமையை உணராமல் அவனைத் தவிக்க விட்டனீ. இப்போ அவன் ஒருவாறு மனம் மாறி இன்பமாக வாழ்கிறான். மீண்டும் குறுக்கிட்டு அவனது வாழ்வைக் கெடுத்து விடாதே.உன்னை மன்றாட்டமாகக் கேட்கிறேன்." மேலே பேசமுடியாது தடுமாறினார் பேரம்பலம்.

கார்த்திகா சிலையாக நின்றாள். அவளால் எதையும் பேசமுடியவில்லை. தீர்மானிக்கவும் முடியவில்லை.

"மகளே, வளவனின் தாய் மகனுக்கு முன்பு போல பித்துப் பிடித்துவிடுமோ என அஞ்சுகிறாள். அதனால் அந்தியேட்டிக் கிரியைகள் செய்யவும் அவனை வரவேண்டாம் எனக் கூறி அஷ்தியை வெளிநாடுகளுக்குப் பார்சல்களை அனுப்பும் நிறுவனத்திடம் கொடுத்து கனடாவுக்கு அனுப்பி விட்டாள். அங்கு இங்கை விடச் சிறப்பாகச் செய்யலாம் என்று கூறுகிறாள்"

"வளவனின் தாயார் மட்டுமல்ல உனது தாயாரும் உன்னை நம்பவில்லை. இருவருமாகச் சேர்ந்து தான் திட்டமிட்டு தான் அஷ்தியை அனுப்பியிருக்கிறார்கள். அந்த விடயம் இன்று காலையில் தான் எனக்குத்

தெரியும். அதனால் நீ அவனுக்குப் போன் பண்ணாதே. அவன் பண்ணினாலும் எடுக்காதே” என்றவர் சிறிது நேரம் யோசித்து விட்டுச் சொன்னார், “இதைத் தீர்க்க சுலபமான வழி சிம்மை மாற்றுவது தான்” என்றார்.

“சரி சேர். உங்கள் விருப்பப்படி சிம்மை மாற்றுகிறேன். கடந்த பத்து வருடங்களாக எமக்குள் தொடர்பு இல்லை. இனிமேலும் இராது. அவரைக் கண்டதும் மனம் பேதலித்து விட்டது. என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அவரது மனம் பூவை விட மென்மையானது. எனது மனம் அக்கினி. அதனால் ஒருமுறை மாபெரும் தவறு நடைபெற்றுவிட்டது. இனி மேல் அது நடவாது. நீங்கள் உறுதியாக நம்பலாம். என்னைப் பெற்ற தாயே நான் செத்திருக்கலாம் என்று சொல்லும் போது” மேலே சொல்ல முடியாமல் விம்மினாள் கார்த்திகா.

“காதல் என்பது பொல்லாதது. அதை விடக் காதல் தோல்வி கொடியது. காதலிப்பவர்கள் எல்லோரும் இன்பமாக வாழ்ந்ததில்லை. ஆனால் காதலில் தோல்வியடைந்த அனைவரும் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றனர். அப்படியான பலரை நான் சந்தித்திருக்கிறேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு

வகையில் மனம் குழம்பியிருக்கிறார்கள். யாராலும் காதலை மறக்க முடியவில்லை. நாம் எல்லாவற்றையும் செய்யலாம் .எல்லாவற்றையும் வழி நடாத்துகின்ற விதியை யாரால் வெல்ல முடியும்?"

"இப்போது யோசித்துப் பார்த்தால் நான் செய்தது எவ்வளவு பிழை என்று தெரிகிறது. தோல்வி என்பது வேறு. தோல்வியை எப்போதென்றாலும் மாற்றி விடலாம். வாழ்க்கையில் தோல்வியடைந்த பலா் சில காலங்களின் பின் வெற்றியடைகிறார்கள். ஆனால் துரோகத்தனத்தை வெல்ல முடியாதென்பதை எமக்கு முன் வாழ்ந்தவா்களின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து புரிந்து கொண்டேன். என்னை நம்பி எத்தனையோ குடும்பங்கள் உள்ளன. நான் பாதிக்கப்பட்டால் அனைத்துக் குடும்பங்களும் பாதிக்கப்படும். அதனால் நான் என்றும் உறுதியாக இருப்பேன். முல்லைத்தீவில் எமது கிளையை அமைக்கச் சந்திரிக்காவை ஏற்பாடு செய்தேன். அவள் எம்மை விட்டுப் போக விரும்புறாளில்லை. அதனால் இந் நிறுவனத்தின் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்து விட்டு நான் முல்லைத்தீவுக்குச் செல்கிறேன்" என்றாள் கார்த்திகா.

அப்போது ரெலிபோன் மணி அடித்தது. ரெலிபோனைப் பார்த்தாள். வளவன் அழைப்பில் இருந்தான்.

“சேர், நான் இல்லையென்று சொல்லிக் கதையுங்கள்” என்று கூறிவிட்டு ரெலிபோனை பேரம்பலத்திடம் கொடுத்த கார்த்திகா, “ஸ்பீக்கரில் விடுங்கோ” என்றாள்.

“சொல்லு வளவா.எனக்குக் கொஞ்சம் நோய் அதிகரித்து விட்டது. அதனால் கார்த்திகா தனது வீட்டுக்கு என்னை அழைத்து வந்து விட்டாள். அதிகாலையில் அவசரத்தில் போனை விட்டு விட்டுச் சென்று விட்டாள். நீ சொல்லு” என்றார்.

“எனக்குப் பூபாலனையும் ஆரணியையும் நினைக்கக் கவலையாக உள்ளது. அந்திரட்டிக்கு வரும்போது அவனுடன் கதைக்கலாமென நினைத்தேன். அம்மா செலவு அதிகமாகும். அஷ்தியை அனுப்புகிறேன் உங்கே அந்திரட்டியைச் செய் என்றா. எமது இனத்தவர்கள், நண்பர்கள் பலரும் அனுதாபம் தெரிவிப்பதற்காகத் தினமும் வருகிறார்கள். அதனால் இங்கு செய்வது நல்லது. நான் பூபாலனுக்குக் கொஞ்சம் பணம் அனுப்புகிறேன். மாதா மாதம்

அனுப்பத் திட்டமிட்டுள்ளேன். பிள்ளைகளைக் கவனமாகப் படிப்பியுங்கோ. அவனை ஆரணியுடன் சேர்த்து வைப்பது தான் நல்லது.நான் பூபாலனுடன் கதைக்கிறேன். “என்று கூறித் தொடர்பைத் துண்டித்தான் வளவன்.

றெலிபோனை வாங்கிய கார்த்திகா சிம்காட்டை எடுத்துக் கிழித்தெறிந்தாள்.வளவன் கார்த்திகாவைப் பற்றி விசாரிக்காதது பேரம்பலத்திற்கு ஆறுதலளித்தது.

“வளவன் சொன்ன மாதிரி சேர்த்து வைப்பது தான் நல்லது.அவன் உனது கண்காணிப்பில் இருந்தால் குழப்பம் செய்யான். அதனால் அவனையும் கொஞ்ச நாளைக்கு இங்கே தங்க வைப்போம்” என்றார் பேரம்பலம்.

“நல்ல யோசணை தான். இன்னும் சில நாட்களுக்கு அவன் தனியே இருக்கட்டும். வீராப்புப் பேசுவோரை உடனடியாக மன்னிக்கக் கூடாது. உடனடியாக மன்னிப்பதோடு உதவிகளும் செய்தால் பயமிராது” என்றாள் கார்த்திகா.

“சரியம்மா, நீ போ” என்றார் பேரம்பலம்.

வெளியே வந்த கார்த்திகாவுக்குத் துக்கமாக இருந்தது. தனது தாயும் வளவனது தாயும் செய்தது சரியென ஒரு கணம் தோன்றினாலும் மறுகணம் இருவரும் தன்னை முழுமையாக வெறுப்பதை நினைக்கக் கவலையாக இருந்தது.

## 24

“எதைச் செய்தாலும் எப்படி வாழ்ந்தாலும் அந்தந்த நேரத்திற்கேற்ற படி வாழத் தற்போதைய மக்கள் தயங்குவதில்லை. எப்படித் தான் உதவிகள் செய்தாலும் , அன்பாகப் பழகினாலும் நாம் பழகுவோர் உண்மையாக நடந்தால் தான் பயன் கிட்டும். எல்லோரும் நடிக்கிறார்கள். யாரை நம்புவது யாரை நம்பாமல் விடுவதென்று புரியவில்லை. நான் ஒரு பிழை விட்டு விட்டேன் என்றால் தாய்க்கும் கூட மன்னிக்கும் மனப்பாங்கு வராதா? “விம்மினாள் கார்த்திகா.

“மகளே, உன்னை மன்னிப்பதன் மூலம் உனக்குக் கேடு வருவதை நான் விரும்பவில்லை. வளவன் மென்மையானவன். வலிகளைத் தாங்கமாட்டான். அவனது மனம் மாறினால் கேடுகள் பலவும் தானாகவே

வரும். அதைத் தடுக்க முடியாது பாதிக்கப்பட்ட நீ மேலும் பாதிப்படைவதால் எந்தத் தீமையும் வராது" தாய் மனக் குகையில் இருந்து சொல்வது கேட்டது.

"நான் கோவிலுக்கு நேர்ந்து விடப்பட்ட கடா. வளவன் தெய்வம். அவன் பாதிக்கப்படக் கூடாது" என்று முடிவெடுத்தாள் கார்த்திகா. அந்த நினைவு கார்த்திகாவின் உள்ளத்தில் வெறுமையை உண்டாக்கியது. யாருமற்ற நிலையில் பாலைவனத்தில் தனித்திருப்பது போன்ற உணர்வு உண்டானது. உறவுகள் விலகிச் சென்று விட்டன. நட்புகள் விலகாதென்பதற்கு ஆதாரம் என்ன?" என்று நினைத்தாள் கார்த்திகா. அந்த நினைவு அவளுக்கு வெறுப்பைக் கொடுத்தது.

"ஆரணிக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கு. எனக்கு யார் இருக்கிறார்கள்? அதற்கு மேல் கார்த்திகாவால் நினைக்க முடியவில்லை. எதிரேயுள்ள பொருட்கள் எல்லாம் மறைவது போல இருந்தது. கண்களை மூடினாள். வளவன் தோன்றிச் சிரித்தான். விம்மி விம்மி அழுதாள் கார்த்திகா. இனி இழப்பதற்கு எதுவும் இல்லை" என்ற நினைவு அவளது மனதில் தோன்றி வளர்ந்தது.

“அக்கா” பூபாலன் மெதுவாக அழைத்தபடி வெளியே நின்றான். அவனின் அழைப்புக் குரல் கார்த்திகாவுக்குக் கேட்கவில்லை. அதனால் அவன் சற்றுப் பலமாக “அக்கா” என்று அழைத்தான். கார்த்திகா குரலை அடையாளம் கண்டு எழுந்து வெளியே வந்தாள். பூபாலன் கூனிக் குறுகி நின்றான். அவனைப் பார்த்ததும் கார்த்திகாவுக்கு முதலில் அளவுக்கதிகமான கோபம் வந்தது. அவனுக்கு அடிக்க வேண்டும்” என்ற உணர்வு மனதுள் எழுந்தது.

“அக்கா ,காதலைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. ஆனால் வளவனுக்குத் தெரியும். அவன் வந்த நாளில் இருந்து பட்ட துன்பம் எனக்குத் தான் தெரியும். வந்ததில் இருந்து அவன் சரியாகச் சாப்பிடவில்லை. தனது சொத்துக்கள் முழுவதையும் இழந்து விட்டவனைப் போல இருந்தான். அவனுக்கு ஆறுதல் கூற முடியவில்லை. அவன் உங்கள் மீது வைத்த அன்பில் ஆயிரத்தில் ஒரு பகுதி கூட நான் வைக்கவில்லை.இருந்தும் அவன் பட்ட வேதனையை தாங்கிக் கொள்ள முடியவில்லை. நான் குடிப்பதைக் கண்டித்தான். ஒருவருக்காக ஒருவர் வாழ வேண்டும் .அவர்களுக்குள் அன்பு பெருக வேண்டும். பாசம்

மேலோங்க வேண்டும். பிரிவென்பதே ஏற்படக் கூடாது. ஊடல் ஏற்படலாம். அது ஒரு சில கணங்களுக்குள் மறைந்து விடும். ஊடல் என்பது இருவருக்குமிடையே உள்ள அன்பை, பற்றை ,பாசத்தை ,விட்டுக் கொடுக்கும் தன்மையை அதிகரிக்கவே ஏற்படுத்தப்படல் வேண்டும். ஒருமுறை நான் நண்பர்களுடன் சேர்ந்து குடித்ததைக் கார்த்திகா அறிந்து விட்டாள். அதற்காக அதை அவள் கண்டிக்கவில்லை. எனக்குச் சொல்லி விட்டுக் குடித்திருக்கலாம். குடியுங்கள் அளவோடு தேவையேற்படுமிடத்து மட்டும் குடியுங்கள். குடித்து விட்டு என்னைத் தாக்காதீர்கள். முரண்படாதீர்கள். ஏனென்றால் சிலர் இப்படியான தேவைக்காகத் தான் குடிக்கிறார்கள். எனது மாமனார் நாகலிங்கம் குடித்து விட்டுக் காரணமில்லாது மாமியுடன் பிரச்சனைப்படுவார்.மறுநாள் தனக்கு எதுவும் தெரியாதென்பார்.அது பொய். எல்லாவற்றையும் திட்டமிட்டுச் செய்து விட்டுப் பின் அதை மறைப்பதற்காக நாடகமாடுவார் என்று சொன்னாயாம். அதனால் அவன் குடிக்க மாட்டேன் என்று சத்தியம் செய்து தந்தானாம். அதன் பின் குடிப்பதில்லையாம். சொல்லிச் சொல்லி அழுதான்.அன்று வீட்டில் சிறிதளது குடித்து விட்டு இவற்றைச் சொன்னான். கார்த்திகாவைக்

கண்ட பின் எனக்கு நிம்மதியில்லை. குடித்தால் நிம்மதி உண்டாகுமென நினைத்தேன்.குடித்ததும் அவளின் நினைவு பல்கிப் பெருகியது.என்னால் துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.அதனால் இனிமேல் குடிக்க மாட்டேன் என்றான். அதன் பின் நானும் குடியை விட்டு விட்டேன். இப்போ எனது மனைவியைப் பற்றியும் பிள்ளைகளைப் பற்றியும் தான் நினைக்கிறேன்.ஆரணி என்னை அளவுக்கதிகமாக நேசிக்கிறாள். எனக்காக எதையும் செய்யத் தயங்க மாட்டாள்.நான் தான் அவளுக்குப் பல கொடுமைகளைச் செய்து விட்டேன். இருப்பினும் அவள் என்னை மன்னித்து ஏற்பாள்.” அழுதான் பூபாலன்.

“குடித்து விட்டு மதுபோதையில் உளறுவதால் எதுவும் நடவாது. மனிதப்பிறவி ஒருமுறை தான் கிடைக்கும் என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.கிடைத்தற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற நீ நல்லதொரு மனைவியைப் பெற்றாய். இரு பிள்ளைகளையும் பெற்றாய். அடுத்தவர்களை நம்பக் கூடாது. திருமணமென்றால் சீர்வரிசை கேட்கக் கூடாது.மற்றவர்களுக்கு எந்நேரமும் உதவி செய்தல் வேண்டும். மற்றவர்களை மதிக்க வேண்டும்.

ஒழுக்கமாக வாழ வேண்டும் என்று இயக்கத்தில் இருக்கும் போது கற்பிக்கப்பட்டதை மறந்து விட்டாயா.எல்லாவற்றையும் விடு. உனது குடும்பத்தை ஒழுங்காகக் கவனி.அது போதும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாரும் எப்போதும் உதவிகள் செய்ய மாட்டார்கள். யாரையும் நம்பாது தன்னில் நம்பிக்கை வைத்து முயற்சியுடன் வாழ்பவனைத் தேடிச் செல்வம் வரும். செல்வம் வந்து விட்டால் உறவுகள் யாவும் தேடி வரும். அதனால் செல்வத்தைத் தேடு” என்றாள் கார்த்திகா.

“உண்மை தானக்கா, நான் திருந்தி விட்டேன். இனிமேல் குடிக்க மாட்டேன். எனது பிள்ளைகளை வளர்த்து கல்வியூட்டி பெரியவர்களாக்குவேன். இது சத்தியம்” என்றான் பூபாலன்.

அவனது பேச்சில் என்றுமில்லாதவாறு உறுதியிருப்பதைக் கண்டாள் கார்த்திகா.

“கடைசிமுறையாக உனக்கொரு சந்தர்ப்பத்தை வழங்குகிறேன். பேரம்பலம் சேருக்கு வளவன் உன்னைப் பற்றிப் போன் பண்ணிக் கதைச்சவர். நீ திருந்தி ஒழுக்கமாக வாழ்ந்தால் உனது பிள்ளைகளின்

அனைத்துச் செலவுகளையும் தான் ஏற்பதாக கூறினவராம். அதை நினைத்தாவது திருந்து. “என்றாள் கார்த்திகா.

“எனக்கும் சொன்னவன்” என்றான் பூபாலன்.

பூபாலன் சென்று பல மணி நேரம் கழித்தும் கார்த்திகாவால் குழப்பத்திலிருந்து விடுபட முடியவில்லை. வளவன் அவளின் நினைவுகளில் இருந்து விடுபட்டுச் செல்ல மறுத்தான். அவன் தன்னை நேசித்த விதம் அவளுக்குத் தெரியும். அவளைக் காணும் போதெல்லாம் அவளின் அழகைப் பற்றியும் உடை அலங்காரத்தைப் பற்றியும் கவிதை எழுதுவான். குறிப்பாக அவளது உடை அலங்காரங்களைப் பற்றி ஓயாது புலம்புவான். அவள் நெற்றியில் பெரியதொரு ஒட்டுப் பொட்டு வைப்பாள். அதன் கீழ் மிக மிகச் சிறிய கறுப்புப் பொட்டொன்று வைப்பாள். அதைப் பற்றியே பல கவிதைகளை அவன் எழுதியுள்ளான்.

**“ஒட்டுப் பொட்டுக்கு**

**கீழ் கறுப்புப் பொட்டு**

**பொட்டழகா இல்லை**

**முகமழகா**

**என்று கேட்டால்**

**என்னிடம் விடையில்லை**

**கண்ணே,**

**பாண்டிய மன்னன்**

**போலத் தடுமாறுவேன்**

**கூந்தலில் நறுமணமா**

**இல்லை நறுமணத்தில் கூந்தலா**

**என்று"**

அதை நினைக்க இதயம் வெடித்து விடும் போல இருந்தது. அன்று அவளது பிறந்த தினம். அழகான ஒரு பூமாலை கொண்டு வந்தான். "இது நீ வணங்கும் பிள்ளையாருக்கு. இது உமக்கு" என்று கூறி ஒரு சங்கிலியைப் பரிசளித்தான்.

கார்த்திகா திகைப்படையவில்லை. ஏனெனில் வளவன் மிகவும் வசதியான குடும்பத்தில் பிறந்தவன். தாயாரே சங்கிலியை வாங்கிக் கொடுத்திருப்பார்.

முழுமையான மகிழ்வுடன் சிரித்தாள் கார்த்திகா. முதல் நாளே அவள் இயக்கத்திற்குச் செல்வதாய் தீர்மானித்து விட்டாள். இயக்கத்திற்குச் சென்றால் எந்நேரமும் மரணம் வரலாம்.அந்த மரணத்திற்கு முன் வளவன் மகிழ்வடைவதற்காகச் சொன்னாள். ,

"அத்தான், இன்று எனது பிறந்த தினம். நீங்கள் கொண்டு வந்த பூமாலையை எனது கழுத்தில் போட்டு விடுங்கள். அது போலச் சங்கிலியையும் போட்டு விடுங்கள்"

வளவன் திகைத்து திகிலடைந்து போனான். "என்ன விளையாடுகிறாய். நாள் பார்த்து மணமேடையில் ஓமம் வளர்த்து பெரியவர்கள் முன் செய்ய வேண்டியதை இந்த இடத்தில் செய்ய நான் தயாரில்லை"

கார்த்திகா அழகாகச் சிரித்தாள். காதலருக்கு ஏது நாளும் கோளும். நான் பிறந்தன்றே உங்களுக்கென்று நிட்சயிக்கப்பட்டவள். அதை விட நாமிருவரும் தொட்டுப் பழகியுள்ளோம்.உங்களுக்கு மாதத்தில் இருபத்தெட்டு நாட்களுக்கு உணவு பரிமாறியுள்ளேன். அருகில் இருந்து ஓர் அன்னியப் பெண் ஓர் ஆணுக்கு உணவு பரிமாறலாமா? இரவு பத்து மணிவரை

இங்கேயே இருக்கிறீர்கள். உடைகள் வாங்கித் தருகிறீர்கள். நகைகள் வாங்கித் தருகிறீர்கள். அதனால் என்றோ எமது திருமணம் முடிந்து விட்டது.இன்று எனது பிறந்த நாள் சொன்னதைச் செய்யுங்கள்" அதட்டினாள் கார்த்திகா.

வளவன் மாலையைப் போட்டான். பின்பு சங்கிலியையும் போட்டான. கார்த்திகா அவனை இறுக அணைத்தாள். அதன் பின் அவன் ஒரு கவிதை எழுதிக் கொடுத்தான். அது கார்த்திகாவுக்குப் பாடம்.

**"மணமேடை இல்லை**
**புரோகிதர் இல்லை**
**உற்றார் உறவினர்களும் இல்லை**
**மேள தாளமில்லை**
**அலங்காரமில்லை**
**ஆடம்பரங்களும் இல்லை**
**விரும்பியிருந்தோம்**
**நீ கூறுவதைப் போல**

என்றோ முடிந்தது

எமது திருமணம்

திருமணம் என்பது

இருமணம் கலத்தல்

அதற்கு எதற்கு ஆரவாரம்

கடவுள் தான் உன்னை

எனக்குத் தந்தார்

ஏழேழு ஜென்மங்கள்

பிரியாது வாழ்வோம்

இன்பங்கள் என்று

சொல்லும் அனைத்தும்

உன் உடலிலும்

மனத்திலும் கொட்டிக் கிடக்கு

நீ தான் என் மனைவி

இறைவன் சேர்த்து வைத்தான்

இன்பமாய் வாழ்வோம்”

கார்த்திகாவால் துன்பத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இருப்பிலும் பேரம்பலம் சேர் சொல்வதைப் போல, “நான் வளவனின் வாழ்வில் குறுக்கிடக் கூடாது. அவர் மகிழ்வுடன் வாழட்டும். இன்னொரு பிறவி இருக்கென்று சொல்கிறார்கள். இறைவனைப் பிரார்த்திப்பேன். அடுத்த பிறவியிலாவது என்னை அவருடன் சேர்த்து விடு” என்று.

“ஒரு பெண்ணைக் காதலுடன் ஒரு ஆண் தொட்டால் அது கணவன் என்ற அர்த்தத்தைக் கொடுக்கும். வளவன் தான் எனது கணவன்” என்று முடிவெடுத்தாள் கார்த்திகா.

அப்போது அங்கே ஆரணி வந்தாள்.

“அக்கா…” மேலே அவளால் பேச முடியவில்லை.

“ இப்பேன் அழுகிறாய் .சிறிது நேரத்திற்கு முன்பு பூபாலன் வந்தவன். தான் இப்போ எல்லாவற்றையும் உணர்ந்து விட்டானாம். இனிமேல் குடிக்க மாட்டானாம். என்ன செய்வது திருந்த வேண்டும் என்பதற்காகத் தான் வெருட்டினேன். அதைப் பற்றிக் கவலைப்படுகிறாயா?” என்று கேட்டாள்.

“அதைப் பற்றி நான் நினைக்கவில்லை. ஏனென்றால் நினைப்பது எதுவும் நடக்கப் போவதில்லை. எல்லாம் எப்போதோ முடிந்த காரியம் என்பார்கள். எனது நிலையும் அது தான். அதற்காக யாரை நோக முடியும். ஆனால்..” நிறுத்தினாள் ஆரணி..

“சொல்லு, சொல்லு பயப்படாமல் சொல்லு..” என்றாள் கார்த்திகா.

“முதலில் என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ. உங்களுக்கு ஒரு கடிதம் வளவன் தந்தவர். அது தாய்க்குத் தெரியும். அவா அதைக் கொடுக்க வேண்டாம் என்றவா. எனக்கு மனம் கேட்கவில்லை” என்றவள் ஒரு கடித உறையைக் கொடுத்தாள்.

கார்த்திகா அதை வாங்கிப் பிரித்தாள்.

**“இறந்து விட்டாய் என்றார்கள்**

**இறுதி முடிவெடுத்தேன்**

**பெற்றோரின் துயரத்தைத்**

**தாங்க முடியவில்லை**

**அவர்களாவது மகிழட்டும்**

**என்று நினைத்தேன்**

**நினைப்பது நாம்**

**முடிவெடுப்பது இறைவன்**

**பெற்றோருக்கும்**

**நம்பி வந்தவளுக்கும்**

**எனது வாரிசுகளுக்கும்**

**துன்பஞ் செய்ய விரும்பவில்லை**

**நினைவுகளோடு வாழ்வோம்**

**நிகழ்வுகளை நினைத்தால்**

**நிகழ்வது போலத் தோன்றும்**

**மனதை மகிழ்விக்கும்**

**அது போதும் என்னை மகிழ்விக்க"**

வளவன்

என்றிருந்தது. போரின் போது அவள் காணாமல் போனதால் அவள் இறந்து விட்டாள் என மக்கள் நம்பினர். போக்குவரத்துத் தடைப்பட்டதால் ஏராளமான வதந்திகள் பரவின. அதில் ஒன்று தான் இது.

ஆரணி எதுவும் கேட்கவில்லை. கார்த்திகாவும் சொல்லவில்லை.

“நீ பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு போ. ஆனால் நான் வற்புறுத்தவில்லை” என்றாள் கார்த்திகா.

“சரி அக்கா, என்ன செய்வது? நாய்க்கு வாழ்க்கைப்பட்டால் குரைக்கத் தானே வேண்டும்?” என்றாள் ஆரணி.

கார்த்திகா எதுவும் பேசாமல் உள்ளே சென்று கதவைச் சாத்தினாள். வெகுநேரம் வரை காத்திருந்த ஆரணி, கார்த்திகா கதவைத் திறக்காததால் கார்த்திகாவின் தாய்க்குச் சொல்லிவிட்டு பிள்ளைகளுடன் புறப்பட்டள். பூபாலன் வந்து அவர்களை அழைத்துச் சென்றான்.

# 25

அறைக்குள் இருந்த நிலைக் கண்ணாடியின் முன் வந்து நின்றாள் கார்த்திகா. அதில் தெரிந்த உருவத்தைப் பார்க்க அவளுக்கு வயிற்றைப் புரட்டியது. வளவனின் கற்பனையில் இருந்த உருவம் எங்கே..?

வளவன் எழுதிய கவிதைக் கட்டை எடுத்துப் பிரித்தாள். அவன் கவிதை எழுதும் திகதிகளையும் எழுதுவான்.

23.06.2001 சனிக்கிழமை

**“உன்னைச் சொல்ல**

**வார்த்தைகள் இல்லை**

**உன்னைச் செதுக்க**

**கற்களும் இல்லை**

**உன்னை வரைய**

**வண்ணங்களும் இல்லை**

**காரிருள் வேளை**

கண்டதும் ஒளிரும்

பளிங்கு போல

நினைத்ததும் மனதில்

ஒளிவிடும் நிலவே

தென்றலின் குளிரும்

தேன்துளிச் சுவையும்

மலர்களின் மணமும்

கலந்து செய்த

புதுவித உருவே

முதல் முதலாக

வரைந்தது இன்று

பல இசை தந்து

மீட்டிடும் வீணை

போர்த்திய வடிவில்

மனதினில் இருக்கு

அதை எண்ணி எண்ணிப்

பரவசமாவேன்”

முதன் முதலாக வளவன் எழுதிய கவிதையை பலமுறை படித்தாள் கார்த்திகா. பின் அதைத் தீயிட்டுக் கொழுத்தி விட்டு மறு கடிதத்தை எடுத்தாள்.

21.08.2001 செவ்வாய்

**"கனவிலும் காணாத**
**சுகங்கள் யாவும்**
**கண்டதும் கிடைக்கும்**
**காண்பது என்பது**
**கார்த்திகைப் பிறை இல்லை**
**நித்தம் காண்பேன்**
**கண்டதும் மகிழ்வேன்**
**கற்பனை பூத்திடும்**
**காவியமாயிடும்"**

26.10.2001 வெள்ளி

**"கூற்றுவன் தானோ**
**மருளும் பிணையோ**

**ஒளிதரும் விளக்கோ**

**என்று எண்ணி**

**மயங்கும் என் நெஞ்சு”**

01.11.2001 வியாழன்

**பச்சைப் பூ சுற்றி**

**பல் நிறக் கோலமிட்டு**

**பவனி வரும் போது**

**பஞ்சாகிப் போவேன் நான்’**

**“மங்கலமான மஞ்சள்**

**சிவப்பொடு வெள்ளை சேர்த்து**

**கோலங்கள் கொண்ட பட்டு**

**இடையினைச் சுற்றிச் செல்ல**

**கையது வளையல் தாங்க**

**கூந்தலில் பூக்கள் பூக்க**

**சந்தனத் தேராய் வந்து**

**சரித்திரம் படைத்தாள்”**

15.11.2001 செவ்வாய்

“எதிரிலே வந்து நின்றால்
எதிரியும் கலங்கி நிற்பான்
பரவசமாக வந்து
பதுமை போல
எதிரே நின்றால்
மயக்கம் தான்
வந்து சேரும்”

21.12.2001 வெள்ளி

“பலருடன் பார்த்தால்
மயக்கம் புகுந்திடும்
தனிமையில் பார்த்தால்
மோகம் அழிந்திடும்
கடைக்கண் சிரித்தால்

காமம் புகுந்திடும்”

“சிரிக்கும் போதும்
சினக்கும் போதும்
சிவக்கும் கன்னம்
சிவந்து சிவந்து
பல கதை கூறும்”

“அயலவா் இருந்தால்
அன்னியமாவேன்
தனிமையில் கண்டால்
சொர்க்கத்தில் மிதப்பேன்”

14.02.2002 செவ்வாய்

“காதலா் தினத்திலின்று
கவிதையாய் எதிரில் நின்றாய்

பேரெழில் உன்னை மூட

பெருந் தவம் செய்த ஞானி போல

இருந்த உன்னை

சீண்டிய போது

நீயும் கவியாகி

கவிதை தந்தாய்

“சும்மாவே அந்த மாதிரி”

என்று எழுதிய வார்த்தை

மனதிலே பதிந்து

நீங்கவே மறுத்தது

காணாத வேலையிலும்

உனது வரிகள்

நெஞ்சை வருடும்

கம்பனின் கட்டுத்தறியும்

கவிதை பாடுமாம்

அது போல நீயுமா?

இன்னும் இன்னும் பாடு

நூலாக வெளியிடலாம்”

“உள்ளத்தில் வாழ்வதும்
உருவத்தை நினைப்பதும்
வண்ணத்தில் கோலத்தை
மனதிலே பதிப்பதும்
வாட்டமில்லாமல்
உள்ளங்கள் கலப்பதும்
எண்ணங்கள் சிரிப்பதும்
காதலர் தினத்திலே தான்”
“ஆயிரமாயிரம் எண்ணங்கள்
தினமும் பூத்து
ஆரமாகி ஆரவாரஞ் செய்யும்
மனதிற்கினியாளுக்கு
மாலை சூடி மகிழ்ந்த காட்சி
மனதில் தோன்றி
மகிழ்வைத் தரும்”

16.02.2002 வியாழன்

“காரிருள் கவிய காமன் வருவான்

கலந்து கனிக்க நீயும் இல்லை

கனவும் நனவும் சேர்ந்து வந்து

கலந்து மகிழ்ந்து இடரைக் கொடுக்கும்

உன்னை வேண்டும் என்று –உருகும்

உணர்வின் கோரம் என்னை வாட்டும்

கனவில் வந்து களிப்புத் தந்து

என்னை மாற்றி எல்லாம் தருவாள்”



03.01.2003 வெள்ளி

“காதலாகி கசிந்து கலங்கி
கனத்த மனத்தைக் கரைத்து
கலகலப்பாய்ப் பேசி
கனவைக் கலைத்த
காரிகையே வாழ்க
காணுமிடமெல்லாம்
உன் கோலம் தெரிகிறது
காணாது போனால்
துயரம் நெஞ்சைக் கொல்கிறது
நீ சொன்னதை நினைத்தால்
மனம் குதுாகலம் கொள்கிறது
நீ செய்ததை நினைத்தால்
சொர்க்கம் தெரிகிறது”

18.03.2003 சனி

“வள்ளி தெய்வானையுடன்
சேர்ந்திருக்கும் வேலவா

நினைக்கும் அடியாரின்
வினையறுக்கும் குமரா- என்
உள்ளத்தில் வீற்றிருந்து
உவகை கொள வைப்பவளின்
நெஞ்சில் நிறைந்திருந்து
நிம்மதியை அளிக்கச் செய்.
உன்னையே தினம் தொழுது
உன்னருள் பெற்றவள்
என்னை வாட்டுகிறாள்
வாட்டத்தை நீக்க வரமருள்”

09.04.2003 புதன்

“கள்ளமில்லாச் சிரிப்பும்
கபடமில்லாப் பேச்சும்
கண்டு மனம் குளிர்ந்தேன்
கவலைகள் யாவும் பறந்தன
என்றும் என்மனதில்

ஏற்றமுடன் நீயிருந்தால்

கசந்த என் வாழ்வு

கரும்பாக மாறிவிடும்”

24.02.2003 வெள்ளி

“சந்தனப் பூவாய் வந்தாள்

சற்று நான் அசந்து போனேன்

பலமுறை கண்ட போதும்

இன்று போல என்றும் இல்லை

அசத்தலாய் வந்தவளின்

அழகினைக் கண்டு வியந்தேன்

கண்கள் என் பட்டதினால்

காயங்கள் காலில் பட்டதோ?”

09.04.2003 புதன்

“தேனாய் இனிப்பாள்

தென்றலாய் அணைப்பாள்
தோன்றும் துயரை
தீயாய் எரிப்பாள்
துடுக்காய்க் கதைப்பாள்
துன்பஞ் செய்யாள்
துவண்டிடும் வேளை
துளிர்க்கச் செய்வாள்
அன்பு பெருகும்
பண்பு மிளிரும்
கதையில் சற்றுத் திமிரிருந்தாலும்
இளகிய மனத்தாள்
எதையும் தருவாள்”

31.03.2004 புதன்

“கல்லுக்குள் ஈரமுண்டென்பார்
கருங்கல்லும் மலருமென்பார்
சொல்லாலே புலவர் புனைந்த

கவிதைகளை உன்னில் கண்டேன்

கல்லுக்குள் ஈரம் கண்டேன்

கருங் கல்லும் மலரக் கண்டேன்

சொல்லாலே இன்பம் தந்து

தினமும் சொர்க்கம் காட்டும்- உன்னிடத்தே”

21.08.2003 வியாழன்

“உன்னைப் பிடிக்கும் அதனால்

உன் நாவும் இனிக்கும்

உன் நெஞ்சின் உணர்வுகள்

உதட்டினில் மலர்வதால்

உவகையால் என்னுடல் சிலிர்க்கும்

உற்ற துயர் போக்கி

உடனிருந்து பேசி

கற்ற கலையனைத்தும்

கனிவாயுரைத்து

கள்ளமில்லா அன்பால்

கனியாகச் சுவைக்கும்

காரிகையே கனிந்த முகம்- காட்டி
காந்தமாய் ஈர்த்திடு”

29.11.2003 சனி

“பாடசாலையில் பலருடன் நின்றாய்
அறுபது சுவைகள் ஆயிரம்- இசைகள்
உன்னில் தோன்றி என்னைக் கொன்றது
பார்த்தால் ஒரு சுவை
நினைத்தால் இன்னிசை
காணுமிடங்கள் எதுவானாலும்
உந்தன் களிப்புக்
குறைவதேயில்லை.
கரும்பை உண்டால்
அடிப்பகுதி இனிக்கும்
உன்னைப் பார்த்தால்
என்னுடல் சிலிர்க்கும்”

30.04.2002 செவ்வாய்

**“சேவற்கொடி யோனும்**

**செந்தாமரை உறைவோனும்**

**வேத முதல்வனும்**

**வேழ முகத்தோனும்**

**வேண்டி நிற்க**

**நாதப் பிழம்பாக**

**நெஞ்சில் முகிழ்ந்தவளே**

**தீயாக வாட்டும்**

**தீவினைகள் யாவும்**

**உன் கண்பட்டால்**

**கரியாகும் கணத்தில்**

**பண்பட்ட என் நெஞ்சில் உன்**

**கண் பட்டுக் கவிபாடுவேன் நித்தம்”**

12.04.2003 சனி

**“உன்னுள்ப் பொங்கும்**

உவகை வெள்ளம்

என்னுள்ப் புகுந்து

சங்கமமாகும்

என்னுள்த் தோன்றும்

உவகை முத்து

உன்னுள்ப் பதிந்து

உருவம் கொடுக்கும்

உன்னுள்த் தோன்றும்

அசைவுகள் யாவும்

என்னுள்க் கவிதையாய்ப்

பொங்கி நிற்கும்

என்னுள் சிலையாய்

இருக்கும் எண்ணம்

உந்தன் உயிரில்

கரைந்து போகும்”

“கனவுகள் யாவும் உன்னைச் சுற்றி
கவிதைகளாகும்
கவிதைகள் யாவும் உந்தன்
கவர்ச்சியைக் கூறும்
கவர்ச்சிகள் யாவும் மனதை வருடி
நிகழ்வைச் சொல்லும்
நிகழ்வுகள் சொல்லும் செய்திகள் யாவும்
உன் அழகைப் போற்றும்”

“கனவுகள் யாவும் கண் முன் நடந்தன
கற்பனைகள யாவும் கைக்குள் அடங்கின
சிரிப்புடன் வந்தாள்
தூண்டினாள் கைக்குள்
மனதுள் தேங்கிய எண்ணங்கள்
தணிந்து இனித்தது”

“மனதில் உள்ளதை

**மறைப்பின்றிச் சொல்வாள்**

**துணிவுடன் எதையும்**

**துடிப்புடன் செய்வாள்**

**சொன்னதை மறந்து**

**உள்ளே விடுவாள்**

**துயருற்ற வேளை**

**முழுமையாய் மலர்வாய்"**

அதற்கு மேல் கார்த்திகாவால் வாசிக்க முடியவில்லை. ஆயிரத்திற்கு மேற்பட்ட தாள்கள் காற்றில் படபடத்தன. அவை பெரியதொரு கட்டாக அவள் முன் இருந்தன. எடுக்க எடுக்கக் குறையவில்லை. அதனால் அவளுக்கு அவற்றை வாசிக்கப் பிடிக்கவில்லை. அதனால் அவற்றை அள்ளிக் கூடையொன்றில் போட்டுக் கொண்டு வெளியே வந்தாள்.

அவற்றை நிலத்தில் போட்டு கொழுத்தினாள்.கட்டாக இருந்தமையால் அவை எரிய மறுத்தன. அதனால்

அவற்றைத் தனித் தனியாகப் பிரித்தாள். ஒருமணி நேரம் சென்றது. அவை எரிந்து முடிய.

இனிமேல் வளவனின் நினைவு வந்தாலும் பெரும் பாதிப்பு வராதென்று நினைத்தாள். அவளின் தாயார் அவளது செயலை மறைந்திருந்து பார்த்தாள்.

எரித்து முடித்ததும் தனது உடைகளை மாற்றி விட்டுக் குளித்தாள். மனம் இலேசாகி விட்டதைப் போன்ற பிரமை. அவள் குளித்து விட்டு வந்ததும் தாயார் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். அதைக் குடித்து விட்டுத் தொழிற்சாலைக்குப் புறப்பட்டாள் கார்த்திகா. அவளது மனம் சற்று ஆறுதலடைந்திருந்தது.

x......முற்றும்......x